# பி.ஏ. (தமிழ்) முதலாமாண்டு

## DJT1A - இலக்கியம் - I

### உள்ளுறை


| அலகு | பாடத்தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | கவிதை<br>1. பாஞ்சாலி சபதம் - பாரதியார்<br>2. சஞ்சீவிப் பர்வதத்தின் சாரல் - பாரதிதாசன்<br>3. கண்ணீர் பூக்கள் - மு.மேத்தா | |
| 2 | உரைநடை<br>4. தமிழின்பம் - ரா.பி.சேதுபிள்ளை | |
| 3 | சிறுகதைத் தொகுப்பு<br>5. ஒருபிடி சோறு - ஜெயகாந்தன் | |
| 4 | நாவல்<br>6. வேரில் பழுத்த பலா - சு.சமுத்திரம் | |
| 5 | நாடகம்<br>7. தண்ணீர் தண்ணீர் - கோமல் சுவாமிநாதன் | |

## அலகு – 1

## கவிதை

### 1. பாஞ்சாலிசபதம் - பாரதியார்

**"கல்தோன்றி மண் தோன்றா காலத்தே**
**முன்தோன்றி மூத்த குடி"**

என்று சிறப்பிக்கப்படும் தமிழ்க்குடி அன்று முதல் இன்று வரை தன் வளமையிலும், ஆக்கத்திலும், ஒளி குன்றாமல் பீடுநடை போட்டு வருகிறது என்றால், அதற்குக் காரணம் தமிழ்மொழியின் இலக்கிய வளமையும், மொழி வளமையுமே ஆகும். இம்மொழியில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு வகை இலக்கியம் தோன்றியுள்ளது. அவ்வடிப்படையில் இருபதாம் நூற்றாண்டில் பாரதியாரால் இயற்றப்பட்ட காவியமே பாஞ்சாலி சபதம் என்னும் சிறு காப்பியமாகும்.

**பாரதியார்**

பாரதிக்குப் பள்ளிப்படிப்பு நீடிக்கவில்லை. வாழ்க்கையே போராட்டம் தான். பாரதியின் அரசியல் கருத்துக்கள் அவரது உறவினா் யாருக்கும் பிடிக்கவில்லை. எனினும் அவா் அரசியல் வாழ்க்கையை விடவில்லை. ஆசிரியத் தொழிலும் பத்திரிக்கைத் தொழிலும் அவருக்கு நிலைக்கவில்லை. எனினும் அரசியல் வாழ்வால் ஏற்பட்ட வறுமை வாழ்க்கையை மனம் தளராமல் ஏற்றுக்கொண்டார். மேலும் வேற்று மாநிலமாக இருந்தாலும் புதுச்சேரிக்குச் சென்று அஞ்ஞான வாசத்திலேயே காலம் கழிக்க நேர்ந்தது. பாரதியின் வாழ்க்கையில் இப்படிப் பல தொல்லைகள், அவரின் மரணமோ அகாலமானது. திருவல்லிக்கேணி கோயிலில் யானை தூக்கியெறிந்ததால், அடிப்பட்ட பாரதி அற்பஆயுளில் செப்டம்பரில் மரணம் எய்தினாா்.

**பாஞ்சாலி சபதம் தோன்றிய நிலை**

பாரதியாா் வாழ்ந்த காலம் ஆங்கிலேயரிடம் அடிமைப்பபட்ட காலம், மக்கள் அனைவரும் துயில் கொண்டு விழிக்க வழியின்றித் தவித்த காலம். பாரத தேசம் ஆங்கிலேயன் கையிலே சிக்குண்டு தவித்துக்கொண்டிருந்த காலம். பாரதியின் மனக்கன்முன் ஒரு கண்ணில் புறப்போா் நடத்தும் வீரகாவியமான மகாபாரதம் தோன்றியது. மறுகண்ணில் ஆங்கிலேயரின் கையில் அகப்பட்டுத் தவிக்கும் பாரததேசம் தோன்றியது. இவ்வாறு ஒரு கண்ணில் பாஞ்சாலி தேவியும் மறுகண்ணில் பாரத தேவியும் மாறி மாறி வந்து நிற்க அவருடைய பேனா முனை பெண் விடுதலையையும், விடுதலை வேட்கையுணா்வையும் ஒருங்கு தரும் பாஞ்சாலி சபதம், என்னும் ஒரு தேசிய இலக்கியத்தைப் படைத்துத் தந்தது.

பாரதக் கதை என்பதால், அதனை அப்படியே மீண்டும் கூற வேண்டும் என்ற பொருளில் பாரதி எழுதவில்லை, இங்கு பாரதி தன் தாய்நாட்டு விடுதலை என்னும் அடிக்கருத்தை மனதில் இருத்தியே இக்காவியத்தைப் படைத்துள்ளாா்.

**பாஞ்சாலி சபதத்தின் உருவம்**

ஆசிரியர் : மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

காலம் : கி.பி.1912

வரிகள் : 1398

பகுப்புமுறை : பாகங்கள்: 2, சருக்கங்கள்: 5

1) சூழ்ச்சிச் சருக்கம்
2) சூதாட்டச் சருக்கம்
3) அடிமைச் சருக்கம்
4) துகிலுரிதற் சருக்கம்
5) சபதச் சருக்கம்

பாவகை : விருத்தப்பா

**பாஞ்சாலி சபதம் சருக்க விளக்கம்**

**முதல் பாகம்**

**1. அழைப்புச் சருக்கம்**

வில்லி பாரதத்தில் சூதுபோர் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது பாரதியின் பாஞ்சாலி சபதம், பாண்டவர்கள் இராசசூயப் பெருவேள்வி செய்து பெற்ற பெரும் புகழைக் கண்டு திருதராட்டினன் மகன் துரியோதனன் பொறாமை கொண்டான். இந்தப் பொறாமைத் தீயே பாரதப்போருக்குக் காரணமாக அமைகிறது. விண்ணில் இந்திரன் போன்ற பெருஞ்செல்வம் பெற்றிருந்த போதிலும், பாண்டவர்களை அழிக்க எண்ணினான்.

**“வன்றிறத்தொரு கல்லெனும் நெஞ்சன்**
**வானம் வீழினும் அஞ்சுதல் இல்லான்**
**குன்றமொன்று குழைவுற்றி ளகிக்**
**குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்**
**கன்று பூதலத் துள்ளுறை வெம்மை**
**காய்ந்தெ ழுந்து வெளிப்படல் போல**
**நெஞ்சுத் துள்ளோர் பொறாமை யெனந்தீ”**

என்று துரியோதனனி மனநிலையைக் கவிஞர் எடுத்துக் காட்டுகின்றார்.

துரியோதனன் தன் எண்ணத்தை மாமன் சகுனியிடம் ஏது செய்வம்? என்று சொல்லி நைகிறான். வஞ்சகச் சகுனியும் பாண்டவர்களைப் போரில் வெல்ல முடியாது. சூதால்தான் வெல்ல முடியும் என்கிறான். மாமனின் சூழ்ச்சியை உவகையுடன் ஏற்றுக்கொண்ட துரியோதனன், இதைத் தன் தந்தையிடம் கூறினான். “விருந்துக்குப் பாண்டவர்களை அழைத்துப் பின் பொழுதுபோக்காகச் சதுரங்கம் விளையாட வேண்டும், அதில் பாண்டவர்களை வெல்ல வேண்டும்” என்று துரியோதனின் திட்டத்தைத்

திரிதிராட்டிரன் மறுக்கிறான். மகனை நோக்கி, சகோதரர் தம்முட்பகையுண்டோ? எனப் பல அறிவுரை கூறினான். இதை ஏற்காத துரியோதனன், உன் முன் என் ஆவி இறுப்பேன். செய்யலாவது செய்குதி என்கிறான். பின்னர் விதி! விதி! வித மகனே! இனி வேறெது சொல்லுவன் அட மகனே! என்று கூறி, திருதிராட்டிரன் பாண்டவர்களை விருந்துக்கு அழைத்திட சம்மதிக்கிறான். பாண்டவர்களை அழைத்துவரத் தம்பி விதுரவைத் தூதாக அனுப்ப எண்ணினான். இதைக்கேட்ட விதுரனும் போச்சுது! போச்சுது! நல்லறம்! போச்சுது போச்சுது வேதம்! என்று பல கூறி வருந்தினான். சென்று வருகுதி, தம்பி. இதில் சிந்தனை ஏதும் செய்ய மாட்டேன் என்று விதுரனை அனுப்புகிறான். விதுரன் பாண்டவர்களிடம் சென்று சகுனியின் சதியைக் கூறுகிறான். தருமன் சிந்திக்கிறான். வீமன் அண்ணா! துரியன் வஞ்சகத்துடன் அழைக்கும் இவ்விருந்துக்குப் போக வேண்டாம் என்கிறான். ஏனைய தம்பியரும் மறுக்கின்றனர். ஆனால் தருமனோ,

**“மருமங்கள் எவை செயினும் - மதி**
**மருண்டவர் விருந்தறஞ் சிதைத்திடினும்**
**கருமமொன் றேஉளதாம் - நாங்கள்**
**கடன் அதை நெறிப்படி புரிந்திடுவோம்”**

என்று தம்பியர்களை சமாதானப்படுத்தி விருந்துக்கு வரச் சம்மதிக்கிறான். பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியுடன் அத்தினாபுரம் பயணமாகின்றனர்.

**2. சூதாட்டச் சருக்கம்**

அத்தினாபுரம் வந்தடைந்த பாண்டவர்களைத் துரியோதனாதியர் வரவேற்றனர். விருந்து முடிந்த பின்பு, சகுனியின் திட்டப்படி, துரியன் பாண்டவர்களைச் சதுரங்கம் விளையாட அழைக்கிறான். சபையில் தம்பிகளுடன் அமர்ந்திருந்த தருமன் சூதாட மறுக்கிறான். ஆனால் சகுனி அவர்களை விடுவதாக இல்லை. நாங்கள் என்ன உங்கள் சொத்தை திருடிவிடவா போகிறோம் எனப் பல சொல்லி, தருமனைச் சம்மதிக்க வைத்து விடுகிறான். இதைக்கண்ட துரியோதனன் மகிழ்ச்சியடைகிறான். சூதாட்டம் ஆரம்பமாகியது. மணி, பொன் எனப் பொருள்களை ஆயிரமாயிரமாகப் பணயமாக வைக்கிறான். ஆனால் சகுனியே வெல்கிறான். மேலும் பொருள்களை வைக்கிறான்.

**“தாய முருட்டலானார் - அங்கே**
**சகுனி வென்று விட்டான்”**

‘பீடிழந்த சகுனி அங்கு பின்னுஞ் செல்கிறான். நாடிழக்க வில்லை – தருமா! நாட்டை வைத்திடு என்கிறான். இதைக்கண்ட விதுரன், தருமா! நாட்டையும் வைத்திழந்தாயே! வாழி! சூதை நிறுத்து என்கிறான்.

## இரண்டாம் பாகம்

### 3. அடிமைச் சருக்கம்

விதுரன் சூதை நிறுத்து என்று சொன்னதைக் கேட்ட துரியோதனன் கோபம் கொண்டு, நன்றி கெட்ட விதுரா நாணமற்ற விதுரா! நீ வன்புரைத்தல் வேண்டா! என்று அறிவுரை கூறித் தடுக்கிறான். வெள்ளை உள்ளம் கொண்ட விதுரனும்,''சூழ்ச்சியைத் தடுக்க எவ்வளவோ முயன்றும் பயனொன்றும் இல்லை. எல்லாம் விதிப்படி நடக்கட்டும். நீ மதி வழியே செல்லுக'' எனக் கூறி வாய் மூடித் தலைகுனிந்து அமர்ந்தான். அப்போது இருள்நிறைந்த நெஞ்சமுடைய கன்னன் சிரித்துக்கொண்டே பாண்டவர் தலைவர் தருமனிடம் ''நாங்கள் பரந்த எங்கள் நாட்டை வைக்கிறோம். நீ தம்பிமாரை வைத்து இழந்த பொருட்களை மீட்டுக்கொள், பின் அன்பினொத்த விழியாள் உங்கள் மனைவி திரௌபதியைப் பணயம் வைக்கலாமே'' என்றான். இதனால்,தருமனின் தம்பியரும், விதுரன் போன்றோரும் சினம் கொள்கின்றனர். சூது மீண்டும் தொடங்குகிறது. தருமன் முறையெ சகாதேவன், நகுலன், அர்ச்சுணன், வீமன் ஆகியோரை வைத்திழக்கிறான். பின், தன்னைத்தானே பணயம் வைத்துத் தோற்கிறான். துரியோதனன் இதனால் பெரும் மகிழ்ச்சி கொண்டு,''இதை எங்கும் பறை அறைவாயடா! தம்பி என்கிறான். சகுனி தருமனிடம்,''திரௌபதியைப் பணயமாக வைத்துத் தோற்றது அனைத்தும் மீட்கலாம்'' என்கிறான்.

### 4. துகிலுரிதற் சருக்கம்

வேள்விப் பொருளை நாயின் முன் வைப்பது போல, பொன் மாளிகை கட்டிப் பேயினைக் குடியேற்றல் போல ஆளைவிற்று வாங்கிய பொன்மணியை ஆந்தைக்குப் பூட்டுதல் போல மனைவி திரௌபதியைத் தருமன் பணயம் வைத்துத் தோற்றான். இதனால் கௌரவர்கள் மகிழ்ந்தனர். துரியோதனன் சகுனியிடம் ''என் துயர் தீர்த்தாயடா மாமனே! அன்று நகைத்தாளடா! உயிர் மாமனே! அவளை என் ஆளாக்கினாய் என்று மகிழ்ச்சியால் குதித்து ஆடினான். பின்னர் உடனே திரௌபதியை மன்றுக்கு அழைத்துவரும்படி சொன்னான். இதனால் விதுரன் போன்றோர் இது தகாது என்று மறுத்துரைக்கின்றனர். திரௌபதியை அழைத்து வரச்சென்ற பாகன் திரும்பி வந்து துரியோதனனிடம்,'அங்கு தேவியர் தமை நூறுதரம் சென்று அழைப்பினும் அவர் நுங்களைக் கேட்கத் திருப்புவார்' என்றான். இதனால் கோபம் கொண்ட துரியன் 'தம்பி! துச்சாதனா! நீ போய் திரௌபதியை அழைத்து வா'' என்றான்.

### 5. சபதச்சருக்கம்

அண்ணனின் கட்டளைப்படி துச்சாதனன் திரௌபதியின் மாளிகைக்குச் சென்றான். துச்சாதனச் சண்டாளன் கக் கக் என்று நகைத்துக் காரிகையின் கூந்தலினைப் பற்றிக் கரகரவென்று இழுத்துச் செல்கிறான். வழிநெடுக இருப்பவர்

யாரும் அவனைத் தடுக்கவில்லை. அவையோரும் மூங்கையர் போல் வாளா இருக்கின்றனர். திரௌபதி நீதி கேட்டு அழுகின்றாள். ‘‘வேத முனிவர் விதிப்படி தன்னையடிமை என விற்றபின்னும் தருமன் நின்னை அடிமை எனக் கொள்வதற்கு நீதியுண்டு தீங்கு தடுக்கும் திறமிலேன்’’ என்று சாய்ந்தான் வீடுமன். மேலும் அங்கே ‘‘இனியும் பொறுப்பதில்லை தம்பி எரிதழல் கொண்டுவா கதிரை வைத்திழந்தான் அண்ணன் கையை எரித்திடுவோம்’’ என்று வீமனுக்கு ‘‘தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்’’ என்று அர்ச்சுணன் கூறினான். பின்னர், கண்ணன் பணியாளனை அழைத்தப் பாண்டவர்களின் மார்பிலணிந்த ஆடைகளைக் களையச் சொன்னான். அதன்பின் அண்ணனின் கட்டளைக்கிணங்கத் துச்சாதனன் திரௌபதியின் ஆடையை உரிதலுற்றான். திரௌபதி கண்ணனிடம் ஒருமையுற்று வேண்டினாள்.

**‘‘கண்ணபிரானருளால் - தம்பி**
**கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்**
**வண்ணப்பொற் சேலைகளாம் - அவை**
**வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே!’’**

என்று கண்ணனால் காக்கப்பட்டாள். இறுதியில் வீமன், அருச்சுணன், திரௌபதி மூவரும் துரியனை அழித்திடச் சபதம் செய்வதுடன் காப்பியம் நிறைவு பெறுகிறது.

## பாஞ்சாலி சபதம் கதைக்கண்ணோட்டம்

அத்தினாபுரத்தின் மன்னன் திருதராட்டிரன். இவன் இருகண்களும் இல்லாதவன். இவன் மகன் துரியோதனன். தீய நெஞ்சினன். துரியோதனன் தனது பேராசைகளுக்குத் தனது தாய்மாமன் சகுனியைத் துணையாகக் கொள்ளுகின்றான். தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரும் ‘பஞ்ச பாண்டவர்’ எனப்படுவர். இவர்கள் ஐவர் மீதும் துரியோதனன் பொறாமை கொள்கின்றான். அவர்களது நாடு, நகர் முதலானவற்றைக் கவர்ந்து கொள்ளத் திட்டமிடுகின்றான்.

விதுரன் மூலமாகப் பஞ்சபாண்டவரைத் தன் நாட்டிற்கு விருந்திற்குத் துரியோதனன் அழைக்கின்றான். வந்த விருந்தினரை வஞ்சகமாக வற்புறுத்திச் சகுனி சூதாட (தாய விளையாட்டு) வைக்கின்றான். முதலில் மறுத்தாலும் பிறகு இணங்கிய தருமன் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றான். முதலில் சகாதேவனையும் பிறகு நகுலன், அர்ச்சுனன், பீமன் என நால்வரையும் பணயமாக வைத்துச் சூதாட்டத்தில் தோற்ற தருமன் இறுதியில் தன்னையும் வைத்து இழக்கின்றான். பிறகு தம் மனைவி பாஞ்சாலியையும் பணயமாக வைத்து இழக்கின்றான். பஞ்சபாண்டவர் குடும்பம், நாடு, நகர் அனைத்தும் துரியோதனனின் அடிமைப் பொருளாகவும் சொத்தாகவும் மாறுகின்றனர்.

தருமனால் அடிமைப்பட்ட பாஞ்சாலியைத் துரியோதனனின் தம்பி துச்சாதனன் சபைக்கு இழுத்து வருகின்றான். பாஞ்சாலி அனைவரிடமும் நீதிகேட்டு அழுகிறாள். அனைவரும் நிறைந்த சபையில் தன் கணவராம் பஞ்சபாண்டவரின் கண்ணெதிரே துச்சாதனால் பாஞ்சாலி துகில் உரியப்படுகிறாள்.

ஐந்து கணவர் இருந்தும் கதியற்று கையற்ற நிலையில் இருந்த பாஞ்சாலி கடைசியில் கண்ணனை நினைத்துத் தஞ்சம் புகுகிறாள். கண்ணன் அருளால் பாஞ்சாலியின் சேலை வளர்கின்றது. பாஞ்சாலி மானம் காக்கப்படுகிறாள்.

தன் தொடை மீது ‘வா, வந்து இரு!’என்று பாஞ்சாலியை அழைத்த துரியோதனனின் தொடையைப் பிளந்து உயிர் மாய்ப்பேன். பாஞ்சாலியின் துகிலை உரித்த துச்சாதனின் தோள்களைப் பிய்த்து அங்கு ஊறி வரும் இரத்தம் குடிப்பேன் என்று பீமன் சபதம் செய்தான். பாதகக் கர்ணனைப் போரில் மடியச் செய்வேன் என்று அர்ச்சுனன் சபதம் செய்தான். கடைசியில் பாஞ்சாலி சபதம் சபதமிட்டு,

**“பாவி துச்சாதனன் செந்நீர் - அந்தப்**
**பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம்**
**மேவி இரண்டும் கலந்து – குழல்**
**மீதினில் பூசிநறுநெய் குளித்தே**
**சீவிக் குழல்முடிப்பேன் யான் - இது**
**செய்யுமுன்னே முடியேன் என்றுரைத்தான்”**

வீமன், ஆர்ச்சுனன், பாஞ்சாலி மூவரின் சபதத்துடன் பாஞ்சாலி சபதம் நூல் நிறைவு பெறுகிறது.

பாரதநாட்டைப் பாஞ்சாலியைப் பாரதியார் உருவகித்துக் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| பஞ்சபாண்டவர் | - | இந்தியர் |
| பாஞ்சாலி | - | பாரதநாடு |
| துரியோதனன் | - | அந்நிய தீய சக்திகள் |
| சகுனி | - | அந்நிய சக்திகளின் சூழ்ச்சி எண்ணங்கள் |
| துச்சாதனால் பாஞ்சாலி துகிலுரியப்படுதல் | - | அந்நியதீய சக்திகளால் நம் நாட்டு வளங்கள் உரிஞ்சப்படுதல்: மண்ணின் மைந்தர்கள் அடிமைப்பட்டு அவமானப்படுதல் |

திருதராட்டிரனின் பார்வையற்ற நிலை - தன் தாய்நாடு அடிமைப்பட்டிருப்பதை அறிந்தும் விதிபோல் நடக்கும் என்றிருக்கும் மக்களின் முயற்சியற்ற குருட்டு மனப்பான்மை

பாரதியார் பாஞ்சாலி சபதத்தை உருவகமாகத்தான் படைத்துள்ளார் என்பதனைப் பல பகுதிகள் பதிவுசெய்துள்ளன.

**"போச்சுது போச்சுது பாரதநாடு**
**போச்சுது நல்லறம்: போச்சுது வேதம்"**

என்னும் பதவி மூலமும்,

பாரநாட்டை வணிகச் சூதாட்டத்தில் அடிமைப்படுத்தி இழந்த நிலையை,

**"கோயில் பூசை செய்வோர் - சிலையைக்**
**கொண்டு விற்றல் போலும்**
**வாயில் காத்து நிற்போர் - வீட்டை**
**வைத்து இழத்தல் போலும்"**

என்பதன் மூலமும் இதனை உணரலாம்.

## பாத்திரப்படைப்பு

காப்பியத்திற்கு நிலைக்களமான கதைக்கு உயிரூட்டுவன பாத்திரங்களே ஆகும். காரணம் பாத்திரங்கள் என்பன உயிருடைய பொருள்கள். காப்பியத்திற்கு வேண்டிய கதை, பாத்திரங்கள், நிகழ்ச்சி என்ற மூன்றில் கதையைக் காட்டிலும் பாத்திரங்களே காப்பியத்திற்குச் சிறப்பைத் தருவனவாகும் என்று கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் கருத்தும் இதனை வலியுறுத்தும். இதன்படி பாஞ்சாலி சபதத்தில் வரும் பாத்திரங்களைக் காண்போம்.

**பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி**

காப்பியத் தலைவி பாஞ்சாலி துருபத நாட்டு மன்னன் மகள் சுயம்பர மண்டபத்தில் அருச்சுனனை மணந்து பாண்டவர் ஐவருக்கும் மனைவியாகிறாள். சகுனியின் சூழ்ச்சியால் தருமன் நாட்டையும் உடன் பிறந்தாரையும் மனைவியையும் பணயம் வைத்துத் துரியோதனனுக்கு அடிமையாகிறான். இதை அறிந்த திரௌபதி சபையில் நீதி கேட்டு அழுகிறாள். ஆனால் அங்கே துச்சாதனனால் துகிலுரிக்கப்படுகிறாள். அப்போது அவள் ஹரி, ஹரி, ஹரி, ஹரி என்று உட்சோதியிற் கலந்தாள். கண்ணனால் காப்பாற்றப்பட்டு சபதம் ஏற்கிறாள். பாரதப்போரில் துரியோதனன், துச்சாதனன் இருவரையும் அழித்து அவர்களின் இரத்தத்தைத் தன் குழல் மீது பூசி முடிவேன். அதுவரைச் சீவிக் குழல் முடியேன் என்கிறான்.

காப்பியத்தின் தலைவியாகப் பாஞ்சாலி படைக்கப்பட்டிருந்தாலும் அவன் காப்பியம் முழுவதும் வரவில்லை. காப்பியத்தின் இறுதியில்தான் அவனைப் பேசவைக்கிறார். பாரதி பாஞ்சாலியை அறிமுகப்படுத்தும் பொழுது துருபதன் செல்வம். திட்டதுய்மனின் உடன்பிறப்பு என்கிறார். தருமன் திரௌபதியைப் பணயம் வைக்கும் போது பாரதி எப்படிப்பட்ட உயர்ந்த பொருளை இழக்கிறோம் என்பதை,

> **“பாஞ்சால நாட்டின் தவப்பயன்**
> **ஆலியல் இனியவளை**
> **செய்ய முதை**
> **ஓவியம் நிகர்த்தவைள**
> **உயிரனையத் தேவியை**
> **நிலத்திருவை**
> **கிடைப்பரும் திரவியத்தை**
> **தெய்வீக மலர்க்கொடியை**
> **கடிமகழ் மின்னுருவை**
> **வடிவுறு மின்னுருவை**
> **இன்ப வளத்தினை”**

என்று சிறப்பித்துக் காட்டுகின்றார்.

தருமன், அவைக்களத்தில் சூதில் பணயமாக வைத்துவிட்டானே என்று மனம் கொதிக்கிறார். காப்பியத் தலைவியான திரௌபதி காவியத்தில் இரண்டே இடங்களில் தான் பேசுகின்றாள். 1) பாஞ்சாலி சபதம், தான் துரியோதனனிடம் அடிமைப்பட்டதை அறிந்ததும் சீறி எழுகிறாள்.

**"நாயகன் தாந்தம்மைத் தோற்றபின் - என்னை**
**நல்கும் உரிமை அவர்க்கில்லை – புலைத்**
**தாயத்திலே விலைப்பட்ட பின் - என்ன**
**சாத்திரத்தால் என்னைத் தோற்றிவிட்டார்"**

என்றும்

**"பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்**
**பாயமுணராத மன்னவனைச் சூதாட**
**வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ! நேர்மையோ**
**முற்பட்டவே சூழ்ந்து முடிந்ததொரு செய்கையன்றோ?"**

என்றும் நீதிகேட்டு அரற்றுகின்றாள். இவ்விடங்களில் அவள் நீதிமுறைகள் அறிந்தவளாக விளங்குகின்றாள். இவ்விரு இடங்களுமே காவியத்தின் முத்தாய்ப்பாய் உச்சமாய் அமைந்துவிடுகின்றன.

காம இச்சை கொண்ட துச்சாதனன், அண்ணனின் ஆணையால் துகிலுரிய, வருகிறான். அவனிடம் "என்னை நெருங்காதே, நீ கட்டுத்தவறிமொழிகின்றாய்"– எனப் பல எடுத்துரைக்கின்றன. ஆனால் அவனோ, காமவெறியில் அவள் மைக்குழல் பற்றி துகிலுரியத் தொடங்குகிறான். பின் கண்ணனின் அருளாள் காக்கப்பட்டு, இறுதியில்,

**"தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்**
**பாவி துச்சாதனன் செந்நீர் - அந்தப்**
**பாழ்துரியோதனன் ஆக்கை இரத்தம்**
**மேவி இரண்டும் கலந்து – குழல்**
**மீதினிற் பூசி நறுநெய் குளித்தே**
**சீவிக் குழல் முடிப்பேன் யான் - இது**
**செய்யுமுன்னே முடியேன்"**

என்று வீரசபதம் செய்கின்றாள்.

இத்துடன் பாரதியும் தனது காப்பியத்தை முடிக்கிறார்.

**துரியோதனன்**

பாரதியார் தனது பாஞ்சாலி சபதத்தில் துரியோதனனை எதிர்நிலைத் தலைவனாகப் படைக்கிறார். துரியோதனன் பாண்டவர் மீது பொறமை கொண்டவன். இவனைத் திடமான அறிவுத்திறனும் நம்பிக்கையும் வஞ்சனையும் நிறைந்தவனாகப் படைத்துள்ளார் பாரதியார்.

சகுனியின் பேச்சுக்கு ஆடும் பொம்மைபோல பல இடங்களில் துரியோதனன் காட்சியளிக்கின்றான். பாண்டவர் மீது வெறுப்புற்ற தன் எண்ணத்திற்கேற்ப, அவர்களை அழிக்கச் சகுனி திட்டங்கள் கூறும்போது, அவனைப் பாராட்டுகின்றான். இதைக் கடிந்த விதுரனைத் தூற்றுகிறான். தன் தந்தை திருதராட்டிரனைக் கடிந்து உரைக்கின்றான். ஆணவமும் நினைத்ததை முடித்து விட வேண்டும் என்ற பிடிவாத குணமும் நிறைந்தவனாக விளங்குகின்றான்.

பாண்டவரின் வீழ்ச்சியில் தான் தனது பெருமை உளது என்று நம்புகிறான். வீரமில்லாத் தருமன், வேந்தர் தம் முதல் என நின்றதை அவனால் பொறுக்கமுடியவில்லை.

**“எது குலத்தான் சொல்லும்**
**தம்பியர் தோள்வலியும்**
**பொறுமை யென்னும் பழவினை என்றும்**
**பதுங்கி நிற்கும் மறத்தன்மையிலாத்**
**தருமனுக்குப் புகழ் சேர்த்தன”**

என்று பொறாமை மிக்கு உரைக்கின்றான். தந்தை ஆரிய வீட்டுமன்,மறைக்குல மறவர் துரோணர், கிருபர், கர்ணன் ஆகிய ஆன்றோர் இருக்க, தீ நெறிச் சகுனியிடம் பாண்டவர் அழிவிற்கு வழி கேட்கிறான்.

அண்ணன் மைந்தன் நானிருக்க, கண்ணனுக்கு முதல் உபசாரங்கள் காட்டினார். அதனைத் தந்தையிடம் கூறுவாய், சராசந்தனையும் சிசுபாலனையும் கொன்ற விதத்தையும் கூறுவாய், என்னைப் பார்த்துத் திரௌபதி நகைத்த செயலும் கூறுவாய்.

**“பேச்சை வளர்த்தும் பயனொன்று**
**மில்லை, என் மாமனே! – அவர்**
**பேற்றை அழிக்க உபாயஞ் சொல்வாய்**
**என்றன் மாமனே!**
**தீச்செயல் நற்செயல் ஏதெனினும்**
**ஒன்று செய்து நாம் - அவர்**

**செல்வங் கவர்ந்த வரைவிட**
**வேண்டும் தெருவிலே”**

என்று கூறிய துரியோதனன் கூற்றைச் சகுனி நிறைவேற்றுகிறான்.

துரியோதனனுக்குத் தன் விருப்பத்தை நிறைவேற்ற முன்வராதத் தந்தையைக் கண்டு சினமெழுகிறது.

“என் வார்த்தையின்றி அப்பாண்டவர் வாரார்- இந்த வார்த்தை உணர்த்தி விடாயேல் இங்கு நின்முன் என் ஆவி இறுப்பேன்” என்று உறுதியுடன் கூறித் திருதராட்டினைச் சம்மதிக்கச் செய்கிறான்.

தன்பிடிவாதத்தால் நினைத்ததை முடித்த துரியோதனன் சபைக்கு வந்தவுடன் சகுனி சொற்படி கேட்கும் கைப்பாவையாகிறான். பாண்டவர் வந்ததும் அவர்களைச் சூதுக்கு அழைப்பதும் சகுனியே, முதலில் மறுத்த தருமனை, இகழ்ந்தும் அவாவுறுத்தியும் இணங்கச் செய்வதும் சகுனியே.

பொழுதுபோக்குதற்கு ஆடமுற்பட்ட சூதாட்டம் பாண்டவர் வாழ்வைப் போக்குகிறது. அனைத்தையும் தருமன் இழக்கும் வரை துரியோதனன் மனம்களித்துப் பார்த்திருந்தானே தவிர, தானே முற்பட்டு ஏதும் செயலாற்றவில்லை. தருமன் நாட்டை வைத்தாடுகையில் சூதினை நிறுத்துமாறு விதுரன் குறுக்கிட, உடனே துரியோதனன் விதுரனைச் சாடுகிறான். நன்றி கெட்டவன் என்றும், நாணமற்றவன் என்றும் குறிப்பிட்டு எங்கள் அழிவு நாடுவதே உன் இயல்பு. அவையினா் நடுவே உன்னை வைக்கலாமா? பணயம் வைத்து முறையாக வெல்கிறோம். நாங்கள் தட்டிப் பறிக்கவோ ஏமாற்றவோ இல்லை. நீ பேசாமலிரு என்று விதுரனைத் தடுக்கிறான்.

நாட்டை இழந்த தருமனிடம் தம்பிமாரை வைத்தாடுமாறு தூண்டுபவன் சகுனியே. அதைக்கேட்ட துரியோதனன் உவகை கொண்டு தம்பிமாரை வைத்துத் தருமன் வென்றுவிட்டால் முன்பு மாமன் வென்ற பொருளனைத்தையும் தருவதாகக் கூறி ஆர்வமூட்டுகிறாள். உன்பிறந்தாரையும் தன்னையுமிழந்து பின் பாஞ்சாலியையும் பணயப் பொருளாக்குகிறான் தருமன்.

பாஞ்சாலி வசமானதும் அவன் உவகை பொங்க, குன்று குதிப்பது போலக் கொட்டிக் குதித்தாடுகின்றான். அன்று நகைத்தவனை இன்று இந்நிலைக்குக் கொண்டுவந்த மாமனைப் புகழ்கிறான். திரௌபதியை மன்றுக்கு அழைத்துவருமாறு துரியோதனன் கூறும்போது, பாரதியாரே அவனை மூடப்புலமையினோன், என்றும் அகத்தே இருளுடையவன் என்றும் கடிந்துரைக்கிறார்.

அதன்பிறகு பாஞ்சாலியை அவமானப்படுத்திய செயலில் இவன் பங்கேற்றதாகப் பாரதியார் குறிப்பிடவில்லை.

**சகுனி**

பாரதியார் சகுனியை அறிமுகப்படுத்தும் போதே ‘புலநடைச் சகுனி’ என்கிறார். துரியோதனன் தனது அரசவையில் தருமனின் புகழை ஆற்றாது பொறாமையுற்று பல கூறுகிறான். பின் சகுனியிடம் திரும்பி ‘ஈனமாமன்’ அறிந்திடும் வண்ணம் தன் எண்ணத்தையெல்லாம் உரைக்கிறான். சூதாடுவதில் சகுனி நிகரற்றவன். ‘வெற்றியடைவது உறுதி என்றும், மோது போரிலும் சூதுபோரே சிறந்தது’ என்று சகுனி கூறுகிறான்.

ஒரு தந்தையின் மனதை மகன் கூற்றுக்குச் சம்மதிக்கச் செய்யச் சிறந்த வழி தேடுகிறான். மகன் நாளுக்கு நாள் நலிந்து வருவதையும், பாண்டவர் வேள்வியில் குறை செய்ததையும், மண்டபவம் கட்டுவதைப் பற்றிக்கூறும் முன் தேங்கிய நீரைவிட ஓடும் நீரே பயன்தரதக்கது என்றும் அதைப் போலச் செலவு செய்தால் நிறையச் செல்வம் தேட வழியுண்டு என்றும் உணர்த்துகிறான். இதனால் சினமுற்ற திருதராட்டிரன்,

**“பிள்ளையை நாசம் புரியவே ஒரு**

**பேயென நீவந்து தோன்றினாய்”**

என்று சீறுகிறான்.

சூதாடும்போது சகுனியின் பாத்திரம், பாரதக் கதையில் தான் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்ற முற்படுவதால், சகுனியை அறிமுகப்படுத்தும் போதே பண்புநலனை விளக்குகிறார். பாரதியார், தான் ஒருவன் மட்டுமல்லாது சூதாட்டத்தில் வல்ல தோழராகிய விவிஞ்சதி சித்திரகேனன் சத்தியவிரதன். புருமித்திரன் ஆகியோருடன் வீற்றிருந்தான். சகுனி, வீடுமன் முதலிய அறவோர் வீற்றிருந்த சபையில் கொக்கரித்தான்.

**“புன்தொழிற் கவறதனில் - சபை**

**புலிமிசை இணையில் எனும் புகழான்**

**நன்றறி யாச் சகுனி – சபை**

**நடுவினில் ஏறெனக் களித்திருந்தான்”**

என்று பாடுகிறார் பாரதியார்.

சகுனியின் வஞ்சனையால் நகுலனையும் சகாதேவனையும் இழந்து ‘என்ன புன்மை செய்தோம்’ என்று தருமன் எண்ணுகிறான். அப்போது,

**“வேறொரு தாயிற் பிறந்தவர் - வைக்கத்**

**தகுவரென்றிந்தச் சிறுவரை – வைத்துத்**

**தாயத்திலெ இழந்திட்டனை**

**திண்டிய வீமனும் பார்த்தனும் - குந்தி**

**தேவியின் மக்க ளுனை யொத்தே – நின்னிற்**

**கண்யிம் மிக்கவர் என்றவர் - தம்மைக்**

**காட்டுதற் கஞ்சினை போலும் நீ?”**

என்று சகுனி கூறித் தருமனுக்குச் சினமுண்டாக்கி உடன்பிறந்தாரையும் வசமாக்கிக் கொள்கிறான்.

சகுனி நினைத்தது முற்றிலும் நடைபெறவில்லையே என்று துரியோதனனை அடக்குவதுபோல் மேலும் பாண்டவர் சரிவுக்குத் திட்டமிடுகிறான்.

இவர் மேவிடு தேவியாம் பாஞ்சாலியை வைத்திட்டால் வெற்றி பெறலாமே! அவள் மிகுந்த அதிட்டமுடையவள் அல்லவா? என்று இவன் உள்ளத்தில் கள்ளமும் உதட்டில் கனிவும் கொண்டு கூறும் கூற்று இவன் தேர்ந்த வஞ்சகன் என்பதைப் பறைசாற்றுகிறது.

பாஞ்சாலியைத் தருமன் பணயமாக்கியபோது அவளையும் கௌரவருக்கு அடிமையாக்கி அளிக்கின்றான் சகுனி.

தனது அறிவுத்திறனையும் சொல்வன்மையையும் பயன்படுத்தி அவன் திட்டமிடுவதும், சூழ்நிலைக்கேற்ற சொற்களைக் கூறி மாற்றானை வயப்படுத்துவதும், கருதியதை முடிக்கும் முயற்சியுடைமையும் சகுனியின் தேர்ந்த சூழ்ச்சித் திறனைக் காட்டுகின்றன.

**திருதிராட்டிரன்**

பாரதியார் திருதராட்டிரனை நற்குணமுடையவனாகப் படைத்துள்ளார். இதனைக் காப்பியத்தின் முன்னுரையிலேயே கூறுகிறார்.

‘‘இந்நூலிடையே திருதராட்டிரனை உயர்த்த குணங்கள் உடையவனாகவும், சூதில் விருப்பமில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கிறேன். அவனும் மகனைப் போலவே துர்குணங்களுடையவன் என்று கருதுவோருமுள்ளர். எனது சித்திரம் வியாசர் பாரதக்கருத்தைத் தழுவியது’’ என்கிறார் பாரதியார்.

சூதாட அழைக்க அனுமதி கேட்கும் பொருட்டுத் துரியோதனன் தன் தந்தையை அணுக அஞ்சுகிறான் துரியோதனன் நாளுக்கு நாள் நலிகிறான் என்று கூறிய சகுனிக்கு.

உனக்கு எவ்விதத்தில் குறை? இன்னமுதாய உணவுகள் இந்திரன் மயங்கும் ஆடைகள், அமைச்சர், குடி, படை அனைத்தும் இருக்க, நானிலமெங்கும் புகழ்பரப்பும் பாண்டவர் சகோதரர் துணையிருக்க, உனக்குத் துயருண்டோ? என்கிறான். சகுனி பாண்டவர் மீது சென்னை குறைகள், குற்றச்சாட்டுகள் இவற்றிற்கெல்லாம் தக்க பதிலுரைக்கிறான். திரௌபதி நகைத்த செயலைக் கூறியபோது, தவறி விழுபவர் தம்மைக கண்டு பெற்ற தாயும் சிரிப்பது இயல்பே. மைத்துனி சிரிப்பதில் குற்றமில்லை என்றுரைத்தும் சமானப்படுத்துகிறான். சகுனியும் துரியோதனனும் தம் கருத்தை வெளிப்படுத்திய பின்பு சினம் எழுந்த போதும் தனது நீண்ட அறிவுரையால், துரியோதனனின் நச்சு எண்ணத்தைப் போக்க முயல்கிறான். ஆனால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மக்ன அச்சுறுத்தவும் மனம் நொந்து சம்மதிக்கிறான் திருதிராட்டிரன்.

விதி அழிவை நோக்கித் தம்மை அழைத்துச் செல்வதை உணர்ந்து வருந்துகிறான். சூதாட்டத்தைத் தடுப்பதற்காகத் தன்னால் இயன்றவரை முயற்சி செய்கிறான். விதுரனைத் தூதனுப்பும் போதும், தம்பி மைந்தருக்குக் குறிப்பினால்

உணர்த்துமாறு விதுரனைத் தூதனுப்புகிறான். பாண்டவரை எச்சரிக்கையும் செய்கிறான். அத்துடன் தன் பங்கு முடிந்துவிட்டது என்று எண்ணி மௌனமாகிறான். விதியின் மேல் நம்பிக்கை வைத்துவிட்டுச் சோர்வடைகிறான். பாஞ்சாலி சபதம் முடியுமளவும் அமைதியாகவோ இருக்கிறான்.

திருதராட்டிரன் புறக்கண்கள் பெறாவிடினும் தனுது அறிவையும் விதுரன் அறிவையும் இருவிழிகளாகப் பெற்றவன் என்று பாரதியார் கூறுகின்றார். திருதராட்டிரன் விதியை நம்புவன் விதியின் பாவையாய் நின்று விதியை நொந்து சூதாட்டத்திற்குச் சம்மதம் அளித்த செயல், அவனுக்கு விதியின் மீதுள்ள நம்பிக்கையைப் புலப்படுத்தும்,

திருதிராட்டிரன் இறைப்பற்று மிக்கவன் என்பதை அவன் கண்ணனைப் புகழ்ந்து வணங்குவதிலிருந்து அறியமுடிகிறது.

**"ஆதிப் பரம்பொருள் நாரணன்! தெளி**
**வாகிய பாற்கடல் மீதிலே – நல்ல**
**சோதிப் பணாமுடி யாயிரம் கொண்ட**
**தொல்லறி வென்னுமோர் பாம்பின்மேல் - ஒரு**
**போதத் துயில்கொளும் நாயகன் - கலை**
**போந்து புவிமிசைத் தோன்றினான் - இந்த**
**சீதக்குவளை விழியினான்! –என்று**
**செப்புவர் உண்மை தெளிந்தவர்"**

என்றும்

**"கண்ணனை ஏதெனக் கொண்டவனை? – அவன்**
**காலிற் சிறு துக ளொப்பவர் - நிலத்**
**தெண்ணரும் மன்னவர் தம்முளே – பிறர்**
**யாருமிலை பெனல் காணுவாய்"**

என்று கண்ணனைப் போற்றிப் புகழ்கிறான்.

பகைமன்னனின் தந்தையாக இருந்தபோதும் நற்குணம் கொண்டவனாகத் திருதராட்டிரனைப் பாரதியார் படைத்துள்ளார். சிறந்த நீதிகளையும் அறிவுரைகளையும் கூறுபவனாகவும் இயல்பினை உணர்ந்தவனாகவும் விளங்குகிறான்.

**விதுரன்**

'மெய்ந்நெறியுணர் விதுரன்' என்றே அறிமுகப்படுத்துகிறார் பாரதியார். திருதராட்டிரன், சகுனி, துரியோதனன் உரையாடலின்போது, திருதராட்டிரன் ஊனக்கண் இல்லாவிடினும் விதுரனின் அறிவாகிய ஞானக்கண்ணையுடையவன் என்கிறார் பாரதியார்.

பாண்டவரிடம் தூது சென்றபோது தன் தூதுரையை உடனே கூறவில்லை. தக்க சமயம் பார்த்துக் கூறுகிறான். இரவு வந்தவுடன் செய்தியைக் கூறுகிறான். இனிச்செய்ய வேண்டுவது பற்றித் தருமன் விதுரனிடம் வினவுகிறான். விதுரன் துரியோதனனுக்குத் திருதராட்டிரன் சூதின் தீமையை உணர்த்தியதாகத் தெரிவித்து,

**“சொல்லிய குறிப்பறிந்தே – நலந்**

**தோன்றிய வழியினைத் தொடர்க”**

என்றபடி,தனக்குக் கட்டளையிட்டவாறு குறிப்பால் உணர்த்துவதுடன் தனது கடமையை முடித்துக்கொள்கிறான்.

சூதுபோர் நடக்கும்போது மௌனமாயிருந்த விதுரசன் தருமன் நாட்டை வைத்தாடும்படி சகுனி கூறியதும் தன்னையும் மீறிச் சினந்தெழுந்து,

**“ஐயகோ இதை யாதெனச் சொல்வோம்?**

**அரசரானவர்செய்குவ தொன்றோ?”**

என்கிறான். மேலும் தீமை கண்டும் ஊமையாய் அமர்ந்திருக்கும் திருதராட்டிரனை,

**“சூதிற் பிள்ளை கெலித்திடல் கொண்டு**

**சொர்க்க போகம் பெறுபவன் போலப்**

**பேதை நீயு முகமலர் வெய்திப்**

**பெட்பு மிக்குற வீற்றிருக்கின்றாய்”**

என்று இடித்துரைத்துச் சூதாட்டத்தை நிறுத்தைச் சொல்கிறான்.

விதுரன் உலக இயல்பை எடுத்துச்சொல்கிறான். இனிய சொல் கூறுவோர் இடும்பைக்கு வழி சொல்பவர். நன்மை காண்பவர் இடித்துரைப்பார்கள். நெடும்பச்சை மரம் போல வளர்ந்தும் இதனை நீ அறியவில்லை. நலம் கூறுவோர் மொழி கேளாத உன் அவையில் நல்லோர் அமைச்சராக இருப்பதற்குத் தகுதி பெற்றவரல்லர்.

பித்தரும், நீசரும், வேசையரும் மட்டுமே தகுதி உடையவர்கள்,விதியின் வலியை நன்கு அறிந்தும், பேதையாகிய நான் வெள்ளைமனம் உடைமையினால் மகனே, உன்னுடைய சூழ்ச்சிமிக்க வழியைத் தடுத்துரக்க வந்தேன். ஆனால் என் பேச்சை இங்கு எடுத்துரைப்பதால் பயனொன்றுமில்லை என்பதை அறிந்தேன். ஆகவே இனி உன் வழிப்படியே செய்க என்று கூறி வாய்மூடி அமர்கிறான். பின் விதுரனைத் துரியோதனனே தூண்டி எழுப்புகிறான். சூதில் வசமான திரௌபதியை அழைத்துவர ஆணையிடுகிறான் துரியோதனன். இதனால் கோபமுற்ற விதுரன் ஐவர் சின்னத்தின் அழலை வளர்க்கிறாய், நான் உனது நன்மை கருதியே கூறுகிறேன். நாளை நீ மாண்டு தரைமேல் கிடக்காமல் இருக்கவே கூறுகிறேன்.

**“வெந்நரகு சேர்த்துவிடும் வித்தை தடுதுவிடும்**

**மன்னவனே நொந்தார் மனஞ்சுடலே சொல்லுஞ்சொல்”**

என்று எச்சரிக்கின்றான். ஆனால் துரியோதனன் விதுரனை வெறுக்கிறான்.

பாஞ்சாலியை அடிமைப்படுத்தும்போது கௌரவர் நாசமுறப் போவது குறித்து,

**“பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்!**

**வராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்”**

என்று சினந்து கூறித் தனது வெள்ளை மனத்தையும், அந்நீதிகண்ட விடத்து ஆத்திரமடையும் பண்பையும் புலப்படுத்துகிறான்.

விதுரனைச் சான்றோனாக,அநீதியை அழிக்கத் தூண்டும் ஆன்றோனாகப் படைத்துள்ளார் பாரதியார்.

**வீடுமன்**

**“அந்தமில் புகழுமையான் அந்த ஆரிய வீட்டுமன்**

**அறமறிந்தோன்”**

என்று வீடுமனைப் பாரதியார் அறிமுகப்படுத்துகிறார்.

பாஞ்சாலி துரியோதனன் அவையில் நீதிகேட்டு அழுதபோது அறம் உரைத்திலன் விதுரன். அதற்கானக் காரணத்தைக் கூறுகிறான்.
மதிப்பற்ற இடத்தில் அறிவுரை கூறுவதில் என்ன பயன்?

**“பெருகு சீர்த்தி அக்கங்கையின் மைந்தன்**

**பேதை நானும் மதிப்பிழந்தேக”**

என்கிறான் விதுரன். தீயோர் சொற்கேட்டுத் துரியோதனன் செயல்படுவதால் வீடுமன் போன்றோர் அமைதியடைகின்றனர். விதுரன் சினந்தான். வீடுமன் மௌனமாயிருந்தான் என்பதை,

**“வருவதெல்லாம்**

**யானறிவேன் வீடுமனும் அறிவான் கண்டாய்**

**வென்றான் உன் ஆசையெல்லாம் யோகியாகி**

**வீடுமனும் ஒன்றுரையாதிருக்கின் றானே”**

என்கிறார்.

திரௌபதிக்கு நீதி உரைக்கும் வீடுமன் “அக்காலத்தில் பெண்களைப் போற்றியதால் பாஞ்சாலியின் வழக்குச் சரிதான் என்றும், அக்காலநியதியாகக் கொள்ளப்படும் என்றும் கூறினான். பாஞ்சாலி அடிமைப்பட்ட காலத்தில ஆணுக்குப் பெண் அடிமைதான் என்றும் கூறி, பாஞ்சாலி அடிமைப்பட்டவளே என்கிறான். பெண்களின் இழிவுநிலையைப் பாரதியார்,

**“இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால் ஆடவருக்**

**கொப்பில்லை மாதர், ஒருவன் தன் தாரத்தை**

**விற்றிடலாம், தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்**

**முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை**

**தன்னை யடிமையென விற்றபின்னுந் தருமன்**

**நின்னை அடிமையனெக் கொள்வதற்கு நீதியுண்டு"**

என்று வீடுமன் வழி உணர்த்துகிறார். இத்தகு நீதிமுறை தனக்குச் சம்மதமில்லை என்றும் உலக வழக்கு இதுதான் என்றும் கூறித் தன் இயலாமைக்குத் தானே வருந்துகிறான்.

**"செய்கை அநீதியென்று சேர்ந்தாலும் சாத்திரந்தான்**
**வைக்கும் நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்**
**ஆங்கவையும் நின்சார்பிலான வகையுரைத்தேன்**
**தீங்கு தடுக்குத் திறமிலேன்"**

என்று கூறித் தலை கவிழ்ந்தான்.

இதற்குப் பின்னும் அவையில் வீடுமன் அமர்ந்திருந்த போதினும், பாஞ்சாலி சபதம் முடியும் வரை தீங்கு தடுக்கும் திறமற்றவராக அமைதியாகவே இருக்கிறான்.

**கர்ணன்**

பாரதியார் கர்ணனை நல்லவனாகவே வர்ணித்த போதும் அவன் சேரக்கூடியத் தீயோரைச் சார்ந்து இருந்ததால் காணனைப் பல இடங்களில் கடிந்துரைப்பதுடன் கொடிய குணமுடையவனாகவும் சில இடங்களில் காட்டுகின்றார்.

**"மைந்நெறி வான்கொடையான் - உயர்**
**மானமும் வீரமும் மதியுமு ளொன்**
**உய்ந்நெறி யறியா தான் இறைக்கு**
**உயிர்நிகர் கன்னனும் உடனிருந்தான்"**

என்று பாரதியார் கன்னனை அறிமுகப்படுத்துகிறார்.

சூதுபோர் நடக்கும் போதும், பாண்டவரும் பாஞ்சாலியும் அடிமைப்பட்ட போதும், அமைதியாகவே இருக்கிறான். அனைவரும் பாஞ்சாலியின் துன்பம் கண்டு வருந்தியிருக்க, துரியோதனன் தம்பி விகர்ணன் எழுந்து, பாஞ்சாலியை அடிமை கொள்வது நீதியாகாது என்றுரைக்கும் போது, அங்கு கர்ணன் குறுக்கிட்டு,

**"தகுமடா சிறியாய் நின்சொல்**
**தாரணி வேந்தர் யாரும்**
**புகுவது நன்றன் றெண்ணி**
**வாய் புதைத்திருந்தார் நீ தான்**
**மிகுமுறை சொல்லிவிட்டாய்"**

என்றும் பின்னர்,

**"மார்பிலே துணியேத் தாங்கும்**
**வழக்கில் கீழடியார்க் கில்லை**
**சீரிய மகளு மல்லன்**

**வைரைக் கலந்த தேவி,**

**யாரடா பணியாள்! வாராய்**

**பாண்டவர் மார்பிலேந்தும்**

**சீரையும் களைவாய் தையல்**

**சேலையுங் களைவாய்''**

என்று உரைக்கின்றான்.

பாரதியார் கர்ணனைக் கொடையில் சிறந்தவன் என்று அறிமுகப்படுத்தியபோதும், தீயோர்க்குத் துணைபோகும் உய்ந்நெறி அறியாதனாகவே படைத்துள்ளார். பாஞ்சாலியின் ஆடையை நீக்க அவன் உத்தரவிடும்போது, அவனைக் கீழ்மகனாக எண்ணச் செய்து விடுகிறார் பாரதியார்.

**துச்சாதனன்**

அவையில் தம்பியரோடும் துரியோதனன் வீற்றிருந்தான் என்று குறிப்பிடும்போதும், திரௌபதியைச் சபைக்கு அழைத்துவர முற்படும்போதும் துச்சாதனனை அறிமுகப்படுத்தி அவன் செயலைக் கூறுகிறார்.

அண்ணனின் ஆசையைப் புகழ்ந்து, பாஞ்சாலியை அரசவைக்கு அழைத்துவரத் துச்சாதனன் புறப்பட்ட நிலையை ''இவன் செவ்வி சிறிது புகலுவோம்'' என்று அறிமுகப்படுத்த, தொடங்குகிறார்.

**''தீமையில் அண்ணனை வென்றான் - கல்வி**

**எள்ளள வேனுமிலாதவன் - கள்ளும்**

**ஈரக் கறியும் விரும்புவோன் - பிற**

**தவ்வர் இவன் தனை அஞ்சுவார்- தன்னைச்**

**சேர்ந்தவர் பேயென்றொதுங்குவார்''**

என்று துச்சாதனைப் பற்றி விவரித்த பின், அவன் புத்தி விவேகமற்றவன் என்றும் ஆனால் புலிபோலும் உடல் வலிமையுடையவன் என்றும் அதர்மக் காரியங்களை இன்பத்துடன் செய்பவன் என்றும் நால்வர் கேண்மை நாடாதவன் என்றும் கூறுகிறார் பாரதியார்.

இவன் பாஞ்சாலியை நெருங்குகிறான். தன்னைத் தீண்டி விடுவான் என அஞ்சிப் பாஞ்சாலி ஒதுங்கும்போது,

''அடி! செல்வதெங்கே'' என வினவும் அவனது பண்பாடற்ற சொற்களால் மனம் புண்பட்ட பாஞ்சாலி,

**''கட்டுத் தவறி மொழிகின்றாய் - தம்பி**

**நீ வந்த செய்தி விரைவிலே – சொல்லி**

**நீங்குக''**

என்கிறாள். அதற்கு,

**“எங்கள்**

**அண்ணனுக் கேயடி மைச்சி நீ!”**

என்றும்,

**“ஆடி விலைப்பட்ட தாதி”**

என்றும் மேலும் கீழ்மையான சொற்களைக் கூறி, மன்னர் குழுமியுள்ள சபைக்கு வரவேண்டும் என உரைக்கிறான்.

அண்ணனிடம் தன்னிலையை எடுத்துக் கூறுக என்று பாஞ்சாலி பதறியதையும் பொருட்படுத்தாமல், அவளின் கூந்தலைப் பற்றி இழுத்துச் செல்கிறான். துச்சாதனன் செயலைத் தடுக்காத மக்கள் நெட்டை மரங்கள், வீரமிலா நாய்கள் என்று மனம் புண்பட்டுச் சினந்து கூறுகிறார் பாரதியார்,

சபைக்கு அழைத்து வந்த பின்னரும் ‘‘தாதியடி தாதி’’ எனத் தீதுரை கூறுகிறான். பின் கர்ணன் பாஞ்சாலியின் ஆடையைக் களைய ஆணையிட்ட போது, மிகக் கீழ்மையான குணம் கொண்டவனான துச்சாதனன் அதர்மச் செயல்புரிய அஞ்சாமல் முற்படுகிறான்.

**“பித்தேரியவனைப் போல் - அந்தப்**

**பேயனுந் துகிலினை உரிகையில்”**

என்று கவிஞர் அவனைக் கோபத்துடன் சாடுகிறார்.

**விகர்ணன்**

நூற்றுவரில் நல்லவனாக, அநீதி நடக்குமிடத்து நீதிக்குக் குரல் எழுப்பும் சான்றோனாக, அண்ணன் செயலே ஆனாலும் குற்றம் குற்றமே என இடித்துரைக்கும் அறிவோனாக விளங்குகிறான் விகர்ணன்.

குலமுதல்வன் பாட்டன் வீடுமனின் நீதியைப் பிழையென்று சொல்கிறான். வேத நெறிமாறிப் பின்னாளில் பெண்ணினம் அடிமையானதை வீட்டுமன் சுட்டிக்காட்ட, அதற்கு மறுமொழி உரைக்கின்றான்.

**“எந்தையர்தம் மனைவியரை விற்பதுண்டோ?**
**இதுகாணும் அரசியரைச் சூதில் தோற்ற**
**விந்தையை நீர் கேட்ட துண்டோ? விலைமாதர்க்கு**
**விதித்ததையே பிற்கால நீதிக்காரர்**
**சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார்!**
**சொல்லளவே தானாலும் வழக்குந் தன்னில்**
**இந்த விதஞ் செய்வதில்லை சூதர்விட்டில்**
**ஏவற்பெண் பணயமில்லை என்றுங் கேட்டோம்”**

என்று உலக வழக்கை எடுத்துரைக்கிறான். மேலும் உலக வழக்கு எதுவானாலும், திரௌபதி கூறிய வழக்கின்படி பார்த்தாலும் பாஞ்சாலி அடிமையல்லன் என்று உறுதியாகக் கூறுகிறான்.

**“தன்னையிவன் இழந்தடிமையான – பின்னர்த்**
**தாரமேது? வீடேது? தாத னான**
**பின்னையுமோர் உடைமை உண்டோ?”**

என்றுநம்மைப் பெண்ணரசி கேட்கிறாள் பெண்மை வாயால் என்று பாஞ்சாலியின் ஆதரவாகப் பேசுகின்றான். கொடிய இச்செய்கை கண்டு மௌனமாய் அமர்ந்திருக்கும் மன்னர்களை நோக்கி நீதிகாண வேண்டுகிறான். இதைக்கேட்ட சில வேந்தர்,

**“ஒல்வாது சகுனி செய்யும் கொடுமை”**

என்றும்

**“ஏந்திழையை அவைக்களத்தில் இகழ்தல் வேண்டா”**

என்றும்

**“ஒருநாளும் உலகம் இதனை மறக்காது”**

என்றும் இரைச்சலிடுகின்றார்.

விகர்ணனுக்கு இருந்த துணிவும் அறவுணர்வும் அங்கிருந்த மூத்தோருக்கும் ஏனைய சான்றோருக்கும் இருந்திருக்குமானால் பாரதப்போரே நிகழ்ந்திருக்காது.

**தேர்ப்பாகன்**

பாஞ்சாலி சபதத்தில் வரும் ஒரு சிறிய பாத்திரமே தேர்ப்பாகன் எனினும் குணநலனாக உயர்ந்து நிற்பவன், பெண்மையைப் போற்றுபவன்.

துரியோதனன் தேர்ப்பாகனை நோக்கிப் பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்து வரும்படி ஆணையிட்டான். கட்டளையை மீறமுடியாதவனாய்ப் பாஞ்சாலியிடம் சோகம் ததும்பக் கூறுகிறான். செய்தியை சொல்லுமின்,“சொல்லவுமே நாவு துணியவில்லை” என்று கலங்குகிறான். பாஞ்சாலியைப் பணயம் கேட்கச் சகுனி அஞ்சவில்லை. கண்டுகொண்டிருந்த சான்றோரும், அறவோரும் தடுக்கவில்லை. தருமனும் மனைவியைப் பணயம் வைக்க நாணவில்லை. ஆனால் இந்தத் தேர்ப்பாகனோ பாஞ்சாலி அடிமைப்பட்டதைச் சொல்லவும் துணிவின்றித் தடுமாறுகிறான் என்று தேர்ப்பாகனின் உயர்ந்த பண்பைப் பாரதியார் வெளிப்படுத்துகிறார்.

பாஞ்சாலியும் தேர்ப்பாகனது பண்புடைமையை அறியாது (உணராது) “யார் சொன்ன வார்த்தையடா” என்று விளித்துத் தன் பக்கம் உள்ள நீதியை உரைக்கின்றாள்.

யாரை முதலில் தோற்றான் தருமன் என்று அறிந்து வரப் பணிக்கிறாள். தேர்ப்பாகன் சென்று துரியோதனனிடம் நிகழ்ந்ததை உரைக்கிறான். மீண்டும்

துரியோதனன் பாஞ்சாலியிடம் அனுப்புகிறான். இதனால் தேர்ப்பாகனுக்குப் பாஞ்சாலியிடம் அளவற்ற பரிவும் இரக்கமும் ஏற்படுகிறது.

**“என்னைக்**

**கொன்று விட்டாலும் பெரிதில்லை - இவன்**

**கூறும் வினாவிற் கவர் விடை – தரி**

**னன்றி இவளை மறுமுறை – வந்து**

**அழைத்திட நானங் கிசைந்திடேன்”**

என்று அவன் மன உறுதி கொள்கிறான். தன்னைக் கொன்றாலும் சரியே என்று அறத்தின் பக்கமாக நிற்கிறான்.

துரியோதனன் ‘‘உன்னைச் சாக மிதித்திடுவேண்டா’’ என்று அச்சுறுத்திய போதும் உறுதி தளரவில்லை.

**“நூறுதரஞ் சென்றழைப்பினும் - அவர்**

**நுங்களைக் கேட்கத் திருப்புவார் - அவர்**

**ஆறுதல் கொள்ள ஒருமொழி – சொல்லில்**

**அக்கண மேசென்றழைக்கிறான்”**

என்று, தான் மறுபடி சென்று அழைக்க இயலாதது என மறுக்கிறான்.

இவ்வாறு தேர்ப்பாகன் ஒரு ஏவலாளாக இருந்தபோதும் மனிதாபிமானம் உடையவனாகவும் அரசர்களைவிடப் பண்பால் உயர்ந்தவனாகவும் காட்சியளிக்கிறான்.

**தத்துவக் கருத்துக்கள், அறக்கருத்துக்கள்**

பேயாட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்றபடி, நாட்டுமன்னன் கொடுங்கோலனாகித் தருமத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்ட நிலையில், கணவன்மார்கள். தம் அநீதியைத் தட்டிக் கேட்காது கோழைகளாய்த் தலைகவிழ்ந்து கிடந்த நிலையில், ஊமைகளாய் கைவிடாது என்ற அழியாத உண்மையை உணர்த்தும் பாஞ்சாலி சபதத்தில் தத்துவக் கருத்துகளும் அறக்கருத்துக்களும் மலிந்துள்ளன.

**தருமன் கூற்று**

விதுரனைத் தூதனுப்புகிறான் திருதராட்டிரன், விதுரன் பாண்டவர்களிடம் துரியோதனன் சூழ்ச்சியினையும் அழைப்பையும் கூறுகிறான். வீமன் முதலிய தம்பியர் தருமனைத் தடுக்கின்றனர். அப்போது அவர்களைச் சமாதானப்படுத்து முகத்தான்,

**“கைப்பிடி கொண்டு சுழற்றுவேன் - தன்**
**கணக்கிற கழன்றிடிம் சக்கரம் - அது**
**தப்பி மிகையும் குறையுமாச் - சுற்றும்**
**தன்மை அதற்குள் தாகுமோ?”**

கையில் சக்கரத்தை வைத்துச் சுழற்று வோனுடைய மனக்குறிப்பிற்கேற்பவே சக்கரம் விரைந்தும் அயர்ந்தும் சுற்றும். அவனுடைய மனக்குறிப்பிற்கு மாறாகச் சுற்றும் திறம் சக்கரத்திற்கு இல்லை. அதுபோலவே மக்களின் வாழ்வும் உலகத்தே நடைபெறும். நிகழ்ச்சிகளுள் பல மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது ஒன்றோடொன்று தொடர்பில்லாதவன் போன்று காணப்படினும் ஆழ்ந்து நோக்குமிடத்து அவை காரண காரியத் தொடர்புடையனவாய் அமைந்திருப்பதை அறியலாம். முடிவு என்பதன்றி, எப்பொருளுக்கும் எக்காலத்துக்கும் அடங்காததாய்ச் சங்கிலி போன்று தொடர்ந்து செல்வது, விதியனெ நூல்கள் கூறும். இது வெற்றுரையன்று பட்டறி மொழியாகும். மேலும்,

**“தோன்றி அழிவது வாழ்க்கைதான் - இங்கு**
**துன்பத் தோடின்பம் வெறுமையாம் - இவை**
**மூன்றில் எதுவருமாயினம் - களி**
**மூழ்கி நடத்தல் முறை கண்டீர்”**

வாழ்க்கையோ நீர்க்குமிழி போன்றது. இன்ப துன்பங்களோ கானல் நீராய்க் காட்சியளிப்பன. இவற்றுள் எதுவரினும் அதனை மகிழ்ச்சியோடு அனுபவிக்க வேண்டுமேயன்றி வருந்துவதால் வரும் பயன் ஒன்றுமில்லை. ஆகையால் தான் பெரியோர்கள் விதிப்படி உலகம் நடக்கும் என்று துணிவுடையோராய்த் தங்கள் கடமையைத் தவறாது செய்தனர்.

சேற்றில் நெளியும் புழு உடம்பினுள்ளும், செல்வமுள்ள அரசர் உடம்பகத்தும், வறுமையில் வாடும் ஏழையின் உடலிலும் உறையும் உயிர் ஒன்றே, அஃது எடுத்த

உடம்பிற்கு ஏற்ற கடமைகளை நாள்தோறும் செய்கிறது. எனவே கடமை செய்யத் தவறக் கூடாது ஒன்றாகும்.

கடமையுணர்வு அனைவருக்கும் பொதுவாக உரித்தேனும், அரசர்க்குச் சிறப்பாக உரித்தாலுடையது. முன்னோரைத் தேவரைப் போன்று உள்ளத்துட் கொண்டு பணிதல் வேண்டும்.

தருமன் சூதாட மறுக்கும்போது சகுனி அவனை வல்லுக்கழைக்கிறான். அப்போது தருமன் தத்துவக் கருத்துக்களைக் கூறுகிறான்.

முன்பு வழங்கியது என்ற காரணத்தால் பொய்மை மெய் என்றல் பொருந்துமா? முன்பு என்பதற்குக் காலைவரையரையுண்டோ? நேற்றும் முன்பு தான். மூன்று கோடி வருடங்களுக்கு முன்னுள்ள காலமும் முன்பு தான். முன்பு வாழ்ந்தவர்களனைவரும் முனிவர்கள் தாமா?

**“பொய்யோ முழுக்கை அறமென்று கொண்டும்**
**பொய்யர் கேலியைச் சாத்திர மென்றும்**
**ஐயகோ நாங்கள் பாரத நாட்டில்**
**அறிவிலாரறப் பற்றுமிக்குனோர்”**

என்றும் எண்ணுகிறான் தருமன்.

நாம் செய்த கர்மப்பயனை நாம் அனுபவிக்க வேண்டுவதோடு நம்மைச் சார்ந்தவர் செய்யும் கர்மப்பயனையும் அனுபவிக்க வேண்டுவராகின்றோம். அவர் செய்த கர்மப் பயன்கள் சிறுகுழியில் தூக வந்து விழுவது போல நம்மை வந்தடைகின்றன. மதியினும் விதிதான் பெரிதன்றோ என்று எண்ணிச் சூதிற்கு இணங்குகிறான்.

**விதுரன் கூற்று**

சூதுபோர் நடக்கும்போது அமைதியாயிருந்த விதுரன் நாட்டை வைத்தாடுமாறு சகுனி கூறியதும் தன்னையும் மீறிச் சினக்கிறான்.

**“சூதிற் பின்னை செலித்திடல் கொண்டு**
**சொர்க்க போகம் பெறுபவன் போலப்**
**பேதை நீயி முகமலர் வெய்திப்**
**பெட்பு மிக்கிற் வீற்றிருக்கின்றாய்”**

என்று சூதாட்டத்தை நிறுத்த முயல்கின்றான். இதனைத் துரியோதனன் தடுக்கும்போது,இனிய சொல் கூறுவோர் இடும்பைக்கு வழி சொல்பவர். நம்மை காண்பவர் இடித்துரைப்பார்கள். நெடும்பச்சை மரம் போல வளர்ந்தும் இதை நீ அறியவில்லை. நலம் கூறுபவர் மொழி கேளாத உன் அவையில் நல்லோர் அமைச்சராக இருப்பதற்கு தகுதி பெற்றவர் அல்லர். பித்தரும் நீசரும் வேசையரும் மட்டுமே தகுதி உடையவர்கள் என்று உலக இயல்பை எடுத்துரைக்கின்றான்.

**திரௌபதி கூற்று**

துரியோதனன் தேர்ப்பாகன் மூலம் திரௌபதியை அழைத்துவரச் சொல்கிறான். அப்போது பாகனிடம்,

**"இன்பமும் துன்பமும் பூமியின் - மிசை**
**யார்க்கும் வருவது கண்டனம் - எனில்**
**மன்மதை காக்கும் அரசர் தாம் - அற**
**மாட்சியைக் கொன்று களிப்பரோ – அதை**
**அன்புந் தவமுஞ் சிறந்துள்ளார் - தலை**
**யந்தணர் கண்டு களிப்பரோ?"**

என்று நீதி தவறாது தத்துவம் பேசுகிறாள் திரௌபதி.

**பாரதியார் கூற்று**

அடிமைச் சருக்கத்தில் காப்புப்பாடலில், சிற்பி வீட்டு முன்னிடத்தில் படியாக ஒரு கல்லையும், கோயிலினுள்ளே இறைவன் வடிவாக ஒரு கல்லையும் அமைக்கின்றான். நீயும் யார் யாரை எப்படி அமைக்க வேண்டுமோ அங்ஙனம் அமைக்கின்றாய்.

ஓய்வின்றி அணுக்களெல்லாம் சுழல்கின்றன என்று இலக்கிய நூலோர் கூறுவர். ஓய்வின்றிக் கதிர்கள் எல்லாம் சுழல்கின்றன என்று வானூலில் வல்லோர் கூறுவர். உலகப் பொருள்கௌல்லாம் ஓய்வின்றித் தொழில்புரிகின்றன என்பது உண்மையானல் எனது உள்ளமும் உனதருளில் எந்நாளும் மூழ்கி எழ அருள்புரிவாயாக என்று பராசக்தி, சரஸ்வதி வணக்கப் பாடல்களில் அறக்கருத்துக்களை வைக்கிறார் பாரதியார்.

**விகர்ணன் கூற்று**

சூதுப்போர்ச் சருக்கத்தில் விகர்ணன் கூற்று நிகழுமிடம் ஒரே ஒரு சமயத்தில்தான். இருப்பினும் அக்கூற்று அறக்கருத்துக்களை அள்ளி வீசும் தன்மையது.

திரௌபதி நீதிகேட்டுப் புலம்புவது கண்ட விகர்ணன் எழுந்து, அவையோரைப் பார்த்து,''வான் வேந்தரே, நரகத்திற்குச் செல்லாதிருப்பதாக நீதியையே கூறுங்கள். திரௌபதி கலங்குவது கண்டும் நீர் மௌனமாக இருப்பது எதற்காக? நினைவு அற்றதாலா? நியாயம் திரௌபதிக்கே அனுகூலமாயிருத்தல் பற்றி அவள் பக்கம் சார்ந்து பேசினால் துரியோதனன் கோபம் கொள்வான் என்று அஞ்சுவதாலா? நல்ல குலத்தில் பிறந்தோர் தாம் நியாயம் என்று கண்டதைக் கூறாமல் விடுவார்களோ என்று வில்லிபுத்தூரார் விகர்ணனைப் பேச வைத்தார் பாரதியாரும்:

குலமுதல்வனாம் பாட்டன் வீடுமனின் நீதியைப் பிழையென்று சொல்கிறான். வேதநெறிமாறிப் பின்னாளில் பெண்ணினம் அடிமையானதை, வீட்டுமன் சுட்டிக்காட்ட அதற்கு விகர்ணன்,

**"எந்தையர்தம் மனைவியரை விற்பதுண்டோ?**

**இதுகாணும் அரசியரைச் சூதில் தோற்ற**

**விந்தையை நீர் கேட்ட துண்டோ? விலைமாதர்க்கு**

**விதித்ததையே பிற்கால நீதிக்காரர்**

**சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார்!**

**சொல்லளவே தானாலும் வழக்குந் தன்னில்**

**இந்த விதஞ் செய்வதில்லை சூதர்விட்டில்**

**ஏவற்பெண் பணயமில்லை என்றுங் கேட்டோம்"**

என்று உலக வழக்கை எடுத்துரைக்கின்றான்.

உலக வழக்கு எதுவானாலும் திரௌபதி கூறிய வழக்கின் படியே பார்த்தாலும் அடிமையல்லன் என்று முறையிடுகிறான்.

**"தன்னையிவன் இழந்தடிமையான – பின்னர்த்**

**தாரமேது? வீடேது? தாதனான**

**பின்னையுமோர் உடைமை உண்டோ?"**

என்று

**நம்மைப் பெண்ணரசி கேட்கிறான் பெண்மை வாயால்"**

என்று மௌனமாக அமர்ந்திருக்கும் மன்னர்களை நோக்கி நீதி காண வேண்டுகின்றான்.

**பாரதியார் கூற்று**

துச்சாதனன் பாஞ்சாலியின் துகில்பற்றி இழுக்க, கண்ணனை இறைஞ்சுகிறாள் பாஞ்சாலி. இங்கு பாரதியார் கண்ணனின் புகழை ஏழு நெடும்பாடல்களில் பாடிப்போற்றுகிறார். பாஞ்சாலியின் தெய்வபக்தியும் பாரதியின் கண்ணன் பற்றும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன.

அவையில் துச்சாதனன் திரௌபதியின் ஆடையைப் பற்றி இழுக்கவும்,

**"உட்சோதியிற் கலந்தாள் - அன்னை**

**உலகத்தை மறந்தான், ஒருமையுற்றாள்**

**ஹரி ஹரி ஹரி என்றாள் கண்ணா!**

**அபய மபயம் உனக் கபயம்"**

என்று திரௌபதி கண்ணனுக்குப் பிரார்த்தனை செய்யும் இத்தொடர்கள் சரணாகதி தத்துவமாகும். இதற்குப்பின் துதிபாடுவது அவசியமில்லை என்பதாகும். எல்லாவற்றையும் இறைவன் அருளுக்குவிட்ட பின்பு தன்முயற்சி ஏது? ஒன்றுமில்லை இஃது உளவியல் உண்மைக்கும் மாறாக, அனுபவத்திற்கு விரோதமாக தத்துவத்திற்கு முரணாக உள்ளது என்பர்.

## 2. சஞ்சீவிப்பர்வதத்தின் சாரல் - பாரதிதாசன்

**முன்னுரை**

பாரதிதாசனின் காவியங்களுள் முதலானது சஞ்சீவிப்பர்வதத்தின் சாரலேயாகும். இது கவிஞர் உள்ளத்தையும் கற்றோர் உள்ளத்தையும் கவர்ந்துள்ளது. இக்காவியத்தின் வழியே தான் கவி முதலில் தமிழகத்தே அறிமுகமானார் எனலாம்.

**சஞ்சீவிப் பர்வதத்தின் சாரல்**

இயற்கைச்சூழல் குப்பன் காதலியிடம் செல்கிறான். முன்னாள் சொன்ன சஞ்வீசி மூலிகை இரண்டையும் கொண்டு தரக் கேட்கிறான். பாரதச்சாரலை போயடைகின்றனர். மூலிகைகளைப் பறிக்கின்றனர்.

**சஞ்சீவிச்சாரல்**

குயில் கூவிக் கொண்டிருக்கிறது. அழகிய மயில் தன் தோகையை விரித்தாடிக் கொண்டிருக்கிறது. காற்று வாசமுடன் வீசுகிறது. தெளிந்த நீரூற்றுகளுடன் கனிமரங்கள் மிக்க உண்டு. மணங்கமழும் பூக்கள் தோறும் தேனீக்கள் சென்று இன்னிசைப் பாடித் திரிகின்றன. வேட்டுவப் பெண்கள் விளையாடுகின்றனர். காட்டு மறவர்களும் மணம்புரிந்து இனிமையாக வாழுமிடமாக, சஞ்சீவிப்பர்வதத்தின் சாரல் என்ற இடம் காட்டப்பட்டுள்ளது. இக்காவியம் சிறந்த கற்பனைக் காவியம்.

இங்குத் தலைவன் குப்பன் என்னும் வேடக்குமரன். தென்திசையைப் பார்த்தபடியே நிற்கின்றான். சற்றுநேரத்தில் வஞ்சிவரக் கண்டான். கண்ட உடன் வாரி அணைக்கச் சென்றான். வஞ்சி தொடாதீர்கள் என்று சொல்கிறாள். உன்னோடு பேசுவதற்காக ஒரு வாரம் காத்திருந்தேன். முந்தாநாள் பேசினாய், நேற்று இன்பங்களை காட்டினாய் இன்று தள்ளி நிற்கக் கூறிவிட்டாய் காரணத்தைக் கூறு என வினவுகிறான்.

வஞ்சி சொல்கிறாள், அன்றே நீர் கூறியபடி இரண்டு மூலிகையைச் சஞ்சீவிப் பர்வதத்திற்குக் கூட்டிப்போய் பறித்துக்கொடுத்தால் உயிர்வாழ்வேன் என்கிறாள். அங்கு செல்வதற்கு கால்நோகும். அதோடு பாழ்விலங்கால் படுமோசம் நேரும் என்கிறான்.

மூலிகையில் ஒன்று உலகினர் பேசுவதையும் மற்றது உலகில் நிகழ்வதையும் தெரிவிக்கும். இதுவே மூலிகையின் தன்மை. எனவே மூலிகை ஆசையை விடு. சொன்னபடி கேட்காமல் தோஷம் விளைவிக்கின்றாயே என்று குப்பன் கூறுகிறான்.

வஞ்சி கோபத்துடன் பெண்ணடிமை தீரு மட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே என்கிறார். இன்று மண்ணடிமைத் தீர்ந்தது. பெண்ணடிமை இன்னும் முழுமையாய் தீர வேண்டும். இது இந்திய விடுதலைக்கு முன் பாடியது. சமூகப் புரட்சிக்குப் பின்பே உரிமைக்குப் புரட்சி என்பது கவிஞரின் கொள்கை. ஆனால் மண்ணடிமைக்குப் பின்பே பெண்ணடிமை என்ற தன்மையே வென்று நிற்கிறது.

மேலும் வஞ்சி சற்றும் தயக்கம் கொள்ள மாட்டேன். தனியாய்ச் சஞ்சீவி மலை உற்றேறி மூலிகையின் உண்மையை அறிந்திடுவேன். கண்டுபிடிக்கவில்லையெனில் மேலிருந்து கீழே விழவும் தயங்கமாட்டேன் என்கிறாள் குப்பன். சஞ்சீவி பர்வதம்

செல்கிறான். பச்சிலையைக் கொய்து தருகிறேன் எனக்கென்ன தருவாய் என்று கேட்கிறான்.

**“முன்னே இலைகொடுத்தால் முத்தம் பிறகென்றாள்**

**எனக் கினியே நீ முத்தம் எத்தனை ஈவாய்?”**

என்றாள்.

**“என்றன் காத்தால் இறுக உமைத்தழுவி**

**நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன்”**

என்றாள்.

ஆகையால் ஒரு முத்தம் அச்சாரம் போடென்றாள். வஞ்சி மூலிகைக்கு அறுகில் முத்தம் கிடைக்கும் என்று தெளிவாகக் கூறிவிட்டாள். குப்பன் வஞ்சியையும் தூக்கிக்கொண்டு சஞ்சீவி பர்வதமேல் ஏறிநான்.

**“கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்**

**மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்”**

மூலிகையின் அருகே கொண்டு சென்று இவையே அங்குரைத்த மூலிகைகள் அட்டியின்றிக் கிள்ளிக்கோள் என்றுரைத்தான். குப்பன் வஞ்சி மூலிகைகளைப் பறித்துக்கொண்டு திரும்பி வந்து மரநிழலில் அமர்ந்து இருந்தார்கள்.

**பேதமற்ற பிரஞ்சு**

மூலிகையில் ஒன்றை ஞாலத்தினரின் பேச்சினை அறிவதற்காக தின்றார்கள். இத்தாலி தேசத்திலிருந்து வந்து, பத்துநாட்கள் தங்கி, உணவு உண்டு வரும் இத்தாலியன் கருப்பன் எதிரே இருந்து உணவு உண்பதை விரும்பவில்லை. எனவே ‘பேதம் கொண்டோர்க்குப் பிரஞ்சில் இடம் இல்லை’ என்கிறான். பிரஞ்சுக்காரன் இத்தாலியனிடம், பிரஞ்சுப்புரட்சிப் பாரறிந்தது என்ற மொழிகள் இவர்கள் காதில் கேட்ட உடன் பிரஞ்சியர்க்கு நாக்குளிர வாழ்த்துரைத்தனர் அவ்வரிகள் வருமாறு.

**“இத்தாலி தேசம் இருந்து நீ இங்கு வந்தாய்**
**பத்துநாளாய் பாங்காய் உணவுண்ண**
**இவ்விடுதி தன்னில் இருந்து வருகின்றாய்**
**எவ்வாறு நான் சகிப்பேன் இந்தக் கருப்பன்**
**எனக்கெதிரே உட்கார்ந்திருப்பதனை, என்றாய்**
**தனக்கெனவே நல் உணவுச்சாலை ஒன்றுண்டாக்கி**
**அங்கவன் சென்றால் அடுக்கும் என உரைத்தாய்**
**இத்தாலிச்சோதரனே! என்ன மதியுனக்கே?**
**செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்**
**இவ்வுலக மக்களிலே என்ன பேதம் கண்டாய்?**
**செவ்வை பெறும் அன்பிலார் தீய பேதம் கொள்வார்**

**எங்கள் பிராஞ்சியர்கள் இப்பேதம் பாராட்டித்**
**தங்கள் பழங்கீர்த்தி தாழ்வடைய ஒப்பார்கள்**
**பேதபுத்தி சற்றும் பிடிக்காது போ! போ! போ!**
**பேதம் கொண்டார்க்குப் பிராஞ்சில் இடமில்லை"**

என்பதுவே அக்கவிதை வரிகள்.

**அமெரிக்கா**

நல்ல அமெரிக்கர்கள் நானிலத்தில் வாழ்கின்ற அனைவரும் நன்றாய் இருக்க நினைத்திடுவார்கள். பொல்லாத அமெரிக்கர்கள் பொன்னடைந்து தான் மட்டும் செல்வனாக வாழ விரும்புவார்கள். 'நல்லவனாய் நானிருக்க நாளும் விரும்புகிறேன்' என்ற சொல்லைக் கேட்ட குப்பனும் வஞ்சியும் 'கொத்தடிமையாகிக் குறைவுபடும் நாட்டுக்கு மெத்த துணையாகி இவன் மேன்மை அடைக' என்றாள்.

**இங்கிலாந்து**

இங்கிலாந்து தேசத்திலிருந்து ஒருவன் பேசினான். அந்நாட்டவரை நோக்கி யாரும் அஞ்சவேண்டாம். ஏனெனில் நாவலந்தீவில் (இந்தியா) முப்பது கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களிடையே உள்ள பேதமும் அதே அளவு இருக்கும். யாவரும் தனித்தனிதான். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி நம்மை எதிர்ப்பது என்பது ஒருநாளும் நிகழாது. பெரும் புராணங்கள் பேதம் வளர்க்கிறது. இதிகாசங்களினால் சாதிச் சண்டைகள் வளர்கிறது. மட்டுமல்ல.

**"கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்**
**கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்**
**தேன் சுரக்கப் பேசி இந்து தேசத்தைத் தின்னுதற்கு**
**வான் சுரரை விட்டுவந்த பூசரரும் வாழ்கின்றனர்"**

இந்த உழைச்சேற்றை நீக்கி ஆங்கிலேயரை அவர்கள் எதிர்ப்பது இயலாது.

மட்டுமல்ல மக்கள் சிந்தனாசக்தி எதுமில்லாமல், தம் தோள் உழைப்பில் நம்பிக்கையில்லாமல், பகுத்தறிவு தன்மையில்லாமல் காணப்படுகின்றனர். பொற்புள்ள மாந்தர்களை கல்லாக்கி, அந்தக் கற்கள் கடவுள்களாய் காணப்படுகிற அந்த நிலையில் அங்கே சுதந்தரப் போரெங்கே எழும்பும். எனவே நாவலந்தீவு நம்மை விட்டுப்போகாது என்கின்றனர்.

மேலும்,

**"தேகம் அழிந்துவிடும் சுற்றத்தார் செத்திடுவார்**
**போகங்கள் வேண்டாம் பொருள் வேண்டாம் மற்றுமிந்தப்**
**பாழுலகம் பொய்யே பரமபதம் போ"**

என்றும்

**"தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவிவேதாந்தம்**

**சாதிப்பிரிவு சமயப்பிரிவுகளும்**

**நீதிப்பிழைகள் நியமப்பிழைகளும்**

**மூடப்பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே**

**ஓடச்செய்தல் நமையும் ஓடச் செய்வார் என்பேன்''**

என்ற சத்தத்தைக் கேட்கின்றனர். நாட்டின் நிலையை அறிந்துவிட்டதற்காக மகிழ்ந்திட்டாள் வஞ்சி.

**இராமாயணம்**

ஒரு நொடியிற் சஞ்சீவிப்பர்வதத்தை ஓடிப்போய் வேரொடு பேர்த்துவர வேண்டுமே என்ற வார்த்தை இருவரின் காதுகளிலும் கேட்கிறது. குப்பன் வஞ்சியிடம் கூறுகின்றனர். விமனுடைய அருளுடையவன், வானமட்டும். வளர்ந்தவன் ஒருவனை இம்மலையை பெயர்த்து எடுத்துவர ஆணையிடுகின்றனர் என்கிறான். குப்பன் பதைக்கிறான், எப்படி நாம் பிழைக்கப் போகிறோம் என்கிறான். வஞ்சி கூறுகிறாள் இந்தப்புவி உண்டாகி இவ்வளவு நாள் வரைக்கும் மாமலையைத் தூக்கும் மனிதன் இல்லை, மனிதன் ஆகாயம் பூமி மட்டும் எவ்வாறு நீண்டு வளருவான்? இல்லை இல்லை என்கிறாள்.

**''இந்நேரம் போயிருப்பார் இந்நேரம் பேர்த்தெடுப்பார்**

**இந்நேரம் மேகத்தில் பறந்திடுவார்''**

என்ற மொழி கேட்டது. குப்பன் 'ஐயோ' என்று கதறினாள். இன்னும் காதில் என்ன விழுகிறது என்பதைக் கேட்போம் என்று வஞ்சி கூறுகிறாள். 'சஞ்சீவிப்பர்வதத்தைக் கொஞ்ச நேரத்தில் இலங்கையில் கொண்டு வைத்தார் என்றும் மலை மருந்தின் சக்தியால் செத்த ராமனும் லெஷ்மணனும் சேர்ந்தெழுந்தார் என்ற சத்தம் கேட்டு,'மலையைச் சற்றும் அசையாமல் தான் தூக்கிப் போய்விட்டான்' என்றான்.

இலங்கையில் வைத்துவிட்டானே நாம் தப்புவோமா? என்றான் குப்பன். மீண்டும்,

**''பெரும்பாரச் சஞ்சீவி பர்வதத்தைப் பின்னர்**

**இருந்த இடத்தில் அனுமார் எடுத்தேகி**

**வைத்துவிட்டு வந்தார் மறுநிமிஷம் ஆகாமுன்**

**செத்தாக்குயிர் கொடுத்தார் தெண்டமும் போட்டு நின்றார்''**

என்ற சத்தம் கேட்டது. அது கேட்டவுடன் இனி ஆபத்திராது என நகைத்தான். இம்மட்டும் கதையை நிறுத்துகின்றேன். நாளைக்கு மீதியைச் செப்புகின்றேன் என்ற சத்தம் கேட்ட குப்பன் இது எது என்றாள். இதுவரை கூறியது ராமாயணக் கதை என்றாள் வஞ்சி.

அடுத்து ஒரு மூலிகையை,இருவரும் விழுங்கினர். விழுங்கிய உடன் ஓர் காட்சி அவர்கள் கண்களில் தென்பட்டது. மாளிகையினுள் மனிதர் கூட்டம், ஆளிவாய் பாகவதன் நடுவில் உட்கார்ந்திருந்தால், ஊர் மக்கள் செல்வதையும், பட்டை நாமக்கார பாகவதன் ரூபாயைத் தட்டிப்பார்ப்பதையும் சந்தோஷம் கொள்வதையும் கண்டு

சிரிக்கின்றனர். அதைப் பார்த்து வஞ்சி கூறுகிறாள். வானளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள், அனுமார்கள், சாம்பவத்தார் என்பன போன்ற செய்திகளை எத்தனை நூல்கள் கூறினாலும், விஸ்வரூபப் பெருமை மேலோரும் வன்மைகள், உஸ் என்ற சத்தங்கள், முத்தி முழுச்சுவர்க்கம் எத்தனை உரைத்தாலும், எந்த பயனும் இல்லை. பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால் பயன் இல்லை என்கிறாள்.

சித்தம் சலியாத திறன் வேண்டும். மக்கள் உழைப்பில் குறைவில்லாத நம்பிக்கை, புல்லறிவை போக்கி நல்லறிவை வளர்த்தல் வேண்டும். மக்கள் உழைக்காமல் மேலிருந்து ஏதும் வந்திடாது. மூடப்பழக்கங்களை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துக்களைக் கூறுகிறார்.

ராமாயணம் என்னும் நலிவு தருங்கதை பூமியிலிருப்பதை இப்போதே அறிகின்றேன். நம்பதகாதவைகளை நம்பவைத்து தங்களுக்கு நலம் சம்பாதிக்கின்ற சரித்திரக்காரர்களால் நாடு நலிகிறது என்று குப்பன் கூறுகிறான். அதோடு நம்நாடு வளம்மிகுந்த நாடு. நல்ல இமயமலை. நலங்கொளிக்கும் கங்கைநதி. தமிழ்நாட்டில் மேன்மை மிகுந்த பொதியமலை. செந்நெல் வயல்கள், செழுங்கரும்புத்தோட்டங்கள், தின்னுவதற்கு இனிய கனிகள்,தெவிட்டாத பயன்தரும் மரங்கள் இத்தகைய இப்பெரிய தேசத்தில் மூடப்பழக்கம், இல்லாத நிலை வரவேண்டும் என்று குப்பன் கூறுகிறான்.

பாரதிதாசனின் சஞ்சீவிப்பர்வதத்தின் சாரல் என்ற காவியத்தின் மூலம் இந்தியாவின் நிலையினையும், வளத்தினையும், மூடப்பழக்கவழக்கங்களையும் மக்கள் யாவரும் புரிந்துகொள்ளும் வகையில் தன்னுடைய கற்பனைத்திறத்தின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார். அவருடைய எண்ணமெல்லாம் சுதந்திர இந்தியா எல்லா வளங்களோடும் சிறப்புடன் வாழவேண்டும் என்பதுதான். அவருடைய கனவுகள் நம்மால் நனவாகட்டும்.

## சஞ்சீவிப்பர்வதத்தின் சாரல் ஒரு திறனாய்வு

புலவரின் காவியங்களுள் முதலானது சஞ்சீவி பர்வதத்தின் சாரலேயாகும். இது கவிஞர் உள்ளத்தையும் கற்றோர் உள்ளத்தையும் கவர்ந்தேயுள்ளது. இக்காவியத்தின் வழியேதான் கவி முதலில் தமிழகத்தே அறிமுகமானாரெனலாம்.

காதல், தமிழ், வீரம், திருத்தம் இவற்றின் உட்பொருள்கள். பாரதி காவியம் பாஞ்சாலி சபதம் ஒன்றேயென்ன வேண்டும். இவர் பல செய்வதற்கு நாட்டிலும் தனிவாழ்விலும் ஓரளவு அமைதியிருந்தது நற்பேறுதான்.

நாட்டுநிலையும் தமிழ்ப்பண்புமே காவியத்தூண்டுதல்கள். இனிச் சஞ்சீவிச்சாரல்,‘‘அன்பின் வழியதுயிர்நிலை என இவர் குடும்ப விளக்கில் முடிவு காட்டுவதுபோல எக்காவியத்துள்ளும் அன்பே (காதல்) அகமுருவியோடுகிறது. அன்பே இவர் காவிய-சீவன்.

இயற்கைச் சூழல், குப்பன் காதலியிடம் செல்கிறான். முன்னாள் சொன்ன சஞ்சீவி மூலிகை இரண்டையும் கொண்டுதரக் கேட்கிறாள். பர்வதச்சாரரைப் போயடைகின்றனர். மூலிகைகளைப் பறிக்கின்றனர். இன்று பிறர் பேசுவதைக் கேட்கச் செய்யும் மற்றொன்று ஓரிடத்தில் நடப்பதைப் பார்க்கச்செய்யும்.

முதல் மூலிகையால் இத்தாலியரும் அமெரிக்கரும் ஆங்கிலேயரும் என்ன பேசிக்கொள்கிறார் எனக் கேட்டனர். மற்றொன்றால் பாகவதர் இராமாயண காலஷேத்தைக் கண்டனர். இராம கதைபற்றிய கவிஞர் கருத்து இங்குப்புலனாகும். இங்குத்தலைவன் குப்பன், தலைவி வஞ்சி, சுரக்கின்ற காதலொடு சென்றான் வஞ்சியை வாரி அணைக்க காதல் சுரக்குமா? கன்று நெருங்கத்தான் பசு சுரக்கிறது. எனவே காதல் சுரக்குந்தான் போலும்.

மூலிகைக்கு மலையிடம் போனால் பாழ்விலங்கால் அந்தோ படுமோசம் நேரும் என்றான். அகநானூற்றுப் பாலைநிலங்களைப் படித்தால் விலங்குகளின் மோசம் விளங்கும். மூலிகையில் ஒன்று உலகினர் பேசுவதையும் மற்றது உலகில் நிகழ்வதையம் தெரிவிக்கும் இவையெல்லாம் கற்பனை தாமே இத்தகு கற்பனையாற்றான் காவியம் சுவைக்கிறது. இக்கற்பனை அளவுகடந்து இன்று பொய்யாய் விட்டதெனப்படுகிறது. புராணங்களில் வாழ்க்கையும், உள்ளமும் அடியில் இருப்பன. கற்பனை ஒரு பங்கு. இப்போது இக்காவியக் கற்பனைகளை விட்டுக் கவிஞர் சொல்லும் கருத்துக்களை மட்டும் கொள்ளுதல் போல காவியமெதிலும் கற்பனைகளைப் புரிந்துவிட்டுவிட்டால் குறையே இல்லை.

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே என்கிறான் வஞ்சி. இன்று மண்ணடிமை தீர்ந்தது. பெண்ணடிமை இன்னும் முழுதும் தீரவேண்டும். இது இந்திய விடுதலைக்கு முன் பாடியது. சமூகப் புரட்சிக்குப் பின்பே உரிமைக்குப் புரட்சி என்பது கவிஞர் கட்சியின் கொள்கை ஆனால்

மண்ணடிமைக்குப் பின்பே பெண்ணடிமை போம் என்ற கட்சியே இன்று வென்றதாகக் காண்கிறோம்.

முன்னே இலை கொடுத்தால் முத்தம் எத்தனை ஈவாய் என்றான். நோகாமல் முத்தங்கள் நுறென்றாள். ஆசையால் ஓா் முத்தம் அச்சாரம் போடென்றன. இந்த முத்தம் இவா் காவியத்தில் மெத்த வழங்குகின்றது. காதலா் காட்சியெல்லாம் முத்தம்படா நேரமேயில்லை. இவா் காதல் காட்சியெல்லாம் இது ஒரு மகுடமாக அணைசெய்கிறது. அடிக்கடிக் காதல் ‘இச்’ என்று முத்து தீா்ப்பாா். இவா் பிரெஞ்சுக் காட்டில் ஆங்கிலப் படங்களில் அனைவரும் மாா்க்க முத்திடுதலுண்டு. ஆனால் தமிழ் அகவொழுக்கத்திற்கு அது சிறிது புறம் எனக் கண்டனா். சங்கக்காட்சியில் தொடுவான். வஞ்சுவான் நெருடுவான் தலைவன். ஆனால் முத்திடல் வெளிப்படையில்லை. வளையுடைக் கையன் எம் அணங்கியோனே என்பதால் தலைவன் தழுவியுள்ளான் என்ற குறிப்பை உணா்கிறாா் பண்டைப்புலவா். ஆனால் அரிதாக ஓரிடமுள்ளன. கலித்தொகைக் குறிஞ்சியில் ஓா் காட்சி.

**“நறு அவிவிழ்ந் தன்ன வென்மெல் விரற்யோது கொண்டு**
**செறாஅச் செங்கண் புதைய வைத்து**
**பறாஅக் குருகின் உயிா்த்தலும் உயிா்த்தனன்**
**தொய்யில் இளமுலை இனிய தவைந்து**
**தொய்யலந் தடக்கையின்கீழ் பிடியளிக்கும்**
**மையல் யானையின் மருட்டலும் மருட்டினன்”**

இது தலைவி கூறுவது.

**“புல்லினி தாகலிற் புல்லினேன்**
**சொல்லலோம் யென்றமை யன்றி அவளை நீ**
**புல்லலோம் பென்ற துடையரோ”**

இவ்விரு காட்சியிலும் காதலா் தழுவலை நேரில் காண்பிக்காமல் தழுவலைப் பற்றியே பேசுகின்றனா்.

‘பேதம் கொண்டோா்க்குப் பிரெஞ்சால் இடமில்லை’ என்கிறான் பிரெஞ்சுக்காரன். இத்தாலியனிடம் பிரெஞ்சுப் புரட்சி பாரறிந்தது. அரசா் செல்வா் என்ற பேரையே அறவொழிந்தது அப்புரட்சி. வால்டோ் ரூசோ நூல்களைப் படிக்க வேண்டும். அன்றே அமெரிக்கன் கவிஞரிடம் நல்ல போ் எடுத்துள்ளான். நல்லவனும் நானிருக்க நாளும் விளம்பிடுவேன் என்ற பேச்சு அடிமை நாடுகட்குத் துணையாகி இவன் மேன்மையடைக என மனமார வாழ்த்துகிறாா்.

ஆங்கிலேயன் இந்தியரிடம் காணும் ‘சாக்குருவி வேதாந்தம்’ சிறந்த கற்பனை, புராணம், புரோகிதா், பூசுரா். சாந்தனை, நம்பிக்கை, பகுத்தறிவு இவை இன்மை. கல் கடவுள், நிலையாமை, சாதி சமயப்பிரிவு இவையே இந்தியராக கொத்தடிமையில்

கூட்டியவையாம். இராமாயண காலட்சேபம்(காலஷேபம்) உணர்ச்சித் தூண்ட உரைக்கப்படுகிறது. இவ்விடத்தால் கவி பேசவில்லை. நாடகமே கண்முன் நிற்கிறது. இவர்கள் இருப்பது சஞ்சீவிச் சாரல் காலஷேபத்தில் அனுமான் சஞ்சீவியைத் தூக்கும் கட்டம். அதில் அனுமர் மலையைத் தூக்குகிறார் எனப் பாகவதர் கூறுகையில் குப்பன் கலங்குகிறான். கீழே வைக்கிறார் என்றால் மகிழ்கிறான். கடைசியில் அத்தனையும் கதையென்றறிந்தது நகைக்கிறான். அத்தனை சுவைபட வருணிக்கப்படுகிறது.

கதையில் மலை தூக்கப்பட்டுக் கீழே வைக்கப்பட்டதில் அதிர்ச்சியில்லை. அசைவில்லை. அது கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்லின் மேல் வைத்தது போலிருந்தோம். உவமை புதிது.

சொன்ன ‘கதையோ தொடங்கி இதுவரை ஏமாந்தார் காசுக்கொஞ்சமானான பாகவதன் சொன்னான் பல பேரைக் கூட்டியே’ எனக் கவிஞர் சொல்கையில் நகைச் சுவைதான் மேலோங்கி நிற்கிறது.

**“ராமாயணமென்ற நலிவு தருங்கதை**
**பூமியி லிருப்பதைஇப் போதே அறிகிறேன்**
**நம்பத் தகாத வெலாம் நம்பவைக்கும்”**

சரித்திரக்காரரால் நாடு நலிகுவதை நான் இன்று கண்டுணர்ந்தேன் இது கவிஞர் கோட்பாடு.

# 3. கண்ணீர்ப்பூக்கள் - மு.மேத்தா

**“வைகறைப் பொழுதுக்கு**

**வார்த்தைத் தவமிருக்கும்**

**வானம் பாடிகளே”**

என்று கவிதைத் தொடங்குகிறார் மேத்தா. என்று விடியும் என்று ஏங்கி நிற்கும் நிலையில் இக்கவிதைத் தொகுப்பினை ஆரம்பிக்கிறார். பூமியாகிய உருண்டையைப் புரட்டிவிடக் கூடிய நெம்புகோலாகிய கவிதை வேண்டும் என்று அவர் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்.

**தேசப்பிதாவுக்குத் தெருப்பாடல் அஞ்சலி**

படங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தேசப்படத்துக்கு புதுச்சாயம் பூசப்படுகிறது. ஆனால் தேசத்தின் நிலை, தேசப்பிதாவின் நிலை இவற்றை எண்ணும்போது,

**“அமைதி கொலுவிருக்கும்**

**உன் சிலைகளைப்**

**பார்க்கும் போதெல்லாம்**

**நான்**

**அழுது விடுகிறேன்”**

என்கிறார்.

தேசப்படத்தில் உள்ள கோடுகள் ஒவ்வொன்றும் விடுதலைக்குப் போராடிய வீரத் தியாகிகளின் விலா எலும்புகளாக கவிஞருக்குத் தெரிகிறது. அந்த நினைவுச்சின்னத்திற்கு அஞ்சலி செலுத்துகிறோம். ஏனெனில் அது யாராலும் அழிக்க முடியாது என்கிறார்.

ஆபுத்திரன் கொடுத்த அமுதசுரபிபோல சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தனர். ஆனால் அது அமுதசுரபியாக இல்லாமல் பச்சைப்பாத்திரமாக காட்சியளிக்கிறது. இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது?

சுதந்திர மாளிகை எலிகளால் சுரண்டப்படுகின்றன.

**“மயிலுக்குப் போர்வைத் தந்தவனின்**

**மரபிலே வந்தவர்கள்**

**எங்கள் மேனியில் கிடக்கும்**

**கந்தல் சட்டையையும்**

**கழற்றிக் கொண்டுபோகிறார்கள்”**

மக்கள் வயிற்றைப் புறக்கணிக்கிறார்கள். தங்களுக்கு வரும் இலாபத்தை மட்டுமே பார்க்கின்றனர். மக்களை மேய்க்கும் மேய்ப்பவர்களுக்கு இனாம் கிடைக்கிறது. எல்லா மக்களுக்கும் உணவு மூன்று வேளையும் கிடைப்பதில்லை.

சட்டங்கள் கூட நியாயமாக செயல்படவில்லை என்பதை,

**“சட்டக் கட்டிடங்களில்**

**ஓட்டைகள் விழுந்துவிட்டன**

**வயதாகிப் போனதால்**

**தரம் ஸ்தூபிகள்**

**தள்ளாடுகின்றன”**

என்று குமறுகிறார் கவிஞர்.

தங்கள் பாவங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக, நம் நாட்டில் புண்ணியத் தலங்களுக்குக் குறைவில்லாததால், அங்கு சென்று தீர்த்துக்கொள்கின்றனர்.

சேரிக்குழ்நதைகளின் கண்களில் கண்ணீர் வடிகிறது. ஆனால் தேசப்பிதாவாகிய காந்தி உபயோகப்படுத்திய கைராட்டை சிலருக்கு தங்கநூல் நூற்பதற்கு உதவுகிறது. காந்தியடிகள் வாங்கித் தந்த சுதந்திரம், பலர் வாழ்வில் அநியாய பொருளீட்டுவதற்காக பயன்படுத்துகின்றனர்.

**“எங்களுக்கோ**

**வெள்ளியும் தங்கமும்**

**விழாக்களின் பெயரில் தான்**

**வருகின்றன”**

என்று ஏழைகளின் நிலையைக் கூறுகிறார்.

நாட்டுமக்களோ, அறைகுறையாக உடுத்துகின்றனர் காந்தியைப்போல. தேசம் போகிற போக்கினைப் பார்த்தால் பிறந்த நாள் உடைதான் தேசத்தின் உடையானால் கூட வியப்பில்லை என்று தேசத்தின் ஏற்றுத்தாழ்வினைச் சுட்டுகிறார்.

**“இருபத்தைந்து ஆண்டுகளில்**

**தேசத்தில்**

**மாற்றமே நிகழவில்லையென்று**

**யார் சொன்னது”**

இன்று ஆபுத்திரன் கொடுத்த அமுதசுரபி பிச்சைப் பாத்திரமாக மாறியிருக்கிறது. மட்டுமல்ல அணைக்கட்டுகளில் திறக்கப்படும் தண்ணீர் பள்ளங்களுக்கு வருவதில்லை அவைகளும் மேடுகளுக்கே செல்கின்றது.

எளியவர்கள் வறுமையிலேயே வாடுகின்றனர். அவர்களுக்கு விடிவு காலம் இல்லை. தேசம் முழுவதும் சேரி போன்று மாற்றி விட்டார்கள். ஏனெனில் நீ சேரி மக்களை அதிகம் நேசித்து சேரியில் யாத்திரை பண்ணுவதினால் என்று தேசப் பிதாவிடம் முறையிடுகிறார். இந்த மாற்றங்கள் நிகழ்த்தியவர்கள் பெரியவர்கள் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள். எனவே அவர்களுக்கு மாலை சூடுகிறோம்.ஆனால் தேசத்திற்கு சுதந்திரம் வாங்கித்தந்த தேசப்பிதாவே! நீர் புத்திர தேசத்துக்காக

புலம்புவதும், இந்த நாட்டின் நிலையைப் பார்த்தும் தலைகுனிவதும், பார்த்து கண்ணீர் விடுவதையும் கவிஞர் தன் கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

**மலர்கள்**

மரங்கள் என்ற கவிதையில், மரங்கள் மானுட ஆண்மைக்கு மண்கொடுத்த சீதனங்கள், பறவைக்கு இருக்க இடம்கொடுக்கும் பொதுவுடைமை வீடுகள், சூடுபடுகின்ற சொந்தகாரர்களுக்கு விரித்தே வைத்திருக்கும் வெண்கொற்றக்குடைகள், மழைக்கு ஒதுங்கும் மரநிலையங்கள் சரியாகப் போடாத சல்லடைப் பந்தல்கள் தென்றலின் பார்வையில் செல்லப்பிள்ளைகள், புயலின் கண்களில் புரட்சிக்காரர்கள், வெட்டியெடுத்தால் விறகாவோம், வெய்யிலிலே சுட்டு எடுத்தாலும் சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம். தாங்களாகவே தங்களின் பயனை எடுத்துரைப்பதாக பாடப்பட்டுள்ளது.

**அறுவடை**

அறுவடை என்ற தலைப்பில் பொன்னன், பொன்னி என்று இருவரும் உரையாடுவதாக பாடப்பட்டுள்ளது. விளைந்த நெல் அறுவடை நடைபெறுவதாகவும், அதனை எடுத்துக்கொண்டு கூலிக்கு கூழ் தருவதாகவும் கூறுவதோடு தை பிறந்தால் வழி பிறக்கும் சமயம் கூடி வரும்போது இமயமலையும் போன்ற பெரிய காரியங்களும் தூளாகிப்போய்விடும். எனவே தைப்பிறக்கும் முன்பிருந்த தேசத்தைப் பாரு. இந்த தேசத்தில் மனித சக்தியால் வெற்றிகொண்ட சரித்திரம் நூறு என்று தேசத்தின் சக்தியின் சிறப்பினைக் கூறுகிறார்.

**1973 பத்மா நதிக்கரையில் பாரதக்கவிஞன்**

வங்கதேசம் விடுதலையடைந்தபோது மலர்ந்த கவிதை. சொந்தத் துக்கங்களை மறந்துவிட்டு தேசத்தின் ஒளிமயமான வருங்காலத்தினை உருவாக்க வேண்டுமென்று வங்கதேசத்தைக் குறித்து வாலிபர்களிடம் உதயகீதம் பாடுகிறார்.

பாரத பூமியின் பாரதி சீமையின் பாடகன் பாடுகிறேன் என்று ஆரம்பிக்கிறார். மூண்ட நெருப்பினில் மூழ்கி எழுந்த தோழர்கள் உங்கள் கனவுக்கு ஞான உருத்தந்த மூஜிப் நலமா? என்று விசாரிக்கிறார். கூண்டு திறந்ததும், கோட்டை மறவனின் கொள்கை முழக்கம் குற்றுயிரான டாக்காவின் வீதியில் கோபுரம் மீண்டும் எழுகிறது. பச்சைச்சணல் வயல் ஓரத்தில் பரிதவித்தனர். பச்சைக்குழந்தைகள் துப்பாக்கிக் குண்டுகள் நெஞ்சிலிட, பொட்டுத் துளைகளும் கீறலும் ஆறிடுமுன் இந்த தேசத்தின் சல்லடை மேனியினை செப்பனிட வேண்டும்.

கன்னிமரங்களின் பட்டை உரித்திட காம வெறியர்களை மறந்து ஈர மனங்களை பொன்னி நதிக்கரையில் பூமிப்புழுதியின் மீது விதைக்க வேண்டும்.

நெஞ்சில் இருக்கட்டும் இலட்சிய பூமி நாதம், மாயக்கனவுக்கு மாலை சூட்டிய மண்ணில் எதிரிகள் ஓடிவிட்டனர் என்று இதுவரை இருந்த இன்னல் எல்லாம்

ஓய்ந்துவிட்டது. இனிமேல் நம் இலட்சியபூமியினை, சாதனை பூமியாக மாற்ற வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார்.

**நிழல்கள்**

சூரிய நெருப்பு சுடுகிற பாதத்தில் நிழல்கள் ஒத்தடம் கொடுப்பதாகவும், வெயில் தாங்காமல் விரைந்துவரும் காலுக்கு செருப்பாகவும் நிழல்கள் இருக்கின்றன. மண்ணின் மச்சங்கள் மரத்தின் எச்சங்கள்.

பங்களா தேசத்தின் படுகொலைகள் நடந்த வீதியில் மானம் இழந்த மங்கலப் பெண்களின் கறுப்பு முக்காடுகள் மட்டுமல்ல. கண்ணீர் பர்தாக்கள் ன்று பங்களாதேசத்தின் படுகொலைகள் மிகுந்திருந்த தன்மையும் குறிப்பாக எடுத்துரைக்கிறார்.

**பாரதி பதித்த சுவடு**

பாரதி தொட்ட இடமெல்லாம் வீரம் பறந்தது. வெட்டவெளியில் கொட்டும் மழையினில் குடும்பம் நடத்துகிற பட்டினித்தோழரைக் கட்டியணைத்தவன். அள்ளியெடுத்து, ஆயிரம் நீத சொன்னவன் அவன்.

கள்ளமனிதர்களின் உள்ளம் அறியவும், தொல்லை துயரின்றி தூக்கி எறிந்து வாழக்கூடிய சூழ்ச்சிகள் பல இந்த சமுதாயத்திற்கு எடுத்துரைத்தவன் அப்பாரதி. நாட்டு விடுதலை கேட்டுக் கிளம்பிடுவதற்கு ஒரு நல்லபடை அமைத்தான். தன்னுடைய பாட்டுத் திறத்தினால் இந்த வையத்தைக் காத்திடும் பாதையைத் தெரிந்தெடுத்தவன். பணக்கோட்டையைத் தகர்த்திடும் கவிதைகள் இவருடையவை. பாரதி மூட்டிய தீயினால் மாண்டது மூடத்தன்மை என்று பாரதி தமிழில் பதித்த பாதச்சுவட்டினைச் சிறந்ததாக எடுத்தியம்புகிறார்.

**கண்ணீர்ப்பூக்கள்**

கண்ணீர்ப்பூக்கள் என்ற கவிதைத்தொகுப்பில் எந்த தேவதையாலும் ஆசீர்வதிக்கப்படவில்லை. எந்தப் பூங்காற்றும் வருடவில்லை. மகிழ்ச்சி மலர்களைப் பறிக்கமுடியவில்லை. ஆனால் சாத்தானால் சபிக்கப்பட்டு, புயல்களோடு போராடி தோட்டத்தில் மலர்வதெல்லாம் கண்ணீர்ப்பூக்கள். ஆனாலும் பயணங்கள் பழுதுபடவில்லை. கவிப்பயணம் காலசைக்கிறது என்று, சோகங்கள் இருந்தாலும் தளராத மனநிலை சாதிக்கும் மனநிலையைக் கவிஞர் கூறுகிறார்.

வாழ்க்கை நாடகத்தில், காட்சிகள் பல. எழமுடியா வீழ்ச்சிகளும் பலவிதம். ஆடுகின்ற பேய்மனதில் ஆயிரமாமம் ஆசைகள். அந்த ஆசைகட்கு அனுதினமும் பூசைகள், வாரங்கொடுக்கும் தேவதைகள் வந்த போது தூங்கிவிட்டு வாழ்க்கை முழுவதும் ஏங்கியதையும், கரங்கொடுக்கும் வாய்ப்புகளைக் கைக்கழுவி வீசிவிட்டு, காலமெல்லும் பேசி இருப்பதையும், அற்பர்களின் சந்தையில் அன்புமலர் விற்று, அதனால் துன்பத்தை விலையாய் பெற்றதையும், முட்புதரில் நட்பு மலர் முளைக்குமென்று நினைத்ததையும், முளைத்து வந்தது பாம்புகளே. வளைத்தபோது

வெம்பியதையும் போன்ற பல செய்திகளை அடுக்காகக் கூறி சோகத்தை கண்ணீர்ப்பூக்களாக எடுத்தியம்பியுள்ளார்.

**"வாலிபத்தின் பூங்கொத்தில்**
**வருடல்கள்**
**தாலிகட்டு முன்பு சில**
**தரிசனங்கள்**
**வேலியிலா இளநிலத்தில்**
**விதைகள்**
**மதிமயக்கும் பளபளப்பில்**
**மனம் மறந்த வேளைகளில்**
**பாய்விரித்த தோணியின் மேல்**
**பருவத்தின் ஊர்வலங்கள்**
**பன்னீர் மரக்கிளையில்**
**பாச இலை உதிர்க்காலம்**
**கண்ணீர் மர வயிற்றில்**
**கர்ப்ப இலை உதயம்"**

என்று கூறிய கவிஞர், நம்பிக்கை வானில் நட்சத்திரம் உதிர்ந்தது. தன்னந்தனிப் பறவை தாய்ப்பறவையாகி விட்டதாகக் கூறுகிறார். மேலும் ஆலமரத்தின் அடியில் உள்ள குப்பைத்தொட்டியில் அழுகின்ற குரல் கேட்கிறது. தூக்கி வளர்ப்பதற்குத் தோள் பலத்தை நம்பாமல் தூக்கி எறிந்துவிட்ட துயரக்குரல் கேட்கிறது என்று முடிக்கிறார் கவிஞர்.

**எதிர்காலத்தில்**

அடிவானத்தில் தொலைதூரத்தில் குரல் கேட்கிறது. உலகை வென்றெ உலவும் உருவம் தெரிகிறது. சொத்தைக் கொள்கைகள் சவக்குழி செல்கிறது. புத்தம் புதிய தத்துவ உலகம் புன்னகை புரிகிறது. பச்சைக்கனவில் சிவப்பு மலர்கள் பருவத்தால் இணைகிறது. தொலைதூரத்தில் கேட்கும் குரலால் காணமுடியாப் புதிர்கள் முடிந்து போகிறது என்ற எதிர்கால நம்பிக்கையை இக்கவிதை ஊட்டுகிறது.

**மாம்பழ ஊரில்**

**மனக்குயில்கள் அழுகின்றன**

உள்மனத்தில் எழும் பல்வேறு மனக்குமுறல்களை எடுத்துக்காட்டுகிறார் கவிஞர்.

**"உன் சிலைகள் உடைகின்றன**
**நீயோ மோகனப் புன்னகையிலேயே இன்னும்**
**மூழ்கியிருக்கிறாய்...**
**உனது புன்னகையின் பொருள் எனக்குப்**
**புரியவில்லை**

**உன்னுடன்**

**சேர்ந்து அழமுடிந்த என்னால்**

**உன்னுடன்**

**சேர்ந்து சிரிக்க முடியவில்லை"**

உடைந்து கிடந்த பிரதேசத்தின் துண்டுகளை ஒட்டவைத்து, தீண்டப்படாததாய் ஒதுக்கப்பட்டவர்களுக்கு தெய்வ மகத்துவம் தேடிக்கொடுத்தவள். விடுதலைக்காக நெருப்பில் நீராடி விடுதலைப் பெற்றுத்தந்தவர். வழக்கம்போல உம்மை கொன்றவருக்கும் மன்னிப்பு வழங்கினாலும் உம்மைக்கொன்ற துப்பாக்கியில் குண்டுகள் மீந்திருக்கின்றனவே என்று காந்தியினைப் பற்றி எழுதுகிறார் கவிஞர்.

பிட்டுக்கு மண் சுமந்தவன் பிரம்படிபட்டதுபோல, உம் மீது பட்ட குண்டுகள் (அசிங்கம்) உண்மையான இந்தியன் ஒவ்வொருவர் மீது பட்டது. கிராமச் சிறுவர்களுக்கு அம்மா என்ற வார்த்தைக்குப் பின் உம்முடைய பெயரே சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்று காந்தியடிகள் மீது மக்கள் கொண்ட மரியாதை அன்பையும் புலப்படுத்துகிறார்.

**"ஒரு நாள்**

**சூரியனிடம் செய்த சுதந்திரப் பிரகடனத்தில்**

**உருவானது தானே இந்த**

**உலகம்?**

**இந்த உலகம்**

**கடலையா ஆடையாக உடுத்திருக்கிறது?**

**இல்லை**

**அலை நெளியும் கடல் - வெறும்**

**அலங்கார ஜரிகை தான்"**

என்று கடலுக்கு புது விளக்கம் தருகிறார் கவிஞர்.

**சுற்றிக்கட்டும்ஆடை சுதந்திரமே**

சுதந்திரம் இல்லாத இடத்தில்தான் பூமி நிர்வாணத்தால் அவமதிக்கப்படுகிறது. அந்த அவமதிப்பைத் தாங்க முடியாமல்தான் பாப்லோ நெருடாக்கள் பலியாகிறார்கள்.

**"சுதந்திர கீதங்கள்**

**மதிப்பிழந்த நாட்டில்**

**தேசீய கீதங்கள்**

**தேவையே இல்லை"**

உடல் காற்றை சுவாசிக்கலாம். உயிர் சுதந்திரத்தை மட்டும் சுவாசிக்கக்கூடிய அந்த சுதந்திர நினைவுகளை சூறையாடிட எந்த ஏகாதிபத்தியத்தாலும் முடியாதது என்று கவிஞர் பாடியுள்ளார்.

**ஒரு மக்கள் கவிஞனின் இறுதிக்கேள்வி**

உங்களுக்காக உங்களைப் பற்றி ஒரு பாடல் பாடினேன். அப்பாடல்கள் நரம்பு வயல்களில் நடவு நட்டதாக கூறினீர்கள். உங்களுக்காக, உங்களைப் பற்றி எழுதிய கவிதையும் காலப்புயலின் காவியம் என்று கைதட்டினீர்கள் என்கிறார் மேத்தா. மேலும் பாடல் பாடினேன், பாடலுக்காக ஒரு விசாரணை வந்தது, அதிகாரத்தின் கைகள் இரவில் வந்து கவிஞரை அழைத்தது. அதற்காக நிழலுக்கும் விலங்கிடத் துடிக்கின்றனர். பணத்திற்கும் தண்டனை கொடுக்கத் தயாராக இருக்கின்றனர்.

அந்தக்கழுகுக் கரங்களில் (அதிகார வர்க்கத்தின் கரங்கள்) இருந்து சமுதாயத்தைக் காக்கப் போராடும் மனிதாபிமானியின் விவாதங்கள் நடைபெறுகிறது. அதற்காகக் குற்றக்கூண்டு, சிறைவாசம், சிந்தனை புழுக்கறையில் இருக்கும் அந்த கவிஞனுக்காக என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்பதாக அக்கவிதை முடிகிறது.

கண்ணீர்ப்பூக்கள் கவிதை, கவிஞரின் உள்ளத்தை உள்ளபடி உணர்த்தும் கவிதையாக, சமுதாயத்தின் அநியாயத்தை எடுத்துக்காட்டும் ஒரு சிறந்த படைப்பாக திகழ்கிறது என்றால் மிகையாகாது.

அலகு - 2

## உரைநடை

## 4. தமிழின்பம் - ரா.பி.சேதுப்பிள்ளை

**I. மேடைப்பேச்சு**

1. தமிழாசிரியர் மகாநாடு
2. புறநானூறு மகாநாடு
3. வேளாளப் பெருமக்கள் மகாநாடு
4. தமிழத் திருநாள்
5. தமிழ் இசை விழா

**II. இயற்கை இன்பம்**

6. பொங்கலோ பொங்கல்
7. சித்திரை பிறந்தது
8. தமிழ்த்தென்றல்
9. திருக்குற்றாலம்
10. பழகு தமிழ்

**III. காவிய இன்பம்**

11. காதலும் கற்பும்
12. கண்ணகிக் கூத்து
13. சிலம்பின் காலம்
14. அமுத சுரபி
15. மாதரும் மலர்ப் பொய்கையும்

**IV. கற்பனை இன்பம்**

16. முருகனும் முழுமதியும்
17. பயிர் வண்டும் படர்கொடியும்
18. நல்ல மரமும் நச்சு மரமும்
19. சிவனடியார் முழக்கம்
20. சரம கவிராயர்

**V. அறிவும் திருவும்**

21. காயும் கனியும்
22. சேரனும் கீரனும்
23. பாரியும் மாரியும்
24. அழகும் முத்தும்
25. வன்மையும் வறுமையும்

**IV. மொழியும் நெறியும்**

26. தமிழும் சைவமும்
27. தமிழும் சாக்கியமும்
28. இறையவரும் இன்னுயிரும்
29. சோலைமலைக் கள்ளன்
30. தெய்வம் படும் பாடு

**VII. இருமையில் ஒருமை**

31. ஆண்மையும் அருளும்
32. கர்ணனும் கும்பகர்ணனும்
33. காளத்தி வேடனும் கங்கை வேடனும்
34. பாரதப் பண்பாடு
35. இரு மலையும் தமிழ் மலையே

**VIII. பாரதியார் பாட்டின்பம்**

36. செந்தமிழ் நாடு
37. முப்பெரும் கவிஞர்
38. கலையின் விளக்கம்
39. பண்டாரப் பாட்டு
40. தமிழ்த் தாய் வாழ்த்து

# 4. தமிழின்பம் - ரா.பி.சேதுப்பிள்ளை

## I. மேடைப்பேச்சு

### 1. தமிழாசிரியர் மகாநாடு

### தலைமை உரை

'கற்றாரைக் காண்பதுவும் நன்று: கற்றார் சொற்கேட்பதுவும் நன்று. கற்றாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று' என்பர் நற்றமிழ் வல்லார். அந்நலத்தை இம்மகாணத் தமிழாசிரியர் மாநாட்டில் எனக்குச் சிறப்பாகத் தந்த அன்பர்களை மனமாரப் போற்றுகிறேன். இம்மாநாட்டிலே தமிழ்த்தாயின் மணிக்கொடி ஏறக்கண்டேன்: மனம் களித்தேன். வில்லும் கயலும் வேங்கையும் தாங்கிய மணிக்கொடி, முத்தமிழ் வளர்த்த மூவேந்தரையும் நம் மனக் கண்ணெதிரே காட்டி நிற்கின்றது.

சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று குலத்தமிழ் மன்னர், நித்தம் தமிழ்வளர்த்த நீர்மை நம் நினைவிற்கு வருகின்றது. சேரநாட்டு மாளிகையில், மெல்லிய வீரமஞ்சத்தில் கண்ணுறங்கும் தமிழறிஞர் ஒருவருக்குக் கவரி வீசி நிற்கும் காவலனை மனக்கண்ணெதிரே காண்கின்றோம். சோழ நாட்டு மாநில மன்னன், தமிழ்த்தாயின் திருவடி தொழுது,'நான் பண்டித சோழன்' என்று இறுமாந்து பேசும் இனிய வாசகத்தைக் கேட்கின்றோம். சங்கத்தமிழ் மணக்கும் மதுரையில் அரியாசனத்தில் அமர்ந்து, ஆசிரியரின் சிறப்பையும், அவர்களை ஆதரித்தற்குரிய முறையையும் அழகிய பாட்டால் எடுத்துரைக்கும் பாண்டியனைப் பார்க்கின்றோம். "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று பாண்டியன் அன்று பிறப்பித்த ஆணை என்றென்றும் தமிழ்நாட்டில் நின்று நிலவுவதில் வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

மூவேந்தர் காலத்திற்குப் பின்பு நம் தாய் மொழிக்கு நேர்ந்த சிறுமையை நினைத்தால் நெஞ்சம் உருகும். வேற்றரசர் ஆட்சி இந்நாட்டில் வேரூன்றிற்று. அவர் மொழியாகிய ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றது. பயிற்றப்பட்டன. தமிழ் ஆசிரியர்களின் உள்ளம் இடிந்தது. ஊக்கம் மடிந்தது. புகைபடிந்த ஓவியம்போல் புலவர் மணிகள் பொலிவிழந்தார்கள். தமிழ் மாணவர்களும் தமிழை எள்ளி நகையாடத் தொடங்கினர். அல்லும் பகலும் ஆங்கிலத்தைக் கற்று, ஆங்கிலேயருடைய நடையுடைகளில் மோகமுற்று, தாய்மொழியைப் பழித்தும் இழித்தும் பேசுவாராயினர்.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட கல்வி முறை இந்நாட்டு முன்னேற்றத்திற்கு ஏற்றதன்று. அதனை மாற்றியே தீர வேண்டும் என்று இப்போது நல்லறிஞர் எல்லோரும் ஒன்றுபட்டுக் கூறுகின்றார்கள். இனி வருகின்ற தமிழரசில் கலைகள் எல்லாம் தமிழ்மொழியின் வாயிலாகவே பயிற்றப்படும் என்பது திண்ணம். அந்தமுயற்சியில் கல்வி அமைச்சர் ஈடுபட்டிருக்கின்றர். இப்பொழுது அவர் வகுத்துள்ள திட்டம் உயர்தரப் பள்ளிகளுக்கே யாயினும், அதனோடு நின்றுவிடப் போவதில்லை. கல்லூரியிலும்

கலைகளெல்லாம் தாய்மொழியின் மூலமாகவே கற்பித்தல் வேண்டும் என்னும் ஆணையை அவர் ஒல்லையிற் பிறப்பிப்பார் என்று நம்புகின்றோம். அதற்குரிய கலைச்சொற்களை ஆக்கும் பணியில் இப்பொழுதே தமிழறிஞர் தலைப்படல் வேண்டும். கலைச்சொல்லாக்கம் வேகமாகச் செய்யக்கூடிய வேலையன்று. பல்லாற்றானும் பதைப்பற ஆராய்ந்து, தமிழின் நீர்மைக்கு ஏற்றவாறு கலைச்சொற்காணுதலே தமிழ்மொழிக்கு ஆக்கம் தருவதாகும்.

இனி, வருங்காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் செய்தற்கரிய சிறந்த வேலைகள் பல இருக்கின்றன. குடியரசாட்சியில் பேச்சுக்கும் எழுத்துக்கும் பெருஞ் சிறப்புண்டு. தமிழ் மேடையில் நிகழும் பேச்சுக்களைச் சுருக்கெழுத்திலே எடுக்கும் கலையைத் தமிழாசிரியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று பத்திரிகை யுலகம் பெரும்பாலும் தமிழ்ப்பேச்சுக்களை மதிப்பதில்லை. பிரசுரம் செய்வதில்லை. திருவள்ளுவர் முதலிய புலவரின் நினைவு நாட்கள் பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகின்றன. அவ்விழாக்களிலே பெரும் புலவர்கள் பேசுகின்றார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து கேட்கின்றார்கள். கிளர்ச்சி பெறுகிறார்கள். பயனடைகிறார்கள். ஆனால்,அந்நிகழ்ச்சிகளைப் பற்றி தமிழ்நாட்டு ஆங்கிலப் பத்திரிக்கைகளில் விவரமாக ஒன்றும் காணமுடியாது. தமிழ்ப்பத்திரிக்கைகளிலும் சிலவற்றைத் தவிர, மற்றவை ஏனோதானோ என்றுதான் அந்நிகழ்ச்சிகளை வெளியிட்டிருக்கும். இந்த நிலையை மாற்றவே வேண்டும். அதனை மாற்றும் ஆற்றல் தமிழறிஞரிடம் இருக்கின்றது. நாடெங்கும் தமிழார்வம் நிறைந்துவிட்டால் பத்திரிக்கைகள் தாமே தமிழிற் கவிந்துவரும்.

ஆதலால், தமிழ் அறிஞர்களே! தமிழ் நாடெங்கும் தமிழ்ச்சங்கம் நிறுவுங்கள். தமிழ்ப்பாடம் சொல்லுங்கள். கலைச்செல்வத்தை வாரி வழங்குவார்கள். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானால் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாடு புத்துயிர் பெற்றுவிடும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லோரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக்கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப்புலவர் தலைவராக வீற்றிருப்பர். 'எந்த மொழியும் நமது சொந்த மொழிக்கு இணையாகாது' என்று தமிழ்நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர். 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்று முரசு கொட்டுவர். எட்டுத்திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும்.

## 2. புறநானூறு மகாநாடு

### தலைமை உரை

இந்நாள் தமிழ்நாட்டுக்கு ஒரு நன்னாள் ஆகும். தமிழ்த் தாயைப் போற்றும் அன்பரும் அறிஞரும் நூற்றுக்கணக்காக இங்கே நிறைந்திருக்கின்றார்கள். தலைசிறந்த ஒரு தமிழ் நூலின் திறத்தினை எடுத்துரைப்பதே இம்மகாநாட்டின் கருத்து. புறநானூறு என்னும் பெருமை சான்ற நூலைப் பற்றிப் புலவர் பலர் இங்கே பேச இசைந்துள்ளார்கள்.

பழந்தமிழ்நாட்டின் தன்மையை எடுத்துக்காட்டும் தொகைநூல்களில் தலைசிறந்தது புறநானூறு என்பர். அந்நூலில் படைத்திறம் வாய்ந்த பெருவேந்தரைக் காணலாம். கொடைத்திறம் வாய்ந்த வள்ளல்களைக் காணலாம். கற்றறிந்து அடங்கிய சான்றோரைக் காணலாம். பழந்தமிழ்க் குலங்களையும் குடிகளையும் காணலாம். சுருங்கச்சொல்லின், கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந்த பழந்தமிழ் நாட்டைப் புறநானூற்றிலே காணலாம்.

முத்தமிழ் நாட்டை ஆண்ட சேர சோழ பாண்டியருள் சிலர் பாடிய பாடல்கள் புறநானூற்றிலே காணப்படும். கற்பின் செல்வியாகிய கண்ணகியின் சீற்றத்தால் ஆவி துறந்து அழியாப் புகழ்பெற்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், கவிபாடும் திறம் பெற்ற காவலருள் ஒருவன். மக்களாகப் பிறந்தோரெல்லாம் கல்வி கற்று மேம்படல் வேண்டும் என்ற ஆசையை அம்மன்னன் ஒரு பாட்டால் அறிவிக்கின்றான்.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”**

என்ற பாட்டு, அவ்வார்வத்தைக் காட்டுகின்றது.

சோழநாட்டு அரசனாகிய கோப்பெருஞ்சோழன் தமிழுணர்ந்த புலவர்களைத் தக்கவாறு போற்றியவன். பிசிராந்தையார் என்னும் தமிழ்ப் புலவரையே உயிர் நண்பராகக் கொண்டான். அம்மன்னன் உலக வாழ்க்கையில் வெறுப்புற்று, நாடு துறந்து, உண்ணா நோன்பை மேற்கொண்ட பொழுது அவன் மனம் பிசிராந்தையாரை நாடிற்று. தோழர் வருவார் வருவார் என்று வழிமேல் விழி வைத்து ஆவி காத்திருந்தான் அவன். எப்படியும் பிசிராந்தையார் வந்தே தீர்வாரென்று அருகே இருந்த அன்பரிடம் அகம் குழைந்து கூறினான்.

**“செல்வக் காலை நிற்பினும்**
**அல்லற் காலை நில்லன்”**

என்பது அந்நிலையில் அவன் பாடிய பாட்டு. இங்ஙனம் ஏங்கி நின்ற நல்லுயிர் நீங்கிப் போயிற்று. பிற்பாடு, ஆந்தையார் வந்து சேர்ந்தார். நிகழ்ந்ததை அறிந்தார். தாமும் உண்ணா நோன்பிருந்து தம் உயிர்கொண்டு சோழன் நல்லுயிரைத் தேடச்செல்வார் போல ஆவி துறந்தார்.

சேரநாட்டை ஆண்ட மன்னருள் ஒருவன் சேரமான் இரும்பொறை. அம்மன்னன் செங்கண்ணன் என்ற சோழமன்னனுடன் பெரும்போர் செய்து தோற்றான். வெற்றிபெற்ற சோழன் சேரமானைப் பிடித்துச் சிறைக்கோட்டத்தில் அடைத்தான். சிறையிடைத் தேம்பிய சேரன், ஒரு நாள் தாகமுற்று வருந்தினான். தண்ணீர் தரும்படி சிறை காப்பாளனை வேண்டினான். அவன் காலம் தாழ்த்து, ஒரு கலத்தில் நீர் கொண்டுவந்தான். அத்தண்ணீரைப் பருகி, உயிர் வாழ்வதற்கு அம்மானவேந்தன் மனம் இசையவில்லை. ''மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிது'' என்றெண்ணி அவன் உயிர்துறக்கத் துணிந்தான். காவலாளன் கொடுத்த தண்ணீர்க்கலத்தைக் கையிலே வைத்துக்கொண்டு ஒரு கவிபாடினான். உயிர் துறந்தான்.

**முற்காலப் போர்முறை**

முற்காலப்போர் முனைகளிற் சிலவற்றைப் புறநானூற்றிலே காணலாம். அக்காலத்தில், ஓர் அரசன் மாற்றரசனது நாட்டின்மீது படையெடுத்தால், அந்நாட்டில் வாழும் நல்லுயிர்களை நாசமாக்கக் கருதுவதில்லை. பசுக்களையும், அறவோரையும்,பெண்களையும், பிணியாளரையும் இவர் போன்ற பிறரையும் போர் நிகழும் இடத்தைவிட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும்.

**கோட்டை கொத்தளங்கள்**

முற்காலத்தில் தமிழரசர்கள் கட்டிய கோட்டைகளும் கொத்தளங்களும் புறநானூற்றிலே குறிக்கப்பட்டுள்ளன. பாண்டி நாட்டிலே, கானப்பேர் என்ற ஊரில் ஒரு பெரிய கோட்டை இருந்தது. ஆழ்ந்த அகழியும், உயர்ந்த மதிலும், நிறைந்த ஞாயிலும், செறிந்த காடும் அக்கோட்டையின் உறுப்புக்கள்.

**''கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை**
**அருங்குறும் புடுத்த கானப் பேர்எயில்''**

என்று அதன் பெருமையைப் பாடினார் ஐயூர் மூலங்கிழர்.

கோட்டையின் பல கூறுகளும் உறுப்புகளும் புறப்பாடல்களால் புலனாகின்றன. கோட்டையின் சிறந்த அங்கம் மதில். மதிலைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள் பலவாகும். அவற்றுள் ஆரை, எயில், இஞ்சி, நொச்சி, புரிசை என்பன புறநானூற்றில் வழங்குகின்றன. மதில்கள் செப்புத்தகடுகளைச் செறித்துத் திண்மை செய்யும் முறை முற்காலத்தில் கையாளப்பட்டதாகத் தெரிகின்றது.

தென்பாண்டி நாடாகிய திருநெல்வேலியில், பாண்டிய மன்னர் கட்டியிருந்த கோட்டையின் குறிகள், பல இடங்களில் உள்ளன. அவற்றுள் ஒன்று பொருளை ஆற்றின் கரையில் அமைந்த செப்பறையாகும். செப்பறை என்பது செம்பினால் செய்த அறை என்ற பொருளைத் தரும். செப்பறை என்ற இடத்தில் அழகிய கூத்தர் கோவில் ஒன்றே காணப்படுகிறது. செப்பறைக்கு எதிரே, ஆற்றின் மறுகரையில் மணற்படைவீடு என்ற ஊர் அமைந்துள்ளது. படை வீடு என்பது அரசனது படை தங்கி இருக்கும்

பாசறையாகும். பாண்டிய மன்னன் சேனை தங்கிய படைவீட்டுக்கு அண்மையில் செப்பறை அமைந்திருத்தலை நோக்கும் பொழுது அவ்விடம் பாண்டியனார்க்குரிய கோட்டைகளுள் ஒன்றாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

மதிலுறுப்புகளில் ஞாயில் இன்றியமையாத தொன்றென்பது தமிழ்நாட்டார் கருத்து படையெடுத்து வரும் பகைவன்மீது மறைந்துநின்று, அம்பு எய்தற்குரிய நிலையங்களே ஞாயில்கள் எனப்படும்.அகழி சூழ்ந்த இடத்தைக் கிடங்கில் என்று கூறுவர். தரையில் அமைந்த கோட்டைகளேயன்றி, வானத்தில் ஊர்ந்து செல்லும் கோட்டைகளையும் முற்காலத் தமிழர் அறிந்திருந்தனர். ஆகாயக்கோட்டைகளை 'தூங்கு எயில்' என்று குறித்தார்கள். ஆகாய வழியாகப் போந்த மூன்று பெரிய கோட்டைகளை ஒரு சோழ மன்னன் தகர்த்தெறிந்த செய்தி, புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்களால் விளங்கும். பகைவரை அழிக்கும் படைத்திறமைக்கு, அவன் செயலையே எடுத்துக்காட்டாகப் புலவர்கள் பாடினர்.

புறநானூற்றிலே புகழப்படுகின்ற குறுநில மன்னரிற் பலர், குன்று சார்ந்த நாடுகளில் வாழ்ந்தனலெனத் தெரிகின்றது. பாண்டியநாட்டில், பழனிமலையை ஆண்ட தலைவன் பேகன். பறம்பு மலையை ஆண்டவன் பாரி, கோடை மலையை ஆண்டவன் கடிய நெடு வேட்டுவன். போதிய மலையை ஆண்டவன் ஆய் அண்டிரன். சோழ நாட்டில், வல்வில் ஓரி என்பவன் கொல்லிமலையை ஆண்டான். அதிகமான் குதிரை மலையில் ஆட்சி புரிந்தான். குமணன் முதிர மலையின் கொற்றவன். பெருநள்ளி என்பவன் தோட்டிமலையின் தலைவன் இச்சிற்றரசரிற் சிலர், பேரரசரினும் சாலப் புகழ்பெற்று விளங்கினர். வறிஞரை ஆதரித்தனர். அறிஞரைப் போற்றினர்.

கொல்லிமலையை ஆண்ட ஓரியும், மலையமான் என்னும் திருமுடிக்காரியும், மழவர் கோமானாகிய அதிகமானும், பழனிமலைத் தலைவனாகிய பேகனும், கொங்கர் கோமானாகிய குமணனும், தோட்டிமலை நாடனாகிய நள்ளியும், கொடையிற் சிறந்த குறுநில மன்னர்கள்.

**பழைய குலமும் குடியும்**

பழந்தமிழ் நாட்டில் விளங்கிய குலங்களையும் குடிகளையும் புறநானூற்றிலே காணலாம். மழவர் என்பவர் ஒரு குலத்தார். அவர், சிறந்த வீரராக விளங்கினர் மழவர் குலத்திலே அதிகமான் என்னும் பெருமகன் தோன்றினான். அவன் சிவநெறியில் நின்ற சீலன். பொய்யறியாப் புலவர்களால் புகழப்பெற்றவன். அவன் படைத்திறத்தைப் பாடினார் பரணர். கொடைத்திறத்தைப் பாடினார் ஔவையார். மற்றொரு பழந்தமிழ் வகுப்பார் பாணர். பண்ணோடு இசைபாட வல்லவர் பாணர் எனப்பட்டார். பாணரை அக்காலத்துப் பெருநில மன்னரும் குறுநில மன்னரும் வரிசை அறிந்து ஆதரித்தார்கள்.

புறநானூற்றிலே பேசப்படுகின்ற வையாவிக் கோப்பெரும்பேகன் என்பவன் ஆவியர் குடியில் பிறந்தவன். ஆவியர் பெருமகன் என்று சிறுபாணாற்றுப் படை அவனைப் போற்றுகின்றது. ஆவியரைப் போலவே ஓவியர்கள் என்பாரும் பழந்தமிழ்

நாட்டில் இருந்தனர். ஓவியர் குடியில் பிறந்து சிறந்து வாழ்ந்த சிற்றரசன் ஒருவனை,'ஓய்மான் நல்லியக்கோடன்' என்று புறநானூறு குறிக்கின்றது.

**புலவர் வாழ்க்கை**

அக்காலத்துப் புலவர்கள் தம்மை மதியாத மன்னர் அளித்த கொடையை அறவே வெறுத்தார்கள். பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர், கோடைமலைத் தலைவனாகிய கடிய நெடு வேட்டுவனைக் காணச்சென்றார். அவன், உரிய காலத்தில் பரிசில் அளியாது காலம் தாழ்த்தான். அது கண்ட சாத்தனார்,

**"முற்றிய திருவின் மூவர் ஆயினும்**
**பெட்பின் றீதல் யாம்வேண் டலமே"**

என்றார். "கல்வியின் பெருமையறிந்து பேணிக்கொடுக்கின்ற கொடையையே யாம் பெறுவோம். அன்பற்றவர். முடியுடை வேந்தராயினும், அவர் அளிக்கும் கொடையை ஏற்றுக்கொள்வோம்" என்று கூறி அவனை விட்டு அகன்றார்.

**இசைத்தமிழ் வளர்ச்சி**

இயற்றமிழை ஆதரித்த பண்டைத் தமிழரசர்கள் இசைத்தமிழையும் நன்கு போற்றினார்கள். அக்காலத்து இசைக்கருவிகளில் சிறந்தன குழலும் யாழும். யாழ், பலதிறப்பட்டதாக அமைந்திருக்கிறது. பாணர் என்பவர் சீறியாழ் என்னும் சிறிய யாழைத் தாம் செல்லும் இடமெல்லாம் எடுத்துச்சென்றார். சிறிய யாழ்,எப்பொழுதும் அவர் கையகத்து இருந்தமையால் அது 'கைவழி' என்னும் பெயர்பெற்றது.

**சங்ககாலப் பெண்மணிகள்**

அக்காலத்தில் கலையுணர்வு பெற்ற பல பெண்மணிகள் தமிழ்நாட்டில் வாழ்ந்தார்கள். 'பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்' என்பது தமிழ்நாட்டாரது பழங்கொள்கை யன்று என்பதற்குப் புறநானூறு ஒன்றே போதிய சான்றாகும். செவ்விய கவி பாடும் திறம்பெற்ற பெண்பாலார் பாடிய அருமை சான்ற பல பாடல்கள் புறநானூற்றிலே சேர்க்கப்பட்டுள்ளன.

**வீரத்தாய்மார்கள்**

இன்னும், வெம்மை சான்ற போர்க்களத்தில் அஞ்சாது நின்று அமர் புரியுமாறு, தாம் பெற்ற அருமை மைந்தரை ஊக்கி அனுப்பிய வீரத்தாயரும் அக்காலத்தே விளங்கினர். மாற்றார்க்குப் புறங்கெடாது, மார்பிலே புண்பட்டு இறந்த மைந்தனது மேனியைக் கண்டநிலையில், பெற்ற போதினும் பெரியதோர் இன்பம் அடைந்தாள் ஒரு தாய். மற்றொரு வீரமானது, முதல் நாள் நடந்தபோரில் தமையனை இழந்தாள். மறுநாள் நடந்தபோரில் கணவனை இழந்தாள். பின்னும் போர் ஒழிந்தபாடில்லை. அவன் குடும்பத்தில் சிறு பையன் ஒருவனே எஞ்சி நின்றான். முன்னே இறந்துபட்ட தலைவனையும் தமையனையும் நினைந்து அவள் தளர்ந்தாள் அல்லள். தன் குடியைக் காப்பதற்கு மைந்தன் ஒருவனே உள்ளான் என்பதையும் உணர்ந்தாள் அல்லள்.

அருமந்த பிள்ளையை அன்போடு அழைத்தாள். வெள்ளிய ஆடையை உடுத்தாள். தலையைச் சீவி முடித்தாள். வேலைக்கையிலே கொடுத்தாள். போர்க்களத்தை நோக்கி அவனை விடுத்தாள். இவ்வீர மங்கையை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்புலவர் வியந்து பாராட்டியுள்ளார்.

**மக்கள் வாழ்க்கைநலம்**

அந்நாளில் தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைக் குறித்துப் புறநானூறு பல செய்திகள் கூறுகின்றது. 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்றவாறு, முற்கால மக்கள் மன்னனையே பின்பற்றி நடக்க முயன்றார்கள். அரசன் அந்நெறி தவறாதவனாய் ஆண்டு வந்தால் குடிகளுக்கு எவ்வகைக் கவலையும் இல்லை என்பதும், அவன் அறநெறி தவறினால், மழை பருவத்திற் பெய்யாது பசியும், பிணியும் குடிகளை வருத்தும் என்பதும் பழந்தமிழர் கொள்கை, இதனாலேயே 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற வாசகம் எழுந்தது.

**இலக்கிய நலம்**

புறநானூற்றுப் பாடல்களில் அமைந்துள்ள சொல்லையும் பொருளையும் பிற்காலப் பெருங்கவிஞர் பொன்னே போல் போற்றினர். நாட்டில் வாழும் உயிர்களுக்கு அரசனே உயிர் என்ற உண்மை,

**"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"**

என்று புறப்பாட்டிலே கூறப்படுகின்றது. இத்தகைய பெருநூலைத் தமிழ்மக்களாகிய நாம் போற்றிப் படித்து இன்பமும் பயனும் எய்துவோமாக.

## 3. வேளாளப் பெருமக்கள் மகாநாடு

### திறப்புரை

பழம் பெருமை வாய்ந்த மதுரையம்பதியில் வேளாளப் பெருமக்கள் மகாநாடு இன்று நடைபெறுகின்றது. வேளாளருக்குரிய பயிர்தொழிலைப் புகழாதார் தமிழ்நாட்டில் எவருமில்லை. "மேழிச்செல்வம் கோழை படாது" என்பது இந்நாட்டார் கொள்கை. மேழியே வேளாண்மையின் சின்னம். அம்மேழிக்கொடி இந்த மகாநாட்டுக் கொட்டகையில் அழகுற மிளிர்க்கின்றது. அதனை 'வாழி வாழி!' என்று வாழ்த்துகின்றோம்.

முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டிலே ஒரு திருமணம். மன்னரும் முனிவரும், பாவலரும் நாவலரும் குடிகளும் படைகளும் மணமாளிகையில் நிறைந்திருந்தார்கள். ஔவையாரும் அங்கே வந்திருந்தார். மன்னன் திருமகனே மணமகன். மனம் இனிது முடிந்தது. மங்கல வாழ்த்துத் தொடங்கிற்று. முனிவர் ஒருவர் எழுந்தார். 'மணமக்கள் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!' என்று வாழ்த்தினார். 'இளவரசு வாழையடி

வாழையென வையகத்தில் வாழ்க' என்று வாழ்த்தினார் மற்றொரு முனிவர். ஔவையார் எழுந்தார். 'அரசே, உன் நாட்டில் வரப்பு உயர்க!' என்று வாழ்த்தினார். அவ்வாழ்த்துரையின் பொருத்தமும் பொருளும் அறியாத சபையர், ஒருவரை ஒருவர் வெறித்து நோக்கினர். அது கண்ட ஔவையார், தம் வாழ்த்துரையின் கருத்தை விரித்துரைப்பாராயினர். ''சபையோரே! 'வரப்பு உயர்க!' என்று இளவரசை நான் வாழ்த்தினேன். விளைநிலத்தின் வரப்பு உயர, நீர் உயரும். நீர் உயர, நெல் உயரும். நெல் உயர குடி உயரும். குடி உயர, கோன் உயர்வான்'' என்று விளக்கம் கூறினார்.

''உழவனே நாட்டில் உயிர்நாடி; அவன் ஊக்கமே அரசனது ஆக்கம். அவன் கையால் நட்ட நாற்று முடிதழைத்தால், மன்னன் முடி தழைக்கும்'' என்று புலவர்கள் பாடினார்கள்.'உழவன் உழைப்பாளன்'' என்பது அவன் தொழிலைக் குறித்து வழங்கும் ஒரு சொல்லாலே விளங்கும். பயிர்த்தொழிலைக் குறிக்கும் மற்றொரு சொல் வேளாண்மை. பயிர்த்தொழில் எவ்வளவு பழமை வாய்ந்ததோ, அவ்வளவு பழமை வாய்ந்தது வேளாண்மை என்ற சொல்லும். வேளாண்மை செய்பவர் வேளாளர். அதனால் வேளாண்மை என்ற சொல்லுக்கே உபகாரம் என்னும் பொருள் வந்தது. திருக்குறளிலே அப்பொருளைக் காணலாம்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்று திருக்குறள் பாடிற்று. இக்குறளில் வேளாண்மை என்ற சொல்லுக்குப் பரோபகாரம் என்பது பொருள். வேளாளருடைய பண்புகளைத் தேவாரத் திருப்பாட்டிலே கூறுகின்றார்.

**"வேளாளர் என்றவர்கள்**
**வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளார்"**

என்பது அவர் தேவாரம். இப்பாட்டால் வேளாளர் சிறந்த உழைப்பாளர் என்பதும், கொடையாளர் என்பதும் நன்கு தெரிகின்றன.

உழவுத்தொழிலால் மேன்மையுற்ற நாடொன்று 'நாஞ்சில் நாடு' என்று பெயர்பெற்றது. நாஞ்சில் என்பது ஏல். மலையாள மன்னருடைய ஆட்சியில் அமைந்துள்ளது நாஞ்சில்நாடு. அந்நாட்டை ஏராலே சீராக்கி, உழைப்பாலே,சிறப்பாக்கியவர் தமிழ்நாட்டு உழவரே என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்நாட்டிலே உழைப்பாலும், ஒழுக்கத்தாலும் ஒற்றுமையாலும் நம் முன்னோர் சிறப்புற்று வாழ்ந்தார்கள். இவ்வரும்பெருஞ் செயல்களையெல்லாம் நடைபெறப் போகின்ற வேளாளப் பெருமக்கள் மகாநாட்டை வாழ்த்துகின்றேன்.

## 4. தமிழத் திருநாள்

### தலைமையுரை

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இன்று இலங்கையில் தமிழ்த்திருவிழா நடைபெறுகின்றது. தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் பழமையான தொடர்புண்டு. தமிழ் இலக்கியமே இதற்குச் சான்று. பண்டமாற்று முறையிலும், பண்பாட்டு முறையிலும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்த உறவு சங்க நூல்களிலும் பிற்காலத்துப் பெருநூல்களிலும் பேசப்படுகின்றது. சங்கத் தமிழில் ஈழநாடு என்பது இலங்கையின் பெயர். பட்டினப்பாலை என்னும் பழந்தமிழ்ப் பாட்டிலேயே சோழ நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் இருந்த வாணிக உறவு குறிக்கப்படுகின்றது.

சேரநாடு என்று பழங்காலத்தில் பெயர் பெற்றிருந்த மலையாள நாட்டிற்கும்,ஈழ நாட்டிற்கும் பலவகையான தொடர்பிருந்தது. மலையாள நாட்டில் இன்று ஈழவர் என்று அழைக்கப்படுகின்ற வகுப்பார் இலங்கையிலிருந்து அந்நாட்டில் குடியேறியவரேயாவார். ஈழவர் என்ற சொல்லே அவர் ஈழ நாட்டிலிருந்து வந்தவர் என்பதை உணர்த்துகின்றது.

செங்குட்டுவன் என்னும் சிறந்த சேரமன்னன் மலையாள நாட்டில் அரசு வீற்றிருந்த பொழுது தமிழ்நாட்டில் அரும்பெருஞ்செயலொன்று நிகழ்ந்தது. கற்பின் செல்வியாகிய கண்ணகி, பாண்டிய மன்னனைத் தன் கற்பின் திண்மையால் வென்று, சேர நாட்டையடைந்து, தெய்விகமுற்றாள். இந்த நிகழ்ச்சி மூன்று தமிழ் நாட்டையும் அதிரச்செய்தது. சேரநாட்டு அரசன் தன் நாட்டில் வந்து தெய்விகமுற்ற வீரபத்தினியாகிய கண்ணகிக்குச் சிறந்த திருக்கோயில் ஒன்று அமைத்தான். அக்காட்சியைக் காண்பதற்கு அயல்நாட்டு மன்னர் பலரைச் செங்குட்டுவன் அழைத்திருந்தான். அன்னவருள் ஒருவன் ஈழநாட்டு மன்னன்,“கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்” என்று சிலப்பதிகாரத்தில் அவ்வரசன் குறிக்கப்படுகின்றான்.

ஈழநாட்டிலே பிறந்து, தமிழ்நாட்டிலே வாழ்ந்து, தமிழ்த்தொண்டு புரிந்த பேரறிஞர் பலராவர். மெய்வருத்தம் பாராது பழைய ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து சிறந்த இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையம் முதன்முதலாக அச்சிட்டுத் தமிழகத்தார்க்கு உதவிய பெருமை யாழ்ப்பாணத்தில் தோன்றிய தாமோதரம் பிள்ளையவர்களுக்கே உரியதாகும். நற்றமிழ்ப் புலமையும் நாவன்மையும் ஒருங்கே வாய்ந்து தமிழ்மொழிக்கும் சிவநெறிக்கும் அரும்பெருந் தொண்டு செய்த ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்து தில்லையம்பதியிலே வாழ்ந்து எல்லையற்ற புகழெய்தினார்.

இலங்கை நாட்டிலே, யாழ்ப்பாணம், தமிழர் வாழும் தொன்னகரம். தமிழ்மணங் கமழுந் திருநகரம். தமிழர் பண்பாடு யாழ்ப்பாணம் என்ற சொல்லிலே விளங்குகின்றது. யாழ்ப்பாணர் என்பார் பழந்தமிழ் ாநட்டில் வாழ்ந்த ஒரு வகுப்பார். பண்ணோடு இசை பாட வல்லவர் பாணர் என்று முன்னாளில் அழைக்கப்பெற்றனர். அவருள் யாழிலே

வல்லவர்கள் யாழ்ப்பாணர் என்று பெயர் பெற்றார்கள். சிலப்பதிகாரத்தில் இவர் பெருமை குறிக்கப்படுகிறது. கண்ணகி வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில்,

**"குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்**
**வழுவின் றிசைத்து வழிதிறங் காட்டும்**
**அரும்பெறன் மரபின் பெரும்பாண் இருக்கையும்"**

என்று அவர் இருந்த வீதி புகழப்படுகின்றது. தேவாரம் எழுந்த காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் சிவனடியார் ஒருவர் யாழிசையில் வல்லவராயிருந்தார். நமது தாய்மொழியாகிய தமிழ் இவ்வுலகிலுள்ள செம்மை சான்ற தொன்மொழிகளுள் ஒன்று. மன்னரும் முனிவரும் அம்மொழியைப் பேணி வளர்த்தார்கள்.

தமிழ்ப்பனுவல்களைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் பாராட்டிப் படிக்கின்றார்கள். இத்தகைய ஆர்வம் தமிழ் வழங்கும் நல்லுலகெங்கும் பரவுதல் வேண்டும். தமிழிலக்கியம் தமிழினத்தார்க்குத் தனிப்பெருஞ் செல்வம். அச்செல்வத்தை நாமும் துய்த்துப் பிறர்க்கும் வழங்குதலே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

## 5. தமிழ் இசை விழா

### தலைமையுரை

இந்நாள் தமிழ் மக்களுக்கு ஒரு நன்னாள் ஆகும். சென்னை மாநகரில் பத்தாண்டுகளாகச் சிறந்த பணியாற்றி வரும் தமிழிசைச் சங்கம். இன்று 'அண்ணாமலை மன்றம்' என்னும் அழகிய கலைக்கோவிலில் அமர்ந்து காட்சியளிக்கின்றது.தமிழ்நாட்டில் எல்லையற்ற பெருமை வாய்ந்த தில்லையம்பதியின் அருகே பல்கலைக்கழகமொன்று நிறுவி, பாரத நாட்டுக்கலை வரலாற்றில் நிலையான ஓர் இடம்பெற்றுப் புகழுடம்பில் வாழும் ராஜாசர். அண்ணாமலை செட்டியார் இவர்களின் தமிழார்வமும் தலையாய வள்ளன்மையும் இக்கலை மாளிகையாக உருவெடுத்துக் காட்சி தருகின்றன.

தமிழ்நாடு இப்பொழுது புத்துயிர் பெற்றுவருகின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் பொதுமக்களின் ஆதரவைப் பெற்று முன்னேறுகின்றன. இசைத்தமிழ் என்பது முத்தமிழின் நடுநாயகமாக விளங்குவது. பழந்தமிழ் குடிகளாகிய பாணரைத் தமிழ்நாட்டு பெருநில மன்னரும் குறுநில மன்னரும் ஆதரித்தார்கள். வரிசை அறிந்து அவர்க்குப் பரிசளித்தார்கள். சோழநாட்டு மன்னனாகிய கரிகால் வளவனும் தொண்டைநாட்டில் ஆட்சிபுரிந்த இளந்திரையனும் குறுநில மன்னனாகிய நல்லியக் கோடனும் இசைவாணர் குலத்தை ஆதரித்த செய்தி பத்துப்பாட்டிலே கூறப்படுகின்றது.

சங்ககாலம் என்று சொல்லப்படுகின்ற பழங்கால நூல்களில் வரும் இசைப்பாடல்கள் இயற்கை நலங்களையும் இறைவன் பெருமையையும் அழகுற எடுத்துரைக்கின்றன. பரிபாடல் என்னும் பழைய இலக்கிய நூலில் வைகை ஆற்றைப்

புகழ்ந்து பாடிய பாடல்கள் பல உண்டு. தமிழ்நாட்டின் நல்லணியாகத் திகழும் காவேரி ஆற்றை இளங்கோவடிகள் இசைப்பாட்டால் புகழ்ந்து வாழ்த்தியுள்ளார். இவ்வாறு பாணர்களும் புலவர்களும் வளர்ந்துவந்த தமிழிசையைச் சைவசமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் பக்தி நெறியைப் பரப்புவதற்குப் பயன்படுத்தினார்கள்.

இயற்கையோடு இசைந்து இன்புறும் தன்மையினராகிய தமிழ்மக்களது வாழ்க்கையின் பல துறைகளிலும் கலந்து இசைப்பாட்டு வளமுற்றது. வேளாண்மை என்னும் பயிர்த்தொழில் இந்நாட்டிலே தொன்றுதொட்டு நிகழும் பழுதற்ற தொழிலாகும். அத்தொழிலை மேற்கொண்ட பணியாளர் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபடும்போதும் நல்ல பாட்டிசைத்தார்கள். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து நிலத்திலே பாய்ச்சும்பொழுது ஏற்றப்பாட்டு. நாற்று நடும்பொழுது நடுகைப்பாட்டு. அறுப்புக்களத்தில் ஏர்க்களப்பாட்டு. ஆக, பயிர்த்தொழிலாளரது பாட்டு பலவாகும். இன்னும் குறிஞ்சி நிலத்திலே குறத்திப்பாட்டு ஒலிக்கும். மருத நிலத்திலே பள்ளுப்பாட்டு முழங்கும். பெண்கள் பந்து விளையாடும் பொழுது பாட்டு. அம்மானை ஆடும்பொழுது பாட்டு. தாலாட்டும் பொழுது பாட்டு. சுருங்கச் சொல்லின் தமிழ்நாட்டில் பாட்டில்லாத பணியே இல்லை என்பது மிகையாகாது.

இவ்வாறு பல துறைகளிலும் புகுந்து தமிழ் மக்களின் வாழ்க்கையை இன்புறுத்திய இசைத்தமிழ், இக்காலத்திலே நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கும், அரசியல் அறிவைப் பரப்புவதற்கும் பயன்படுகின்றது. இந்தவகையில் வழிகாட்டியவர் ‘பாட்டுக்கொரு புலவன்’ என்று பாராட்டப்படுகின்ற பாரதியாரே ஆவார். இந்நாட்டில் வழங்கிய பழைய இசைப்பாட்டு வகை பாரதியார். இந்நாடு சுதந்திரம் அடைந்த பொழுது மக்கள் எல்லோரும் பாடிய பாட்டு,“ஆடுவோமே பள்ளுப் பாடுவோமோ, ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே” என்பது. இந்தப் பாட்டு பழங்காலப் பள்ளுப்பாட்டைத் தழுவி எழுந்தது என்பது சொல்லாமலே விளங்கும்.

பழமையான பண்களின் வரலாற்றை ஆராய்வதும் புத்தம் புதிய இசைப்பாடல்களை இயற்றுவதும் இத்தமிழிசைச் சங்கத்தின் அடிப்படையான நோக்கமாகும். இத்தகைய பெரும்பணியை மேற்கொண்ட இச்சங்கம் பல்லாண்டு வாழ்க என மனமார வாழ்த்துகின்றேன்.

## II. இயற்கை இன்பம்

### 6. பொங்கலோ பொங்கல்

தமிழர் அனைவருக்கும் பொங்கல் நாள் ஒரு புனிதநாள். அந்த நாளில், வீடுதோறும் கதையின் விளக்கம். வீதிதோறும் மங்கல முழக்கம்.‘பொங்கலோ பொங்கல்’ என்பதே எங்கும் பேச்சு. பொங்கலுக்குத் தலைநாள் போகி பண்டிகை. அதைக் கொண்டாடும் கருத்தென்ன? போகி என்பவன் இந்திரன். அவன் மேகங்களை

இயக்கும் இறைவன். தமிழ்நாட்டார் பழங்காலத்தில் இந்திரனை விளைநிலங்களின் இறைவனாக வைத்து வணங்கினார்கள. சோழவள நாட்டில் இந்திரவிழா இருபத்தெட்டு நாள் கோலாகலமாக நடைபெற்றது.

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி**

**வசியும் வளனும் கரக்க’’**

வேண்டும் என்று அவ்வானவரைத் தமிழ்நாட்டார் வழிபட்டார்கள்.

போகி பண்டிகையை அடுத்து வருவது பொங்கற் திருநாள். புதுப்பானைகளில் பொங்களல் நடைபெறும் பால்பொங்கும்பொழுது,‘‘பொங்கலோ பொங்கல்’’ என்னும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும்.

பொங்கலுக்கு அடுத்த நாள் நிகழ்வது மாட்டுப்பொங்கல். முற்காலத்தில் மாடே செல்வமாக கருதப்பட்டது. மாட்டுக்கு ஒப்பாகச் சொல்லத்தக்க மற்றொன்று இல்லை. விளைநிலத்தில் ஏர் இழுப்பது மாடு. அறுவடை காலத்தில் சூடடிப்பது மாடு. ஆகவே, மாடு இல்லையென்றால் பயிர்த்தொழில் இல்லை. இன்னும், பாலும் நெய்யும் தந்து மாந்தர் உடலைப் பாதுகாப்பதும் மாடல்லவா?

‘‘அறந்தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்’’ பசுக்களை ஆதரித்தல் வேண்டும் என்பது தமிழர் கொள்கை. கழனியிற் பணி செய்யும் காளை மாடுகளும், காலையும் மாலையும் இனிய பாலளிக்கும் கறவை மாடுகளும் நோயின்றிச் செத்து வளர்வதற்காக நிகழ்வது மாட்டுப்பொங்கல். இனிவரும் பொங்கல் பெரும் பொங்கலாக வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள வெற்றிடம் எல்லாம் விளைநிலமாக மாற வேண்டும். உண்ண உணவும் உடுக்க உடையும் எல்லார்க்கும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல ஆண்டவனை இந்நன்னாளில் வேண்டுவோமாக!

## 7. சித்திரை பிறந்தது

தமிழ்நாட்டில் கூனியாகிய பங்குனி மாதம் கழிந்தால் எங்கும் மங்கல ஒலி. ‘‘கூனி குடி போகாதே: ஆனி அடி கோலாதே’’ என்பது பழமொழி. இப்படிக் கூனியும் ஆனியும் கூடாவென்று கருதும் தமிழர், சித்திரையைச் சிறந்த ஆர்வத்தோடு வரவேற்கின்றார்கள். சித்திரை மாதத்தில் இளவேனிற்காலம் தொடங்குகின்றது. வசந்தம் என்னும் இளவேனில் இன்ப சுகம் தரும் காலம். அப்போது,பசுமையான செழுஞ்சோலை பார்க்குமிடமெங்கும் கண்ணுக்கு விருந்தளிக்கும். மாஞ்சோலை மெல்லிய தளிராடை புனைந்து இலங்கும். வேம்பின் கொம்பிலே பூத்த சிறு வெண்மலர்கள் புதுமணம் கமழும். தென்னைமரங்கள் இனிமையான இளநீரைத் தரு் பனைமரங்கள் சுவையான பதநீரைக் கொடுக்கும்.

புதுமனை புரிய விரும்புவோர் சித்திரையின் வரவை மெத்த ஆசையுடன் நோக்குவர். திருமணத்திற்குரிய சூழ்நிலை அப்போது இயல்பாக அமைந்திருக்கும். பகலவன் ஒளி தருவன். வீடுதோறும் நெல்லும் பிறவும் நிறைந்திருக்கும். தென்றல்

என்னும் இளங்காற்று வீசிக்கொண்டிருக்கும். இனிய திருமணம் இன்பமாக நடைபெறும். இயற்கை அன்னை இனிய கோலத்தில் இலங்கும் காலம் இளவேனிற் காலம். மாந்தர் ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய இன்பம் பொங்குங்காலம் இளவேனிற்காலம். இன்பநெறி காட்டும் இளவேனிற் பருவத்தின் முதல்நாளைத் தமிழ் ஆண்டின் தலைநாளாகக் கொண்டது மிகப்பொருத்தமுடையதன்றோ?

## 8. தமிழ்த்தென்றல்

தென்னாட்டிலே தென்றல் என்றொரு பொருள் உண்டு. தனியே அதற்கொரு சுகம் உண்டு. வசந்த காலத்தில் தெற்கேயிருந்து அசைந்துவரும் தென்றலின் சுகத்தை நன்றாக அறிந்தவர் தமிழர். வடக்கேயிருந்து வரும் குளிர்காற்றை வாடை என்றார்கள். தெற்கேயிருந்து வரும் இளங்காற்றைத் தென்றல் என்றார்கள்.

‘திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி’க்குத் திருஞானசம்பந்தர் எழுந்தருளிய பொழுது, பொதிகைத் தென்றல் அவரை வரவேற்று இன்ப சுகம் தந்தது. தண்ணுறுஞ் சோலைகளிலும், தாழம் பூக்களிலும் நுழைந்து, நறுமணம் கவர்ந்து வந்த பொதிகைத் தென்றலைத் தேவாரப் பாட்டில் இசைத்துப் பாராட்டினார் அவ்இளங்கவிஞர்.

இளவேனிற்காலம்! சித்திரை மாதம்! முழுமதி எங்கும் ஒளி வீசுகின்றது! தண்ணீர் நிறைந்த ஒரு தாமரைக் குளத்திலே அவ்வொளி தவழ்கின்றது. இவ்வியற்கைக் காட்சியைக் கண்டு இன்புற்றிருக்கின்றான் ஒருவன். அப்போது தென்றல் அசைந்து வருகின்றது. அம்மெல்லிய காற்றிலே நல்ல வீணையின் ஒலி மிதந்து வந்து செவிக்கு விருந்தளிக்கின்றது. இதனைக் கவிதையிலே காட்டுகிறார் கவிஞர்.

**“மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே”**

என்பது திருநாவுக்கரசர் இசைத்த பாட்டு. ஈசன் அளிக்கும் இன்ப சுகம். வசந்த காலத்தில் இசைந்த இயற்கை இன்பம் போன்றது என்று அருளினார் அவ்வருட் கவிஞர்.

தென்றல் வீசும் காலத்தில்,‘பிரிந்தவர் பொருந்துவர், பிணக்கமுற்றவர் இணக்கமுறுவர். ஊடி நின்றவர்கூடி மகிழ்வர் என்பது தமிழர் கொள்கை.

**“ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்ஆணை**
**கூடுமின் என்று குயில் சாற்றும்”**

என்பதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. எனவே, தமிழ்த்தென்றல் தமிழர் இனத்திலே, பிரிந்தவரைப் பொருந்தும். வேறுபட்டவரை ஒன்றுபடுத்தும். தமிழ்க்குலத்தை அரிக்கின்ற வேற்றுமைகளை ஒழிக்கும். தமிழருக்கு இன்பநெறி காட்டும் என்று நம்புகின்றோம்.

## 9. திருக்குற்றாலம்

தென்றல் அசைந்து வரு தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம் பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கிவளரும். குரவமும் முல்லையும் நறுமணங்கமழும். கோல மாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்நாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச்சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் சிறு நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக்குலாவும். அவ்வருவியில் நீராடி இன்புற்ற மேலைநாட்டுப் பெரியார் ஒருவர்,'இந்நானிலத்தில் உள்ள நன்னீர் அருவிகளுள் தலைசிறந்தது குற்றால அருவியே என்று கூறுதல் மிகையாகா!' என்று புகழ்ந்துரைத்தார்.

திருக்குற்றாலத்தின் அருகே சிறந்த ஊர்கள் சில உண்டு. வடநாட்டுக் காசிக்கு நிகரான தென்காசியென்னும் ஊர் அதற்கு மூன்று மைல் தூரத்தில் உள்ளது பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தென்பாண்டி நாட்டில் ஆட்சிபுரிந்த பராக்கிரம பாண்டியனால் தென்காசிக் கோவில் கட்டப்பட்டதென்று சாசனம் தெரிவிக்கின்றது. அரசாளும் உரிமையும் அருந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே வாய்ந்த அதிவீரராமபாண்டியர் தென்காசியில் இருந்து நைடதம் முதலிய நயஞ்சான்ற தமிழ் நூல்களை இயற்றினார் என்பர்.

மேலகரம் என்ற ஊரில் சைவ வேளாள மரபிலே பிறந்து தெள்ளிய கவிதைபாடும் திறமை பெற்றார் திரிகூட ராசப்பர். இவர் இயற்றிய 'குற்றாலக் குறவஞ்சி' நாடகத்தை நற்றமிழுலகம் புகழ்ந்து பாராட்டுகின்றது. திரிகூடராசப்பர் இயற்றிய குறவஞ்சி நாடகம் மதுரை மாநகரில் அரசு வீற்றிருந்த முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர் கருத்தைக் கவர்ந்தது. அதன் அருமை பெருமைகளைக் கவர்ந்தவர் வாயிலாகக் கேட்டு இன்புற்ற நாயக்கர் திரிகூடராசப்பரை ஆதரிக்க விரும்பினார். குற்றாலத்தில் இன்றும் 'குறவஞ்சி மேடு' என்று வழங்குகின்ற நன்செய் நிலத்தை அவருக்கு நன்கொடையாக அளித்தார்.

திருக்குற்றாலத்தின் அருகே அமைந்த ஊர்கள் யாவும் குறிஞ்சி வளம் வாய்ந்தனவாகும். அவற்றுள் ஒன்று பைம்பொழில் என்னும் அழகிய பெயர் பெற்றுள்ளது. அவ்வூர் பெயரைச் சரியாகச் சொல்ல மாட்டாத பாமர மக்கள் 'பம்புளி' என்று சிதைத்துவிட்டார்கள். அச்சிற்றூரின் எல்லையில் திருமலையென்னும் சிறந்த குன்றம் அமைந்திருக்கின்றது. முருகப்பெருமான் எழுந்தருளிய குன்றமாதலால் அது. திருமலை என்னும் பெயர்பெற்றது.

இன்னும், குற்றாலத்தின் ஒருசார் காசிமேசபுரமும், இலஞ்சியும் அமைந்துள்ளன. 'பொன்இலஞ்சி' யென்றும்,'மீறும் இலஞ்சி' யென்றும் குறவஞ்சிக் கவிராயரால்

சிறப்பிக்கப்பட்ட சிற்றூர் செல்வம் மலிந்த சீருராய்த் தென்காசியின் அருகே திகழ்கின்றது.

## 10. பழகு தமிழ்

தமிழகத்தில் பல நாடுகள் உண்டு. பல குலங்கள் உண்டு. ஒரு நாட்டுத் தமிழுக்கும் இன்னொரு நாட்டுத் தமிழுக்கும் வேற்றுமையே இல்லை என்று கூற முடியாது. ஒருகுலத்தார் பேசுந்தமிழ் மற்றொரு குலத்தார் பேசுந்தமிழை எல்லா வகையிலும் ஒத்திருக்கும் என்று சொல்லமுடியாது.

பந்தல் என்ற சொல்லின் ஆட்சியைப் பார்ப்போம். திருமணத்திற்குப் பந்தல் போடும் வழக்கம் இந்நாட்டில் சாலப்பழமை வாய்ந்தது. காவிரிப்பூம்பட்டினத்திலே செல்வக்குடியிற் பிறந்த கண்ணகிக்கும் கோவலனுக்கும் முத்துப்பந்தலிலே திருமணம் நிகழ்ந்தது. ''மாலை தாழ் சென்னிவயிரமணித் தூணகத்து நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்'' என்று அப்பந்தலைச் சிலம்பு பாடிற்று. கோடையிலே வழிநடந்து செல்வார்க்கு நீரும் நிழலும் தரும் பந்தலைத் தண்ணீர்ப்பந்தல் என்பர். இத்தகைய மேன்மையான சொல் தனவணிகர் நாடு என்னும் செட்டிநாட்டிலே அமங்கலச் சொல்லாகக் கருதப்படுகின்றது. பந்தல் என்பது அந்நாட்டிலே மணப்பந்தலைக் குறிப்பதில்லை. பிணப்பந்தலையே குறிக்கும். இழவு வீட்டில் போடுவது பந்தல். கல்யாண வீட்டில் போடுவது காவணம் அல்லது கொட்டகை. இலக்கியத்தில் வழங்கும் காவணம் என்ற அருஞ்சொல் செட்டிநாட்டிலே பழகு தமிழாய்ப் பயில்கின்றது.

அங்காடி என்பது முன்னொரு காலத்தில் தமிழ்நாடெங்கும் வழங்கிய சொல். இக்காலத்தில் 'பசார்' என்று சொல்லப்படும் இடமே முற்காலத்தில் அங்காடி எனப்பட்டது. பெரிய நகரங்களில் அந்தியும் பகலும் அங்காடி நடைபெற்றது. அந்தியில் நடைபெற்ற அங்காடியை அல்லங்காடி என்றும், பகலில் நடைபெற்ற அங்காடியை நாளங்காடி என்றும் அழைத்தனர். பட்டினத்தடிகள் அங்காடி என்ற சொல்லை எடுத்தாள்கின்றார். ''அங்காடி நாய்போல், அலைந்து திரிந்தேனே'' எனப்து அவர் பாட்டு. கன்னடத்திலும் தெலுங்கிலும் இன்றும் அங்காடி என்ற சொல் வழங்குகின்றது. மலையாளத்திலும் அங்காடி உண்டு. தமிழ்மொழியில் அங்காடியை மீண்டும் ஆட்சியில் அழைத்தால் எத்துணை அழகாக இருக்கும். செந்தமிழில் ஆர்வமுடைய செட்டியார் ஒருவர் தமது காசுக்கடைக்கு 'அணிகல அங்காடி' என்று பெயரிட்டுள்ளார். சென்னையிலுள்ள மூர் மார்க்கட்டை மூரங்காடி என்று வழங்கும் நாள் எந்நாளோ?

மலையிலே வாழ்கின்ற ஒரு குலத்தாரை மலைப்பளிங்கர் என்பர். வேடர் வகுப்பைச் சேர்ந்தவர் அல்லர். மலைநாட்டுப் பழங்குடிகள் பளிங்கன் என்ற சொல்லை ஆராய்ந்தால் அஃது ஒரு பழமையான தமிழ்ச்சொல்லின் சிதைவு என்பது புலனாகும். தமிழ் இலக்கியத்தில் மலையில் வாழும் வகுப்பார்க்குப் பல பெயர்கள் உண்டு.

அவற்றுள் ஒன்று புளிஞர் என்பது. புளிஞர் என்ற சொல்லைக் கம்பர் எடுத்தாள்கின்றார். மறைந்து நின்று அம்பெய்த இராமனை நோக்கி,

**“வெவ்விய புளிஞர் என்ன விலங்கியே மறைந்து**

**வில்லால் எவ்விய தென்னை”**

என்று வாலி கேட்டான் என்பது கம்பர் பாட்டு. புளிஞர் என்ற சொல்லே பளிங்கன் என்று மருவி வழங்குகின்றது.

## III. காவிய இன்பம்

### 11. காதலும் கற்பும்

காதல் என்பது காதுக்கினிய சொல். கருத்துக்கினிய பொருள். காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு. காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை. ‘‘காதல், காதல், காதல் இன்றேல் சாதல், சாதல், சாதல்’’ என்று பாடினார் பாரதியார். ஆயினும், அச்சொல்லை எல்லோரும் கூசாமல் பேசுவதில்லை. தேவாரத்திலே அடியாரது காதல் பேசப்படுகின்றது.

**“காதலாலே கருதும் தொண்டர்**

**காரணத்தர் ஆகி”**

நின்ற சிவபெருமானைச் சுந்தரர் பாடுகின்றார்.

பெற்றோர்க்குப் பிள்ளையிடம் உள்ள அன்பு காதல்தான். வாலியின் மைந்தனாகிய அங்கதனை ‘வாலி காதலன்’ என்று குறிக்கின்றார் கம்பர். இவ்வாறே நண்பனையும் காதலன் என்று கவியரசர் கூறுவர். கங்கைக் கரையிலே இராமனுடைய நண்பனாயினான் குகன்

‘‘சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்காதலனாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன் யாதினும் இனிய நண்ப இருந்தி ஈண்டு எம்மொடு என்றான்’’ எனவே பக்தியும் காதல். பிள்ளைப் பாசமும் காதல். நேசமும் காதல். சுருங்கச்சொல்லின் தலைசிறந்த அன்பே காதல் இவ்வளவு விரிந்த பொருளில் வழங்கி காதல் என்ற சொல், இப்பொழுது ஆண் பெண் என்னும் இருபாலரிடையே உள்ள அன்பையே பெரும்பாலும் குறிக்கின்றது.ஆதியில் காதல் மணமே தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிற்று. ‘காதல் இல்லாத வாழ்க்கை உயிரில்லாத உடல் போன்றது’ என்பது தமிழர் கொள்கை. காதலுற்ற கன்னியர், தம் கருத்து நிறைவேறும் வண்ணம் காமனை வேண்டிக்கொள்ளும் வழக்கமும் முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது.காமம் என்ற சொல்லும், காமன் என்ற பெயரும் தமிழ் நூல்களிலே எடுத்தாளப்பட்டாலும் இன்று அவை இழிந்த பதங்களாகவே எண்ணப்படுகின்றன.

திருவள்ளுவர் இன்பப்பகுதிக்குக் காமத்துப்பால் எனப் பெயரிட்டார் என்றால், அவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்பது

தெரிகின்றதல்லவா? ஆயினும், கால கதியில் காமம் என்பது துன்மார்க்கத்திற் பெறும் இன்பத்தைக் குறிப்பதாயிற்று, இனி, காதலுக்கும் கற்புக்கும் உள்ள தொடர்பைச் சிறிது பார்ப்போம். காதல் என்பது உணர்ச்சி. கற்பு என்பது ஒழுக்கம். உணர்ச்சியால் ஒன்றுபட்ட நம்பியும் நங்கையும் (தலைமகனும் தலைமகளும்) ஒருவரையொருவர் தமக்க உரியவராகக் கொண்ட நிலையிலே தோன்றும் ஒழுக்கமே கற்பு என்பர்.

காதலனையன்றி மற்றோர் ஆடவனை மனத்திலும் கருத ஒருப்படாத உறுதியே கற்பு எனப்படும். இதையே திருவள்ளுவர் வியந்து பாடினார்.

**“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மைஉண் டாகப்பெறின்”**

என்பது அவர் திருவாக்கு.

கற்புடைய மாதரிடம் மென்மையும் உண்டு. மனத்திண்மையும் உண்டு. பொறுக்கும் திறமும் உண்டு. மாறுபட்டோரை ஒறுக்கும் திறமும் உண்டு. சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய கண்ணகியிடம்,இவ்விரு தன்மைகளையும் பார்க்கின்றோம். கொண்ட கணவன் அவளுக்குக் கொடுமை செய்தான். செல்வத்தையெல்லாம் செலவழித்தான். அல்லும் பகலும் அயலார் அறியாமல் கண்ணீர் வடித்தாள் கண்ணகி. அடக்கமும் பொறுமையும் கற்பும் கண்ணீரும் கண்ணகியின் வடிவம்.இத்தகைய மென்மையும் பொறுமையும் வாய்ந்த கண்ணகி, மதுரை மாநகரில் தன் கணவனை இழந்தபோது வன்மையின் வடிவம் கொண்டாள். கற்பெனும் திண்மை அவ்வடிவத்திலே களிநடம் புரிந்தது. தவறு செய்த அரசனைக் கற்பின் திண்மையால் ஒறுத்த கண்ணகி, வீரபத்தினியாகத் தமிழ்நாட்டிலே போற்றப்பட்டாள்.

## 12. கண்ணகிக் கூத்து

சிலப்பதிகாரம் என்னும் நாடகக் காவியம் தமிழ்நாட்டு மூவேந்தர்க்கும் உரியதாகும். கதைத் தலைவியாகிய கண்ணகி சோழ நாட்டிலே பிறந்தாள். பாண்டி நாட்டிலே தன் கற்பின் பெருமையை நிறுவினாள். பின்பு சேரநாடு போந்து வானகம் எய்தினாள். ஆகவே, நூலாசிரியர், சேர சோழ பாண்டியர்கள் ஆண்டு வந்த முந்நாட்டின் பெருமையையும் முறையாக எடுத்துரைக்கின்றனார். முந்நாட்டின் பெருமையையம் எழுதப்போந்த ஆசிரியர் அவற்றின் அரசியல் முறைகளையும், சமய நெறிகளையும் பிறவற்றையும் குறிப்பாகக் கூறியருளினார்.

மூவேந்தர்க்கும் உரிய நூலாக விளங்கும் சிலப்பதிகாரம் முத்தமிழ் நயங்களும் அமைந்த அரிய நூலாகவும் திகழ்கின்றது. உயிர்க்கு நலம் பயக்கும் உயரிய உண்மைகளைக் கொண்ட கதைகளே முற்காலத்தில் நாடக மேடைகளில் நடிக்கப்பட்டமையால், மக்கள், பெரும்பாலும் நன்மையில் நாட்டமும், தீமையில் அச்சமும் உடையராய் வாழ்ந்தார்கள்.

தமிழநாட்டு நாடக மேடையில் நடைபெறும் கோவலன் என்னும் நாடகம் பழந்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரத்திலுள்ள சிறந்த கதையைத் தழுவி எழுந்ததாகும். ஆயினும் நாடகக் கண்ணகிக்கும் காவியக்கண்ணகிக்கும் உள்ள வேற்றுமை புல்லுக்கும் நெல்லுக்குமுள்ள வேற்றுமையைப் போன்றது. கோவலனைக் 'கோவலன்' என்றும், கண்ணகியைக் 'கா்னகி' என்றும் சிதைத்து வழங்கும் சிறுமை ஒருபுறமிருக்க, கற்பின் கொழுந்தாகிய கண்ணகி, நாடக மேடையில் ஆவேசமுற்று வெறியாட்டயா்வதும், தவறிழைத்த பாண்டியன் மாா்பைப் பிளந்து அவன் குடரை மாலையாக அணிந்து குருதியிலே திளைத்துக் கூத்தாடுவதும் அருவருக்கத்தக்க காட்சியன்றோ? பெண்மைக்குரிய நாணம் மென்மையும் அமைந்த நல்லியற் கண்ணகியை அலகைபோல் அலற வைத்தல் அழகாகுமோ? களியாட்டங்கண்டு கண்ணகியின் மென்மையை அழித்தல் முறையாகுமோ? அன்றியும், நீதிவழுவா நெறிமுறையில் நின்ற நெடுஞ்செழியனது உயிரை வலிந்து பிழிதலும் வேண்டுமோ? நீதி தவறியது என்று அறிந்த பின்னா் அவ்வரசன் உயிா்வாழ இசைவானோ?

நாடகக் கண்ணகியின் தன்மை இவ்வாறாக, காவியக்கண்ணகியின் செம்மையையும் மேன்மையையும் சிறிது காண்போம். மதுரை மாநகரில் கோவலன் கொலையுண்டிறந்தான் என்றறிந்த கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்து, நீதியை நிலைநிறுத்துமாறு அவன் மாளிகையினுள்ளே சென்றாள். காவி மலரனைய கண்கள் கண்ணீா் சொரிய, கருங்கூந்தல் விரிந்துகிடக்க, சிலம்பைக் கையிலேந்திக் கொற்றவன் முன்னே போந்த கண்ணகியின் கோலத்தை,

**"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்"**

என்று சிலப்பதிகாரம் உருக்கமாக உரைக்கின்றது.

கோவலன் குற்றமற்றவனென்றும், அவனைக் குற்றவாளி என்று கொன்ற கொற்றவன் தவறிழைத்தான் என்றும் ஐயந்திரிபற விளக்க வந்த கண்ணகி காவலனை நோக்கி,"அரசே! என் கணவன் கள்வனல்லன். அவனிடம் இருந்த சிலம்பு அரண்மனை சிலம்பன்று. அதன் இணைச்சிலம்பு இதோ, என் கையில் உள்ளது! இதனுள்ளே அமைந்த பரல் மாணிக்கம்" என்று திறம்பட உரைத்தாள். அப்பொழுது, மன்னன் மனம் பதைத்து, தன் காவலாளா் கோவலனிடமிருந்து கொணா்ந்த சிலம்பினை எடுத்துவந்து, கண்ணகியின் முன்னே வைத்தான். அச்சில்லரிச் சிலம்பைக் கண்ணகி தன் செங்கையால் எடுத்து நோக்கிக் காவலன் கண்ணெதிரே உடைத்தாள். சிலம்பின் உள்ளே இருந்த மாணிக்கம் விரைந்தெழுந்து அரியணை மீதமா்ந்திருந்த அரசனிடம் தானே நேராகச் சான்று பகா்வதுபோல் அவன் முகத்தில் தெறித்து விழுந்த மாணிக்கத்தைக் கண்டான் மன்னன்.

அந்நிலையில் அவன் வெண்குடை தாழ்ந்தது. செங்கோல் தளா்ந்தது. 'பொற்செல்வன் சொற்கேட்டுப் பிழைசெய்த யானோ அரசன்? யானே கள்வன்:

இதுகாறும் என் வழிமுறைகளில் இத்தகைய பிழை செய்தார் எவருமிலர். இன்றே என்னுயிர் முடிவதாக' என்று அவன் மயங்கி மண்மீது விழுந்தான். விழுந்த மன்னன் எழுந்தானல்லன்.

இங்ஙனம் அறநெறி பிழைத்த அரசனுக்கு அறமே கூற்றாக அமைந்தது. 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாம்' என்பது தமிழ்நாட்டு அரசியற் கொள்கையாகும். அவ்வுண்மைக்கு முற்றும் மாறாக, அரசியல்பிழைத்த பாண்டியன் அறத்தால் ஆவி துறவாது. கண்ணகியின் மறத்தால் ஆவி துறப்பதை நாடக மேடையிலே காண்கின்றோம்! கணவனான கோவலனையன்றி ஆடவர் எவரையும் சிந்தையாலும் தொடாச் செம்மை வாய்ந்த கண்ணகி, பாண்டியன் மெய் தீண்டி, அவன் மார்பைப் பிளந்து, உயிரைப் பருகப் பார்க்கின்றறோம்! இவ்வாறு, தமிழ்நாட்டு மன்னர் அறமும், மாதர் கற்பும் நிலைகுலையுமாறு நிகழ்த்தப்பெறும் கூத்தைக் கண்டு கல்லார் நெஞ்சம் களிக்குமெனினும் பழந்தமிழ் நாட்டின் பெருமை பாழ்படுவதைக் கண்டு பயனறிந்தோர் வருந்துவர்.

## 13. சிலம்பின் காலம்

தமிழ்நாட்டார் போற்றும் ஐம்பெருங்காப்பியங்களுள் தலைசிறந்தது சிலப்பதிகாரம். பழந்தமிழ் நாட்டின் சீர்மைக்கும் செம்மைக்கும் சான்றாக நிற்பது அப்பெருங்காவியம். சோழநாட்டின் செழுமையும் பாண்டிய அரசாட்சியின் சிறப்பும், சேரநாட்டரசனது வீரமும் அக்காவியத்திலே விளங்கக் காணலாம். அக்காலத்தில் காவிரிபூம்பட்டினம் சோழநாட்டின் சிறந்த துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. அழகுவாய்ந்த அப்பட்டினத்தைக் கவிகள் பூம்புகார் நகரம் என்றும் அழைத்தார்கள். "பூம்புகார் போற்றதும் பூம்புகார் போற்றுதும்" என்று பட்டினத்தைப் பாடினார் சிலப்பதிகார ஆசிரியர்.

சிவன்கோயில், முருகன் கோயில், பெருமாள் கோயில், வாசவன் கோயில் இன்னும் பல கோயில்கள் அங்கு நின்று அணி செய்தன. 'இந்திரன் திருநாள்' கோலாகலமாக இருபத்தெட்டு நாள் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் காவிரிப்பூம்பட்டினம் பொருள் வளமும் தெய்வ நலமும் பெற்று விளங்கிய காலமே சிலப்பதிகாரக்காலம். அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டவன் ஒரு சிறந்த மன்னன். செங்குட்டுவன் என்பது அவர் பெயர். கற்புத்தெய்வமாகிய கண்ணகி தன் நாட்டில் வந்து விண்ணுலகம் அடைந்தாள் என்று அறிந்த செங்குட்டுவன், அவளுக்குத் தன் தலைநகரத்தில் ஒரு கோயில் கட்டினான். இமயமலையிலிருந்து சிலை எடுத்துவந்து, கண்ணகியின் திருவுருவம் செய்து, அக்கோயிலில் நிறுவினான். அத்திருவிழாவைக் காண அயல்நாட்டு அரசர் சிலரை அழைத்திருந்தான்.

**"அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்**
**பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்**

**குடகக் கொங்கரும் மாளுவ வேந்தனும்**

**கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்''**

அங்கு வந்திருந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இக்காட்சிகளையெல்லாம் கண்களிப்பக் கண்டார் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோ. அவர் செந்தமிழ்ச்செல்வர். இளவரசுக்குரிய பதவியை உதறியெறிந்து, முனிவராயிருந்து தவம் புரிந்தவர். சிலப்பதிகாரம் பாடியவர் அவரே.

கண்ணகியின் திருவிழாவிற்குச் சேரன் செங்குட்டுவன் அனுப்பிய அழைப்புக்கிணங்கி வஞ்சி மாநகரில் வந்திருந்து, பத்தினிக்கடவுளை வணங்கி அரசருள் ஒருவன்,'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' என்பதை முன்னமே கண்டோம். இலங்கைரசனாகிய கயவாகுவின் காலத்தைத் தெரிந்து கொண்டால் செங்குட்டுவன் காலமும் விளங்கிவிடுமன்றோ? இந்த வகையில் சரித்திர ஆசிரியர்களாகிய கனகசபைப் பிள்ளை முதலிய அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். இலங்கையரசர் வரலாற்றைக் கூறும்,'மகாவம்சம்' என்ற நூலில் கஜபாகு என்னும் பெயருடைய மன்னர் இருவர் குறிக்கப்படுகின்றனர். முதல் கஜபாகு கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்டவன். அவன் காலத்துக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு மற்றொரு கஜபாகு அரசு புரிந்தான். இவ்விரண்டு அரசர்களில் முதல் கஜபாகுவே செங்குட்டுவன் காலத்தவன் ஆதல் வேண்டும் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கொள்கை. எனவே, செங்குட்டுவன் அரசாண்ட காலம் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது தெளிவாகின்றது. அதுவே சிலப்பதிகாரத்தின் காலமும் ஆகும்.

இன்னும், இக்கொள்கைக்கு ஆதாரமான செய்திகளிற் சிலவற்றைப் பார்ப்போம். கரிகாற்சோழன் என்னும் திருமாவளவன் காலத்திற்குப் பின்பு புகார்ச்சோழனுக்கும் உறையூர்ச்சோழனுக்கும் போர் மூண்டது. அப்போரின் தொல்லை ஒருவாறு தீர்ந்த பின்பு, சோழநாட்டிற்கு ஒரு பெருந்தீங்கு நேர்ந்தது. குணகடல் கரை புரண்டு எழுந்து காவிரிபூம்பட்டினத்தை அழித்தது. இக்கொடுமை நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழமன்னன் காலத்தில் நிகழ்ந்ததென்று மணிமேகலை கூறும். அப்பொழுது அந்நகரில் இருந்த மாடங்கள், கோயில்கள், கோட்டங்கள் எல்லாம் அழிந்தொழிந்தன. மாடமாளிகையை இழந்த மன்னன் அந்நகரினின்றும் வெளியேறிய செய்தியை இரக்கத்தோடு கூறுகின்றார் மணிமேகலையாசிரியர்.

**"விரிதிரை வந்து வியன்கார் விழுங்க**

**ஒருதனி போயினன் உலக மன்னவன்"**

என்னும் மணிமேகலை அடிகளில் சோகம் நிறைந்திருக்கிறது. 'துன்பம் வந்துற்றபோது துணையாவார் யாருமின்றித் தன்னந் தனியாய் அந்நகரினின்றும் வெளிப்போந்தான் மன்னர் மன்னன்' என்பது அவ்வடிகளின் கருத்து. இவ்வாறு அழிந்ததாக

மணிமேகலையிற் சொல்லப்படுகின்ற காவிரிப்பூம்பட்டினம் ஏழாம் நூற்றாண்டில் எழுந்த தேவாரப்பாசுரத்தில் ஒரு சிற்றூராகக் குறிக்கப்படுகின்றது.

பழம்பெருமையெல்லாம் இழந்துநின்ற காவிரிப்பூம்பட்டினத்தில் அன்புகொண்டு ஒரு பல்லவன் அங்குச் சிவாலயம் கட்டினான். அதற்குப் பல்லவனீச்சரம் என்று பெயரிட்டான். காவிரிப்பூம்பட்டினம் சோழர் ஆட்சியிற் சிறப்புற்று விளங்கிய காலமே சிலப்பதிகாரக் காலம். அது பதங்குலைந்து பல்லவர் ஆட்சியில் அமைந்த காலம். தேவாரக் காலம் என்பது தெளிவாகின்றது.

தொன்றுதொட்டுத் தமிழகத்தை ஆண்டுவந்த சேர சோழ பாண்டியர், பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்றிருந்த காலத்திலேதான் சிலப்பதிகாரம் பிறந்தது. தமிழ்நாட்டாரின் வீரப்புகழ் வடநாட்டிலும் பரவியிருந்த காலம். தமிழ்நாடு வாணிகத்தால் வளம்பெற்று ஓங்கி நின்ற காலம். தமிழ்ப்புலவர் பல்லாயிரவர் தமிழ்த்தாய்க்குப் பல வகையான கவிதைக் கலன்களை அணிந்து கோலம் செய்துகொண்டிருந்த காலம். அக்காலம் சிலப்பதிகாரத்தின் காலம்.

## 14. அமுத சுரபி

இளவேனிற் காலம். இளங்காற்று, இனிமையாக வீசுகின்றது. நீலவானத்தில் நிறைமதி எழுந்துவருகின்றது. இன்பமயமான அவ்வேளையில் மணிபல்லவம் என்ற தீவகத்தில் காட்சி தருகின்றான் ஒரு மங்கை. மணிமேகலை என்னும் பெயருடைய அந்நல்லான் வெண்மணற்குன்றுகளையும், விரிபூஞ்சோலைகளையும் கண்டு வியந்து உலாவுகின்றாள். நன்மணம் கமழும் பூஞ்சோலையின் அருகே,

**“மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய**
**கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி”**

அவள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது. அத்திருக்குளத்தின் தெள்ளிய அலைகளில் வெண்ணிலாவின் ஒளிகலந்து விளையாடும் காட்சியையும், கண்போல் மலர்ந்து கருங்குவளையின் செவ்வியையும் கண்டு மனங்குளிர்ந்து நிற்கின்றாள் மணிமேகலை.

அப்போது, அப்பூம்பொய்கையின் அலைகளிலே மிதந்து, கரையை நோக்கி வருகின்றது ஒரு திருவோடு. தன்னை நோக்கித் தவழ்ந்து வந்த திருவோட்டைத் தலைவணங்கி, மலர்க்கரத்தால் எடுக்கின்றாள் மணிமேகலை. அத்திருவோடுதான் அமுதசுரபி. எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு கொடுக்கும் உயரிய பாத்தரம் அதுவே, அறம் வளர்க்கும் அருங்கலம். பசிப்பிணியை வேரறுக்கும் படைக்கலம்.

“உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே” என்னும் உண்மையை உள்ளத்திற்கொண்டு அருளறம் புரியத் தொடங்கினாள். வருந்தி வந்தவர் அரும்பசி களைந்து, அவர் திருந்திய முகங்கண்டு திளைத்தாள். அவள் ஆற்றிய பணியால் தமிழகத்தில் பசிப்பிணி ஒழிந்தது.

பாரதநாடு இன்று தன்னரசு பெற்ற தனிநாடாகத் திகழ்கின்றது. வல்லரசு நீங்கிவிட்டது. நல்லரசு நிலவுகின்றது. பாரதநாட்டின் அங்கங்களாக அமைந்த ஒவ்வொரு மாகாணத்திலும் அவரவர் தாய்மொழியின் வாயிலாகவே அறிவு ஊட்டப்பட வேண்டும் என்ற கொள்கை உரம்பெற்று வருகின்றது. இவையெல்லாம் பாரதநாட்டில் எழுந்துள்ள அறிவுப்பசியைக் காட்டும் அறிகுறிகள். இத்தகைய பசி, ஒல்லையில் வந்துவிடும் என்பதை முன்னரே அந்த பாரதியார், தமிழ் மக்களை நோக்கி,

**“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**

**செல்வங்கள் யாவும் கொணர்ந்துஇங்குச் சேர்ப்பீர்”**

என்று பணித்துப் போந்தார்.

தமிழ்மொழியின் தனிப் பண்புகளைத் தமிழ்நாட்டாருக்கு அமுதசுரபி வாரி வழங்கும் என்று நம்புகிறோம். இனிமை என்பது தமிழின் தனிப்பண்பு.

தமிழகத்தின் தனிநகரமகிய சென்னையம்பதியிலே இன்று எழுகின்ற தமிழ் மயமான ‘அமுதசுரபி’யை ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்க’ என்று வாழ்த்துகின்றோம். வரவேற்கின்றோம்.

## 15. மாதரும் மலர்ப் பொய்கையும்

மலர் நிறைந்த பொய்கையும் மீன் நிறைந்த வானமும் எஞ்ஞான்றும் கவிஞர் மனத்தைக் கவரும் இயற்கைக் காட்சிகளாகும். காலையிலே தோன்றும் கதிரவனொளியால் களித்து விரியும் கமல மலரைக் காணும்பொழுது கவிஞரின் உள்ளமும் மலர்வதாகும். இத்தகைய இயற்கை அழகினை மாந்தி இன்புற்ற கவிஞர் தரும் காட்சிகளைப் பார்ப்போம்.

நீலத்திரை விரிந்த வானத்திலே, கதிரவன் ஒளி வீசி எழுந்தான். கண்களைக் கவரும் அழகு வாய்ந்த கமல மலர்களில் கள்ளுண்டு களிக்கப் போந்த கருவண்டுகள் பொய்கையின்மீது சுற்றிக் கழன்று இன்னிசை பாடின. பகலவன் ஒளியால் இதழ் விரிந்து இலங்கிய செங்கமல மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிதமர்ந்திருந்தது. காலைப்பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்து அன்னம் தெள்ளிய திரைகள் தாலாட்டக் கமலப்பள்ளியில் இனிது துயின்றது. இவ்வாறு பூஞ்சோலையில் கண்வளர்ந்த அன்னத்தின் அழகினை,

**“தாய்தன் கையின் மெல்லத்**
**தண்ணென் குறங்கி னெறிய**
**வாய்பொன் அமளித் துஞ்சும்**
**மணியார் குழவி போலத்**
**தோயும் திரைகள் அலைப்பத்**
**தோடார் கமலப் பள்ளி**
**மேய வகையில் துஞ்சும்**

வெள்ளை அன்னம் காண்மின்”

என்று பாடினார் சிந்தாமணி ஆசிரியர்.

இத்தகைய பொய்கையில் நீலத் துகிடுத்த ஒரு மங்கை நீராடச் சென்றாள். அவ்வழகிய ஆடையில் குயிற்றிய செம்மை சான்ற மணிகளிலே கதிரவன் ஒளி வீசிய பொழுது அம்மணிகளின்று எழுந்த நிழற்சுடர்கள் பொய்கையின்மீது விழுந்து நெருங்கிப் பூத்த செந்தாமரையை நிகர்த்தன. அச்சுடர்களைச் சேய்மையிலிருந்து கண்ட மட அன்னம் ஒன்று விரைந்தோடிச் சென்று ஆர்வத்தாற் கவ்விற்று. மணிகளின் நிழலாய சுடர்கள் வாயில் அகப்படாமையால் தன் மடமையை நினைந்து நாணிய அன்னம், அந்த வழியே வெட்கமுற்று விரைந்து சென்றது.

மலர்ப்பொய்கையின் அழகையும் மெல்லிய பூங்காற்றின் இனிமையையும் நுகர்ந்து, நெடுநேரம், மங்கை நீராடுவாளாயினாள். பொய்கையிலே இயற்கை இன்பம் நுகர்ந்த நிலையில் வீட்டையும் மறந்தாள். தன்னோடு போந்த பஞ்சரக் கிளியின் பசியையும் மறந்தாள். இவ்வாறு தன்னையும் மறந்து தாமரைத் தடாகத்தில் விளையாடிக் கொண்டிருந்த மங்கையைக் கரையேற்றுதற்கு ஒரு சூழ்ச்சி செய்தது அவ்விளங்கிளி. தன்னைக் காதலித்து வளர்த்த தலைவியை நோக்கி,‘பாம்பு, பாம்பு’ என்று பதறிக் குளறிக் கூறிற்று. ‘பாம்பு’ என்ற சொற்கேட்ட மங்கை மனம் பகைத்துக் காதில் அணிந்த தோடு கழல,விரைந்தோடிக் கரைசேர்ந்தாள்.

பால் நினைந்தூட்டி வளர்த்த பசுங்கிளியின் பசியையும் மறந்த, தலைவி நீராடத் தலைப்பட்டால் என்று கவிஞர் கூறுமாற்றால், மாண்மமைந்த மலர்ப்பொய்கையின் பெருமை இனிது விளங்குவதாகும். மங்கை, அஞ்சி ஓடிக் கரையேறியபொழுது அவள் காதிலணிந்திருந்த தோடுகளில் ஒன்று கழன்று தண்ணீரில் விழுந்துவிட்டது. தோடிழந்த பாவை துடித்தான். கண்ணீா் வடித்தாள். இப்பொய்கையில் இறங்கித் தேடித்தருவார் யாரையும் காணேனே! ‘அன்னமே! உன்னை வணங்குகின்றேன். எனக்கு நீ ஒரு நன்மை செய்ய வேண்டும். நீ வாழும் பொய்கையில் என் காதணி கழன்று விழுந்துவிட்டது. என் தாய் பொல்லாதவள்! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். போக்கடித்த நகையை எடுத்துத்தர வேண்டும்’ என்று கை கூப்பித் தொழுதாள். இத்தகைய நயங்களெல்லாம் சிந்தாமணிச் சொல்லோவியங்களிற் சிறந்து விளங்கக் காணலாம்.

## IV. கற்பனை இன்பம்

### 16. முருகனும் முழுமதியும்

அந்தி மாலையில் விண்ணிலே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா விரித்தது. பொய்கையிலமைந்த பூங்குமுதம் முகை நெகிழ்ந்து, தேன் துளித்து மலர்ந்தது. மலையத் தெழுந்த இளங்காற்று மெல்லெனத் தவழ்ந்து நறுமணம் கமழ்ந்தது. தென்மலைச்சாரலில் மகிழ்ந்து விளையாடி முருகனென்னும் குமரன், விண்ணிலே ஊர்ந்த வெண்மதியின் அழகினைக் கண்டு குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, முகம்

மலர்ந்து அளவிலா இன்பமுற்றான். குறுநடை பயிலும் முருகனைக் கூர்ந்து நோக்கி, வெண்ணிலாவும் நகை முகம் காட்டுவதாயிற்று. தன்னை நோக்கி, முகம் மலர்ந்த தண்மதியை, அருகே போந்து விளையாட அழைத்தான் முருகன். மழலை மொழிகளால் நெடும்பொழுது வருந்தி யழைத்தும் வான்மதி வாராதிருக்கக் கண்டு முருகன் கண்பிசைந்து அழுது கரைந்தான்.

இளநலம் வாய்ந்த முருகன் விம்மித் தேம்பி அழுவதைக் கண்டு ஆறாத முனிவர் ஒருவர். ''வெண்ணிலா வீசும் விண்மதியே! முருகனைப் போலவே நீயும் அமுதமயமாய் விளங்குகின்றாய். கண்டோர் கண்ணையும் மனத்தையம் குளிர்விக்கின்றாய். குமுதவாய் திறந்து குளிரொளி விரிக்கின்றாய். உயிராகிய பயிர் தழைக்க உயரிய அருள் சுரக்கின்றாய். இவ்வாறு பல கூறுகளில் முருகனை நிகர்க்கும் நீ அவனோடு விளையாட வா'' என்று முனிவர் நயந்து அழைத்தார்.

இங்ஙனம் ஒப்புமை காட்டி உவந்தழைத்தும் இரங்காத மதியின் நிலை கண்டு வருந்தினான் குமரன். அதுகண்ட முனிவர், மதியின் சிறுமை காட்டி இடித்துரைக்கத் தொடங்கினார். ''மாலை மதியே! சில கூறுகளில் நீ முருகனை ஒப்பாயாயினும் பல கூறுகளில் அவனுக்கு நீ நிகராகாய். முக்கட் பெருமானாகிய முதல்வனுக்கு நீ ஒரு கண்ணாய் அமைந்தாய்! முருகனோ கண்மணியாயமைந்தான். கலைகள் குறைந்தும் நிறைந்தும், நிறைந்த இன்னொளியாய் இலங்குகின்றான். நீ புற இருளையே போக்க வல்லாய். முருகன் அக விருளையும் அகற்ற வல்லான். உலகில் நீ ஒருபால் ஒளிருங்கால் மற்றொருபால் ஒழிகின்றாய். முருகனோ அங்கிங்கெனாத மலர்களை நீ மலர்விக்கின்றாய். முருகனோ அன்பருடைய மனமலர்களைத் திறக்கின்றான். எனவே, உன்னினும் அவன் உயர்ந்தவனல்லனோ! அன்னான் 'வருக' என்றழைத்தால் நீ வாராதிருக்க வழக்குண்டோ?'' என்று முனிவர் இடித்துரைத்தார்.

இவ்வாறு வேற்றுமை காட்டிக் கட்டுரை கூறியும், முருகன் பெருமையை உணராது இறுமாந்திருந்த தண்மதியைப் பிறிந்தோர் உபாயத்தால் முனிவர் தெருட்டக் கருதினார். ''மறுவுற்ற குளிர்மதியே! உன்னை வருந்தி அழைக்கும் குமரன் திறத்தினை அறிந்தாயில்லையே! கருநோயை வேரறுக்கும் முருகன் அருள் பெற்றால், உன்னைப் பற்றியுள்ள கருநோய் கடுகி ஓடுமே! இருள்சேர் இருள்வினையுந்துடைத்து, அந்தமில் இன்பத்து அழியா வீடும் தரவல்ல முருகனுக்கு உன்பால் அமைந்த மறுவினை அகற்றுதல் அரிதாமோ! எனினும், முனிவர் பரிந்துரைத்த மொழிகளை வெண்மதி மனத்திற் கொள்ளவில்லை.

சாம, பேத தானங்களால் தண்மதியை வெல்ல இயலாத முனிவர் தண்டத்தைக் கையாளத் தலைப்பட்டார். குறையாகிப் பிறையாகி மிளிரும் குளிர்மதியே! இக்குமரன் ஆற்றலை நீ அறியாய் போலும்! இப்பிள்ளைப் பெருமான் குன்றமெறிந்தான். குறை கடலிற் சூர்தடிந்தான். குலிசனைச் சிறையிலிட்டான். இவ்வேலனைப் பாலன் என்றெண்ணி இகழ்ந்த சூரன் பட்டபாட்டை நீ அறியாயோ? இன்னும், தக்கன் வேள்வி

கட்டழிந்த நாளில் நீ மானங்குலைந்ததை மறந்தனையோ? வலிமை சான்ற வேலன் மேலும் பொருமி அழுது அரற்றுவானாயின், இளையவனாகிய வீராவகு பொங்கி எழுவான். அவனுடன் வந்து விளையாடுதலே உனக்கு அழகாகும் என்று முனிவர் அறிவுறுத்தினார்.

தாம் உரைத்த மொழிகளைச் சிறிதும் நெஞ்சிற் கொள்ளாது செருக்குற்று விண்ணிலே தவழ்ந்து சென்ற விண்மதியையும், அம்மதியை மறந்து மற்றொன்றைக் கருத மனமற்றிருந்த முருகனையும் கண்ட முனிவர் செய்வதொன்று மறியாது சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அந்நிலையில் முருகனை வீட்டிற் காணாத அவன் தந்தை, குன்றின் சாரலை வந்தடைந்தார். ஆங்குக் கரும் பாறையின் மீது முனிவரும் குமரனும் அமர்ந்திருக்கக் கண்டார். அருமந்த முருகனை விரைந்தெடுத்த ஆர்வமுற அணைத்துக் கண்ணீர் துடைத்து, நீ ஏன் அழுதாய்? தேனும் தினையும் வேண்டுமா? பாலும் பழமும் வேண்டுமா? என்று விருப்புடன் வினவி முத்தமிட்டார். முத்திட்டு நிமிர்ந்த அத்தனது சடையிலமைந்த பிறை மதியை முருகன் கண்டு கொண்டான். தன் விருப்பத்திற் தழைத்தான். தந்தையின் தோளில் ஏறியமர்ந்து கற்றைச் சட்டையின்மீது இலங்கிய குழவித் திங்களைத் தன் இளங்கரத்தால் வளைத்தெழுத்தான். மதியுடன் விளையாடிய மைந்தனைக் கண்டு தந்தையார் மனங்குளிர்ந்தார்.

## 17. பயிர் வண்டும் படர்கொடியும்

திருக்குற்றால மலையின் ஒருசார் ஓங்கி வளர்ந்த வேங்கைமரம் விண்ணளாவி நின்றது. அதன் கிளைகளில் ஒரு மெல்லிய பூங்கொடி. பின்னிப் படர்ந்திருந்தது. மஞ்சு தோய நின்ற வேங்கையின்மீது அவ்விளங்கொடி வரிவரியாய்ச் சுற்ற விளங்கிய கோலம், கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவர்வவதாயிற்று. பொன்மலர் பூத்த அவ்வேங்கையின் கொம்புகளில், குயில்கள் மணந்து மகிழ்ந்தன. வண்டினங்கள் இசைபாடி நறுமலர்களின் தேனை மாந்தித் திளைத்தன.

**“தீங்கு யில்ம ணந்துதேன் துஞ்ச வண்டு பாண்செய**

**வேங்கை நின்று பொன்உ குக்கும்”**

என்று சிந்தாமணிக் கவிஞர் வியந்துரைக்க இயற்கையழகு அங்கே காட்சியளித்தது.

அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னமே கடுங்காற்று வேகமாய்க் கழன்று வீசத் தலைப்பட்டது. அக்காற்றின் கொடுமைக்கு ஆற்றாது மலையே நிலை குலைந்தது. வெறிகொண்ட சூறையில் அகப்பட்ட வேங்கை மரம் வேரோடு சாய்ந்து அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து, செழுமையுற்று விளங்கிய வேங்கை

நிலைகுலைந்து வீழக்கண்ட எமதுள்ளம் வெதும்பியது. உலகப் பொருள்களின் நிலையாமையை நினைத்து நெஞ்சம் உலைந்தது.

இவ்வாறு வேங்கை சாய்ந்து ஆற்றில்விழுந்தபோது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரோடு பெயர்ந்து அம்மரத்துடன் மயங்கி விழுந்தது. இனிய தேனுண்டு திளைத்த வண்டுகள் மரத்தொடு பூவும் மாளக்கண்டு ஆர்ந்தெழுந்து அயல் நின்ற மற்றொரு மரத்தில் சென்று சேர்ந்தன. இதனை நோக்கியபோது மதுவுண்டு மயங்கும் வண்டின் இழிகுணம் எம்மனத்தை வாட்டி வருத்தியது.

கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது, பெருந்துயர் நேர்ந்தபோதும் பிரியாத இயலமைந்த பூங்கொடி, நல்ல குடிப்பிறந்த நங்கைபோல் இலங்கிற்று. அக்கொடி படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பாய் அமைந்த வேங்கையின் தோற்றம், ஆண்மையும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய நிலைபோல் விளங்கிற்று.

பெற்றோர் சேர்த்து வைத்த பெருஞ்செல்வம் எல்லாம் பொதுமாதிடம் இழந்த வறியவனாய், மாட மதுரையில் மனையாளது மணிச்சிலம்பை விற்று வாணிகம் செய்யுமாறு புகார் நகரினின்றும் புறப்பட்டான் கோவலன். அப்போது மெல்லியல் வாய்ந்த கண்ணகியும் அவனுடன் சென்றாள். கதிரவன் வெம்மையால் உடல்சோர, கரடு முரடான பாதையில் வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து போந்த கண்ணகியின் பெருமையைக் கண்டு கோவலன் மனங்குழைந்தான்.

**“குடிமுதற் சுற்றமும் குற்றினை யோரும்**
**அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி**
**நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்**
**பேணிய கற்பும் பெருந்துணை யாக**
**என்னொடு போந்துஈங்(கு) என்துயர் களைந்த**
**பொன்னே கொடியே புனைபூங் கோதாய்”**

என்று கற்பின் செல்வியைப் புகழ்ந்து போற்றினான்.

இவ்வாறு கணவனைப் பிரியாது வாழ்தலே நிறையமைந்த மாதர் நெறியாகும். கற்புடைய மாதர் கணவரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்வர். இத்தன்மை வாய்ந்த குலமாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்புநோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை, அழகு வாய்ந்ததாகும்.

**“நிலம ரங்கிய வேரொடு நேர்பறித்து**
**அலம ரும்துயர் எய்திய ஆயினும்**
**வலம ரங்களை வீட்டில் மாசிலாக்**
**குலம டந்தையர் என்னக் கொடிகளே”**

என்னும் கவியில் அமைந்துள்ள சொல் நயமும் பொருள் நயமும் ஆயுந்தோறும் அளவிறந்த இன்பம் பயப்பதாகும். குலமாதர் போன்ற கொடிகளின் தன்மை இவ்வாறாக, விலைமாதர் போன்ற வண்டுகளின் தன்மையையும் கவிதையிலே காணலாம். பொருளையே விரும்பும்போது மாதர் உள்ளத்தில், அன்பெனும் பசை அணுவளவும் இராது என்று அறிஞர் கண்டு உணர்த்தியுள்ளார்கள்.

## 18. நல்ல மரமும் நச்சு மரமும்

ஒரு நாள் ஓர் அரசிளங் குமரன் தன் தோழனைத் துணைக்கொண்டு கானகத்தில் வேட்டையாடச் சென்றான். அங்கு, அவன் விரும்பியவாறு வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்பட்டமையால் எங்கும் அலைந்துத் திரிந்து அலக்கணுற்றான். பசியால் மெலிந்து, வெயிலால் உலர்ந்து இருவரும் தளர்ந்து சோர்ந்தார்கள். அப்போது, நெடுந்தூரத்தில் ஒரு சிற்றூர் தோன்றக் கண்டு, அவ்வூரை நோக்கி மெல்ல நடந்து செல்வாராயினர். கதிரவன் வெம்மையால் அரசிளங் குமரன் தலை நோயுற்றுத் தன் தோழனது தோளைப் பற்றிக்கொண்டு வழிநடந்தான். அந்நிலையில், இருவரையும் இன்முகங்கொண்டு எதிர்சென்று அழைப்பதுபோல் இளந்தென்றல் எழுந்து வந்தது. தென்றல் எழுந்து வந்த திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில், இளந்திரைகளோடு, இலங்கிய நன்னீர்ப் பொய்கை யொன்று அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்ணைக் கவர்ந்தன. நற்றாமரைக்கயத்தில் துயின்ற நல்லன்னத்தைக் கண்ட இளவரசன் துணைவனை நோக்கி,

**“தோயும் திரைகள் அலைப்பத்**
**தோடார் கமலப் பள்ளி**
**மேய வகையில் துஞ்சும்**
**வெள்ளை யன்னம் காணாய்”**

என்று தான் பெற்ற இன்பத்தை இனிது எடுத்துரைத்தான்.

தாய் முகம் கண்ட சேய் போல் மனம் களித்து அந்நன்னீரைப் பருகி மகிழ்ந்தார்கள். அப்போது அவ்வாயின் அருகே கொத்துக்கொத்தாகப் பொன்நிறக் கனிகளைத் தாங்கி, குளிர்நிழல் விரித்து நின்ற மரமொன்றைக் கண்டார்கள். அதன் நிழலிலே தங்கி இளைப்பாற எண்ணி, இருவரும் அங்குச் சென்றார்கள்.

கதிரவன் வெம்மையைத் தடுப்பதற்கு ஓங்கிய பாசிலைப் பந்தர் வேய்ந்தாற் போன்று விளங்கிய மரத்தின் நிழலில் இருவரும் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்கள். பசியின் கொடுமையைப் பொறுக்கலாற்றாது வருந்தினான். கற்பகத் தருவெனக் கவின்பெற விளங்கிய மரக்கொம்புகளை நயந்து நோக்கினான். அவற்றில் பொன்னிறமான பழங்கள் கொத்துக் கொத்தாய் எம்மருங்கும் இலங்கக் கண்டான்.

அம்மரக்கிளைகளின் வழியாக மேலே சென்று, இருவரது அரும்பசியையும் தீர்ப்பதற்குப் போதிய கனிகளைக் கொய்து வந்து, துணைவனைத் துயிலினின்றும், எழுப்பினான். தீஞ்சுவையைத் துய்த்தும் இருவரும் இன்புற்றார்கள். அரசகுமாரனது தலைநோய் மிகுந்தது. அதனை தீர்க்கும் வகையறியாது தோழன் திகைத்து,'எவரேனும் இவ்வழி வாராரோ' என்று எதிர்நோக்கி இருந்தான். இவ்வாறு இருக்கையில் அவ்விடத்தை நோக்கி ஒரு முதியவன் வந்து சேர்ந்தான். "தலைக்குத்துத் தீர்க்கும் மருந்து தங்களிடம் உண்டோ?" என்று தோழன் அவனை வினவினான்.

இம்மரத்தின் பட்டையில் சிறிது செதுக்கி, அதன் சாற்றைத் தலையிற் பிழிந்தால் எவ்வகைத் தலைக்குத்தும் தீர்ந்துவிடுமே" என்று சொல்லி அப்பாற் சென்றான். அம்மரப்பட்டையின் சாற்றை மன்னன் மைந்தனது தலையிற் பிழிந்தான். சிறிதுநேரத்தில் அரசிளங் குமரனது தலைக்குத்து அறவே ஒழிந்தது. அந்நிலையில்,தோழன் தலைநோய் தீர்ந்த இளவரசனை நோக்கி,"ஐயனே! நாம் இருவரும் கானகம் சென்றது முதல் இதுவரையும் நிகழ்ந்த செயல்களைப் பார்த்தாயா? நாம் பசியாலும் வெயிலாலும் நலிந்து, மெய் தளர்ந்து, வருந்தும் நிலையில் இப்பெய்கை நம்மை அன்புடன் அழைத்த இன்முகம் காட்டித் தாகம் தணித்துத் தளர்வை மாற்றியது. அப்பால், இம்மரம் நாம் தங்கியிருக்கக் குளிர்நிழல் தந்து, பசியாறப் பழங்கள் அளித்துத் தலைநோய் தீர்க்கவும் தனி மருந்தாய் அமைத்தது. இத்தன்மையை நோக்குங்கால், நல்லார் கைப்பட்ட செல்வத்தின் தன்மை நன்கு விளங்குமன்றோ? வறுமையால் வருந்தி வந்தவரை இனிய முகத்தோடு ஏற்று, அவரது குறையை நிறை செய்வதே அறிவுடைய செல்வர் செயலாகும். ஆற்றுவழியாகவும் ஊற்று வழியாகவும் நன்னீரைத் தன்அகத்தே நிரப்பிக்கொள்ளும் இப்பொய்கைபோல், அறிவுடையோர் நல்வழிகளால் ஈட்டிய பெரும்பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல்போல, அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவார்கள். தாகத்தால் வருந்தி வருவோர்க்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம் வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளக்குவார்கள். இன்னும், தமக்கென வாழாது பிறர்க்குரியனராய் வாழும் பெரியார்போல் அமைந்த செல்வம். ஊருணியின் நீர்போல ஊரார்க்கே முழுவதும் பயன்படுவதாகும்.

அப்பால், இருவரும் தமது ஊரை நோக்கிச் சென்றனர். செல்லும் வழியில் ஒரு சிற்றூர் குறுக்கிட்டது. அதன் நடுவோ போகும்போது இருவரும் முன் கண்டறியாத ஒரு மரத்தினைக் கண்டு வியந்து நின்றார்கள். அம்மரம் கவையாகிக் கொம்பாகிக் காட்டு மரம்போல் ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கொம்புகளிலும் கிளைகளிலும் கூரிய முள் நிறைந்திருந்தது. இலைகளும், தழைகளும் இல்லாமல் பட்ட மரம்போல் நிறை அதன் கிளைகளில் செவ்வையாய்ப் பழுத்த பழங்கள் கொத்துக் கொத்தாய் அமைந்து

கண்களைக் கவர்ந்தன. அம்மரத்தைக் கண்டு இருவரும் வியந்து நிற்கையில் அவ்வழியாக ஓர் இளைஞன் வந்து சேர்ந்தான்.

அவன், மரத்தருகே நின்ற இருவரையும் இனிது நோக்கி,“ஐயா! நீங்கள் இருவரும் அயலூரார் என்பதை அறிந்தேன். ஏனெனில், இவ்வூரார் எவரும் இப்பாழான பழுமரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள். இம்மரத்தில் இலைகளும் தழைகளும் இல்லாததால் விலங்குகளும் இதனடியில் நில்லாமல் விலகிப்போகும். கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த இன்கனிகளும் நச்சுக்கனிகளாய் இருத்தலின், உண்டாரைக் கொன்றுவிடும். இம்மரத்தின் கொம்புகளை விறகாய் வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முள் இடையூறாயிருக்கின்றது. இப்பாழ் மரம் கடுங்காற்றில் அகப்பட்டு முரிந்து வேரற்று விழவேண்டுமென்று இவ்வூரார் இறைவனை நாளும் வழிபடுகின்றார்கள். இம்மரம் என்று விழுமோ, அன்றே இவ்வூரார்க்கு நன்றாகும்” என்று அதன் தன்மையைக் கூறி முடித்தான்.

அதைக்கேட்ட அரசிளங்குமரன் முன்னே தங்கி இளைப்பாறிய மரத்தின் நலத்தையும், பின்னே கண்ட மரத்தின் கொடுமையையும் ஒப்புநோக்கி, நச்சு மரத்தில் அமைந்த நன்னிறக் கனிகள், பேதையர் கைப்பட்ட செல்வம்போல் பிறர்க்கு இடர்விளைப்பனவாகும் என்று எண்ணி வருந்தினான்.

அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி, இம்மையிற் புகழும், மறுமையில் இன்பமும் எய்துவான். அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியாப் பேதையாய் இம்மையிற் பழியும் மறுமையில் துன்பதும் எய்துவான்.

## 19. சிவனடியார் முழக்கம்

காலைப்பொழுது. தேர் ஓடும் திருவீதியில் பெருமுழக்கம். “திருத்தொண்டர் சங்கம் வாழ்க! வாழ்க! சிவனடியார் திருக்கூட்டம் வெல்க! வெல்க! பசியின் கொடுமை வீழ்க! வீழ்க!” என்று இரைந்து கொண்டு சென்றது ஒரு திருக்கூட்டம்.

அத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் பல்லாயிரவர், அவர்கள் கையிலே திருவோடு. மெய்யிலே திருநீறு. கழுத்திலே தாழ்வடம். இடுப்பிலே கந்தைத் துணி. அப்பண்டாரப் படையைப் பார்ப்பதற்கு ஊரெல்லாம் திரண்டு எழுந்தது.

ஊருக்கு மேற்கே ஒரு பூந்தோட்டம். அங்கே போய்ச் சேர்ந்தது திருக்கூட்டம். தலைவர் சுந்தரமூர்த்தி எழுந்து நின்றார். தொண்டர்கள் கைதட்டி ஆரவாரித்தனர். தலைவர் தலைவணங்கிப் பேசலுற்றார்.

தோழர்களே! திருத்தொண்டர்களே! நெடுங்காலமாக நமது சங்கம் உறங்கிக் கிடந்தது. ஆயினும் இன்று விழித்துக் கொண்டோம். ஒற்றுமைப்பட்டோம். திருத்தொண்டர் படை திரண்டு எழுந்துவிட்டது. இன்று திருத்தொண்டர்களாகிய நாம் சோற்றுக்குத் தாளம் போடுகின்றோம். நம் திருவோடுகள் எல்லாம் வெறு ஓடுகளாய்

விட்டன. அன்னத்துக்கு அலந்து போய்விட்டோம். கட்டிக்கொள்ளக் கந்தைத்துணியும் கிடைக்கவில்லை. நம் தலைவன் பரமசிவன், நாம்படும் துயரத்தை யெல்லாம் அறிவார். அறிந்தும் ஏனோ பாராமுகமா இருக்கின்றார்! அவர் இருக்கும் இடம் தேடி, நாம் இப்பொழுதே செல்வோம். அவரிடம் என்ன கேட்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும். நம் திருவோடுகள் ஒவ்வொன்றும் அமுதசுரபியாக வேண்டும். பருத்திச் செடிகள் நாம் தொடும்போதெல்லாம் நாலு முழத்தில் நல்ல ஆடை தரவேண்டும். இவ்விரண்டும் அன்னமும் ஆடையும் இப்பொழுதே கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் தீபாவளிக்குத் தலைநாள் வேலை நிறுத்தம் செய்வோம். இது உங்கள் அனைவருக்கும் சம்மதமாயிருக்கும் என்று நம்புகிறேன் என்று பேசி நின்றார். அப்போது அடியார் எல்லாம் கைகொட்டி எழுப்பிய பேரோசை கைலாசத்தை எட்டியது.

திருவோடு எழுதிய கொடியைக் கையில் எடுத்து முன்னே சென்றார் சுந்தரமூர்த்தி. பரமசிவனுடைய இருப்பிடத்தை நோக்கிப் பண்டாரப் படை நடந்தது. ஒரு பழங்காட்டினுள்ளே இருந்தார் பரமசிவன். அக்காட்டைக் காத்து நின்றான் நந்தி என்ற சேவகன்.

திருத்தொண்டர் சங்கத்தின் தீர்மானங்களை அவனிடம் தெரிவித்தார். அது கேட்ட நந்தி,"அப்பா சுந்தரம்! திட்டமெல்லாம் சரியாய்ப் போட்டுவிட்டாய்! ஆனால், இப்போது பரமசிவன் படும்பாடு உனக்குத் தெரியுமா? பட்டாடை என்ற பேச்சே அவர் குடுபம்த்தில் இல்லை. பார்வதியும், கங்கையும் பருத்தி நூலாடைகள் தாம் கட்டிக்கொள்கிறார்கள். பரமசிவனோ, அதுவுமின்றிப் புலித்தோலை எடுத்து உடுத்திருக்கிறார்கள். குளிர்தாங்கமாட்டாமல் கரித்தோலைப் போர்த்துக் கொண்டிருக்கிறார். உலகத்துக்கெல்லாம் அவர் படியளக்கிறார் என்று பெயர். இப்போது அவர் குடும்பத்திற்கே அரிசி பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றது. அவரிடம் வேலை பார்க்கும் நான் வயிறாரச் சோறுண்டு அறுபது நாளாயிற்று. தம்பியாகிய முருகனை ஏய்த்து அவன் பங்கையும் சேர்த்துச் சாப்பிடுகிறான். முருகன் ஒரு விளையாட்டுப்பிள்ளை. சாப்பாட்டு வேளையில் ஒரு மயில் ஆடினால் அதையே பார்த்துக் கொண்டிருப்பான். ஒரு கோழி கூவினால் அதைக் கொண்டுவர ஓடுவான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு பேசாமல் இருப்பாள் பார்வதியம்மை. பிள்ளைகளைத் தட்டி வளர்க்கத் தெரியாத தாய் அவள். அவளுக்கும் கங்கைக்கும் எப்பொழுதும் சண்டை. இருவரும் பிரிந்து தனித்தனியே குடியிருக்க வேண்டுமென்று பரமசிவனிடம் விண்ணப்பம் செய்தார்கள். இப்பொழுது வீட்டுக்கும் பஞ்சமல்லவா? தனித்தனி வீடு தருவதற்கு வழியில்லை என்று உணர்ந்த தியாக மூர்த்தியாகிய தலைவர், தன் உடம்பில் ஒரு பாகத்தைப் பார்வதிக்கு கொடுத்தார். காடு போன்ற தம் சடையில் கங்கையை வைத்துக் கொண்டார். இப்படி இருக்கிறது பரமசிவன் நிலைமை உள்ளதைச் சொல்லிவிட்டேன். இனி உன் சித்தம் என்று கூறினான்.

## 20. சரம கவிராயர்

காவேரியாற்றின் கரையிலுள்ள தோணி புரியிலே பிறந்தான் பொன்னப்பன். அவன் தந்தை தமிழறிந்தவர். தாய், பழங்கதை சொல்வதில் பேர் பெற்றவள். பொன்னப்பனை ஒரு பெரிய கவிராயனாக்கிவிட வேண்டும் என்பது தந்தியின் ஆவல். காலையில் நாலரை மணிக்கே தந்தை பையனை எழுப்பிவிடுவார். சாலை வழியாக ஆற்றங்கரைக்கு அழைத்துச் செல்வார். வழியெல்லாம் நிகண்டும் நன்னூலும் வாய்ப்பாடமாகச் சொல்லிக் கொடுப்பார். தலைகால் புரியாமல் பொன்னப்பன் கிளிப்பிள்ளை போல் தூக்க மயக்கத்திலே பாடம் சொல்லிக்கொண்டு போவான். தினந்தோறும் பாடம் ஏறிக்கொண்டே போயிற்று. பையனுக்கும் வெறுப்பும் வளர்ந்து கொண்டே சென்றது.

நாள்தோறும் மாலைப்பொழுதில் பொன்னப்பனுக்கு அவன் தாய் கதை சொல்வாள். அக்கதை பேய்க்கதையாகவே இருக்கும். ஒரு நாள் முண்டாசு கட்டி வரும் சண்டிக் கருப்பன் கதையை அவள் சொன்னாள். அந்தக் கறுப்பன் நாற்பது முழக்கறுப்புத் துணியை வால்விட்டுத் தலையிலே கட்டிக்கொண்டு, கிறுதா மீசையை முறுக்கிக்கொண்டு பையனுக்குக் கனவிலே காட்சி கொடுத்தான். மற்றொரு நாள் மாலையில் அவள் சங்கிலிப் பூதத்தான் சரித்திரத்தைச் சொன்னாள். அன்றிரவு சலசல என்று கொண்டே இருந்தன. அக்கதைகளைக் கேட்டதன் பயனாகப் பொன்னப்பன் இருட்டிவிட்டால் வீட்டை விட்டு வெளியே போகமாட்டான். அந்திசந்தியில் ஆற்றுக்குத் தனியே போக நேர்ந்தால், ஒரு வேப்பன் கொம்பைக் கையில் எடுத்துக்கொண்டு போவான். வேப்பந்தடியிருந்தால் பேய் அணுகாது என்று அவன் தாய் சொல்லி வைத்திருந்தாள்.

பள்ளிக்கூடப் படிப்பில் பொன்னப்பன் தந்தைக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. ‘பள்ளிக்கல்வி புள்ளிக் குதவாது’ என்று அடிக்கடி அவர் சொல்வார். அந்த வசனம் தினந்தோறும் செவியில் விழும். ஆயினும், பையனுக்கு அதன் பொருள் தெரியவில்லை.

**பையன்:** அப்பா!“பள்ளிக்கல்வி புள்ளிக்குதவாது” என்று தினந்தோறும் சொல்லுகிறாயே! புள்ளி என்றால் என்ன?

**தந்தை:** புள்ளி என்பது ஆய்த எழுத்து, அது மூன்று புள்ளியாய் அடுப்புக்கட்டி போலிருக்கும். பள்ளிக்கூடம் படிப்பு அடுப்புக்கட்டிக்கூட உதவாது என்பது அப்பழமொழியின் கருத்து அடுப்புக்கட்டிக்கு உதவாது என்றால், அடுப்புக்கு உதவாது. ஒரு பிடி அன்னத்துக்கு உதவாது என்பதைப் படிப்படியாக உய்த்துணர வேண்டும்.

**பையன்:** போதும், அப்பா! எல்லாம் விளங்கிப்போச்சு. நான் இனிப் பள்ளிக்கூடம் போகவே மாட்டேன். வீட்டிலிருந்து தமிழ்ப்பாட்டுக் கட்டுவேன். ஒழிந்த நேரத்தில் அம்மாவுடன் இருந்து அடுப்புமூட்டுவேன்.

பையன் எழுந்து போனான். பாட்டுப்போட வேண்டும் என்னும் ஆசை அவனைப் பற்றிக்கொண்டது.

முதலில் எல்லார்க்கும் படியளக்கும் கடவுளின் மீது பாட்டுக்கட்டுவதே முறையென்று பொன்னப்பனுக்குத் தோன்றியது. வளமாகச் சோறும் கறியும் தரும்படி அவன் சிவபெருமானைப் பாடினான்.

**“கற்பனைக் கடந்தவன், கறிசோறு தருபவன்**
**வெற்பினில் உறைபவன், வெஞ்சனம் அளிப்பவன்**
**சற்பத்தை அணிபவன், சாப்பாடும் தருபவன்**
**நற்பதம் பணிவேன், நான்பசி தணிவேன்”**

என்று தொடங்கி,அறுசுவை உண்டிக்குப் பத்துப்பாட்டுப் பாடிமுடித்தான். அப்பாட்டுக்கு ‘அகட்டுத் திருப்பதிகம்’ என்று தலைப்பிட்டுத் தந்தையிடம் கொண்டு போனான். பொன்னப்பன் பாடிய முதற்பாட்டு அன்னப்பாட்டாயிருக்கக் கண்டு தந்தை ஆனந்தமடைந்தார்.

அன்னப்பாட்டுப் பாடிய புகழ்பெற்ற பொன்னப்பக் கவிராயர் அன்று முதல் ஆயிரம் ஆயிரமாகப் பாடித்தள்ளினார். பணக்காரர் வீட்டில் கல்யாணம் நடந்தால், பொன்னப்பக் கவிராயர், பட்டைத்தார் போட்டு, நெற்றியிலே திருநீற்றைப் பட்டையாக இட்டு, வெள்ளிப்பூண் பிடித்த தடிக்கொம்பைக் கையிலே பிடித்துக் கம்பீரமாக நடந்து செல்வார். கல்யாணப் பந்தலிலுள்ள மிராசுதார்கள் மரியாதையாக விலகிச்சபையின் நடுவே கவிராயருக்கு இடங்கொடுப்பாரார்கள். மணச்சடங்கு முடிந்தவுடனே கவிராயர் நளினமாக வெள்ளி டப்பிலிருந்து பொடி யெடுத்து நாசியில், இழுத்துக்கொண்டு உச்சந்தொனியில் தம் வாழ்த்துப்பாட்டை எடுத்துவிடுவார்.

ஒருநாள், நந்திபுரிச் சுந்தர முதலியார் வீட்டில் விமரிசையாக நடந்த கல்யாணத்திற்குக் கவிராயர் போயிருந்தார். மணமக்கள் மணவறையைச் சுற்றிவந்து உட்கார்ந்ததும், கவிராயர் “மந்திகள் லாகை பொடும்” என்று ஓர் எடுப்பு எடுத்தார்.

**“மந்திகள் லாகை போடும்**
**நந்தியம் புரியில் வாழும்”**

என்று ஆரம்பித்தவுடன் பந்தலில் பேச்சு அடங்கிற்று. எல்லோரும் ஒருமுகமாய்ப் பாட்டைக் கேட்டார்கள். அவ்வூரில் உள்ள மாஞ்சோலையில் மந்திகள் கிளைக்குக் கிளை தாவித் தலைகீழாக ஆடும் அழகைக் கண்டு கவிராயர் ஒரு பாட்டுக் கட்டிவிட்டாரே என்று பாட்டிகள் பாராட்டினார்கள். பந்தலுக்கு வெளியே கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் பாட்டைக் கேட்டவுடனே ஒரு லாகை போட்டுக் கவிராயர் வாக்கை மெய்ப்பித்தார்கள்.

காலஞ்செல்லச் செல்லக் கவிராயர் புகழ் ஏறிக்கொண்டே போயிற்று. அவருக்கு வயதும் நாற்பது நிறைந்தது. அவரது இருபத்தெட்டாம் வயதில் பிள்ளையிடம் சரமகவி பெற்றுக்கொண்டு தாயார் பரமபதம் அடைந்தாள். பின்னும் ஐந்து ஆண்டுகளில்

தந்தையும் கவிராயரிடம் விடைபெற்றுக் கொண்டார். பெற்றோர் இருவரும் போய்ச் சேர்ந்த பின்பு, கவிராயர் கல்யாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்த வேண்டுமென்று அவர் உற்றார் உறவினர் சொல்லத் தொடங்கினார்கள். அவர்கள் கல்யாணப் பேச்சை எடுக்கும் பொழுது,'அந்த இழவு யாருக்கு வேணும்?' என்று கவிராயர் நறுக்கென்று பேசிவிடுவார்.

நாளடைவில் கவிராயருக்கு,'நாக பந்த நாயகம்''சரமகவிச் சிங்கம்' முதலிய பட்டங்கள் வலிய வந்து சேர்ந்தன. பதினாயிரம் பாட்டுப் பாடிய கம்பர், கவிச்சக்கரவர்த்திப் பட்டம் பெற்றால், அறுபதினாயிரம் கவி பாடிய பொன்னப்பர் ஏன் அப்பட்டம் பெறக்கூடாது என்பது அவர் கேள்வி.

கவியரசுப் பட்டம் பெறுவதற்கு மதுரையும் காஞ்சியுமே சரியான இடங்கள் என்று கவிராயர் எண்ணினார். முதலில் மதுரைக்குத் தம் பரிவாரங்களோடு புறப்பட்டார். அவருடைய முழக்கத்தைக் கேட்டு அஞ்சிய மதுரைச் சங்கத்தார் 'கோடையிடிக் கோனேரியப்பர்' என்று அவரை அழைத்தார்கள்.

## V. அறிவும் திருவும்

### 21. காயும் கனியும்

மலை வளமுடைய தமிழ்நாட்டில் முற்காலத்தில் அருந்தவம் முயன்ற முனிவர்கள் காய்கனிகளையே அருந்தி வந்தார்கள். நாவிற்கினிய நற்கனிகளும் காய்களும் தமிழ் நாட்டு மலைகளில் நிறைந்திருந்தமையால் ஆன்றோர் பலர் அங்கு வாழ்ந்து அருந்தவம் புரிவாராயினர். தமிழ் முனிவன் வாழும் பொதிய மலையில் பன்னீராண்டு, முனிவர் ஒருவர் கடுந்தவம் புரிந்தார். நெடுந்தவம் முடிந்த நிலையில் பசியின் கொடுமையறிந்த முனிவர், அம்மலையிலிருந்த ஒரு நாவல் மரத்தின் நற்கனியைக் கொய்து, அதைத் தேக்கிலையிற் பொதிந்து, அருகேயிருந்த ஆற்றை நோக்கிச் சென்றார். பன்னீராண்டுக்கு ஒருமுறை பழுக்கும் பெருமை வாய்ந்த அக்கனியை ஆற்றங்கரையில் வைத்துவிட்டு நீராடப் போந்தார் முனிவர். அப்பொழுது அவ்வழியாகத் தன் காதலனுடன் களித்து விளையாடி வந்த ஒரு சிறுமி தீர்க்கும் அமுதக்கனி சிதைந்தழியக் கண்ட தவமுனிவர் சீற்றமுற்றுப் 'பன்னீராண்டு நீ கடும் பசியால் நலிந்துழல்க' என்று பிழைசெய்த பேதையைச் சபித்தார். அச்சாபத்தின் வலிமையால் அன்று முதல் வயிறு காய்ந்து வருந்திய மங்கை பன்னீராண்டு பசியால் வருந்திய பின்பு அமுதசுரபியினின்று மணிமேகலை வழங்கிய அன்னத்தை உண்டு பசி தீர்ந்தாளென்று பழஞ்சரிதை கூறுகின்றது.

அமுதம் காக்கும் நெல்லிக்கனி தமிழகத்தில் உண்டு என்பதை அறிந்தான் அதிகமான் என்ற சிற்றரசன். அதனை அருந்தி நீடுடி வாழ ஆசையுற்றான்.

மத்தியுமறியா மரங்கள் செறிந்த தென்மலையில், பளிங்கரும் அணுகுதற்கரிய விடரொன்றில் நின்றது அந்நெல்லி. அதை அறிந்த காவலன் பல்லாண்டுகளாகப் பெரிதும் முயன்று, விடரை அடைவதற்கு வழியமைத்து, மருந்து தூவி, மலை வண்டுகளை விலக்கி, மஞ்சினில் மறைந்திருந்த செழுங்கனியைக் காவலாளர் மூலமாகப் பெற்றான். வள்ளல் அங்கையில் வைத்து நோக்கி அகமகிழ்ந்திருக்கையில், சொல்லின் செல்வியாகி ஔவையார், செந்தமிழ்க் கவிபாடி அவன் முன்னே சென்றார்.

அதிமதுரக் கவி பாடிய ஔவையார்க்கு அமுதம் பொழியும் நெல்லிக்கனியே ஏற்ற பரிசென்று எண்ணி, அங்கையில் இருந்த கனியை அவரிடம் அகமலர்ந்தளித்தான். அந்நெல்லிக் கனியினை ஔவையார் அருந்திய பொழுது அதன் தீஞ்சுவையினை அறிந்தார்.

பல நாள் முயன்று வருந்திப் பெற்ற அருங்கனியைத் தானருத்தி இன்புறக் கருதாது, பாடிவந்த கிழவிக்கு அதனைப் பரிசாக அளித்த வள்ளலின் அருங்குணத்தை ஔவையார் வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினார்.

**“நீல மணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும நீயே தொன்னிலைப்**
**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத் தடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கீத் தனையே”**

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே அறங்களுள் எல்லாம் தலையாய அறமென்று தமிழ் மறை கூறுகின்றது. தான் அருந்திப் பயன்பெறுமாறு வருந்திப்பெற்ற அருங்கனியை ஔவையாருடன் பகுத்துண்ணவும் எண்ணாது, முழுக்கனியையும் அக்கவிஞர்க்கு ஈந்து மகிழ்ந்த வள்ளலின் பெருமை உலகமுள்ளளவும் அழியாததன்றோ? இன்பண்பினைக் கண்டு வியந்த புலவர் ஒருவர்,

**“கமிழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த**
**அரவக் கடற்றானை அதிகன்”**

என்று புகழ்ந்துரைத்தார்.

## 22. சேரனும் கீரனும்

தமிழ்நாடு தன்னரசு பெற்று வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழி தலைசிறந்து விளங்கிற்று. தமிழறிந்த மன்னர் ஆட்சியில் முத்தமிழும் முறையே வளர்ந்தோங்கித் திகழ்ந்தது.

சேரநாட்டை ஆண்டுவந்த பெருஞ்சேரல் என்ற அரசன் ஆண்மையிலும் வண்மையிலும் சிறந்து விளங்கினான். சோழ நாட்டை ஆண்ட வளவனையும், பாண்டி நாட்டை ஆண்ட மாறனையும் வென்று ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதிகமானின் வலியழித்துத் தமிழுலகம் போற்றத் தனிக்கோலோச்சி வந்தான்.

இத்தகைய கீர்த்தி வாய்ந்த சேரமானது கொடைத்திறத்தினைக் கேள்வியுற்ற மோசிகீரனார் என்ற தமிழ்ப்புலவர், அம்மன்னனிடம் பரிசு பெற்றுப் பசிப்பிணி அகற்றக் கருதி, நெடுவழி நடந்து அரண்மனை வாயிலை நண்ணினார். அப்பொழுது சேரமான் ஓர் அணிவிழாக் காணுமாறு வெளியே சென்றிருந்தான். ஆயினம் அரண்மனை வாயில் அடையாதிருந்தமையால் கீரனார் இடையூறின்றி உள்ளே சென்றார்.

வெயிலால் உலர்ந்து,வழிநடையால் வருந்தித் தளர்வுற்ற தமிழப்புலவர், அரண்மனையில் இருந்து இளைப்பாற எண்ணினார். அதற்கு ஏற்ற இடத்தை நாடுகையில், மாளிகையின் ஒருபால் அழகிய மஞ்சம் ஒன்று தோன்றிற்று. அம்மஞ்சத்தில் மெல்லிய பஞ்சு அமைந்த மெத்தையிட்டு, அதன்மீது பாலாவி போன்ற பூம்பட்டு விரித்திருந்தது.

வண்ணப்பூஞ்சேக்கையைக் கையினல் தொட்டு இன்புறக் கருதி,அதன் அருகே சென்றார். மருங்கு செல்லச் செல்ல அம்மஞ்சம் அவர் மனத்தை முற்றும் கவர்ந்து தன்வசமாக்கிக் கொண்டது. புலவர் மெய்ம்மறந்து அதன்மீது சாய்ந்தார். அவ்வின்ப சுகத்தில் மற்றெல்லார் மறந்து சற்றே கண்முகிழ்த்தார். தமிழ்த்தென்றல் இன்புறத் தவழ்ந்து போந்து அவர் கண்களை இறுக்கியது.

சேரமான், தானைத் தலைவர் புடைசூழத் தன் மாளிகையை வந்தடைந்தான். சிறிது இளைப்பாற எண்ணினான். விழாவிற்காக அணிந்திருந்த ஆடை அணிகளையும், உடைவாளையும் களைந்தான். அரண்மனை ஒடுக்கத்திற் போந்து இளைப்பாறக் கருதி வீர முரசத்திற்குரிய மணிமஞ்ச மாடத்தின் வழியே சென்றான். அரகே கழுத்த மேனியும் நரைத்த முடியும் வாய்ந்த பெரியார் ஒருவர் தளர்ந்து கண்வளரக் கண்டான். அவரது முகத்தின் விளக்கத்தால் அவர் வாக்கில் ஒளியுண்டெனத் துணிந்தான். அவரணிந்திருந்த பழுதுற்ற உடையினைக் கண்டு பூமகளால் புறக்கணிக்கப்பட்டவர் எனத் தெளிந்தான்.

**“இருவே றுலகத் தியற்கை திருவேறு**

**தெள்ளிய ராதலும் வேறு”**

என்னும் பொருளாதார நினைந்து பொருமினான். அருந்தமிழறிந்த புலவரது மேனி தோய்ந்ததல் வீரமணி மஞ்சம் புனித முற்றதெனக் கருதி மன மகிழ்ந்தான். அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்த பாவலர்க்குப் பணி செய்யக்கருதி, மஞ்சத்தின் அருகே கிடந்த பெருங்கவரியைத் தன் வலக்கையால் எடுத்து வீசி நின்றான். செங்கோலும் வெம்படையும் பற்றிப் பழகிய சேரமான் பணியாளர்க்குரிய கவரியைப் பற்றிக் குழைத்துக் கவிஞர்க்குப் பணி செய்வானாயினான்.

உறக்கம் தெளிந்த கீரனார் தளர்வு தீர்ந்து கண்விழித்தார். மெல்லிய மஞ்சத்திலே தாம் படுத்திருப்பதையும், காவலன் அதனருகே நின்று கவரி வீசுவதையுங் கண்டு உளம் பதைத்தார். கீரனார் திடுக்கிட்டெழுந்த மன்னனுக்குச் செய்தபிழையை நினைந்து மனம் பதைத்தார். மெய் முழுதும் நடுங்க கண்கள் அச்சத்தால் இடுங்க, மஞ்சத்தினின்றும் இறங்க முயன்றார். இங்ஙனம் பாவலர் மனமும் மெய்யும் வருந்தக் கண்ட சேரமான், அன்புடன் அமர்ந்து நோக்கி, மென்மொழிபேசி, அவர் மனத்திலிருந்த அச்சத்தை மாற்றினான்.

புலவரும் ஒருவாறு மனந்தேறி, நடுக்கம் தீர்ந்து, மன்னவன் பெருமையை மனமாரப் புகலுற்றார். “அரசே! மெல்லிய பூம்பட்டு விரித்த வீரமஞ்சத்தில் எளியேன் அறியாது ஏறித் துயின்றேன். அப்பிழைசெய்த என்னை நீ இலங்குவாளால், பிளந்து எறிதல் தரும். எனினும் தமிழறிந்தவன் என்று கருதி என்னை வாளா விடுத்தாய்! இஃது ஒன்றே தமிழன்னையிடம் நீ வைத்துள்ள அன்பிற்குச் சாலும். அவ்வளவில் அமையாது, படைக்கலம் எடுதது வீசும் நின் தடக்கையினால் கடையேற்குக் கவரி வீசவும் இசைந்தனையே! நின் பெருமையை ஏழையேன் என்னென்று உரைப்பேன்!” என்று புகழ்ந்து அவனடிகளில் விழுந்து வணங்கினார். தமிழ்ச்சொல்லின் சுவையறிந்த சேரமான், அடிபணிந்த புலவரை ஆர்வமுற எடுத்தணைத்து, பல்லாண்டு அவர் பசிநோய் அகற்றப் போதிய பரிசளித்து விடை கொடுத்தனுப்பினான்.

## 23. பாரியும் மாரியும்

பழந்தமிழ் நாட்டில் வரையாது பொருள் வழங்கும் வள்ளலார் பலர் வாழ்ந்து வந்தனர். அன்னவருள் தலைசிறந்தவன் பறம்புமலைக் கோமானாகிய பாரி, இயற்கை வளஞ்சான்ற பறம்புமலை நாட்டில் நெல்லும் கனியும், தேனும் கிழங்கும் நிரம்பக் கிடைத்தமையால் குடிகள் கவலையற்று வாழ்வாராயினர்.

அற்றார்க்கும் அலந்தார்க்கும் அவன் உற்ற துணைவன். பசிப்பிணி என்னும் பாவியின் பெரும் பகைவன். கங்கு கரையற்ற அவ்வள்ளலின் கருணை, மன்னுயிர் முதலாகப் புல்லுயிர் ஈறாக உள்ள அனைத்துயிரையும் ஆதரிப்பதாயிற்று. ஒரு நாள் பாரி, தன் அழகிய தேர்மீது ஏறி, நாட்டு வளங்காணப் புறப்பட்டான். செல்லும் வழியில் ஒரு முல்லைக்கொடியைக் கண்டான்.

தழைத்துச்செழித்துப் படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பின்றிக் குழைந்து வாடிய கொடியின் துயர் கண்டு வருந்தினான். தன் பெரிய தேரை அதன் அருகே கொண்டு நிறுத்தினான். கொடியை எடுத்துத் தேர்மீது படரவிட்டு, கவலையற்ற முகத்தோடு தன் கோட்டையை நோக்கிய நடந்தான். உள்ளம் நெகிழ்ந்து உதவிபுரிந்த வள்ளலின் பெருமையை,

**“பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை**

**நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்**

**கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த**

**பரந்தோங்கு சிறப்பிற் பாரி"**

என்று புலவர் பெருமானாகிய கபிலர் போற்றிப் புகழ்ந்தார்.

அற்றார்க்குப் பொருள் வழங்கி அவர் இன்முகம் கண்டு இன்புற்ற பாரியை,

**"பாரி பாரி என்றுபல ஏத்தி**

**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**

**பாரி ஒருவனும் அல்லன்**

**மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே"**

என்று பொய்யறியாக் கபிலர் போற்றிப் புகழ்ந்தார்.

'மண்ணுலகைப் பாதுகாத்தற்கு மாரியும் உண்டென்பது மறந்து, பாரி ஒருவனையே புலவர் அனைவரும் போற்றிப் புகழ்கின்றார்களே'' என்று கவிஞர் அவ்வள்ளலை இகழ்வார்போற் புகழ்ந்துள்ள நயம் அறிந்து இன்புறத்தக்கதாகும்.

இவ்வாறு பாரி ஒருவனையே பலரும் புகழக்கண்ட பாண்டியனும் மற்றைய இருபெரு வேந்தரும், பெரிதும் அழுக்காறு கொண்டு அவனது பறம்பைத் தம் படையால் முற்றுகையிட்டார்கள். பலநாள் முற்றியும் கலக்கமுற்றனர். நால்வகைச் சேனையின் நடவே நின்ற மன்னரை நோக்கி,"ஐயன்மீர்! பாரியின் மலையிலுள்ள ஒவ்வொரு மரத்திலும் உம்முடைய களிறுகளைக் கட்டுவீராயினும், பரந்த பறம்பெங்கும் உமது தேரை நிரப்புவீராயினும் படைவலியால் பாரியை வெல்ல இயலாது. அவனை வென்று பரம்பைக் கவரும் வகையை யான் அறியேன். நல்ல யாழைக் கையிலேந்தி இன்னிசைப் பாட்டு இசைப்பீராயின், பாரி தன் நாட்டையும் மலையையும் ஒருங்கே தருவன். இதுவே அவனை வெல்லுதற்குரிய வழியாகும்'' என்று பாரியின் வண்மையைப் புகழ்ந்தும், மூவேந்தரது வன்மையை இகழ்ந்தும் கபிலர் நயம்பட உரைத்தார்.

இங்ஙனம் இசை வழியாகப் பாரியை வெல்ல இசையாத மூவேந்தரும், வசையாற்றால் அவனை வென்றதாக அப்பெருந்தகையின் வரலாறு கூறுகின்றது. பாரியைக்கொன்று பறம்பைக் கைப்பற்றிய பகைவேந்தர் செயல் கண்டு மனம் பதைத்த பாரி மகளிர்,

**"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்**

**எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்**

**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்**

**வென்றெறி முரசின் வேந்தர்எம்**

**குன்றும் கொண்டார்யாம் எந்தையு மிலமே"**

என்று இறங்கிக்கூறும் மொழிகள் உள்ளத்தை உருக்குவனவாம்.

மணப்பருவமுற்ற அம்மங்கையரைப் பாரியின் தோழராகிய கபிலர், இருங்கோவேள் என்னும் குறுநில மன்னனிடம் அழைத்துச் சென்று,"ஐயனே! யான் இருவரும் பறம்பிற் கோமானாய பாரி ஈன்ற மக்கள். யான் இவர் தந்தையின் தோழன். அம்முறையில் இவர் என் மக்கள். இம்மங்கையரை உனக்கு மணம் செய்யக் கருதி இங்கு அழைத்து வந்தேன்" என்று தம் கருத்தை அறிவித்தபொழுது, அக்குறுநில மன்னன், பாரி மகளிரை மணம்புரிய மறுத்துவிட்டான். மற்றொரு குறிஞ்சிநிலக் கோமானிடம் சென்று, பாரியின் மக்களை மணம்புரியமாறு வேண்டினார்.

வள்ளலின் மக்களாயினும்,வறுமை யெய்திய மங்கையரை மணம்புரிய இசயாது அக்குறுநில மன்னனும் மறுத்துவிட்டான். அற்றகுளத்து அறுநீர்ப் பறவை போலாது, பாரியின் மக்கள் வறுமை யெய்திய நிலைமையிலும் அவர்க்கு உற்ற துணையாய் நின்று உதவிய புலனழுக்கற்ற புலவர் பெருமை போற்றுதற்குரியதன்றோ?

## 24. அழகும் முத்தும்

தமிழ்நாட்டிலே புலவர் பாடும் புகழுடையார் என்றும் உள்ளார். ஐம்பதாண்டுக்கு முன்னே நெல்லையம் பதியில் வாழ்ந்தார். முத்தமிழ்ச்சுவை தேர்ந்த வித்தகர். முத்துச்சாமி என்னும் பெயரினர். ஆக கவியாய் விளங்கிய அழகிய சொக்கநாதர் அவ்வள்ளலின் ஆதரவைப் பெற்றார்.

ஒருநாள், அச்செல்வர், அழகிய சொக்கருடன் உலாவி வரும்பொழுது, கரும்புத்தோட்டத்தின் அருகே கானமயில் ஒன்று ஆடக்கண்டு களிப்புற்று நின்றார். இளங்காற்றிலே ஆடிய கரும்பின் தோகையும், இன்பப் பெருக்கிலே ஆடிய மயிலின் தோகையும் அவர் கண்ணைக் கவர்ந்தன. அந்நிலையில் அழகிய சொக்கரை நோக்கிக் கரும்புக்கும் கான மயிலுக்கும் பொருந்தும் கவியொன்று பாடும்படி அவர் வேண்டினார். கவிஞரும் அக்காட்சியைக் கண்டு களிப்புற்று உடனே பாடலுற்றார்.

**"மேனியெல்லாம் கண்ணுறலால் வேள்விரும்பும் தன்மையினால்**
**ஆனபசுந் தோகையினால் ஆடலினால் - மீனவன்நேர்**
**மானபரா! நெல்லைநகர் வாழுமுத்துச் சாமிமன்னா!**
**கானமயில் ஒப்பாம் கரும்பு"**

என்ற சொக்கர் பாட்டின் சுவையறிந்து இன்புற்றார்.

ஒருநாள், வள்ளலின் மிதியடி காணாமற் போயிற்று. அதைக் கவர்ந்த கள்வனைக் கண்டு பிடிக்க முடியாமல் வருந்தினர் காவலாளர். அச்செய்தியை அறிந்த வள்ளல், சொக்கரைப் பார்த்துப் புன்னகை புரிந்து 'செருப்புக்கும் திருடனுக்கும்' பொருத்தமான பாட்டிசைக்கும்படி வேண்டினார். அப்போது எழுந்தது பாட்டு.

**"அங்கங் களவால் அதுகண் டுதைப்புறலால்**
**எங்கும் மிதியடியென் றேசொல்லால் - வெங்கல்**

**கரடுமுட்கஞ் சாததினால் காமா்முத்துச் சாமி**

**திருடனைஒப் பாகும் செருப்பு"**

என்ற கவியை விருப்பமாய்க் கேட்ட வள்ளல் 'செருப்புத் தொலைந்தால் அன்றோ இச்செய்யுள் கிடைத்தது' என்று அகமகிழ்ந்தார்.

அப்பாட்டின் சிலேடை நயத்தைப் பார்ப்போம். கள்வனுக்கு அங்கம் களவு. செருப்புக்கு அங்கங்கு அளவ. கள்வனது களவு கண்டு உதைப்பார்கள். செருப்பின் அளவு கண்டு தைப்பார்கள். கள்வனை 'மிதி''அடி' என்பார்கள். செருப்பையும் 'மிதியடி' என்பார்கள். இன்னும் கல்லும், முள்ளும், கரடும் கண்டு அஞ்சாது செல்வான் கள்வன். அவ்வாறே கல்லும், முள்ளும், கரடும் கண்டு செருப்பு அஞ்சாது" என்பது இப்பாட்டின் பொருள்.

ஆண்மையும் அழகும் வாய்ந்த அவ்வள்ளலைத் தலைவனாக வைத்து ஒரு 'காதலும்' பாடினார் கவிஞர். பொதிய மலைச் சாரலில் வேட்டையாடப் போந்த முத்துசாமி மன்னர்.

**"சில்லென்று பூத்த செழுமலர்ப்பூங் காவனத்தில்**

**வில்லொன்று செங்கையுடன் மேவி வரும்போதில்"**

ஒரு கட்டழகியைக் கண்டு காதலுற்றார். அவன் ஊரும் பேரும் கேட்டார். மாற்றம் ஒன்றும் பேசாமல் தலைகவிழ்ந்து நின்றாள் மங்கை. அது கண்ட தலைவர்.

**"ஊமையோ, வாயிலையோ ஓர்வசனம் நீ உரைத்தால்**

**தீமையோ வாய்திறந்து செப்பினால் ஆகாதோ"**

என்று பின்னும் வினவினார். அப்போது அவள் வாய் திறக்கவில்லை. 'வாய் இல்லையோ' என்று கேட்டுப் பார்த்தோம. பலிக்கவில்லை. 'மனம் காயோ' என்று கேட்டுப்பார்க்கலாம். எனக் கருதி மேலும் பேசலுற்றார்.

**"வெள்ளரிக் காயா, விரும்பும்அவ ரைக்காயா**

**உள்ளமிள காயாஒருபேச் சுரைக்காயா"**

என்று நயமுறக் கேட்டபோது, நங்கை புன்னகை புரிந்தாள் என்று காதற் பிரபந்தம் கூறிச்செல்கின்றது.

## 25. வன்மையும் வறுமையும்

பழந்தமிழ்நாட்டு வள்ளல்களாய் விளங்கிப் பாரியும் ஓரியும் ஆயும் அதிகனும் மலையனும் பேகனும் மாண்ட பின்னர், முதிராத வளமுடைய முதிர மலைத் தலைவனாகிய குமணன் அருஞ்சுரத்தினிடையே அமைந்த செழுஞ்சுனை போல் இலங்கினான். பழுமரம் தேரும் பறவை போன்று வறுமையால் வருந்திய மக்கள்

இவ்வள்ளலை வந்தடைந்தார்கள். தமது குறையைக் கரவாது எடுத்துரைத்தார்கள். பசி நோயால் அன்னையும் மனைவியும் மக்களும் வாடி வருந்திக் கண்ட புலவர் ஒருவர் குமணனிடம் போந்து தம் குறையை முறையிட்டார்.

''ஐயனே! ஆண்டு பல கண்ட என்னுடைய அன்னை, போகாத தன் உயிரோடு புலந்து தண்டூன்றித் தள்ளாடி முற்றமளவும் செல்லமாட்டாத முதுமையால் வருந்துகின்றாள். என் மனையாள், குப்பைக் கீரையின் கண்ணிலே முளைத்த முதிராத இளந்தளிரைப் பறித்து, அதனை உப்பின்றி அவித்து உண்டு உலர்ந்த மேனியோடு உயிர் வாழ்கனிறாள். பால் மணம் மாறாத பாலன், உடல் வற்றிய தாயிடம் பால் காணாது வருந்தி அடுப்பருகே யிருந்த சோற்றுப் பானையிடம் தவழ்ந்து, அதன் வெறுமை கண்டு வெதும்பி அழுகின்றான். பசியாலழும் பாலகனைக் கண்டு மனம் பெறாத என் மனையாள் வானிலே விளங்கும் வளர்மதியைக் காட்டியும், புலி வருமென்று பயமுறுத்தியும் அவன் கருத்தை மாற்ற முயல்கின்றாள். என்று குமணனிடம் தன் குறையை உருக்கமாக எடுத்துரைத்தார். கவிநலம் சான்ற அறிஞரைப் பற்றிய வறுமையை அறிந்த குமணன், மனம் வருந்தி அவரது குறையை அகற்றப் போதிய பரிசளித்தான்.

வள்ளலது பரிசின் வளம் கண்ட புலவர் பெருமிதமுற்று மலர்ந்த முகத்தோடு தம் மனையகம் போந்து மனையாளை நோக்கி,''மாதே! இதோ குமணன் கொடுத்த கொடையைப் பார்! இப்பொருள்களெல்லாம்,

**''பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்**
**திருந்துவேற் குமணன் நல்கிய வளனே''**

இவற்றை வறுமையால் வருந்தும் உற்றார்க்கும் உறவினர்க்கும் எடுத்து வழங்கி இன்புறுவாயாக!'' என்று புலவர் கூறும் மொழிகளில் குமணனது கொடைத்திறம் இனிது விளங்கக் காணலாம்.

இளவெளிமான் என்னும் சிற்றரசனிடம் பரிசுபெறச் சென்ற புலவர் ஒருவர் அவனது எளிய கொடையை ஏற்றுக்கொள்ளாது மறுத்து, குமண வள்ளலிடம் சென்று, யானைப் பரிசுபெற்று, மீண்டும் இளவெளிமானிடம் போந்து,

**''இரவலர் புரவலை நீயு மல்லை**
**புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்**
**இரவலர் உண்மையும் காண், இனி இரவலர்க்கு**
**ஈவோர் உண்மையும் காண், இனி நின்னூர்க்**
**கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த**
**நெடுநல் யானையெம் பரிசில்**
**கடுமான் தோன்றல் செல்வல் யானே!''**

என்று செம்மாந்து உரைத்த புலவர் மொழிகளில் குமணனது பரிசின் செம்மை சீர்பெற இலங்குகின்றது.

இவ்வாறு பாடி வந்த பாவலர்க்குப் பகடு பரிசளித்தும் ஆற்றாரது அரும்பசி களைந்தும், வற்றாத பெருஞ்செல்வமுற்று விளங்கிய குமணனைக் கண்டு அழுக்காறு கொண்டான் அவன் தம்பியாய இளங்குமணன், தமையன் ஆண்ட மலையையும் நாட்டையும் கவர்ந்துகொண்டு அவனைக் காட்டிற்கு ஓட்டினான். குமணனது தலையைக் கொண்டு வருவார்க்குக் காணாது காலைக் குமுதம்போல் குவிந்து வாடிய குடிகள், வன்கண்மை வாய்ந்த தம்பியின் செயல்கண்டு கண்ணீர் உகுத்தார்கள். குமணனது குலப்பெருமையை அழித்து, அதன் மணத்தை மாற்றத் தோன்றிய இளையோனை,''அமணன்'' என்று அழைத்தார்கள். அமணன் ஆண்ட நாட்டின் அருகே வந்த ஆன்றோரும் அறவோரும் புலிகிடந்த புதர் கண்டாற்போன்று புறத்தே போயினர். முதிர மலைக்குடிகள் மனம் வாடி வருந்தினார்கள்.

நாட்டைவிட்டுச் சென்ற குமணன், காட்டில் விளைந்த காயும் கனியும் அயின்று, கானப்புல்லில் துயின்று காலங் கழித்தான். ஒரு புலவர் குமணன் கரந்துறைந்த கானகம் போந்தார். ''ஐயனே! உண்பதற்கு ஒரு பிடி சோறுமின்றி என் மனையாள் வாடுகின்றாள். பசியால் மெலிந்த தாயிடம் பால் காணாத பாலன் தாய் முகம் நோக்கினான். தாய் என் முகம் நோக்கினாள். யான் உன் முகம் நோக்கி வந்தேன்''

என்று கவிஞரது கொடிய வறுமையை அறிந்த வள்ளல் மனம் நெகிழ்ந்தது? கண்களில் நீர் ததும்ப நின்று.

''அருந்தமிழ்ப் புலவரே! நான் செல்வத்தால் செழித்து வாழ்ந்திருந்த காலத்தில் நீர் வரலாகாதா? இவ்வறுமைக் காலத்தில் வந்தடைந்தீரே!'' ஆயினும் இல்லையென்று உரைக்கலாற்றாத இதயம் வாய்ந்த வள்ளல், சிறிது பொழுது சிந்தனையிலாழ்ந்து,ஈகையால் வரும் புகழே என் உயிரினும் சிறந்ததாகும் என்று தன்னுள்ளே நினைந்து தமிழ்ப்புலவரிடம் தன் உடைவாளை உருவிக் கொடுத்து ஐயனே! இத்

**''தலைதனைக் கொடுபோய்த் தம்பிக்கைக் கொடுத்து**
**விலைதனை மீட்டுநின் வறுமைநோய் களையே''**

என்று முகமலர்ந்து மொழிந்தான்.

தலையாய வள்ளலது செயல் கண்டு தரியாத தமிழறிஞர் கண்ணீர் பெருக்கிக் கதறியழுது அவ்வாளை எடுத்துக்கொண்டு, அமணனிடம் ஓடிச்சென்று,''ஐயனே! தலையையும் கொடுத்துத் தமிழறிந்த தமியேனது வறுமையைக் களையப்போந்த வள்ளலாய் உன் தமையனது பெருமையை என் என்பேன்?''

**''பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்**
**நாடிழந் ததனினும் நனிஇன் னாதென**

**வாள்தந் தனனே! தலைஎனக் கீயத்**

**தண்ணிற் சிறந்தது பிறிதென் றின்மையின்''**

பாடி வந்த பரிசிலன் வாடிப் பெயர்தல் நாடிழந்ததனினும் இன்னாதென் றெண்ணி, தன் தலையைக் கொய்து உன்னிடம் கொடுக்குமாறு இவ்வாளைத் தந்தான்' என்று கவிஞர் கல்லும் கரைந்துருகும் கனிந்த மொழிகளைக் கூறியபொழுது, அமணனது உள்ளம் நெகிழ்ந்தது. கண்கள் பாசத்தால் நேசத்தாரைக்ள சொரிய நின்றாள். தலையாய வள்ளலைக் கானகத்தில் வருந்த வைத்த தன் சிறுமையை எண்ணி ஏங்கினான்? அப்பொழுது நால்வகைச் சேனையோடும் நகர மக்களோடும் தமையன் வசித்த கானகம் போந்து, அப்பெருந்தகையின் அடிபணிந்து, மீண்டும் நாட்டிற்கு அழைத்து வந்தான். குமணனும் முன்போலவே அறிஞர்க்கும் வறிஞர்க்கும் ஆதரவாய் அமைந்து என்றும் அழியாத பெரும்புகழ் எய்தினான்.

## IV. மொழியும் நெறியும்

## 26. தமிழும் சைவமும்

பாரதநாடு, என்றும் தெய்வ மணம் கமழும் திருநாடு. 'இவ்வுலகத்தைப் படைப்பது தெய்வம். காப்பது தெய்வம். அழிப்பது தெய்வம்' என்னும் கருத்து பாரத நாட்டுப் பெருஞ் சமயங்களில் எல்லாம் காணப்படும். சுருங்கச் சொல்லின் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் உண்மையை அறிந்துபோற்றும் நாடு இந்நாடு.

இத்தகைய தெய்வத்தத் தமிழ் நாட்டார் பலவாறு போற்றினார்கள். பல திருநாமங்களால் அழைத்தார்கள். நாளடைவில் அப்பெயர்கள் நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக்காகவும் பெருகிவிட்டன. மாணிக்கவாசகர், திருவாசகத்தில் இதனைக் குறிக்கின்றார்.

**''ஒரு நாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்**

**திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ''**

என்பது அவர் திருவாக்கு. இவ்வண்ணம் பாடிய திருநாமங்களில் சிவம் என்பது ஒன்று. அ∴து ஒரு சிறந்த பெயர். சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்னும் பொருள் கண்டார் பண்டைப்புலவர்.

இத்தன்மை வாய்ந்த சைவ சமயத்தின் அடிப்படையான கொள்கைகளிற் சிலவற்றைக் காண்போம். 'அன்பே சிவம்' என்ற அருமையான வாசகமும் சைவ சமய நூல்களில் சிறப்பாக விளங்குகின்றது. எண்ணிறந்த குணம் வாய்ந்த இறைவனை அன்பு வடிவமாக எழுதிக்காட்டினார் திருமூலர் என்னும் பெரியார்.

**''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**

**அன்பே சிவமானது யாரும் அறிகிலார்**

**அன்பே சிவமானது யாரும் அறிந்தபின்**

**அன்பே சிவமாய் அமா்ந்திருந் தாரே''**

என்பது அவா் அருளிய திருமந்திரம். இதனால், அன்பு நெறியே சிவநெறி என்பது நன்கு விளங்கும்.

தெய்வத்தன்மையாகிய அன்பு, இயற்கையாகவே ஒவ்வொருவரிடமும் உள்ளது. அது வளா்ந்து, விரிந்து, பரவுதல் வேண்டும். நாம் முதலில், பெற்றோரிடம் அன்பு செலுத்துகின்றோம். பின்பு, உற்றாா் உறவினா்களிடம் அன்பு செல்கின்றது. அப்பால் ஊராரிடம், நாட்டாரிடம், உலகத்தாரிடம் படிப்படியாகப் பரந்து நிலவுகின்றது.

இங்ஙனம் மன்பதையிடம் மட்டும் அன்பு செலுத்தினாற் போதாது. எல்லா உயிா்களையும் தன்னுயிா் போல் கருதவேண்டும். மேலும் எல்லா உயிா்களும் கலந்து நிற்கின்றாா் கடவுள்.

**''எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகும்**

**இலங்கும்உயிா் உடலனைத்தும் ஈசன் கோயில்''**

ஆதலால், எவ்வுயிா்க்கும் துன்பம் செய்தல் ஆகாது.

சைவம், பரந்த நோக்கமுடையது. 'இவ்வுலகில் சைவ சமயமே மெய்ச்சமயம். மற்றைய சமயங்கள் பொய்ச்சமயம்' என்ற அது சொல்லவில்லை. 'சிவன் என்னும் பெயரால் கடவுளை வழிபட்டோா்க்குத்தான் நற்கதி உண்டு. மற்றையோா்க்கு இல்லை' என்று அது கூறவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் அருள்புரியும் பரம்பொருள் ஒன்றே என்பது சைவத்தின் கொள்கை.

**''அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்**

**அவ்வவா்க்கு ஆங்கே ஆரருள் புரிந்து''**

என்னும் தேவாரம் இவ்வுண்மையை நன்குணா்த்துகின்றது.

சைவ நெறியில் சமயப் பொறுமை சிறந்த கொள்கையாக விளங்கிற் றென்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று தருகின்றது. சிலப்பதிகாரத்தை இயற்றியவா் சேரநாட்டு இளவரசா். அவா் இவ்வுலக வாழ்க்கையை விரும்பாது சமண சமயத் துறவியானாா். ஆனால், அவருடன் பிறந்த சேரன் செங்குட்டுவன் சிறந்த சைவ சமயத்தையும், தம்பி சமண சமயத்தையும் மேற்கொண்டு ஒரு குடும்பத்தில் இணக்கமாக மேற்கொண்டு ஒரு குடும்பத்தில் இணக்கமாக வாழ்ந்த நாட்டில், சமயப் பொறுமை நிலைத்திருந்த தென்பதை விரித்துரைக்கவும் வேண்டுமோ?

சைவ சமயத்தில் ஆலய வேறுபாடு இன்றியமையாதயாகக் கொள்ளப்படுகிறது. ''ஆலயத்தானும் அரன் எனத் தொழுமே'' என்று சிவஞான போதம் என்னும் சித்தாந்த நூல் கூறும். கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் ஆகாது என்பது சைவா் கொள்கை. இதனால், எண்ணிறந்த சிவாலயங்கள் தமிழ்நாடெங்கும் தலையெடுத்து

நிற்கின்றன. பொருள் வளம்பெற்ற அரசரும், அருள் நலம் பெற்ற முனிவரும் ஆலயப் பணியில் ஈடுபட்டார்கள். தேவாரம் முதலிய தெய்வப் பாடல்களை ஆலயங்களில் இன்னிசையோடு பாடுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். பாடலோடு ஆடலும் நிகழ்வதாயிற்று. இவ்வண்ணம்,பெரிய கோயில்களில் எல்லாம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் செழித்தோங்கி வளர்ந்தன. கடவுளுக்குரிய கோயில் கலைக் கோயிலாகவும் காட்சியளித்தது.

இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களில் சாதி வேற்றுமை காணப்படுகின்றது. ஆண்டவன் கோயிலுக்குள்ளே சில சாதியார் செல்லலாகாது என்று சொல்லப்படுகிறது. ஆனால், சைவ சித்தாந்த முறையில் சமயத்துக்கும் சாதிக்கும் சம்பந்தமில்லை.

**“சாத்திர ரம்பல பேசும்ச ழக்கர்காள்**

**கோத்தி ரமும்குல மும்கொண்டு என்செய்வீர்”**

என்று வினவினார் ஒரு சைவப்பெரியார்.

**“சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்**

**ஆதமிலி நாயேனே அல்லலறுத்து ஆட்கொண்டு”**

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்திலே பாடினார்.

புலையர் குலத்தில் பிறந்த நந்தனார், புனிதமான தில்லையம்பதியில் சிவகதியடைந்தார். பெத்தான் சாம்பான் பக்தி செய்து முத்தி பெற்றான். ஆதலால்,‘சாதியினும் சீலமே சிறந்தது. குலத்தினும் குணமே உயர்ந்தது’ என்னும் உண்மை சைவத்தில் அடிப்படையாக உண்டென்பது நன்கு விளங்குவதாகும். இதனாலன்றோ தேவாரத் திருப்பாசுரத்தில்,

**“அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பாராயின்**
**அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே”**

என்று பாடினார் திருநாவுக்கரசர்.

## 27. தமிழும் சாக்கியமும்

பாரதநாட்டுப் பழைய மதங்களுள் ஒன்று பௌத்த மதம். ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே,இந்திய நாட்டின் வட பாகத்திலுள்ள ஒரு சிறு தேசத்தில் புத்தர் பெருமான் பிறந்தார். இளமையிலேயே, இவ்வுலக வாழ்க்கை நிலையற்றதென்று உணர்ந்தார். தமக்குரிய பெருஞ்செல்வத்தையும், பெற்றோரையும், அழகிய மனைவியையும், அருமைக் குழந்தையையும் விட்டுத்

துறவியானார். ஓர் ஆற்றங்கரையில் நின்ற அரச மரத்தின்கீழ் அமர்ந்து, நெடுங்காலம் தவம் புரிந்து மெய்ஞ்ஞானம் பெற்றார். அவர் காட்டிய நெறி புத்தமதம் என்று பெயர் பெற்றது. புத்தர் சாக்கிய குலத்திற் பிறந்தவராதலால் அம்மதத்தைச் சாக்கியம் என்றும் சொல்வதுண்டு.

புத்தர் எண்பது வயதளவும் இவ்வுலகில் வாழ்ந்தார். பல நாடுகளிற் சென்று தம்முடைய மதக்கொள்கைகளைப் பரப்பினார். வடநாட்டு மன்னர் பலர். அச்சமயத்தை மேற்கொண்டார்கள். அவர்களில் மிகச் சிறந்தவன் அசோக மன்னன். ஆசிய கண்டத்திலுள்ள பல நாடுகளில் பௌத்த மதம் பரவிற்று. தமிழ்நாட்டிலே திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் காலத்தில் பௌத்த மதம் பரவியிருந்த பான்மை அவர் வரலாற்றால் விளங்குகின்றது. மணிமேகலை என்னும் தமிழ்க்காவியம் எழுந்த காலத்தும் பௌத்த மதம் தலையெடுத்து நின்றதாகவே தெரிகின்றது. அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த புத்த சங்கத்தில் அறவணவடிகள் என்னும் பௌத்த முனிவர் விளங்கினார். அவர் சிறந்த சீலர். கோவலன் கொலையுண்டு இறந்த பின்னர், அவன் காதலியாகிய மாதவியையும், அவன் மகள் மணிமேகலையையும் பௌளத்த சமயத்தில் சேர்ந்தவர் அவரே. இன்றும் அவர் பெயர் காஞ்சிபுரத்தில் நிலைபெற்றிருக்கின்றது. அவர் தங்கியிருந்து தவம் புரிந்தமையால் அறவணன் சேரி என்று பெயர் பெற்ற தெரு இப்பொழுது அறப்பணஞ்சேரி என்று அந்நகரில் வழங்குகின்றது.

சாக்கிய மதம் சிறந்திருந்த காலத்தில், சிதம்பரத்தில் வாழும் தில்லை மூவாயிரவரோடு சமய வாதம் செய்வதற்காகப் பௌத்த முனிவர்கள் திரண்டு போந்தார்கள் என்றும், அப்பொழுது, அங்கிருந்த மாணிக்கவாசகர் அம்முனிவர்களுடன் வாது செய்து அன்னாரைச் சைவ சமயத்திற் சேர்த்துவிட்டார் என்றும் சரித்திரம் கூறுகின்றது. ஆகவே, மாணிக்கவாசகர் காலத்திற்குப் பின்பு பௌத்த மதம் தமிழ்நாட்டில் ஆதிக்கமிழந்துவிட்டதென்று சொல்லலாம்.

தமிழ்நாட்டுப் பெருவேந்தருள் ஒருவனாகிய இராஜராஜசோழன், நாகப்பட்டினத்தில் ஒரு புத்த ஆலயம் கட்டுவதற்கு அனுமதியளித்ததோடு, அதற்கு நன்கொடையும் வழங்கினான் என்பது சரித்திரத்தால் அறியப்படுகின்றது. இன்னும், வீரசோழன் என்ற பட்டப்பெயர் பூண்ட வீர ராஜேந்திரன் அரசாண்ட காலத்தில், பௌத்த சமயத்தினராகிய ‘புத்தமித்திரன்’ என்னும் புலவர் தமிழில் ஓர் இலக்கணம் செய்தார். அந்நூல் வீரசோழியம் என்று பெயர்பெற்றது.

பௌத்த சமயக்கொள்கைகள் மணிமேகலை, குண்டலகேசி முதலிய நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. ‘பிறப்பென்பது துன்பம், பிறவாமையே இன்பம்’ என்பது அச்சமயத்தின் அடிப்படைக் கொள்கை. பற்று அற்றால் பிறப்பு ஒழியும் என்பது பௌத்த சமயத்தின் கருத்து. இவ்வுண்மையை மணிமேகலையிற் காணலாம்.

**“பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**

**பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்**
**பற்றின் வருவது முன்னது: பின்னது**
**அற்றோர் உறுவது அறிக"**

என்று அறுதியிட்டுக் கூறப்படுகின்றது.

துறவறத்தை மேற்கொண்ட புத்தர், கொல்லாமை என்னும் அறத்தின் பெருமையை எல்லார்க்கும் எடுத்துரைத்தார். வடநாட்டில்,பலவகையான யாகங்கள் நடந்துவந்தன. அசுவமேத யாகம், கோமேத யாகம் முதலிய வேள்விகள் செய்து,குதிரைகளையும் பசுக்களையும் அரசர்கள் பலி கொடுத்தார்கள். பிம்பசாரன் என்ற அரசன் பல பசுக்களைக் குறியிட்டுக் கோமேத யாகம் செய்யக் கருதியதைக் கேள்வியுற்று, புத்தர், அவன் அரசு புரிந்த நகரத்திற்கு விரைந்து சென்றார். கொல்லாமையாகிய அறத்தின் பெருமையை அவன் உள்ளங்கொள்ள எடுத்துரைத்தார். புத்தர் உருக்கமாகப் பேசிய வாய்மொழியைக் கேட்ட பிம்பசாரன் மனம் மாறினான். யாகத்தை நிறுத்தினான். அன்று முதல் கொல்லாமை என்னும் நல்லறத்தை மேற்கொண்டு வாழ்ந்தான். இவ்வாறு புத்தர் சரிதம் கூறுகின்றது.

பௌத்த மதம் அக்காலத்தில் பல நாடுகளில் பரவியதற்கும், இக்காலத்தில் பெருஞ் சமயமாக நிலைத்திருப்பதற்கும் சிறந்த காரணம் அதன் சங்கமேயாகும். பௌத்த துறவிகளுடைய கூட்டத்திற்குச் சங்கம் என்பது பெயர். முதன்முதல் காசி நகரத்தில், புத்தர் ஐந்து முனிவருக்கு உபதேசம் செய்து சங்கத்தைத் தொடங்கினார். பின்னர், அது வளர்ந்து பல்லாயிரக் கணக்கான துறவியரையுடையதாயிற்று. பௌத்தர்கள் புத்தரையும் தருமத்தையும் சங்கத்தையும் மும்மணிகளாகப் போற்றுகின்றார்கள். தமிழ்நாட்டில் சங்கம் என்ற சொல்லுக்கு ஏற்றமளித்தவர் பௌத்தரே என்று கூறுதல் மிகையாகாது.

தமிழ்நாட்டில் அரச மரத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அரச மரமும் பிள்ளையாரும் இல்லாத ஊர் இந்நாட்டில் இல்லை என்றே சொல்லலாம். 'போதி மரம்' என்று சொல்லப்படும் அரசமரத்தின் அடியிலே புத்தர் மெய்ஞ்ஞானம் பெற்றார். அதனால் 'போதி நாதர்' என்ற பெயரும் அவருக்கு அமைந்தது. புத்தமதம் இந்நாட்டை விட்டகன்றபோது புத்த பெருமானுடைய திருவுருவங்களும் பெயர்ந்து மறைந்தன. ஆனால், அரச மரத்தின் பெருமை குன்றவில்லை. புத்தர் வீற்றிருந்த இடத்தில் பிள்ளையார் இனிதமர்ந்தார்.

ஆகவே, புத்த மதம் ஆதிக்க மழிந்து போய்விட்டாலும், அதன் சின்னங்கள் அடியோடு இந்நாட்டில் அழிந்து போகவில்லை. பஞ்ச காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலை அதன் பெருமைக்குச் சான்றாக நிற்கின்றது. வீரசோழியம் என்னும் இலக்கண நூல் அம்மதத்தைச் சார்ந்தவரது புலமைத்திறத்தை விளக்கி நிற்கின்றது. போதியின் கீழ் மாதவம் புரிந்த புத்தரின் ஞாபகச் சின்னமாக அரசமரம் சிறப்புற்று விளங்குகின்றது.

# 28. இறையவரும் இன்னுயிரும்

மன்னுயிர் அனைத்தையும் ஆதரித்துக் காக்கும் அருள்நெறியே நன்னெறியெனத் தமிழ்நாடு பழங்காலத்தே அறிந்துகொண்டது. பிற உயிர்க்கு நலம் புரிந்தவர் இன்புறுவரென்றும், தீங்கிழைத்தவர் துன்புறுவரென்றும் அறநூல் அறிவுறுத்துகின்றது. இவ்வுலகில் வாழும் உயிர்ப்பொருள்கள் பல திறப்பட்ட அறிவு வாய்ந்தன வாயினும் அவற்றுள் ஊடுருவிச் செல்லும் உயிர்த்தன்மை ஒன்றே என்னும் உண்மையானத் தமழ்ப் பனுவல்களிற் பரக்கக் காணலாம். அறிவாற் குறைந்த உயிர்கள் பல பிறவிகளெடுத்து மேமபட்டு, முற்றிய அறிவுடைய உயிர்களாகுமென்று பழந்தமிழ் மக்கள் கருதினார்கள். புல்லாகவும், பூடாகவும் நிற்கும் சிற்றுயிர்கள் அறிவு முதிர்ந்து, மக்களாகவும் தேவராகவும் வளர்ந்து செல்லும் தன்மையைத் திருவாசகம் தெள்ளிதின் உணர்த்துகின்றது. இதனாலேயே புல்லுயிரையும் துன்புறுத்தலாகாதென்று நல்லோர் அருளிப் போந்தனர்.

மக்கள் தம் அறிவின் மதுகையால் ஏனைய உயிர்கள் நலியாவண்ணம் ஆன்றோர் வகுத்துள்ள செவ்விய நெறி அறியத்தக்கதாகும். எல்லாம் வல்ல இறைவனிடம் அச்சமும் அன்பும் எஞ்ஞான்றும் மக்கட்கு உண்டு என்னும் உண்மையை உணர்ந்த அறிவோர், வனவிலங்குகள் முதலிய புற்பூண்டுகள் ஈறாக உள்ள எல்லா உயிர்களையும் நிலைநிறுத்த முயன்றுள்ளனர். காட்டில் வாழும் விலங்குகளையும், விண்ணிலே பறந்து திரியும் பறவைகளையும், மண்ணிலே ஊர்ந்து செல்லும் உயிர்களையும், நீரிலே வாழும் மீன்களையும்,நிலத்திலே மருவி நிற்கும் மரஞ்செடிகளையும் இறையவரோடிணைத்து அவற்றின் உயிரைக் காக்க ஆசைப்பட்டுள்ளார்கள். காட்டில் வாழும் வேழமும் வேங்கையும், அரியும் பரியும், மானும் மற்றைய உயிர்களும் இறையவர்க்கு உகந்த பொருள்களாகும். வேழத்தின் உரியும், வேங்கையின் தோலும்,ஈசன் உவந்து அணியும் உடைகள் வேங்கையின் தோலை அரையிலுடுத்து வேழத்தின் உரியால் ஆகத்தைப் போர்த்துக்கடும்.

உருவத்தால் உயர்ந்த வேழம் ஈசனார்க்கும் இந்திரற்கும், பிள்ளையார்க்கும் இனிய உயிராக இலங்குகின்றது. இன்னும் ஈசன் தோள்களில் ஆரமாக இலங்கும் நஞ்சமைந்த நாகம் திருமாலின் பாயலாகவும் அமைந்துள்ளது.

காட்டு விலங்குகளை விடுத்து, நாட்டு விலங்குகளைக் கருதுவோமாயின், அவைகளும் இறையவரைச் சார்ந்த உயிர்களாய் இலங்கக் காணலாம். எருது ஈசனது வாகனமாம். எருமை எமனது ஏற்றமாம். பசுவின் வயிற்றாற் பிறந்தான் சித்திரகுப்தன் என்னும் வானவன். திருமாலும் பன்றியாய்த் தோன்றினான். நன்றி மறவாத நாய் சாத்தானது நல்வாகனமாம். ஆடு அங்கியங் கடவுளுக்கு அமைந்த ஊர்தியாம். ஆகவே, எருதுக்குத் தீங்கிழைத்தால் ஈசன் முனிவான். எருமைக்குத் தவறிழைத்தால்

எமன் விடமாட்டான். பன்றியைக் கொன்றால் மாயோன் சீறுவான். நாயை எறிந்தால் சாத்தான் தொடர்வான். ஆட்டை அடித்தால் அங்கி அடுவான்.

இனி, பறவை இனங்களைச் சிறிது பார்ப்போம். அன்னமும் கிளியும், சேவலும் மயிலும், குயிலும் கொக்கும், காக்கையும் கலுழனும் ஒவ்வோர் இறைவனை ஒன்றி வாழக்காணலாம்.

இன்னும், சிறிய உயிர்களாய் அணிலும், ஆகுவும், குரங்கும், கழுதையும் பெரியார் அருளால் பெருமையுற்று விளங்கக் காணலாம். அணிற்பிள்ளை, காலத்தில் உதவி செய்து இராமனது அருளைப் பெற்றது. ஆகுவோ பிள்ளையார் வாகனமாய்ப் பெருமையுள்ளது. வானரம், இராமனுக்குத் துணைபுரிந்து உயர்ந்தது. கத்தும் கழுதையோ, மூத்தாள் வாகனமாய் அமைந்தது. திருமால் மச்சாவதாரம் கொண்டமையால், மீன் இனங்களையும் ஈனமென்றெண்ணி ஊறு செய்தல் ஆகாது.

இனிய நிழல் தரும் மரங்களின் அடியில் இறையவரை அமைத்துப் பழந்தமிழ் நாடு வழிபட்டது. குற்றாலநாதர் குறும்பலாவின்கீழ் அமர்ந்தார். நெல்வேலியப்பர் வேணுவின் அடியில் வீற்றிருந்தார். மதுரேசர் கடம்ப வனத்தில களித்தமர்ந்தார். தில்லைவனத்தில் அழகிய கூத்தர் திளைத்தார். மரமடர்ந்த வனங்கள் பிற்காலத்தில் நகரங்களாகச் சிறந்தபொழுது குறும்பலா வனம் திருக்குற்றாலமாகவும், வேணுவனம் திருநெல்வேலியாகவும், கடம்பவனம் மதுரையாகவும் தில்லைவன் சிதம்பரமாகவும் திகழ்வனவாயின.

மரங்களைப் போலவே செடிகொடிகளும், புற்பூண்டுகளும் இறையவரோடு இணைந்து வாழும் தன்மை அறியத்தக்கதாகும். எப்பயனும் தராத எருக்கும் குருக்கும் ஈசனுக்கினிய வென்றால், ஏனைய செடிகளைச் சொல்லவும் வேண்டுமோ? தும்பையும் துளசியும், அறுகும் புல்லும் இறையவர்க்கு ஏற்றனவாம்.

## 29. சோலைமலைக் கள்ளன்

தமிழ்நாட்டில் எத்தனையோ மலைகள் உண்டு. ஆயினும், மலையெல்லாம் சோலைமலை ஆகுமா? சோலைமலையைக் கண்டால் கண் குளிரும். கருதினால் மனம் மகிழும். அம்மலையிலுள்ள பெருஞ்சோலையைப் பசுஞ்சோலை என்பார். பழம் உதிர் சோலை என்பார். நறுஞ்சோலை என்பார். இன்னும் என்னென்னவோ சொல்லிப் புகழ்வார்.

முன்னொரு காலத்தில் அருகரும் புத்தரும் அம்மலையிலே தங்கியிருந்து தவம் புரிந்தார்கள். அன்னார் இருந்த குகை இன்றும் மலைமீது காணப்படுகின்றது. இப்பொழுது ‘பஞ்ச பாண்டவர் படுக்கை’ என்பது அதன் பெயர். அங்கு ஏறிச் செல்வதற்குப் படியும் இல்லை. பாதையும் இல்லை. இடுக்கு வழிகளில் நுழைந்தும், வழுக்குப் பாறையில் தவழ்ந்தும் வடுப்படாமல் பஞ்சபாண்டவர் படுக்கையை அடைந்து

விட்டால், நெஞ்சம் தழைக்கும். தமிழ்த்தென்றல்,'வருக' என்று அழைக்கும். தெள்ளிய சுனைநீர் தாகம் தீர்க்கும்.

அச்சுனையின் அருகே ஒரு பழங்குகை அமைந்திருக்கின்றது. அந்நாளில் அறவோர் இருந்து அருந்தவம் புரிந்த பள்ளி அதுவே போலும்! பெரிய ஆலமரம் ஒன்று அக்குகையின் மேற்கவிந்து அழகு செய்கின்றது. குகையின் உள்ளே படுக்கைபோல் அமைந்த பல பாறைகள் உள்ளன. இயற்கையோடு இசைந்து இன்புற்று வாழ விரும்புவோர்க்கு ஏற்ற இடம் அது.

தென்னாட்டில் சமண மதம் ஆதிக்கம் பெற்றிருந்த போது சமண முனிவர் பல்லாயிரவர் அந்நாட்டில் வாழ்ந்தார்கள். மதுரையைக் சூழ்ந்திருந்த எட்டு மலைகளில் மட்டும் எண்ணாயிரம் முனிவர்கள் இருந்தார்கள் என்பர். அந்த எட்டு மலைகளுள் ஒன்று சோலை மலை. அந்நாளில் 'இருங்குன்றம்' என்பது அதன் பெயராக வழங்கிற்று.

சோலைமலை பழங்காலத்தில் பாண்டியர்க்கு உரிய கோட்டையாகவும் விளங்கிற்று. பாண்டியர் அரசு வீற்றிருந்த தலைநகராகிய மதுரையின் வடகிழக்கே காதவழி தூரத்தில் உள்ளதாய், பத்து மைல் நீளமும் நாற்பது மைல் சுற்றளவும் உடையதாய்த் திகழும் கொண்டது சாலப் பொருத்தமுடையதன்றோ? மலையத் துவசன் என்ற பாண்டியன் அக்கோட்டையைக் கட்டினான் என்பர். அந்நாளிலே கட்டிய உட்கோட்டை, வெளிக்கோட்டை ஆகிய இரண்டும் இன்றும் காணப்படுகின்றன. திண்ணிய மதில் அமைந்த சோலை மலையைக் கண்டு, கண்ணும் மனமும் குளிர்ந்தார் பெரியாழ்வார். ''மதிள் சூழ் சோலைமலைக்கு அரசே'' என்று பாடினார்.

முருகனுக் குகந்த படைவீட்டிலே கறுப்பையன் காக்கும் கோட்டை மலையிலே ஒரு கள்ளனும் நெடுங்காலமாக உள்ளான்! அன்று இன்று எனாதபடி, என்றும் அவன் உள்ளான் என்று ஆன்றோர் கூறுவர். கள்ளனும் அவனே. காப்பானும் அவனே! ஆதியும் அவனே. அந்தமும் அவனே! சோதியும் அவனே! சோலை மலை அரசனும் அவனே! அம்மாயக் கள்வனைக் கண்டு கொண்டார் ஞானக் கவிஞராகிய நம்மாழ்வார்.

**''வஞ்சக் கள்வன் மாமாயன்**
**மாயக் கவியாய் வந்துஎன்**
**நெஞ்சம் உயிரும் அவையுண்டு**
**தானே யாகி நிறைந்தானே''**

என்று பாடினார். சோலைமலையுடைய திருமால், அழகர் என்னும் பெயருடையார். அழகர் மலை என்ற பெயரும் பெற்றது. இதையெல்லாம் அறிந்து,

**''அருகரோடு புத்தரும் அமர்ந்தருளும் சோலை**
**மருகனோடு மாமனும் மகிழ்ந்துறையும் சோலை**
**கருமையோடு வெள்ளையும் கலந்திலங்கும் சோலை**

என்று ஆடிப் பாடினாள் சோலைமலைக் குறவஞ்சி.

## 30. தெய்வம் படும் பாடு

தெய்வம் படும் பாடு தெய்வத்துக்குத்தான் தெரியும். அடியார் கையில் அகப்பட்டு எத்தனை அடியும் அவதியும் பட்டிருக்கின்றது தெய்வம்! எத்தனை ஏச்சும் பேச்சும் கேட்டிருக்கிறது! தொண்டர் என்று பேர் படைத்த மிண்டர்களுள் ஒருவன் தெய்வத்தைக் கல்லால் எறிந்தான். மற்றொருவன் பிரம்பால் அடித்தான். பித்தன் என்று ஏசினான் இன்னொரு தொண்டன். ‘‘தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே.’’

கும்பகோணத்திற்கு அருகே சத்தி முற்றம் என்ற சிற்றூர் உள்ளது. அங்குள்ள சிவாலயம் பாடல் பெற்றது ‘‘சக்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே’’ என்று பாடினார் திருநாவுக்கரசர். நாளடைவில் சக்தி முற்றும் என்ற பெயர் ‘சத்திமுத்தம்’ ஆயிற்று. அதிலிருந்து உருவெடுத்தது ஒரு காதற்கதை! சத்தியாகிய உமாதேவி ஈசனைக் காதலித்து முத்தமிட்ட இடம் அதுவோ என்று முடிவு கட்டினார் சிவனடியார். அதற்கு அடையாளமாகச் சத்தி சிவனை முத்தமிடும் கோலத்தில் அமைந்த திருவுருவமும் அவ்வாலளத்தில் நிறுவப் பெற்றது. அடியார்மீது வைத்த கருணையால் சத்தியின் முத்தத்தையும் சகித்துக்கொண்டு அந்த ஆலயத்துள் அமர்ந்திருக்கின்றார் ஈசன்.

சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரத்தில் சிறந்த திருமால் கோவில் ஒன்றுண்டு. திருவிண்ணகர் என்பது அதன் பழம்பெயர். ஆழ்வார்களுள் நால்வர் அத்திருப்பதியைப் பாடியருளினர். ‘‘திருவிண்ணகர் சேர்ந்த அப்பன், தன் ஒப்பார் இல்லப்பன்’’ என்று நம்மாழ்வார் பாடிப் போற்றினார். அவர் திருவாக்கின் அடியாக ‘ஒப்பிலியப்பன்’ என்ற திருநாமம் அப்பெருமாளுக்கு அமைந்தது. காலப்போக்கில் ஒப்பிலியப்பன் என்பது ‘உப்பிலியப்பன்’ என மருவிற்று. அதன் விளைவாக இன்றும் உப்பில்லாத திருவமுதை அப்பெருமாளுக்கு அளிக்கின்றார்கள்.

வருண ஜெபம் செய்தால் பருவ மழை பெய்யும் என்பது வைதிகக் கொள்கை. ஆயினும், மழை பெய்விப்பதற்குக் குறுக்கு வழியொன்று சில ஊர்களிலே கையாளப்படுகின்றது. ஆற்றங்கரையில் அரசமரத்தடியில் அமர்ந்துள்ள பிள்ளையாருடைய மூச்சைப் பிடித்துவிட்டால் நம்பிக்கை, அதற்காகப் பிள்ளையாரைச் சுற்றிக் களிமண்ணால் ஒரு கோட்டை கட்டுவர். தண்ணீரைக் கொண்டுபோய் அதில் கொட்டுவர். பிள்ளையார் கண் அளவிற்குத் தண்ணீர் நிறைந்தவுடன் மழைக்குறி ஏதேனும் தோன்றுகிறதா என்று விண்ணை நோக்குவர். கார்மேகம் ஒன்றையும் காணாவிட்டால் அவரைச் சுற்றியுள் தண்ணீரில் காரமான மிளகாய்ப் பொடியைக்

கரைப்பர். இவ்வாறு பாமரமக்கள் எடுக்கும் 'மூச்சுப்பிடி' விழாவில் சிலவேளை மழைபெய்வதும் உண்டு. இது பிள்ளையார் படும்பாடு.

தமிழ்நாட்டிலுள்ள சிறந்த திருக்கோவில்களுள் ஒன்று வைத்தீசுரன் கோவில். புள்ளிருக்கு வேளூர் என்பது அதன் பழம்பெயர். அங்குள்ள ஈசன் வைத்தியநாதன்.

உமாதேவி மயில் வடிவாக இறைவனைப் போற்றிய இடம் மயிலாப்பூர் என்பர். அவ்வூரிலே அம்மன் கோவில் ஒன்று உள்ளது. முண்டகக் கண்ணியம்மன் கோயில் என்பது அதன் பெயர். அன்பினால் வழிபடும் தொண்டர்களுக்கு முண்டக் கண்ணியாகவா காட்சியளிப்பாள். முண்டகக் கண்ணி என்பது அவள் பெயர். முண்டகம் என்பது தாமரை. சிறப்பு வகையில் செந்தாமரையைக் குறிக்கும். அருளுருவாகிய அம்மையின் செவ்வரி படர்ந்த அழகிய கண்களை வியந்து முண்டகக் கண்ணி என்று ஆன்றோர் பெயரிட்டனர். அதை முண்டக் கண்ணியாகச் சிதைத்து விபரீதம் விளைத்துவிட்டது நம் மக்களின் சிறுமை.

## VII. இருமையில் ஒருமை

### 31. ஆண்மையும் அருளும்

நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக இம்மாநிலத்தில் மண்ணாலும் பெண்ணாலும் மறப்போர் நிகழ்ந்து வருகின்றது. உலகிலுள்ள மக்கள் ஒரு வயிற்றுப் பிறந்தாற்போல் ஒற்றுமையாக வாழத் தலைப்பட்டால், போர் ஒடுங்குமென்று மும்மையும் உணர்ந்த மூதறிஞர் கருதுகின்றார்கள். ஆறறிவுடைய மாந்தர் அமர்க்களம் புகுந்து, அடுபோர் புரிந்து, குருதி சொரிவதை நினைக்கும் போது அறிஞர் நெஞ்சம் குலைவது இயல்பேயன்றோ? இதனாலேயே இந்நாட்டில் முறை திறம்பாது அரசாண்ட மன்னர்கள் மாறுபட்ட அரசரோடு மலைய நேர்ந்தக்கால் அறநெறி விலகாது அமர் விளைந்தார்கள்.

அருளும் ஆண்மையும் இனிதமைந்த பண்டை அரசர், மாற்றாரொடு போர் தொடங்கு முன்னே, மதி நலம் வாய்ந்த தூதுவரை அவர்பால் அனுப்பி நீதி பெற முயன்றார்கள். இவ்வாறு வெம்போர் விலக்கும் விழுமிய கருத்துடன் வேற்றரசிடம் தூது செல்லும் அறிஞரை அவமதிப்பதும் துன்புறுத்துவதும் ஆகாவென்று அரசநீதி முறையிடுகின்றது. அயோத்தி மன்னனுடைய தூதனாய் இலங்கை மாநகருக்குச் சென்ற அனுமன்மீது சீற்றமுற்று, அவனைச் சிந்திக்கக் கருதிய அரக்க மன்னனை நோக்கி, அறிவு வாய்ந்த வீடணன்.

**"மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய**
**ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்**
**தூதரைக் கோறலும் தூய்தன் றாம்என**
**ஏதுவிற் சிறந்தன எடுத்துக்காட்டினான்"**

என்று கவியரசராகிய கம்பர் கூறுமாற்றால், தூதரைக் கொல்லும் பாவம், மாதரைக் கொல்லும் மாபெரும் பாவத்தை ஒப்பதாகும் என்பது நன்கு விளங்குகின்றது.

மாற்றரசர், செந்நெறி விலகி, சீர் முறை தவறிப்புன்மையே புரியினும், அவரது அடாத செய்கையைப் பொறுத்து, இயன்ற வரையில் போரைத் தடுக்க முயல்வதே அறம் திறம்பாத அரசர் செயலாகும். இத்தகைய பெருமை, அயோத்தி அண்ணலாகிய இராமனிடம் விளங்கிற்று. கடல்சூழ்ந்த இலங்கையில் தன் காதலி சிறையிருந்ததை அறிந்து, கருங்கடலைக் கடப்பதற்குக் கல்லால் அணை அமைத்து, வானர சேனையோடு இலங்கையின் நகர்ப்புறம் எய்தினான். ஆயினும், தனக்குத் தவறிழைந்த இலங்கை வேந்தன் மீது போர் தொடங்கு முன்னே, அம்மன்னன், சீதையை விடுவானா என்று அறியுமாறு அங்கதனை அவனிடம் தூதனுப்பக் கருதினான். இவ்வாறே சூதினால் அரசிழந்து, பன்னீராண்டு படர்கானகத்தில் துயர் உழந்து, அப்பால் ஓராண்டு ஒருவரு மறியாது ஊர் நடுவே கரந்துறைந்து முடிந்து பின்னும், வழிக்கு வராத வணங்காமுடி மன்னன் மீது படையெடுக்கும் முன்னே குருகுல மன்னன் கண்ணனைத் தூதனுப்பிக் கடும்போர் விலக்கக் கருதினான்.

மாற்றார் படையைக் கண்டு கலங்காத இளையோர், மூத்தோரது பண்பாட்டைக் கண்டு கலங்கினார்கள். மானத்தால் மனமிடிந்த தம்பியர், மாற்றரசரிடம் வில்லாட இசைந்தனரேயன்றிச் சொல்லாட இசைந்தாரல்லர் 'தேவியை விடுகின்றானா அன்றி ஆவியை விடுகின்றானா' என்றறிந்து வருமாறு இராமன் தூதனுப்பத் துணிந்தபோது, எவருக்கும் இளையாத இலக்குவன் தமையனை நோக்கி,"ஐயனே! இலங்கை அரக்கன் உன் தேவியைச் சிறையில் வைத்தான். தேவரை இடுக்கண் செய்தான். அந்தணரை அலற வைத்தான். இந்திரனுக்கு இடர் விளைத்தான். மாயம் விளைத்துச் சீதையை மயங்க வைத்தான். சஞ்சலத்தால் நைந்த மங்கைக்கு 'அஞ்சேல்' என்று அபயமளித்த கழுகின்வேந்தனைக் கருணையின்றிக் கொன்றான். இத்தகைய பாவியின் ஆவியைப் போக்காது அருள் காட்டலாகுமோ?" என்று வெகுண்டுரைத்தான். அவ்வுரையை அமையக் கேட்ட அயோத்தி அண்ணல், புன்னகை பூத்து,'புயவலி அமைந்திருப்பினும் பொறையொடும் பொருந்தி வாழ்வதே ஏற்றதாகும். அதுவே அறமு மாகும்" என்று மாற்றம் உரைத்தான்.

இவ்வண்ணமே வம்பு செறிந்த வணங்காமுடி மன்னன்பால் கண்ணனைத் தூதனுப்பத் துணிந்தபோது தண்டேந்திய வீமன் தருமனை நோக்கி,"ஐயனே! பன்னலம் திகழும் பாஞ்சாலி, பாவியர் கைப்பட்டு,

**"ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம்**
**புனல்சேரா அளகம் சோர**
**வேறான துகில்தகைந்த கைசோர**
**மெய்சோர வேறோர் சொல்லும்**

**கூறாமல் கோவிந்தா கோவிந்தா**

**என்று அரற்றிக் குளிர்ந்து நாவில்**

**ஊறாத அமிழ்தூற உடல்புளகித்து**

**உள்ளமெலாம் உருகி னாளே.”**

அந்நிலையில் தலைகவிழ்ந்து பொறுத்திருந்த நமக்கும் நம் மரபினுக்கும் என்றும் தீராத வசை தந்தீர். இன்னும் தூதனுப்பி பணிந்து இரந்து புவி பெற்று உண்டு இருப்பதற்குத் துணிகின்றீரே! அந்தோ! அரவுயர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்தோய்! உமது அருளுக்கு அஞ்சினேன். ஐயோ! இந்தத் தமையன், வாடுகின்ற மடப்பாவை வரம் முடித்தார்கள்.

அப்பால், போர் நிகழ்ந்தபோது மானத்தால் மனம் கொதித்த தம்பியைத் துணைக்கொண்டு அயோத்தி மன்னன் இலங்கை வேந்தனை வென்றான். செம்மை தவறிய சுயோதனன் செயல்கண்டு நிந்தையறிந்த தம்பியரைத் துணைக்கொண்ட குருகுல வேந்தனும் மாற்றாரை வென்றான். அறம் திறம்பாத இவ்வரசர் இருவரும் பொறுமை யென்னும் பெருமைக்கோர் இருப்பிடமாய் இலங்கினர். மாற்றார் சிறுமை செய்யினும் அச்சிறுமையைத் தம் பெருமையாற் பொறுத்து அறநெறியில் தலைநின்றனர்.

படைக்கலமிழந்து எளியராய் எதிர்ப்படும் பகைவரை, அருள்வாய்ந்த அரசர், எஞ்ஞான்றும் தமது படைக்கலத்தால் நலியச் செய்வதில்லை. வெள்ளி மாமலை யெடுத்த இராவணன் படைக்கலமிழந்து, எளியனாய்த் தனக்கு எதிரே போர்க்களத்தில் நிற்கக் கண்ட கோசல நாட்டு வள்ளல், அருள் அளாவிய ஆண்மையோடு,

**“ஆளை யாஉனக் கமைந்தன**

**மாருத மறைந்த**

**பூளை யாயின கண்டனை**

**இன்றுபோய்ப் போர்க்கு**

**நாளை வாவென நல்கினன்”**

என்று கவியரசர் கூறுமாறு பகையரசனுக்கு விடை கொடுத்தனுப்பினான்.

அவ்வாறே, வில்லாண்மையில் தலைசிறந்து விளங்கிய விசயன், போர்க்களத்தில் படைக்கலம் இழந்து எளியனாய் நின்ற கர்ணனது நிலைகண்டு தளர்ந்து, அவன்மீது அம்பெய்தலைத் தவிர்த்த ஆண்மை இராமனது உயரிய அருளை நிகர்ப்பதாகும்.

**“அன்று போர்புரி சேனை யின்பதி**

**யானை வீரனைநீ**

**இன்று போய்இனி நாளை வாஎன**

**இனிதி யம்பினனால்**

**வென்றி கூர்வரி வின்மை யால்அடல்**

**வெவ்வ ரக்கரைமுன்**

**கொன்ற காளையை ஒத்த பேரிசை**

**கொண்ட ஆண்மையினான்''**

என்று வில்லி, விசயனது பெருமையைப் போற்றிப் புகழ்ந்தார்.

இங்ஙனம் இம்மாநிலத்தில் அறநெறி மறநெறியோடு மாறுபடும்பொழுது இறுதியில் அறமே வெல்லும் என்பது ஒருதலை. ''பொறுத்தார் பூமி யாள்வார்'' என்னும் பொய்யாமொழிக்குக் கோசல நாட்டு வீரனும் குருகுலக் குரிசிலும் இணையற்ற சான்றாவர்.

## 32. கர்ணனும் கும்பகர்ணனும்

தொன்றுதொட்டுச் செய்ந்நன்றி யறிந்து ஒழுகு தலைச்சிறந்த அறமெனக் கடைப்பிடித்த நாடுகளில் தலைசிறந்தது தமிழ்நாடு. நன்றி மறப்பது நன்றன்று என்றும், நன்றல்லதை அன்றே மறப்பது நன்று என்றும், தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகின்றது. இன்னும், காலத்தினாற் செய்த நன்மை சிறிதாயினும் அது ஞாலத்தின் மாணப்பெரிது என்றும், ஒருவன் திணைத்துணை நன்மை செய்யினும் அதைப் பனைத்துணையாய்க் கொள்ளுதலே பண்புடைமை யாகும் என்றும் அற நூல்கள் நன்றியின் பெருமையை நயம்படக் கூறுகின்றன.

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லா**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு''**

என்று நாயனார் கூறிய அறிவுரையைப் பொன்போல் போற்றினர்.

தமிழ்மக்கள், இக்குறளில் அடங்கிய கருத்தை விரித்துரைக்கப் போந்த கம்பர், நன்றியின் பெருமையை நன்கெடுத்துரைத்தார். முன்னறி தெய்வமாகிய தாயையும் தந்தையையும், அறியாமையை அகற்றும் ஆசானையும் அறம் திறம்பாத அந்தணரையும் பயன் உவந்தளிக்கும் பசுவையும், பாவம் ஒன்றறியாப் பாலரையும், மெல்லியல் வாய்ந்த மாதரையும் கொலைபுரியும் கொடியருக்கும் அறநூல்களில் கழுவாய் உண்டு. ஆனால், செய்ந்நன்றி சிதைத்தோர்க்கும் எஞ்ஞான்றும் உய்யும் வழியில்லை என்று கம்பர் அருளிய பொருளுரை அறிந்து போற்றுதற்குரியதாகும்.

செய்ந்நன்றி அறிதலென்னும் செம்மை சான்ற தொல்லறம் அங்கநாட்டு அரசனாய கர்ணனிடமும், தலைசிறந்து விளங்கிற்று, கர்ணன், கன்னியாயிருந்த குந்திதேவியின் மைந்தனாய்த் தோன்றினான். கன்னிப்பருவத்திலே பிறந்த மைந்தனையும், அவனை உயர்த்த அன்னையாய தன்னையும் உலகோர் பழிப்பர் என்று உன்னி, அழகிய மைந்தனை ஒரு பேழையில் அடைத்து ஆற்றில் விட்டாள் அமமங்கை. ஆதரவற்று ஆற்றில் மிதந்து வந்த மைந்தன், ஒரு தோர்ப்பாகனின் கையிற் சேர்ந்து, அவன் மனையில் வளர்பிறை போல் வளர்ந்து வந்தான். இளமையிலேயே வீரமும் அழகும் வாய்ந்து விளங்கிய கர்ணனைக் கண்ட துரியோதனன்,

**''கற்றவர்க்கும் நலனிறைந்த**

**கன்னியர்க்கும் வண்மைகை**

**உற்றவர்க்கும் வீரரென்று**

**உயர்ந்தவர்க்கு வாழ்வுடைக்**

**கொற்றவர்க்கும் உண்மையான**

**கோதில்ஞான சரிதராம்**

**நற்றவர்க்கும் ஒன்றுசாதி**

**நன்மைதீமை இல்லையால்''**

என்றபடி அவ்வீரனை ஆதரித்து வளர்த்து, அங்க நாட்டுக்கு அரசனாக்கி, அவனுடன் தோழமை கொண்டான். தன் தம்பியரும் சுற்றமும் அவன் அடி வணங்குதற்குரிய தோற்றமும் ஏற்றமும் அளித்தான். அநாதையாக ஆற்றில் மிதந்து வந்த தன்னை அன்போடு எடுத்து வளர்த்து, அரசுரிமையும் அளித்து, அயலார் மதிக்குமாறு அரும் பதவியும் நல்கிய துரியோதனனைக் கர்ணன் அமையாய்ப் போற்றினான்.

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் கடும்போர் நிகழும் என்றறிந்த கண்ணன், அறநெறி துறந்த துரியோதனன் படையில் ஒப்புயர்வற்ற வீரனாக விளங்கிய கர்ணனை எளிதில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்தார். ஆதலால், அவனை ஐவரோடும் சேர்க்க விரும்பினான். அதன் பொருட்டுக் குந்தி தேவியைக் கர்ணனது மாளிகைக்கு அனுப்பினான். கர்ணனும் அப்பொருமாட்டியை அன்பினால் இன்புற வணங்கி ஆசனத்தமர்த்தினான். அப்போது குந்திதேவி தன் மைந்தனைக் குழைந்து நோக்கி,''ஐயனே, யானே உன்னை ஈன்ற தாய். கதிரவன் அருளால் என்பால் நீ பிறந்தாய். பழியஞ்சி உன்னைப் பேழையில் விடுத்தேன்'' என்றுரைத்துப் பால்சோர நின்றாள். கர்ணனும் தன் அன்னை அவளே என்று ஐயமற அறிந்தான். அந்நிலையில், வீர மைந்தனை அன்போடு அணைத்து, பொன்முடி மோந்து,''ஐயனே! உன்னை வளர்த்தெடுக்க நல்வினை செய்திலேன். ஆயினும்,வரு, என் பிள்ளாய்: உன் தம்பியர் ஐவரும் அன்பினால் வணங்கி ஆட்செய்ய, நீயே அரசனாய் அமர்ந்து ஆண்மையும் செல்வமும் விளங்கச் செங்கோல் செலுத்துவாயாக'' என்று மொழிந்தாள் குந்திதேவி.

''தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை'' என்னும் அமுத வாக்கைக் கர்ணன் நன்கு அறிந்தவனே யாயினும், சுயோதனன் தனக்குச் செய்த பெருநன்றியை மறந்து அன்னையின் உரைவழி நடக்க இசையானாயினான். ''எனக்கு நன்றி செய்த துரியோதன மன்னனுக்காக அமர்க்களத்திற் சென்று போர் புரிவதோ அறமும் புகழும் ஆகும். அவன் உணவை யுண்டு வாழ்ந்த யான். செஞ்சோற்றுக் கடன் கழியாது என் தம்பியருடன் சேரேன்'' என்று கர்ணன் எடுத்துரைத்த வீர மொழிகளில் அவனது நன்றி மறவாத நலத்தினை நன்கு காணலாம்.

இவ்வாறே இலங்கை வேந்தனுடைய தம்பியாய்த் தோன்றிய கும்பகர்ணன், வரத்திலும் வலிமையிலும் சிறந்து விளங்கினான். ''அயோத்தி மன்னனுடைய

மனையாளாய சீதையை இலங்கை நாதன் கவர்ந்து சிறை வைத்து அடாத செயல் என்று அவனிடம் எடுத்துரைத்தான். பிறன்மனை நயந்த தமையனது செயல் தவறு என்று இடித்துரைத்து அவனைத் திருத்த முயன்றான்.

கும்பகர்ணனுடைய நீர்மையையும் திறமையையும் அறிந்த இராமன் அவ்வீரனைத் தன்பால் இழுத்துக் கொள்ளுமாறு விபீஷணனை அனுப்பினான். அவனும் கும்பகர்ணனை அடைந்து, அடிபணிந்து,“ஐயனே! எனக்கு இன்னருள் சுரந்த இராமவீரன் உனக்கு அபயமளிப்பான். மாயப்பிறவி நோய்க்கும் மருந்தாக அமைவான். எனக்கு அவன் தந்த இலங்கை யரசும் செல்வமும் உனக்கு யான் தருவேன். ஆதலால், தீவினை புரியும் தமையனைத் துறந்து அறநெறியாய இராமனைச் சேர்தலே அறிவுடைய உனக்கு அழகாகும்” என்று நீதியின் நேர்மையை எடுத்துரைத்தான்.

அதுகேட்ட கும்பகர்ணன் மனம் வருந்தித் தம்பியை நோக்கி,“ஐய, நீரிற்குமிழிபோல் நிலையற்றதாகிய இவ்வுலக வாழ்வை விரும்பி, இராவணன் எனக்குச் செய்த பெருநன்றியை மறப்பேனோ? நெடுநாளாக என்னை வளர்த்துப் போர்க்கலம் செய்து, இங்கனுப்பிய இலங்கைநாதனுக்கு உயிர் கெடாது பகைவர் பக்கம் போவேனோ? தன் தலைவன் தகாத செயல் செய்து நெடும் பகை தேடினான் என்று நன்றாய் அறிந்திருந்தும், இராமவீரனது இணையற்ற கணையால் தான் ஆவி துறப்பது திண்ணம் என்று தெரிந்திருக்கும். ஆவியையும் அளவிறந்த செல்வத்தையும் வெறுத்து, தமையன் பொருட்டு உயிர் துறந்த வீரனது மனநலம் வியந்து போற்றுதற்குரியதன்றோ? ஆகவே, கர்ணனும் கும்பகர்ணனும் செய்ந்நன்றியறிதலாகிய அறத்தை ஆவியினும் அருமையாக ஆதரித்த வீரர் என்பது இனிதுணரப்படும்.

## 33. காளத்தி வேடனும் கங்கை வேடனும்

தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றினான். ஒரு வேடன். வடநாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்தான். மற்றொரு வேடன். காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும், கங்கை வேடனைக் குகன் என்றும் இலக்கிய உலகம் போற்றும். இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாப் புகழ் பெற்றனர்.

காளத்திநாதன்பால் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த்தெடுத்த கண்ணப்பன் பெருமை தமிழ்நாடெங்கும் பரவி நின்றது. எல்லையற்ற அன்பிற்கு அவ்வேடர் பெருமானே எடுத்துக்காட்டாயினார்.

**“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி**
**வண்ணம்ப ணித்தென்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ”**

என்று வண்டை நோக்கிப் பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்ற அன்பின் திறத்தினை மாணிக்கவாசகர் நன்கு விளக்கியுள்ளார்.

கோலநாட்டு இளவரசனாகிய இராமன், தாயின் சொல்லைத் தலைக்கொண்டு, தனக்குரிய நாடு துறந்து, கங்கைக்கரையை வந்தடைந்தான். என்று அறிந்த குகன் அக்குரிசிலைக் காணப்புறப்பட்டான். வான்மிக முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப்புறப்படும் கோலம், ஓர் அரசன் மற்றோர் அரசனைக் காண எழுகின்ற தன்மையில் அமைந்திருக்கின்றது. ஆனால் கம்பர், ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாகக் குகன் கோலத்தைத் திருத்தியமைத்துள்ளார்.

**“தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்**

**நாவாய் வேட்டுவன் நாயடியேன்”**

என்று குகனே கூறுதலால் இவ்வுண்மை விளங்கும்.

காளத்தி வேடன் தனக்கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் இனியதாகும் என்று எண்ணி, அதனை எடுத்து ஊட்டியவாறே, குகன் தனக்கினிய கங்கையாற்று மீனையும் கொம்புத்தேனையுமே எடுத்துக்கொண்டு சென்றான். அச்செயல் நிகழும்போது இராமனுடன் விருத்த மாதர் சிலர் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் குகனது மனப்பான்மையை அறியாதவராய், தகாத பொருள்களை வேடன் எடுத்து வந்து அபசாரம் செய்துவிட்டான் என்றெண்ணி வெறித்து நோக்கினர். அவர்கள் மனத்தில் நிகழ்ந்த கருத்தினை அறிந்த இராமன்,

**“அரியதாம் உவப்ப உள்ளத்து**

**அன்பினால் அமைந்த காதல்**

**தெரிதரக கொணர்ந்த என்றால்**

**அமுதினும் சீர்த்த வன்றே”**

என்ற விருத்த மாதரைத் தெருட்டியருளினான்.

கண்ணப்பனுக்கு இனிய காளத்திநாதனைச் சிவகோசரியார் என்னும் வேதியர் முறைப்படி பூசனை செய்து வந்தார். கண்ணப்பன் இறைச்சியைக் கொண்டு திருக்கோயிலில் இட்டதைக் கண்டு செய்வதொன்றறியாது கவலை கொண்டிருந்தார். அதை உணர்ந்த இறைவன் அவர் களவிலே தோன்றி,

**“அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்னும்**

**அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்**

**அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்**

**அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்”**

இது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

இன்னும் காளத்தி வேடனது அன்பிற்கும் கங்கை வேடனது அன்பிற்கும் ஒரு சிறந்த ஒற்றுமையுண்டு. இருவரும் இறைவனிடம் பயன் கருதாப் பக்தி பூண்டவர்கள்.

‘கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன்’ என்று கொண்டவர்கள். இத்தகைய பக்தியே சாலச் சிறந்தது என்று சான்றோர் கூறுவர். இராமன்நாடு துறந்து காடு புகுந்த பின்னர், அவன்பால் அன்பு கொண்டவர் மூவர். கங்கைக் கரையிலே குகன் இராமனைச் சேர்ந்தான். கிஷ்கிந்தையில் சுக்ரீவன் வந்து சேர்ந்தான். இலங்கையில் விபீஷணன் வந்து அடைந்தான். தன்னை வந்தடைந்த மூவரையும் தன்னுடைய குடும்பத்திலே சேர்த்துக் கொண்டான் இராமன். எனினும், சுக்ரீவன் இராமனிடம் அன்பு பூண்டதற்குக் கைம்மாறாகக் கிஷ்கிந்தை அரசைப் பெற்றான். விபீஷணன் இராமனைச் சரணடைந்து இலங்கையரசைப் பெற்றான். குகன் ஒருவனே பக்திக்காகப் பக்தி செய்து கைம்மாறு கருதாத அன்பின் நீர்மையை நன்கு விளக்கிக் காட்டினான்.

காளத்தி வேடனும் கங்கை வேடனும் அன்பு நெறியில், ஒப்பாரின்றி உயர்வுற்று ஏனைய அன்பர்க்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்திலங்கும் தன்மை இனிது விளங்கும்.

## 34. பாரதப் பண்பாடு

பழம்பெருமை வாய்ந்த பாரநாடு. வடக்கே இமயமலை முதல் தெற்கே குமரிமுனை வரையுள்ள இப்பரந்தநாட்டிலே மொழிகள் பல உண்டு. மதங்கள் பல உண்டு. இனங்கள் பல உண்டு. ஆயினும் பாரதப் பண்பாடு ஒன்றே.

இத்தகைய பண்பாட்டின் ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றது தமிழிலக்கியம். பாரதநாட்டிலுள்ள வடமொழிக்கும் தென்மொழிக்கும் எந்நாளும் பிணக்குமில்லை. வடநாட்டிலும் தென்னாட்டிலும் மதுரை என்னும் பெயருடைய திருநகரம் உண்டு. வடமதுரையில் அவதரித்தார் கண்ணபிரான். தென்மதுரையில் புகழ்பெற்றார் திருவள்ளுவர். கண்ணன் அருளிய கீதையும், வள்ளுவர் ஞான நூல்கள். ‘இவ்விரண்டையும் அச்சாக உடையது பாரத ஞானரதம்’ என்னும் கருத்தை அமைத்துப் பாடினார் ஒரு பழங்கவிஞர்.

**“உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்**
**உத்தர மாமதுரைக்(கு) அச்சென்ப - இப்பக்கம்**
**மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்**
**போதார் புனற்கூடற்(க) அச்சு”**

என்பது நல்கூர் வேள்வியார் பகர்ந்த நல்லுரை.

முன்னாளில் பாடலிபுத்திரம் என்னும் பெயருடைய இரு நகரங்கள் பாரதநாட்டில் சிறந்து விளங்கின. அவற்றுள் ஒன்று வடக்கே கங்கைக் கரையில் இருந்தது. மற்றொன்று தெற்கே கெடில நதிக்கரையில் இருந்தது. அசோக மன்னன் காலத்திலே சிறந்து விளங்கிற்று வட நாட்டுப் பாடலிபுத்திரம். பல்லவ மன்னர் காலத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்தது. தென்னாட்டுப் பாடலிபுத்திரம் இப்பாடலி நகரங்கள் இரண்டும் கலைக்களஞ்சியங்களாகக் காட்சியளித்தன.

இத்தகைய சீர்மை வாய்ந்த பாடலி நகரங்கள் இக்காலத்தில் வேறு பெயர் பெற்றுள்ளன. வடநாட்டுப் பாடலிபுத்திரம் பாட்னா என்றும், தென்னாட்டுப் பாடலிபுத்திரம் திருப்பாதிரிப்புலியூர் என்றும் இப்போது வழங்குகின்றன.

பாரதநாட்டுப் புண்ணியத் தலங்களுள் காசி என்னும் வாரணாசியும், இராமேச்சுரமும் தலைசிறந்தன என்பது தக்கோர் கொள்கை. இந்தியநாட்டுத் தென்கோடியில் உள்ள இராமேச்சுரத்தை நாடி வருவர் வடநாட்டார். காசியிலுள்ள விசுவநாதரை வழிபடச் செல்வர் தென்னாட்டார். வடகாசியின் வாசியறிந்த தமிழ்மக்கள் தம் நாட்டிலும் ஒரு காசியை உண்டாக்கினர். தென்காசி என்பது அதன் பெயர். பராக்கிரம பாண்டியன் என்று அரசன் ‘‘தென்காசி கண்ட பெருமாள்’’ என்று சாசனங்களிலே பேசப்படுதலால், அவனே தென்காசியை உருவாக்கி, அங்கு விசுவநாதருக்கு ஒரு திருக்கோயிலும் கட்டினான் என்று கொள்ளலாம்.

எல்லாம் வல்ல இறைவனை வைத்தியநாதன் என்னும் பெயரால் வழிபடும் வழக்கம் வடநாட்டிலும் உண்டு. தென்னாட்டிலும் உண்டு. சிதம்பரத்திற்கு அருகே வைத்தீஸ்வரன் கோயில் என்ற சிவஸ்தலம் இருக்கின்றது. அங்குள்ள ஈசன் ‘‘மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்’’ என்று பாடினார் திருநாவுக்கரசர்.

இங்ஙனம் பல்லாற்றாலும் ஒருமையுற்று விளங்கும் பாரதப் பண்பாட்டை ஒல்லும் வகையால் பேணி வளர்த்தல் நல்லறிஞர் கடனாகும்.

## 35. இரு மலையும் தமிழ் மலையே

தெற்குமலைச் சாரலில் வசந்தகாலத் தென்றல் இனிமையாகத் தவழ்ந்தது. அவ்வின்பத்தை நுகர்ந்த குன்றக் குறவர் வேட்டையாட எழுந்தனர். குற்றாலத்திலும் போதிய மலையிலும் வாழ்ந்த குறவஞ்சியர் இருவர் குறிசொல்லிப் பிழைப்பதற்காக மதுரையை நோக்கி நடந்தனர். இளங்காற்று வீசிய திருநெல்வேலிச் சாலையில் ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்ந்தனர். அவ்வஞ்சியர்.

‘விண்ணானக் குறத்தி’ என்று பெயர் பெற்றிருந்த குற்றாலக் குறவஞ்சி தன் மலையின் பெருமையை விளம்பத் தொடங்கினாள். ‘கயலைக்கு ஒப்பானது குற்றாலம்’ என்று கவிகள் பாடியுள்ளார் என்று சொல்லிப்பாடத் தொடங்கினாள்.

**‘‘தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**
**செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்**
**தவமுனிவர் கூட்டுறவும் அவர்இருக்கும் குகையும்**
**சஞ்சீவி முதலான விஞ்சைமூ லிகையும்**
**கவனசித்தர் ஆதியரும் மவுனயோ கியரும்**
**கத்திருக்கும் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே’’**

என்று பெருமிதமாகப் பாடி முடித்தாள்.

பொதியமலைக் குறவஞ்சியின் மனத்தில் புதியதொரு கிளர்ச்சி பிறந்தது. பொதியமலையைப் படாத புலவர் உண்டா? தமிழை வளர்க்கும் தவமுனிவன் அங்கே தங்கி வாழ்கின்றான். அங்கயற்கண் அம்மையின் அருள்போல் அருவி நீர் பொழியும். இதனினும் சிறந்த மலை இவ்வுலகில் உண்டோ?''

**"திங்கள்முடி சூடுமலை**
**தென்றல்விளை யாடும்மலை**
**தங்கும்முகில் சூழுமலை**
**தமிழ்முனிவன் வாழுமலை**
**அங்கயற்கண் அம்மைதிரு**
**அருள்சுரந்து பொழிவதென**
**பொங்கருவி தூங்கும்மலை**
**பொதியமலை என்மலையே''**

என்று பாடினாள்.

தமிழ்முனிவன் வாழும் மலை என்ற சிறப்பைக் கேட்ட குற்றாலக் குறவஞ்சி சிறிது மனம் மடங்கினாள். ஆயினும் விட்டுக்கொடுக்க மனமின்றிக் குற்றாலப் பழங்களின் செழுமையையும், மலர்களின் சிறப்பையும் எடுத்துரைக்கத் தொடங்கினாள்.

குற்றால மலையில் கொத்துக் கொத்தாய்த் தொங்கும் மாம்பழங்களை வானரங்கள் பறித்துப் பந்து அடித்து விளையாடும். வானுற ஓங்கிய மரங்களின் மலர்கள் விண்ணுலகில் வெடித்து மனம் கமழும். இத்தகைய மலைக்கு உன் மலை இணை ஆகமோ?'' என்று இறுமாந்து கூறினாள். இவ்வாறு குற்றால மாது கூறிய மாற்றம் பொதியமலை மாதின் மனத்தை வெதுப்பியது. வண்ணமான சொற்களால் தன் மலைவளம் கூறத் தொடங்கினாள்.

எனது மலையில் கொழுங் கொடியில் செழுங் கிழங்கு வீழும். அக்கிழங்கை அகழ்ந்தெடுத்து அக மகிழ்வோம். குன்றில் நிறைந்த குறிஞ்சி மலர்களைக் கொய்து குழைந்த முல்லைக்கொடியில் வைத்துத் தொடுப்போம். பழம் பிழிந்து சாறெடுத்து அதனைத் தேனோடு கலந்து தினமும் உண்போம். செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தினருக்குக் கொடுப்போம். பதமிட்ட புலித்தோலைப் பாயாக விரிப்போம். காலையில் எழுந்து கருணை வடிவாய அங்கயற்கண்ணியைத் தொழுவோம். இத்தகைய மலையினும் செம்மை வாய்ந்த மலை எங்குமேயில்லை' என்று செம்மாந்து உரைத்தாள்.

நாட்டின் பெருமை கூறிப் போதியமலைக் குறத்தியை வெல்ல இயலாதென்றறிந்த குற்றாலக் குறமாது ஆற்றின் பெருமையால் அம்மாதை வெல்லக் கருதினாள். ஞானிகளும் அறியாத சித்திர நதியின் பிறப்பையும் சிறப்பையும் குறவஞ்சி கூறத் தொடங்கினாள். திரிகூட மலையில் தேன் அருவித் திரை எழும்பிச் சிவகங்கை

ஆறாய்ப் பரந்து, செண்பக அடவியின் வழியாய்ச் சென்று, பொங்குமா கடலின் வீழ்ந்து, சித்திர நதியாய்ப் பாயும் சிற்றாற்றின் பெருமையைக் குறவஞ்சி நிறைந்த சொற்களால் போற்றிப் புகழ்ந்தாள்.

இதைக்கேட்ட பொதியமலைக் குறமாது தனது மலையில் தோன்றும் பெரியாறென்னும் பொருநையாற்றின் பெருமையை அழகுற எடுத்துரைத்தாள். குறுமுனிவன் வாழும் இடத்திலே தோன்றி வானருவியாக வீழ்ந்து பொருநையாறாகப் பெருகிவரும் பொதிய மலையாற்றின் பெருமையைக் குறமாது கனிந்த சொற்களால் எடுத்துரைத்தாள்.

இவ்வாறு பொருநையாற்றின் பெருமையை வியந்து கூறக்கேட்ட குற்றாலக் குறவஞ்சி பொதிய மலையின் பெருமையை அறிந்து இரு மலையும் நிகரென்னும் இதற்கையம் உண்டோ என்னும் சமரச அறிவோடு சாந்தமாய்ப் பிரிந்து சென்றாள்.

## VIII. பாரதியார் பாட்டின்பம்

### 36. செந்தமிழ் நாடு

இவ்வுலகில் முன்னணியில் நிற்கும் நன்னாடுகளெல்லாம் தமது தாய்மொழியைத் தலைக்கொண்டு போற்றுகின்றன. தமிழ்நாட்டில் சில காலத்திற்கு முன்னர் அந்நிய மொழிகளில் பேசுவதும் எழுதுவதும் அறிவுடைமைக்கு அழகென்றும், தாய்மொழியைப் புறக்கணிப்பது தவறென்றும் அறிவாளர் கருதுவாராயினார். ஆயினும், இப்பொழுது அத்தகைய கொள்கைகள் அகன்று ஒழிய, ஆர்வம் நிறைந்த தமிழ் மக்கள் தமிழ்த்தாயை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

'என்றுமுள தென்தமிழை இயம்பி இசைகொண்ட' திருமுனிவன் வாழும் பொதியமலை தமிழ் மலையாகவே திகழ்கின்றது. வடதிசையினின்றும் இலங்கையை நாடிச்சென்ற வானர வீரரை நோக்கி,''தென்தமிழ் நாட்டில் அமைந்த அகன்ற பொதியமலையில் அகத்திய முனிவன் அமர்ந்திருக்கின்றான். அம்முனிவன் அமிழ்தினு மினிய தாய்மொழியை ஆதரித்து வளர்க்குமிடம் அதுவாதலின், வானரங்காள்! அம்மலையை வணங்கி அப்பாற் செல்க'' என்று கம்பர் கூறும் மொழிகளில் தமிழ் அன்பு கலந்து இலங்குகின்றது.

தமிழ்மொழி வழங்கும் திருநாட்டைப் போற்றிப் புகழும் மொழிகள் புதியதோர் ஊக்கம் அளிப்பனவாம்.

**''செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே''**

என்று பாரதியார் அழகாக எடுத்துரைத்தார்.

இத்தகைய செந்தமிழன்னையை நாம் போற்றுவது மெய்யாயின் அத்தாயின் அருந்தவப் புதல்வரை ஆர்வத்தோடு பேணுதல் வேண்டும். காவிய நயங்களெல்லாம் கனிந்தொழுகும் நூல்செய்த கம்பரை நாம் இன்னும் உரிய முறையில் போற்றவில்லை. தன்னேரிலாத தெள்ளுதமிழ்ப் புலவராய வள்ளுவரை இன்னும் தமிழ்நாடு தக்க முறையில் தெரிந்து கொள்ளவில்லை. அருந்தமிழ்ச் செல்வமே பெரும் பொருட் செல்வத்திலும் சிறந்ததென்று தெளிந்து இளமையிலேயே துறவறம் பூண்டு சிலம்பு பாடிய இளங்கோவடிகளது பெருமையை இன்னும் உணர்ந்தோமில்லை. தமிழ்மொழிக் குற்ற குறையைத் தமக்குற்ற குறையாக் கருதி, மனமும் மெய்யும் வருந்திய மணிமேகலை ஆசிரியரது மாண்பை அறிந்தோமில்லை.

ஏனைய நாடுகள் தம் புலவரையும், கவிஞரையும் போற்றுகின்ற பெருமையையும், தம் தமிழ்நாடு தமிழறிஞரைப் புறக்கணிக்கின்ற சிறுமையையும் அறிவோமாயின், பிறரது ஏக்கமும் நமது இழிவும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். இத்தகைய பெருந்துயிலினின்றும் விழித்து அருந்தமிழைப் போற்றும் நாள் எந்நாளோ, அந்நாளே நம் நாட்டுக்கு நன்னாளாகும்.

## 37. முப்பெரும் கவிஞர்

நல்லறிஞரது உள்ளத்தடத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் ஆர்வத்திற் பிறப்பது இயற்கவிதையாகும். இததன்மை வாய்ந்த கவிஞருள் ஒருவராகிய பாரதியார், தமிழ்நாடு செய்த தவப்பயனாகப் பொருநை நாட்டிற் பிறந்தார். அருந்தமிழ் மொழியுடன் ஆரியமும் ஆங்கிலமும் அளவேடு பயின்று, தம் உள்ளத்திலெழுந்த தள்ளரிய ஆர்வத்தால் இனிய தமிழ்ப்பாட்டிசைத்தார்.பழம்பெருமை வாய்ந்த தமிழகத்தின் அறிவையும் ஆண்மையையும், வளத்தையும் வாணிபத் திறத்தையும் ஆற்றையும் அருங்காற்றையும் அக்கவிஞர் போற்றிப் புகழ்ந்துள்ளார். ஆயினும், நல்லறிவே நாட்டின் உயிரெனக் கருதிய அக்கவிஞர் தமிழ்நாட்டிற்கு என்றும் அழியாப் பெருமையளித்த நல்லியற் கவிஞரை நாவார வாழ்த்துகின்றார்.

**“கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு”**

என்றெழுந்த பாரதியார் பாட்டின் நயம் அறியத்தக்கதாகும். ‘கல்வியிற் பெரியவர் கம்பர்’ என்ற அழியாத புகழ்மாலை பெற்றார்.

**“வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”**

என்றெழுந்த பாரதியார் வாய்மொழி தமிழ் நயமறிந்தோர்க்கு தேனினும் இனிப்பாகும். திருவள்ளுவர் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர் பன்னூற்றாண்டுகட்கு முன்பு

இந்நாட்டிலே தோன்றினார். உலகெலாம் இன்புற்று வாழுமாறு ஒளிநெறி காட்டினார்.இன்னும், சேர நாட்டின் செல்வத்திலும், செந்தமிழ்ச் செல்வமே சிறந்ததெனத் தேர்ந்து இளமையிலேயெ துறவறம் ஏற்று, தமிழர் குலமணி விளக்காய் விளங்கிய இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமென்னும் செம்மை சான்ற காவிய அமுதை அள்ளி உண்டு அளப்பரிய இன்பமுற்ற பாரதியார்,

**“நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி**
**ஆரம் படைத்த தமிழ்நாடு”**

என்று நம் தாய்நாட்டைப் புகழ்ந்து மகிழ்ந்தார். கற்போர் மனத்தைக் கவரும் திறம் வாய்ந்த நூல்களுள் சிலப்பதிகாரம் தலைசிறந்ததாகும் என்று பாரதியார் அறிந்துணர்த்தினார்.

இத்தகைய பழம்பெருமை வாய்ந்த பைந்தமிழ் நாட்டிற் பிறந்தும், தமிழ்மொழியின் பெருமையையும் இனிமையையும் உணராது, வறிதே காலம் கழிக்கும் இக்காலத் தமிழ் மக்கள் நிலை கண்டு பாரதியார்,இரங்குகின்றார். முன்னோர் முயன்று தேடித்தந்த முழுமணிக்ள மண்ணுள் மூழ்கி மறைந்து கிடப்ப, அவர் பின்னோராய நாம் வறிஞராய் இவ்வுலகில் வாழ்கின்றோம். பாலிருந்த பானையைப் பாற்பனை என்பது போல், தமிழறிஞர் மரபிற் பிறந்த நம்மையும் தமிழரெனப் பிறநாட்டார் அழைக்கின்றார்கள். இங்ஙனம் வாயிருந்தும் ஊமையராய், கண்ணிருந்தும் குருடராய், செவியிருந்தும் செவிடராய்த் திரியும் இக்காலத் தமிழ் மக்களை நோக்கி,

**“நாமமது தமிழரெனக் கொண்டிங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்”**

என்று கவிஞர் பரிவுடன் வேண்டுகின்றார்.‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்னும் முன்னோர் மொழியின் வழி நின்று இனிமை வாய்ந்த தமிழ் மொழியை யாண்டும் பரப்புதல் வேண்டும். “வீடு தோறும் தமிழின் முழக்கம்: வீதி தோறும் தமிழின் விளக்கம்: நகரமெங்கும் தமிழோசை: நாடு எங்கும் தமிழோசை.” இவ்வாறாக எங்கும் தமிழ் முழக்கமே பெருமுழக்கமாய்ப் பொங்கி எழுதல் வேண்டுமென்பது பாரதியாரது பெருவிருப்பமாகும்.

## 38. கலையின் விளக்கம்

“அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே” என்று ஆங்கிலக்கவிஞர் ஒருவர் அருளிப்போந்தார். கண்ணினைக் கவரும் அழகையும், கருத்தினைக் கவரும் அறிவையும் தெய்வநலங்களாகக் கருதி வழிபட்ட பெருமை பாரதநாட்டினர்க்கு

உரியதாகும். அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும் கொண்டு பாரத முன்னோர் போற்றினார்கள். வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப்பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைகமளைப் பாரதியார் போற்றும் முறை சாலச்சிறந்ததாகும்.

இவ்வுலகில் வழங்கும் கலைகளைக் கவின்கலை யென்றும் பயன்கலை என்றும் பகுத்துக் கூறுவதுண்டு. கண்ணையும் செவியையும் கவா்ந்து, அவற்றின் வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டும் கலைகள் கவின்கலைகளாகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பல திறப்பட்ட பொருள்களை ஆக்கிக்கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன்கலைகள் எனப்படும். இவ்விரு வகைக் கலைகளின் வடிவமாக நாமகள் விளங்குகின்றாள் என்னும் உண்மையைப் பாரதியார் நன்கு அருளிப் போந்தார்.

செஞ்சொற் கவி இயற்றும், கலைவாணா் கருத்தியலும், உள்ளொளி வாய்ந்த உரவோா் மனத்திலும், உலகினா்க்கு ஒளிநெறி காட்டும் உயரிய மறையிலும்,கலைமகள் மகிழ்ந்துறைகின்றாள். அன்றியும், மாட கூடங்களை அழகு செய்யும் ஓவியங்களிலும், கோயில்களில் அமைந்த சீாிய சிற்பங்களிலும் அறிவுத்தெய்வம் உறையும் இடங்களாகும்.

இவ்வுலகில் வாழும் மக்களுக்குப் பயன்படும் பொருள்களை ஆக்கி அளிக்கும் தொழிலாளா் பலராவா். இரும்பை யுரக்கி வெம்படை வடிக்கும் கருங்கைக் கொல்லரும், திண்ணிய மரத்தைத் தரித்து முரித்துப் பணிசெய்யும் தச்சரும், குழைத்த மண்ணாற் பாண்டங்களை வனையும் குயவரும், பட்டாலும் பருத்தி நூலாலும், ஆடைகளை செய்யும் சாலியரும் உலக வாழ்க்கைக்குப் பயன்படுங் கலைகளைப் பயின்று பணி செய்கின்றார்கள். அன்னாா் பணிகளிலும் கலைமாது பண்புற்று இலங்குகின்றாள்.

இன்னும் வேதம் பயிலும் வேதியரும், வீரம் கிளைக்கும் வேந்தரும், வான்பொருளீட்டும் வணிகரும், தாளாண்மையிற் சிறந்த வேளாளரும் ஒருங்கே வணங்கும் விழுமிய தெய்வம் அறிவுத்தெய்வமேயாகும். மாந்தரது உள்ளத் தாமரையில் இனிதுறைந்து, அவா் அறிவினுக்கறிவாய் நின்று, புன்னெறி விலக்கி நன்னெறி காட்டும் தெய்வம் கலைத்தெய்வமே.

இத்தகைய தெய்வத்தை நிறைமொழி மாந்தா் மறைமொழியாற் போற்றினார்கள். அறிவறிந்த மாந்தா் ஆண்டுதோறும் எண்ணும் எழுத்தும் அமைந்த ஏடுகளை வரிசையாக அடுக்கிக் கலைவிழா எடுத்தார்கள்.

‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’ என்னும் உண்மையைப் பழந்தமிழ் மக்கள் பொன்னே போல் போற்றினா். கல்வி நலம் வாய்ந்தவரே மக்களாவரென்றும், அந்நலம் அமையப்பெறாத மானுடா் விலங்கனையரென்றும், பழந்தமிழ்ப் பனுவல் பகுத்துரைக்கின்றது. ‘கற்றல் கேட்டல் உடையாா் பெரியாா்’ என்றாா். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தா். எனவே, உடம்பினை வளா்க்கும் அன்ன சாலையிலும் உயிரினை வளா்க்கும் அறிவுச்சாலை சிறந்ததென்று அறைதலும் வேண்டுமோ? கற்றவா் விழுங்கும்

கற்பகக் கனியாய் இறைவன் ‘கல்லார் நெஞ்சில் நில்லான்’ என்னும் உண்மையை உணர்வோமாயின், இறைவனை வணங்குதற்குரிய ஆலயங்களை அமைப்பதற்கு முன்னே அறிவினை வளர்க்கும் கல்லூரிகளை அமைத்தல் வேண்டும் என்பது இனிது விளங்குவதாகும்.

## 39. பண்டாரப் பாட்டு

ஆன்ம வீரம், படை வீரத்திலும் பெரிதென்னும் உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தமிழ்நாடு அறிந்துகொண்டது. நாடாளும் வேந்தரது மறப்படையையும் வெல்லும் ஆற்றல், அறப்படையை எடுத்து ஆளும் ஆன்ம வீரரிடம் உண்டு என்பது பண்டைத் திருந்தொண்டர் சரித்திரத்தில் நன்குணரப்படும். சைவ சமயத்தைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்திய மூவருள் ஒருவராய திருநாவுக்கரசரை ஒரு சிறந்த ஆன்ம வீரராகக் கருதி, அவர் வாழ்க்கையையும் வாய்மொழியையும் பாரதியார் நன்கு உணர்ந்துள்ளார்.

**“யார்க்குங் குடியல்லேன் யான்என்ப**
**தோர்ந்தனன் மாயையே – உன்தன்**
**போர்க்கஞ் சுவேனோ பொடியாக்கு**
**வேன்உன்னை மாயையே”**

என்று தம்மை அச்சுறுத்திய மாயையைப் பழித்துப் பாடியுள்ளார். இப்பாட்டில் திருநாவுக்கரசரது வீரவுள்ளம் விளங்கக் காணலாம்.

பகைவரிட்ட நஞ்சையும் நண்பரிட்ட நல்லமுதெனக் கருதியுண்ட நாவுக்கரசர்,

**“பேயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்”**

என்னும் திருக்குறளுக்கு நனி சிறந்த சான்றாயினார்.

நஞ்சுண்டும் சாகாதிருந்த திருநாவுக்கரசரை நசுக்கிச் சிதைக்குமாறு கடக்களிற்றை அவர்மேல் ஏவப் பணித்தான் காவலன். கட்டவிழ்த்துவிட்ட கொலைக்களிறு கூடத்தைக் குத்தி ஒரு குன்றமெனப் புறப்பட்டது. வெஞ்சின வேழத்தைக் கண்ணுற்ற அப்பர் சிறிதும் சஞ்சல முற்றாரல்லர்.

மதவேழத்தின் செருக்கையடக்குமாறு திருநாவுக்கரசர் பாடிய பாட்டே ‘‘அச்சமில்லை அச்சமில்லை அச்சமன்ப தில்லையே’’ என்னும் பல்லவிக்கு அடிப்படை என்று கருதுவது தவறாகாது.

இன்னும்,‘‘ஊனம் ஒன்றில்லாத இறைவனுக்கு ஆட்பட்ட உத்தமர்’’ வேறொன்றையும் பொருளாகக் கருதார். மண்ணும் விண்ணும் நிலைகுலைந்தாலும், ஞாயிறும் திங்களும் திசை மாறினாலும் அன்னார் மனந்துளங்குவதில்லை. இவ்வுண்மையை,

**“வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்…**

**ஊனமொன் றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே”**

என்று அப்பர் தம் தேவாரத்தில் அருளிப் போந்தார்.

## 40. தமிழ்த் தாய் வாழ்த்து

தமிழ்மொழி வழங்கும் தென்னாடு தெய்வத் திருநாடென்று அறிந்து வணங்கத்தக்கதாகும். வடபால் நீலமேனி நெடியோனும், தென்பால் கன்னித்தெய்வமும், குடபால் அருந்தவ முனிவரும் கருத்துற நோக்கிக் காவல் புரிதலால் செந்தமிழ்நாடு தெய்வக்காவலில் அமைந்த திருநாடாகப் பாரதியார் உள்ளத்திலே தோன்றுகின்றது.

இத்தகைய திருநாட்டில் பிறந்து வளர்ந்த தாய்மொழியின் முற்காலப் பெருமையையும், பிற்காலச் சிறுமையையும் தமிழ் மக்களுக்கு உணர்த்த ஆசையுற்ற கவிஞர், தமிழ்த்தாய் முறையிடும் பான்மையில் உருக்கமாக ஒரு பாட்டுப் பாடியுள்ளார்.

தமிழன்னை, தலையிலணிந்த சூளாமணி சரிய, இடையிலணிந்த மணிமேகலை தளர, இணையடிச் சிலம்புகள் புலம்ப, கண்கலங்கி நின்று, தன் தகைசான்ற பிள்ளைகளை நோக்கி,‘என் ஆருயிர்மக்காள்! ஆதி சிவனருளால் இந்நானிலத்தில் தோன்றினேன். முத்தமிழறிந்த முனிவருளால் திருந்தினேன். நற்றமிழ் மன்னரது செல்வச் சிறுமியாய்ச் செழித்து வளர்ந்தேன். அறிவறிந்த மக்கள் ஆக்கி யளித்த காவியக் கலனணிந்த விளங்கினேன். இடைக்காலத்தில் பல நல்லணிகளைப் பறிகொடுத்தேன். இன்று பசையற்ற மாக்கள் பதறாமற் பேசும் வசைமொழி என் செவியினைச் சுடுகின்றது. உள்ளத்தை அறுக்கின்றது. புத்தம் புதிய கலைகள் மேலைநாடுகளில் மெத்த வளர்கின்றனவாம். அக்கலைகள் ஐம்பெரும் பூதங்களின் திறத்தினை அருமையாக உணர்த்துகின்றனவாம். அம்மேன்மைக் கலைகள் என்பால் இல்லையாம். மேலைநாட்டு மொழிகளே இனிமேலோங்கி வாழுமாம். யான் மெல்லத் தளர்ந்து, மேன்மையிழந்து அழிந்து ஒழிவேனாம். இவ்வாறு மதியிலார் உரைக்கும் மாற்றம் அறியீரோ? பேதையர் கூறும் புன்மொழி கேளீரோ? இவ்வசை மொழி என்பாலமைய நீர் வாளா விருத்தலாகுமோ? எட்டுத்திசையும் சென்று கிட்டிய கலைகள் யாவும் கொணர்வீர். புத்தணி புனைந்து என் நலத்தினைப் புதுக்குவீர். நல்ல கலைப்பொருள் அனைத்தையும் வாரிக்கொணர்ந்து நல்குவீர். ஆதிபகவன் அருள் வலியாலும், இன்று சார்ந்த புலவரது தவ வலியாலும், அப்பேதையர் உரைத்த பெரும்பழி ஒழியும்,இசையோடு இப்புவிமிசை என்றுமிருப்பேன்’ என்று தமிழன்னை தன் ஆற்றாமையை அறிவித்துத் தமிழ்மக்களைத் தட்டித்தேற்றி எழுப்புகின்றாள்.

இங்ஙனம் தமிழ்த்தாயின் வாய்மொழியாகவேப் பாரதியார் எழுதியுள்ள பாட்டின் கருத்து அறிந்து போற்றுதற்குரியதாகும். ஆங்கிலம் முதலிய மேலைநாட்டு மொழிகளையறிந்த மாணவர் கடமையைப் பாரதியார் பண்புறக் கூறுகின்றார். பிறநாட்டு

நல்லறிஞர் இயற்றி புத்தகம் புதிய கலைநூல்களைத் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும். அக்கலைகளிலமைந்த புதிய கருத்துக்களை உணர்த்தும் வெற்றி வாய்ந்த பழந்தமிழ்ச் சொற்கள் பண்டைப் பனுவலிற்பதிந்து கிடக்குமாயின் அவற்றை அகழ்ந்தெடுத்து வழக்காற்றில் உய்த்தல் வேண்டும். புதிய சொற்கள் வேண்டுமாயின், தமிழ்ச்சொல்லாக்க முறையறிந்து அவற்றைப் பிறப்பித்தல் வேண்டும். நல்ல நூல்களை மொழி பெயர்த்தும் நவீன நூல்களை இயற்றியும் மொழியின் கலைச்செல்வத்தைப் பெருக்க வேண்டும். இங்ஙனம் விரைந்து பணிசெய்ய முற்படாது, தமிழ்மொழியின் பழம்பெருமை பேசி மகிழ்வதாற் பயனில்லை.

தமிழ்மொழித் தொண்டு செய்யக்கருதும் தகைசான்ற அறிஞர் பழம்பெருமை பேசும் பழக்கத்தை விட்டொழித்து, தமிழ் மொழியின் குறைகளை அறிந்து, பணிசெய்ய முற்பட வேண்டும். தமிழ்நாட்டிலமைந்த பல்கலைக்கழகங்கள் மேலைநாட்டுக் கலைகளை மொழிபெயர்க்கும் விழுமிய பணியை மேற்கொள்ள வேண்டும். எத்திசையும் புகழ்மணக்க மீண்டும் தான் ஏற்றமுறும் காலம் அண்மையில் வருமென்று அறிவிக்கின்றாள்.

அலகு-3

# சிறுகதைத் தொகுப்பு

## 5. ஒரு பிடி சோறு

பொருளடக்கம்

1. ஒரு பிடி சோறு
2. பால் பேதம்
3. ‘பூ வாங்கலியோ பூ…’
4. வேலை கொடுத்தவன்
5. ‘ராசா வந்துட்டாரு…’
6. ரிக்ஷாக்காரன் பாஷை
7. தமிழச்சி
8. எது, எப்போது?
9. பொறுக்கி
10. தனிமனிதன்
11. ‘டிரெடில்’
12. பட்டணம் சிரிக்கிறது

## 1. ஒரு பிடி சோறு

**கதாபாத்திரங்கள்**

1. ராசாத்தி
2. மண்ணாங்கட்டி (ராசாத்தியின் மகன்)
3. மாரியாயி
4. மாணிக்கம் (மாரியாயின் கணவன்)

**கதைச்சுருக்கம்**

ராசாத்தியின் மகன் மண்ணாங்கட்டி மாரியாயின் வீட்டில் சமைத்து வைத்தப் பானைச் சோற்றைத் திருடி தின்றுவிட்டு விளையாட்டுத்தனமாக சுற்றிக்கொண்டிருக்கிறான். எங்கேடா போயிருந்த சோம்பேறி என அவனைத் திட்டிய ராசாத்தியிடம் துட்டு வேணும் துட்டு வேணும் என அடம்பிடிக்கிறான் மண்ணாங்கட்டி. அவளோ நிறைமாதக் கா்ப்பிணியாக இருக்கிறாள். துட்டு வேணுமாம் உங்க அப்பன் இங்க கொட்டி வச்சிருக்கான் பாரு என திட்டுகிறாள். எங்கப்பன் யாருமா எனக் கேட்ட மகனிடம் பதில் சொல்ல முடியாமல் தவித்து நிற்கிறாள். ஏனெனில் சடையம்மன் கோவில் திருவிழாவில் சில நாட்கள் பழகிய வளையல் வியாபாரியே அவனது அப்பா.

வயிற்றில் உள்ள குழந்தைக்கு தகப்பன் யார் என்றே தெரியவில்லை என எண்ணிப்பார்க்கிறாள். மண்ணாங்கட்டியை அடிக்கும் மாரியாயிடம் ராசாத்தி சண்டைக்குப் போக இருவரும் பேச்சு முற்றிப்போய் அடிதடியில் இறங்குகிறார்கள். அதில் ஒரு அடி ராசாத்தியின் வயிற்றில் விழுகிறது. அந்நேரம் அங்குவந்த மாணிக்கம் வயிற்றுப்பிள்ளைக்காரியை அடிக்கிறாயே என மாரியாயி மீது கோபம் கொண்டு அவளை இழுத்துவருகிறான். ராசாத்தியோ மகனைத் திட்டிக்கொண்டே தன் வீட்டுக்குள் சென்று படுத்துக்கொண்டாள். அடிவயிற்றில் சுருக்கென வலி உண்டாகி அது பிரசவ வலியா அல்லது இரண்டு நாளாக சாப்பிடாமல் இருந்த பசியா எனத் தெரியாது புலம்புகிறாள். இவள் நிலையைப் பார்த்த மாரியாயி பிரசவ வலியா இருக்கும் ஆஸ்பத்திரிக்கு போ எனக் கூறிக் கொஞ்சம் அரிசி தந்தாள். கஞ்சி வைத்துக் கொள்ளனக் கூறுகிறாள். இரண்டு நாள் பட்டினியாக கிடந்த ராசாத்திக்கு அது மகிழ்ச்சியைத் தந்தது.

மாரியாயி அரிசி கொடுக்க வெளியே தீமூட்டி சென்று அரைகுடம் தண்ணீா் இரக்கப்பட்டு பெண்கள் கொடுக்க தூக்கமுடியாமல் வலியைப் பொறுத்துக்கொண்டு சோறு ஆக்கி முடிக்கும் வேளையில் மண்ணாங்கட்டி எனக்கு வேண்டும் எனக் கேட்டு அடம்பிடிக்கிறான். காலையில் நடந்த சண்டையை நினைத்துப் பார்த்த ராசாத்தி அவனுக்கு சோறு கிடையாது என ஒரேடியாக மறுக்க இருவரும் சோற்றுப்பானையை உடைத்துவிடுகின்றனர். பயத்தில் ஓடிப்போனான் மண்ணாங்கட்டி. ராசாத்தியோ வயிறு வலியைத் தாங்க முடியாமல் விழுந்தாள். அவள் அலறல் சத்தம் கேட்ட மாரியாயி

அங்கே ஓடிவந்து அவள் பிரசவத்தைப் பார்க்க முயன்றபோது 'மண்ணாங்கட்டி மகனே' என அலறியவாறு இறந்துபோனாள் ராசாத்தி.

ஊர்சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்த மண்ணாங்கட்டி தாய் ராசாத்தியைப் பார்த்து கதறி அழுதான். மாரியாயி கணவன் மாணிக்கத்திடம் மண்ணாங்கட்டியை அழைத்து வரச் சொல்ல அவன் சாப்பிட சோறு கொடுத்தார். மாரியாயி அவனோ முதல் பிடியை வாங்கி ஒரு ஓரமாக வைத்துவிட்டு அழுதான். மாரியாயி வியப்போடு பார்க்க இது அம்மாவுக்கு என்று கூறி அழுக மாரியாயி மகனே என அணைத்துக் கட்டிக்கொண்டாள்.

## 2. பால் பேதம்

**கதாபாத்திரங்கள்**

1. ஆண்டிக்கோனான்
2. வேலம்மாள்
3. பசு லட்சுமி
4. லட்சுமியின் கன்று

**கதைச்சுருக்கம்**

ஆண்டிக்கோனான், வேலம்மாள் வீட்டில் வளரும் பசு லட்சுமி. அழகான வெள்ளை நிறத்தில் வலது கால் தொடையில் கறுப்புநிறம் நீண்டு காணப்படும் பசு. கிணற்றில் நீர் இறைத்து துவரம் பொட்டுகளைப் போட்டு தண்ணீர் வைக்கிறாள் வேலம்மாள். லட்சுமி குடிக்க தன் மகன் 6 மாதக் குழந்தைக்கு பால் கொடுக்கும்போது சற்று அயர்ந்துவிடுகிறாள் இதைக் கண்ட லட்சுமி தனக்கும் பால் சுரக்க கன்றுக்குட்டி லட்சுமியிடம் பால் குடிக்கின்றது. அந்தநேரம் அங்கு வந்த ஆண்டிக்கோனான் வேலம்மாளை சத்தம் போட்டு கன்றுக்குட்டியை இரண்டு அடி சுளிரென்று அடிக்கிறான். பின்னர் மாட்டையும் கன்றையும் வாடிக்கையாகப் பால் ஊற்றும் ஹோட்டலுக்கு அழைத்துச்சென்று பால் கறக்கிறான். கன்றுக்குட்டியோ தன்னை பால் குடிக்கவிடாமல் அடிப்பதை எண்ணி தாயிடம் வருந்துகிறது. அதற்கு லட்சுமி ஆண்டிக்கோனான் நமக்கு எஜமான், நான் உனக்கு மட்டுமல்ல அவனுக்கும் அவன் மனைவிக்கும் தாய்தான். எனவே அவனைப் பழிக்காதே என கன்றுக்குட்டிக்கு அறிவுறுத்துகிறது.

அடுத்தநாள் வேலம்மாள் லட்சுமியைக் குளிப்பாட்டி நெற்றியில் மஞ்சள் இட்டு லட்சுமியைச் சுற்றி வந்து வாலைத் தொட்டு வணங்குகிறாள். இதைக்கண்ட லட்சுமி தன் குட்டியிடம் நான் தாய் மட்டுமல்ல தெய்வமும் கூட என பெருமைப்பட்டுக்கொண்டது. சில மாதங்களுக்குப் பிறகு வேலம்மாள் குழந்தையும் இறந்துபோனது. லட்சுமியின் குன்றுக்குட்டியும் இறந்துபோனது.

அதனால் வருத்தமடைந்த லட்சுமி உடல்மெலிந்து பால்முலைச் சுருங்கி எலும்பும் தோலுமானது. ஆண்டிக்கோனான் அடிமாட்டை விற்க எண்ணி இரண்டு பேரை

அழைத்து வந்தான். இருவரும் பேரம்பேசி முடிவில் 17 ஆயிரம் ரூபாய்க்கு லட்சுமி விற்கப்பட்டது. தான் விற்கப்பட்டதை அறிந்த லட்சுமிக்கு அங்கிருந்து செல்ல மனமில்லை. தன் இறந்த கன்றுக்குட்டியை நக்கியது. இன்னும் சில நாட்களில் இறந்துவிடுவேன். அதுவரை இங்கே இருக்கக் கூடாதா என கண்களில் நீர் மல்க கெஞ்சியது லட்சுமி. கையிலிருந்து மிலாறிகளால் எலும்புகள் துருத்திக்கொண்டிருக்கும் விலாப்புறத்தில் அடித்தாள் வேலம்மாள். நீயுமா என்னை அடிக்கிறாய் லட்சுமி வேதனைப்பட்டது. அவள் முகத்தைப் பாசத்தோடு உயர்த்திப் பரிதாபமாகப் பார்த்தது. அதன் பாசம் அவளுக்குத் தெரியவே இல்லை. தன் கன்றின் சடலத்துக்காகத் தவியாய்த் தவித்து துடியாய் துடித்த லட்சுமியைக் கதறக்கதற இழுத்துக்கொண்டு போனார்கள் கசாப்புக்கு.

## 3. பூ வாங்கலியா பூ…

**கதாபாத்திரங்கள்**

1. ராசாக் கண்ணு
2. பூவாயி
3. ஞானம்மாள் (ராசாக்கண்ணு மனைவி)

**கதைச்சுருக்கம்**

சிவன் கோயிலில் சந்தியா கால பூஜை மணி ஓசையையும் கோபுர தீபவொளியைத் தெருவில் நின்று கண்ணீர் விட்டுக்கொண்டே பார்த்துக் கொண்டிருந்தான் ராசாக்கண்ணு. பின் பூ வாங்கலியா பூ என்ற ஓசையைக் கேட்டதும் திரும்பிக்கூடப் பார்க்காமல், விறுவிறு வென நடக்கத் தொடங்கினான். தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை செய்யும் ராசாக்கண்ணு பதினைந்து வருஷங்களாக அந்த ஊரில் சக்தியுடன் அமர்ந்திருக்கும் சர்வேச்சரன் சாமியை பூஜை நேரங்களில் வழிபட்டுக் கொண்டுதான் வருகிறான். கிருதாவும் கூரிய மூக்கின் கீழ் அரை மீசையும் காலர் ஷட்டும் பம்பாய்ககரை வேஷ்டியும் அணிந்து குமரிகளை கோயிலில் சுற்றி வந்த ராசாக்கண்ணு மாறியே போயிருந்தான். சந்நிதித்தெரு முனையில் பூ கடை வைத்திருக்கும் பூவாயிடம் ஓரணாவுக்கு மல்லிகையோ, கதம்பமோ வாங்கும் வழக்கம் கொண்ட ராசாக்கண்ணு அன்று சில தினங்களாக பூ வாங்காமல் மனதில் அழுதுக்கொண்டிருந்தான்.

மறுநாள் கோவில் பூஜை முடிந்ததும் பூவாயிட் பூ வாங்கினான். ஏன் இவ்வளவு நாளாய் பூ வாங்கல என்று கேட்ட பூவாயிடம் அம்மா போயிட்டா என்றான். ஊருக்கும் போயிட்டாங்க என்றால் ஆமாம் என குரல் கம்மியுடன் கூறினான். மஞ்சள் பூசிய முகம், நெற்றியல் குங்குமம், தலையில் பூ, மின்னும் மஞ்சள் கயிறு என எழிலாக காணப்பட்ட பூவாயியை சில தினங்களாகப் பார்க்கவில்லை. ராசாக்கண்ணு என்ன காரணம் எனத் தெரிந்துக்கொள்ள வேறு ஒரு பூ வியாபாரியிடம் விசாரித்தான். அவரோ

என்னிடம் அதைவிட அழகானப் பூக்கள் உள்ளதே என வியாபாரம் பேச அவரிடம் அரையணாவுக்கு கதம்பம் வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள். வீடு இருளடைந்துக் காணப்பட்டது. சில தினங்களுக்குப் பிறகு மீண்டும் பூ வாங்கலியா பூ என்ற குரல் அவன் காதில் கேட்க அவன் மனம் மகிழ்ச்சியால் குதித்தது. கதவைத் திறந்தால் விதவைக் கோலத்தில் பூவாயிக் காணப்பட்டாள். விசாரித்ததில் இரண்டு நாள் காய்ச்சலில் என்னை ஏமாத்திவிட்டு போயிட்டாரு என அழுதாள் பூவாயி. நான் கடையை எடுத்துவிட்டேன் வீட்டுக்கு வந்து தினமும் அம்மாகிட்ட பூ குடுத்திர்றேன் என உள்ளே சென்றாள் பூவாயி. ராசாக்கண்ணு அவளைத் தடுக்கவில்லை. உள்ளே சென்ற அவள் அவன் மனைவி ஞானம்பாள் போட்டாவில் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்தாள். என் மனைவியும் இறந்துவிட்டாள்.

பூவிற்கும் உனக்கு பூ வைக்கும் பாக்கியம் இல்லையே எனக் கூறி அவளிடம் வாங்கிப் பூவை அவள் தலையில் வைத்தான் ராசாக்கண்ணு. அய்யா இது என்ன என்று அவனை விட்டு விலகிய அவள் வெளியே சுற்றிப் பர்த்துவிட்டு வேகமாய்ப் போனாள். வெளியே வந்துப் பார்த்து ராசாக்கண்ணு அவள் தலையில் வைத்தப்பூ தரையில் கிடப்பதைக் கண்டான். அன்று முதல் அவள் குரலையும் முகத்தையும் அவன் பார்க்கவில்லை. கேட்கவும் இல்லை.

## 4. வேலை கொடுத்தவன்

**கதாபாத்திரங்கள்**

1. கந்தன்
2. ராசாத்தி
3. கருப்பையா (தச்சன்)

**கதைச்சுருக்கம்**

கந்தன் இரும்புப் பட்டறையில் வாரம் 50 ரூபாய்க்கு வேலை செய்யும் தொழிலாளி. அவன் பஸ் நிறுத்தத்தில் காத்திருந்தபோது நாகரீக உடையணிந்த ஒருவனும் நின்று கொண்டிருந்தான். அந்த வழியே வந்த பிச்சைக்காரி அந்த நாகரீக மனிதனிடம் பணம் கேட்டாள். ஆனால் அவனோ கை கால் நல்லாதானே இருக்கு வேலை செய்யலாமில்ல என்று கேட்க வேலை எங்கதான் இருக்குது எனக் கூறினாள் அவள். கந்தனுக்கு கோபம் அதிகரித்தது. நான் வேலைகொடுத்தால் செய்வாயா என்றுக் கேட்க எங்க நீ வேலை குடுக்கமாதிரி கேட்குறா குடேன் பார்ப்போம் என கோபமாக கேட்டாள் அவள். அன்று அவனுக்கு சம்பளம் அன்று இரவு அவன் வேலை முடிந்து வரும் வழியில் கருப்பையா எழப்புச்செறா இருக்கு யாராவது கேட்டால் சொல் என்றான் கந்தனிடம். நாமும் தனியாகத்தான் சமைத்துச் சாப்பிடுகிறோம். நமக்கும் விறகு வேண்டும் அல்லவா என நினைத்து அதை அவனே வாங்கிக் கொண்டான். அதை தூக்க என்ன வழி என நினைத்துக் கொண்டிருக்க அந்த வழியே அந்த

பிச்சைக்காரி வந்து நின்றாள். ஏய் இந்தா காலையில வேலைக் கேட்டல்ல இந்தா இந்த விறக தூக்கு சம்பளம் தரேன் எனக் கூறினான். அவளும் மறுக்கவில்லை. தூக்கிக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவள் பிச்சைக்காரி இல்லை. அவள்தாய் விபசாரி. அவளையும் இழுக்க முயன்றாள். அவளோ தன் பாட்டியிடம் செல்ல அவள் இதைக் கற்றுகொடுத்துவிட்டு கண்மூடினாள். விபசாரத்தை விட பிச்சை எடுப்பது மேலானது என பார்த்துக்கொண்டே கலங்கி சென்றாள். வீடு வந்ததும் காலனா கொடுத்தான். அதை வாங்கிவிட்டு தயக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் சரிசரி நீ உள்ளே போயிச் சுத்தம் செய்து உலை வை நான் அரிசி வாங்கி வரேன் என கூறினான். எனக்கு பயமாயிருக்கு நீ பைத்தியம் நான் உனக்குத் துணையாகத்தான் இருப்பேன். நீ தொழிலாளி நான் முதலாளி அவ்வளவுதான் எனக் கூறினான். அவளும் அதைப் புரிந்துக்கொண்டு தன் வேலையைத் தொடங்கினாள். அனாதையான கந்தனுக்கு தன் வீட்டில் ஒரு பெண் தனக்குச் சமைத்துப்போடுவது மகிழ்ச்சியாக இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு காலையில் அரிசி இல்லை என பழைய சோற்றைக் கட்டினாள். தெரியும்படி என்று கந்தன் கூற என் பெயர் ராசாத்தி என அவள் கூறினாள். அன்று இரவு கந்தன் பலகாரப் பொட்டலத்துடன் குடிசை விரைந்தான்.

அவள் கால்களைப் கட்டி வெளியில் உட்கார்ந்திருந்தாள். எனக்கு இன்னைக்கி வேலை இல்லையா எனக் கூறினாள். பலகாரத்தை நீட்டினான். நாயர் கடையில் பஜ்ஜி வாங்கியாந்தேன் எனக் கூற அவள் அதைச் சாப்பிட்டு கைகழுவினாள். அவள் அவனிடம் கடைசிவரை என்னை உட்றமாட்டிங்கள்ள என்று கேட்க அவன் மாட்டேன் எனக் கூறினாள். வேலைகொடுக்கிற மூஞ்சியப்பாரு என்று அன்று கேட்ட ராசாத்தியிடம் நீ வேலைக்காரியும் இல்லை. பிச்சைக்காரியும் இல்லை. நீ என் ராசாத்தி என இன்று பதில் கூறினான் கந்தன்.

## 5. ராசா வந்துட்டாரு

**கதாபாத்திரங்கள்**

1. கன்னியம்மை
2. தங்கராசு
3. மளிகைக்கடை சாயபு

**கதைச்சுருக்கம்**

கன்னியம்மை மதராஸ் ஹார்பருக்கு எதிரே ஓர் இறக்குமதி, ஏற்றுமி கம்பெனியின் மாடிப்படிக்குக் கீழே தங்கியுள்ளான். அவளது மூன்று இலட்சியங்கள் அவள் கிழவியாகிவிடக்கூடாது. விபசாரி ஆகிவிடக்கூடாது. பிச்சைக்காரி ஆகிவிடக்கூடாது. ஆனால் அவள் நிஜத்தில் கிழவியே. ஆனால் அது அவளுக்கு பிடித்தமில்லாத விஷயம். அவளது தொழில் வண்டிகளிலும் சிந்திக்கிடக்கும்.

தானியங்களைப் பொறுக்கி சாயபுவிடம் கொடுத்து பணம் வாங்கிக்கொள்வாள். அவள் தங்கியிருக்கும் மாடியில் நடந்தால் தலையில் இடிவிழுவது போல் இருக்கும். ஒவ்வொரு கப்பல் வரும்போதெல்லாம் கன்னியம்மை ஓட்டமாய் ஓடி ராசா வந்துட்டியா என்று தேடுவாள். அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கன்னியம்மை தன் நினைவுகளைத் தட்டி எழுப்பினாள்.

சாயபு கடை வைத்திருக்கும் மளிக்கைகடையயை தங்கராசு நடத்தினான். மூணு காசி உப்பு கேட்க சென்று கடையில் வம்பு செய்யும் பதினாறு வயது கன்னியம்மைப் பதிலுக்கு தங்கராசுவும் வம்பு செய்ய மறக்கவில்லை. கன்னியம்மை தனிமையானவள். தங்கராசுவம் அனாதை. தங்கராசு கன்னியம்மையை மணந்துக்கொள்கிறான். இருவரும் மகிழ்ச்சியாக வாழ இந்த மளிகைக்கடை வியாபாரம் போதவில்லை. கடையில் சரக்குகள் தீர்ந்தன. கடையை அடைத்தான் தங்கராசு. சில மாதங்களுக்குப் பிறகு வீட்டில் அரிசி பருப்பும் ஏதும் இல்லாமல் போக தங்கராசு மனைவிக்கு நகைகளும் சொத்துபத்துமாக சேர்த்து அவளை மகிழ்விக்க எண்ணினான். பட்டாளத்துக்குச் செல்ல முடிவெடுத்ததை, கன்னியம்மைத் தடுத்தாள். 1½ வருடங்களில் வந்துவிடுவேன் என்று கூறி சென்றவன் இன்று வரை வரவில்லை. கன்னியம்மையின் நம்பிக்கை அப்படியே இருந்தது. ஹார்பரில் பட்டாள சிப்பாய்கள நடமாட்டம் அதிகமாய் இருந்தது. அவர்களின் மத்தியில் திரிந்தாள் கன்னியம்மை. இளம்சிப்பாய் ஒருவன் பாட்டி யாரைத் தேடுகிறாய் எனத் தடவினான். கன்னியம்மை விலகிக்கொண்டாள். அனைவரும் சிரித்தனர். என் ராசாவை தேடுகிறேன் எனச் சொன்ன கன்னியம்மையிடம் இவர் இன்னுமா வரப் போறாரு என்று சொன்னான். அவனைத் திட்டியவன் மனமுடைந்தான். தங்கராசு கப்பிலில் வந்திறங்கினான். என் ராசா வந்துட்டரே என்று ஓடுகிறாள் கன்னியம்மை. இனி உனை விடமாட்டேன் வா போவாம் எனக் கப்பலைக் காட்டி ஏறினான் தொடுவானத்துக்கு. அடுத்தநாள், கம்பெனி வாசலில் விழுந்துகிடந்தாள். அடுத்த நாள் அவள் உடல் சில்லிட்டிருந்தது. ஆம் அவள் மரணம் அடைந்துவிட்டாள்.

## 6. ரிக்ஷாக்காரன் பாஷை

**கதாபாத்திரங்கள்**

1. கிஷ்டன் என்ற கிருஷ்ணன்
2. சுப்பையா
3. மானேஜர்

**கதைச்சுருக்கம்**

கிருஷ்ணனுக்குத் தெரிந்ததெல்லாம் ரிக்ஷாக்கார பாஷை. சாயத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் கிருஷ்ணன் மூணுநாள் ஒவர்டைம் துட்டு தர்லே என்று கறுவினான். மேஸ்திரி சுப்பையா வெலவெலத்துப் போனார். நேத்துவந்த பய என்ன மாதிரி பேசுறான் பாரு என மனதில் நினைத்துக்கொண்டர். இரண்டு நாள்

ஓவர்டைம் செஞ்சிருக்கேன்னுதானெ மானேஜர் சொல்றாரு. திருட்டுப் பேமானிப் பசங்க ஒங்களுக்கு இதுவே தொழிலாப் போச்சு. இன்னிக்கி ரெண்டுல ஒண்ணு பாத்துடறேன் எனக் கத்தினார் கிருஷ்ணன். மாடி அறை ஜன்னலில் மானேஜர் தலைதெரிந்து யார் என்ன சப்தம் எனக் கேட்டார். கிஸ்டன் சார் என சுப்பையாக் கூற மேலே வா என்றார் மானேஜர். என்னப்பா கலாட்டா எனக் கேட்டார்.

கூலி கேட்டதைக் குற்றம் சொல்றாரு என்றான். புஸ்தகத்துல என்னா இருக்கு அதுவும் இரண்டு நாள்தான் என்று சொல்ல அப்ப பொய்யாவா இருக்கும் என்றார். மானேஜர் கோபம் வர இது ஆபிஸ் ரிக்ஷாக்காரன் மாதிரி பேசுறயெ ஒனக்கு இங்கு வேலை இல்லை என்றார். கிருஷ்ணன் கம்பெனி முன்னால் உட்கார்ந்தான். மதியம் சாப்பாட்டுநேரம் தன் காரை காணாததால் கோபமா இருந்தார் மானேஜர். எதிரே ரிக்ஷா நின்றிருக்க டேய் ரிக்ஷா எனக் கூவினார். அவன் கவனிக்கவில்லை.

திரும்ப என்ன என்றுக் கேட்க, அவர் திருவல்லிக்கேணி என்றார். சரி ஸார் பத்தானக்குடு என்றான். அவன் கோபமடைந்தார். சரிதான் ஸாமி வித்தியாசமா பேசுறிங்க வேணான்னா போங்க என்றான். அவர் ரிக்ஷாவில் ஏற, எந்தத் தெரு ஸாமி சிங்காரச்சாரி தெருடா என்றார் மானேஜர். ரிக்ஷாக்காரன் மாதிரிப் பேசு உனக்கு வேலை இல்லை என்று கூறிய மானேஜர் வார்த்தையால் கம்பெனி எதிரே திண்ணையில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணனுக்கு சிரிப்பை மூட்டியது.

## 7. தமிழச்சி

**கதாபாத்திரங்கள்**

1. கண்ணகி
2. இளங்கோவடிகள்
3. நாரதன்
4. இந்திரன்
5. சுதர்சணம் பிள்ளை

**கதைச்சுருக்கம்**

தேவலோக சபையில் தேவர்களும், அமரர்களும் கூடி இருக்க இந்திரன் கொலுவிருக்கிறான். அங்கு வந்த நாரதனும், இளங்கோவடிகளும் வருத்தத்தோடு காணப்படுகின்றனர். இந்திரன் காரணம் கேட்க இளங்கோவடிகள் சிலம்பொலி தாயகத்தை கற்புக்கண்ணகி உலாவிய தமிழ்நாட்டை இவர் இகழ்ந்து பேசுகிறார் என சாடுகிறார். நான் கண்ட உண்மையைக் கூறினேன் என்கிறார் நாரதர். சபையிலிருந்து கண்ணகியின் குரல் எதிரொலிக்கிறது. நாரதரின் குற்றச்சாட்டை மறுத்தார். இளங்கோவும், கண்ணகியும் இருவரும் மதுரைநகர் நோக்கி வந்து பார்க்க முடிவுசெய்து மதுரை விரைந்தனர். மதுரை ஆறு வறண்டு சாக்கடையாக இருப்பதையும் பாலத்தின்மேல் ரயில் ஓடும் அழகையும் கண்டு மதுரை நகர் வளர்ச்சியைக் கண்டு

வியந்தார் இளங்கோ. அருகில் போலீஸ்காரன் கண்ணகியை விபச்சாரம் செய்யும் பெண் எனக் கருதி கையைப் பிடித்து இழுத்தான். இளங்கோ எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. கண்ணகியடா என்று கத்தினார்.

போலீஸ்கானர் கேட்டபாடில்லை. இளங்கோ பெருமையிழந்து அவனைக் கீழே தள்ளி அடிக்கத் தொடங்கினார். அங்கிருந்துத் தப்பித்து மேடைப் பேச்சுபேசும் அரசியல்வாதி சுதர்சணம் பிள்ளையிடம் தஞ்சம் புகுந்தனர். அவர்களுக்கு மாடிமேல் வீடு கொடுக்கப்பட்டது. நான் உள்ளூர் கவுன்சிலர் என சுயஅறிமுகம் செய்துகொண்ட அரசியல்பாதிக்கு கண்ணகி மேல் வக்ற எண்ணம் இருந்தது. இளங்கோ வைகை நதி தீரகத்திற்குச் சென்றார். கண்ணகியைத் தவித்து விட்டுவிட்டு சென்ற அவர் கண்ணகியை நினைக்கவில்லை. தீர்த்தத்திற்குச் சென்ற இளங்கோவடிகளை மூன்று பெண்கள் வழிமறித்து அறைக்குள் அழைத்துச் சென்றனர். உள்ளே சென்ற இளங்கோ அவர்களிடம் இருந்து தள்ளிவிடப்பட்டார். தன் நிலையை உணர்ந்த இளங்கோ கண்ணகியை நோக்கி ஓடினார். வீடு உள்தாள் போடப்பட்டிருந்தது. மதுரை எரித்தபோது சிரித்த கண்ணகியின் சிரிப்பு அவர் காதுகளில் விழுந்தது. கதவை உடைத்துக்கொண்டு சென்ற இளங்கோ அரசியல்வாதி விழிகள் பிதுங்க இரத்தவெள்ளத்தில் கண்ணகியின் காலுக்குக்கீழ் இறந்துகிடந்ததைக் கண்டார். சிரிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது கண்ணகிக்கு. பின்னர் நாரதர் சொன்னது உண்மை என்று ஒப்புக்கொண்ட இளங்கோ அவரிடம் மன்னிப்புக் கேட்க, அவர் நீங்கள் சொன்னதும் தவறில்லை. நான் கண்டதும் தவறில்லை எனக் கூறி இருவரும் சொர்க்கம் விரைந்தனர். கண்ணகி போகவில்லை. நம்முள் வாழ்கிறாள்.

## 8. எது, எப்போது?

**கதாபாத்திரங்கள்**

1. மவுண்ட் ரோட் மைக்கேல்

**கதைச்சுருக்கம்**

முக்கால் காலும், அரைக்காலுமான ஒரு முழுக்கால் சட்டை. சட்டை கிழிசலை மறைத்த மற்றொரு கோர்ட்டு உடலை மறைக்க மற்றொரு கோர்ட்டு. அழுக்க படிந்த கிழியாத் தொப்பி 6 அடி உயரம் 4 அடியாக வளைந்து கூனிப்போன ஒரு கிழ உருவம்தான் மவுண்ட் ரோட் மைக்கேல். ஏசுநாதர் வருவாறு கேட்கும் வரம் தருவார்! என எப்பொழுதும் பாடிக் கொண்டிருக்கும் மைக்கேல் திரிவதைக் கண்டு பிச்சைக்காரன் என்று சிலர் காசு தருவார்கள். ஒருநாள் அவன் அருகில் வெள்ளை அங்கி அணிந்த பாதிரியார் ஒருவர் அச்சடிக்கப்பட்ட நோட்டீஸ்களைக் கொடுத்தார் அவனிடம். தோளில் கிடக்கும் ஜோல்னாப்பையை தலைக்கு வைத்து வாசித்தான். கல்லூரி ஆசிரியரும், மாணவரும் உரையாடும் செய்தி அதில் இருந்தது. படிப்பு முடிந்தால் வேலை, வேலைக்குப்பின் திருமணம், குழந்தைகள் என அனைத்தையும் மாணவன் கூற

கடைசியில் நான் இறக்கவும் கூடும் என்ற செய்தி இருந்தது. நானும் இறந்துவிடுவனோ என மைக்கேலுக்கும் தோன்றியது. ஜோல்னாபையிலிருந்த புத்தகத்தைத் தேடிப்படித்தான். அதில் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள் நீதியைத் தேடுங்கள் என அவன் வாய் முணுமுணுத்தது. இறைவனைக் காண வேண்டும் என சித்தமானான் மைக்கேல். அப்பொழுது தன் அருகே பொத்தென்று ஓர் எச்சில் இலை சோறுடன் விழுந்தது. ஒரே எட்டில் தாவினான் மகிழ்ச்சியோடு. பரமபிதாவே எங்களுக்கு வேண்டியதை தினமும் தாரீர் என்று அவன் வாய் சொல்லவேயில்லை. இலைச்சோற்றை எடுத்த விழுங்கினான் மைக்கேல்!

## 9. பொறுக்கி

**கதாபாத்திரங்கள்**

1. சபாபதி
2. முனியம்மாள்
3. சுந்தரம் நாயுடு

**கதைச்சுருக்கம்**

முனியம்மா ஆப்பக்கடை நடத்திவருகிற ஒரு ஏழைகிழவி. மகன் சபாபதி சோம்பேறி. தன் ஆப்பக்கடையில் அந்த பறைச்சேரி மக்கள் பலர் ஆப்பம் சாப்பிடுவதால் அவளுக்கு அதில் வருமானம் அதிகமாகவே இருந்தது. இரக்க குணம் கொண்டவளாகவும் முனியம்மா காணப்பட்டாள். சபாபதியிடம், பூங்காவனம் இரண்டு ரூபா தரனும் வாங்கிவா எனக் கூறி வந்த இரண்டு ரூபாயை வைத்து படம் பார்க்கலாம் என நினைக்கிறான். அந்த சமயம் உர் என்று உறுமிக்கொண்டு வந்த சுகாதாரத்துறை வண்டியில் இருந்து சுகாதாரத்துறை அதிகாரி முனியம்மாவிடம் கடையை காலிசெய். காரணம் சுத்தமற்ற சுகாதாரமற்ற ஆப்பக்கடையால் காலரா பரவுகிறது என்றார். ‘பறைச்சேரியை சுத்தம் இல்லாது தானே’ என்று கொளுத்தாமல் விட்டார்களே என மனதில் எண்ணுகிறாள் முனியம்மா.

அந்த சமயத்தில் அந்த சாலையில் ஸ்ரீமான் சுந்தரம் காரை பார்த்த முனியம்மா ஓடினாள். அனைவரும் அவளுடன் ஓட எரிச்சலோடு இந்த பறைச்சனங்கள எப்படி இருக்கிறார்கள் பார் என மனதில் நினைத்துக்கொண்டு, என்ன என்று கேட்டார். சபாபதி எங்கம்மா முனியம்மா இந்த சேரியில ஆப்பக்கடை நடத்தினார்கள். சுகாதாரத்துறை அதிகாரிகள் அதை உடைத்து விட்டார்கள் இது என்ன அக்கிரமம் என கேட்டான். நாங்க நல்லாருப்போம்னுதானே உங்களுக்கு ஓட்டுப் போட்டோம் என்றான், போங்கடா பறை நாய்களா ரொம்ப பேசினா போலீஸ்கிட்ட சொல்லி உள்ள வச்சிடுவேன எனக் கூறி விட்டுக் காரில் வேகமாக சென்றுவிட்டான். இரண்டு வாரங்களில் நகரசபை தேர்தல் சுந்தரம் நாயுடு தேர்தலில் நிற்கிறார்.அதற்கு உதவிய உன்னைக் கூப்பிட்டாரு என முனியம்மா சொல்ல ஒரு ரூபாய் சம்பளத்திற்காக உங்கள் ஓட்டு சுந்தரத்திற்கு

என்று குரல் எழுப்பினான் சபாபதி. பதவிக்காக இப்பொழுது அவர்களிடம் ஓட்டுகேட்கும் ஓட்டுப்பொறுக்கி சுந்தரம், அவன் கொடுக்கும் ஒரு ரூபாய்க்காக அவனை நம்பித்தொலைக்கிறான் இந்த எச்சிற்பொறுக்கி சபாபதி!

## 10. தனிமனிதன்

**கதைச்சுருக்கம்**

காடுகளிலும் புதர்களிலும் சஞ்சரித்துக் காய்கனிகளைப் புசித்து மதர்த்துத் திரிந்த மனிதன், மிருகங்களின் தோலாலும் இலைச்சருகுகளாலும் தன்னை மறைத்துக் கொள்ளும் அளவுக்குப் பொய்யில் லயித்து விட்ட காலம்.

கூடி வாழக் கற்றுக்கொண்ட மனித மிருகங்களின் தொகை அதிகமாகி விட்டது. எந்தநேரமும் எதையோ எதிர்பார்க்கும், எதற்கும் தயாராயிருக்கும் துடிப்பு. ஒவ்வொரு நிமிஷமும் மரணம் அவர்களின் மேல் நிழலாடும் பீதி! அதுதான் அன்றையை மனித சமூகம்.

மான்களையும் பறவைகளையும் நீண்ட மூங்கில் ஒன்றில் பிணித்துத் தோளில் சுமந்து கொண்டனர் சிலர். தோற்பறைகள் தோலாடைகள், குழந்தைகள் முதலியவற்றைச் சுமந்தனர் சிலர். தங்களை அண்டி வாழும் சாது மிருகங்களைத் தங்கள் நலன் கருதித் தங்களுடன் ஓட்டிச் சென்றனர் சிலர்.

அவர்கள் புறப்பட்ட இடத்திலே இரண்டு பாறைகளுக்கு நடுவிலுள்ள ஒரு மரத்தின் வேர்ப்பாகத்தின் மேல் தலைசாய்ந்து கிடக்கிறது ஒரு மிருகம். தன் சமூகத்துக்குத் தன்னைப் பலியிட்டுக் கொண்டு தனித்துக் கிடக்கும் மனித மிருகம்.

இத்தகைய சமூகத்தில் ஒருவனாக 'மனித மிருகம்' இருந்த பொழுதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஒருநாள்.. திடீரென்று கானகத்தின் நடுவே மான்கூட்டம் ஒன்று தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்ததை மேற்படி சமூகம் கண்டது. தங்களை நோக்கி வரும் மான்களை வில்லும் அம்பும் தாங்கி, எதிர்கொண்டு தாக்கி, அது வேட்டையாடிற்று.

மான்கள் இறந்து விழுந்து துடித்தன. அதே சமயத்தில் அவற்றைத் துரத்தி வந்த இன்னொரு சமூகம் அதாவது நிறத்தால் வேறுபட்ட இன்னொரு 'மனித மந்தை' அங்கு வந்து நின்றது.அவ்வளவுதான். கொல்லப்பட்ட மான்களுக்காக இரு சமூகங்களும் ஒன்றை ஒன்று தாக்கிக்கொண்டன. கொன்று கொண்டன. அதுதான் போர்! முதலில் தற்காப்புப் போர். பிறகு உயிர் வாழ்வதற்கான போர். இப்பொழுது நடப்பதோ உடைமைப் போர். அந்தப் பேரிலே, தன் சமூகத்துக்காக, அதன் வெற்றிக்காக அதன் கட்டளைப்படி அவன் மூர்த்தண்யமாகப் போரிட்டான்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. பருவம் மாறத்தொடங்கிவிட்டது. ஒரு நாள் அந்தச் சமூகம் வாழ்க்கைப் பயணத்துக்குத் தயாராகி விட்டது. அவனை அவள் சர்வ ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் கொண்டிருந்தாள். இரவிலும் உறக்கத்திலுங்கூட

அவனை அவள் விடவில்லை. அவளை ஒரேடியாக உதறி எறிந்து விட்டுப் போகவும் அவனுக்குத் தைரியம் வரவில்லை. அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவன் மனம் தணலாய்த் தகித்தது. சமூகத்தின் கேளிக்கைச் சப்தமோ அவன் நெஞ்சைத் தழுவிக் கனிவுடன் அழைத்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய வாழக்கைப் பயணத்திற்குரிய ஏற்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்துக் கொண்டிருக்கின்றன. பறையொலிகள் அவனை,'வா வா! வென்று அழைத்துக் கொண்டிருக்கின்றன.

இவளோ அவனை விடுவதாகக் காணோம். கடைசி நேரம், அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்! சோர்ந்து, மன அமைதியின்றி, ஒரு பாதையின் மீது அமர்கிறான். அதோ, வெகுதூரத்திலுள்ள குன்றுச்சரிவில் அவனைச் சேர்ந்து கூட்டம் அணிவகுத்துச் செல்கிறது. அருகே ஓடிக் கொண்டிருக்கும் ஆற்று நீரில் நின்று தூரத்தே அசையும் அந்தக் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள் அவள். அவள் பின்புறம் அவன் இருக்கிறான். கையிலே வில் இருக்கிறது. அம்பும் இருக்கிறது.

தன்னிடமிருந்து அவனைப் பிரித்து இழுத்துச் செல்ல முயன்ற அந்தக் கும்பல் போய் விட்டதில் அவளுக்கு ரொம்பத் திருப்தி மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த அவளுக்குப் பின்னால்... கொடுமை! கொடுமையிலும் கொடுமை! அவன் கையிலிருந்த வில் வளைந்து. நாண் இழுபட்டு,'டங்'கென்ற ஒலியுடன் விடுபட்ட அம்பு சீறிப் பாய்கிறது!

அவ்வளவுதான்,'ஆ!' என்ற தாய்மையின் அலறல்! ஒன்று.. இரண்டு... மூன்று அவள் விலாவில் அம்புகள் பாய்ந்து, ஓடும் நீரில் ரத்தத்தை ஓடவிடுகின்றன. அவள் குப்புற விழுந்து கிடக்கிறாள். 'யார் எய்த அம்போ?' என்று வேதனையுடன் தலையை நிமிர்த்திப் பார்க்கிறாள். அந்த நன்றி கெட்டவன் சுய நலமென்னும் சாக்கடையிலே நெளிய வேண்டிய புழு, துரோகி, சண்டாளன். பதிதன் - தன் சமூகத்தில் சங்கமாகிக் கலக்க ஓடுகிறான்!

அம்பு பட்டு ரத்தம் கக்கும் சூலுற்ற வயிற்கை அழுத்திப் பிடித்துக்கொண்டே அவள் பூமியில் ஊர்ந்து ஊர்ந்து நகர்கிறாள். அவன் ஓடிவிட்டான். சமூகம் அவனை ஏற்றுக்கொண்டுவிட்டது. அதன் எக்காளம் மலை முகடுகளில் எதிரொலிக்க வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது. அந்த 'தனிமனிதன்' நடந்து வந்த வழியிலே ஒரு 'தனிமனுஷி' ஊர்ந்து வருகிறாள். அவள் ஊர்ந்த வழியெல்லாம் ரத்தக் கறை, அவள் பார்வையில் மரண இருள் கவிகிறது.

அவன் சென்ற திசை மறைகிறது. அதுவரை நிமிர்ந்திருந்த அவள் சிரம் 'கொளக்'கெனச் சரிகிறது. துரோகக் கறை படிந்த, அவன் விரைந்தோடிய வழியிலே அவன் முகம் புதைந்து உயிரிழந்து சவமாய்க் கிடக்கிறாள். சமூகத்தின் வளர்ச்சிப் பாதையிலே இதுபோன்ற தனிமனிதச் சவங்கள் ஒன்றா, இரண்டா? அனந்தம், அனந்த

கோடி அனந்தம்! அது, அந்தப் பாதை, சமூகம் வளர்ந்து வந்த வழியா? அல்லது தனிமனிதன் நடந்து வந்த வழியா?

## 11. டிரெடில்

**கதாபாத்திரங்கள்**

1. வினாயக மூர்த்தி
2. முருகேச முதலியார்

**கதைச்சுருக்கம்**

முருகேச முதலியார் சிறிய அச்சகக் கூடத்தின் முதலாளி. திருமணப்பத்திரிக்கைகள் அச்சடிப்பதுதான் அங்கு சராசரி வேலை. சிறிய அச்சகத்தில் பெரிய வருமானம் இல்லை என்றாலும் முதலியார் சின்ன வீடு ஒன்றை எப்படியோ கட்டிமுடித்துவிட்டார். அவருடைய அச்சகத்தில் பதினாறுவயதில் இருந்து வேலைபார்க்கும் வினாயக மூர்த்தி அனைத்து வேலைகளிலும் சிறந்தவன். அவனுக்கு 20 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது. முதலியாரும் வினாகமும் நல்ல முறையில் பழகி வந்தனர். விநாயகத்திற்கு 30 வயது ஆகியும் திருமணமாகவில்லை. வெளியூரில் இருக்கும் தன் அக்காவிடம் பெண் பார்க்க சொல்லிருந்தான் விநாயகம். 100 ரூபாய் பணமும் 40 ரூபாய் சம்பளமும் இருந்தால் பெண் தயாராக உள்ளது என்றாள் அவள்.

விநாயகம் மனதில் ஒரு ஆசை வேறொடு பத்திரிக்கையை எடுத்து அதில் மணமகன் பெயருக்குப் பதிலாக தன் பெயரை அச்சடித்து முதலியாரிடம் காட்டி சிரித்தான் விநாயகம். அன்று முதலியார் விநாயகத்திற்கு சாப்பிட்ட எட்டனா பணத்தைக் கொடுத்து வேலையை முடிச்சிட்டு சாப்பிட்டுப் போ என்று சொல்லிவிட்டு செல்ல விநாயகம் தனக்கு பெண் பார்த்திருப்பதையும் 100 ரூபாயும் வேண்டும் என்றும் கூற சரி சரி சந்தோஷம் பார்த்து முடிச்சிட்டு வா தர்றேன் எனக் கூற விநாயகத்திற்கு ஒரே மகிழ்ச்சி. வேகமாக வேலையைப் பார்த்தான். திடீரென அவனுக்கு வயிறு வலி ஏற்பட்டு வேலைகளை முடித்துவிட்டு டாக்டரிடம் சென்றான். விநாயகத்திற்கு 'ஹெர்ன்யா' என்று டாக்டரும், முதலியாரும் சர்க்கார் மருத்துவமனையில் சேர்த்தனர். அவனது உடலை மருத்துவ மாணவர்கள் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தினர். விநாயகத்திற்கு ஆபரேஷன் நடந்தது. ஒரு மாதத்திற்குப் பின் அவனுக்கு விடுதலை கிடைத்தது. அவன் வெளியேறும்போது டாக்டர் நீ கல்யாணம் செய்துகொள்ளாதே உனக்கே அது தோணாது எனக் கூறியது அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

விநாயகம் மீண்டும் வேலைக்கு வந்தான். ஏராளமான வேலைகள் அவனுக்கு இருந்தன. தன் பெயரை அச்சடித்துப் பார்த்து கல்யாணப் பத்திரிக்கையைப் பார்த்து அழுதான். முதலியார் என்னடா ஆள் வந்துருவாங்க சீக்கிரம் முடிச்சிடனும் என்றார். ஆவட்டும் சார்! டடக் டடக் ஆம் இரண்டு 'டிரெடில்'களும் இயங்க ஆரம்பித்துவிட்டது.

## 12. பட்டணம் சிரிக்கிறது

**கதாபாத்திரங்கள்**

1. குடுமிக்காரன்
2. குடுமிக்காரன் மகன்
3. குடுமிக்காரன் மனைவி

**கதைச்சுருக்கம்**

பட்டணத்தைக் கண்டிராத குடுமிக்காரன் தன் மனைவி மகள் மகளுடன் பட்டணத்தை நோக்கி வந்தான். மகனைக் குளிப்பாட்டி தலையில் இலுப்பை எண்ணெய் தடவி பின்னியிருந்தாள் அவனது மனைவி. இடுப்பில் குழந்தை, தலையில் மூட்டை, குடுமிக்காரன் தோளில் பச்சைநிற டிரெங்குப்பெட்டியுடன் தோற்றமளித்தது குடும்பம். அவர்கள் பஸ் ஸ்டாப்புக்கு வந்து நிற்க நாகரீக மனிதர் மூக்கைப் பிடித்துக்கொண்டு ஒதுங்கி நின்றார், இலுப்ப எண்ணெய் வாடையால். பஸ் வந்தது. அவர்கள் ஏற அவரும் ஏறினார். கண்டக்டர் எங்க போகனும் எனக் கேட்க அதுமேல ஏறி நின்றால் மெட்ராஸ் எல்லாம் தெரியுமாமே அங்கப் போகனும் என்றான். பின்னே இருந்த கோர்ட்டு போட்டவர் லைட் ஹவுஸ் என்றார். ஆமாம் அங்கதான். எத்தனை டிக்கெட் 2 போதும். பையனுக்கு 6 வயது என்றான். அப்ப டிக்கெட் எடுக்கனும் நாங்க எடுக்கறது இல்லை என்று சொன்னான் குடுமிக்காரன்.

செக்கிங் வந்தால் மூணு வயசுன்னு சொல்லு என்று கண்டக்டர் சொல்ல மனைவி வயசைக் குறைச்சா ஆயுள் குறையும் என்றாள். விக்கிர விலையில் காசப்பூரா பஸ்சுக்கு கொடுக்காம கையில் வெச்சுக்கலாம் அதெல்லாம் குறை ஆகாத என்றார் கோர்ட்டு. குடுமிக்காரன் குடும்பம் கோர்ட்டுக்காரரிடம் சொல்லிட்டு தன் நிறுத்தத்தில் இறங்கி லைட்ஹவுஸை சுற்றிப்பார்த்தனர்.

பின்னர் எழும்பூர் ரயிலுக்கு செல்ல பஸ்சில் ஏற டிக்கெட் எடுத்தனர். பையன் யார் என்ன வயது என்றான். 3 வயது என்றனர். அனைவரும் சிரித்தனர். பணக்கானர் கஞ்சப்பயனாக இருப்பான் என்று ஒருவனும் ‘ஒரே பேட் ஸ்மேல்’ என்று ஒரு பெண்ணும் சிரிக்க குடுமிக்காரன் கோபப்பட்டு இறங்கினான். பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த அவர்களைப் பார்த்து பட்டணம் சிரித்தது. அவன் வேடிக்கை பார்த்துக்கொண்டே போகலாம் வா என அழைத்துச் சென்றான் இரயில் நிலையத்துக்கு.

# ஒருபிடி சோறு– ஜெயகாந்தன் - திறனாய்வு

இது ஒரு விசேஷமான சுவாரசியமான சிறுகதைத் தொகுப்பு. ஜெயகாந்தன் தம்முடைய கதைகளிலே தமக்கே உரித்தான தனித்தன்மை ஒன்றைத் தோற்றுவிக்கிறர். ஒன்றிரண்டு கதைகளைத் தவிர மற்ற அனைத்திலும் பிரத்யட்ச நிகழ்ச்சிகளை மக்களின் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி சித்திரிக்கிறார். கதைகளின் நடை ஆற்றொழுக்காக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. தம்முடைய கவர்ச்சியான உயிர்த்துடிப்புள்ள நடையில், வாழ்வின் அவஸ்தைகளை முக்கியமாக அவலங்களை மனதில் பதியும்படி அவர் சித்திரிக்கிறார்.

கதைகளில் வரும் கதாபாத்திரங்களெல்லாம் தெருவிலே, குடிசையிலே, பிளாட்பிராத்திலே கூவம் நதிக்கரையிலே காணக்கூடிய மக்களின் பிரதிபிம்பங்கள்தான். எக்கதியுமற்ற ஏழை மக்கள்தான் அவருடைய பாத்திரங்கள். அநேகமாக ‘ஒரு பிடி சோறு’ அகப்படாமல் உயிர் போகும் சமூக அநாதைகளின் வாழாத வாழ்வைத் தான் அவருடையக் கதைகள் காட்டுகின்றன. உலக இன்பங்களை ஏகபோகமாக அனுபவிக்கும் மாளிகை மனிதர்களை ஜெயகாந்தன் கதைகளில் காணமுடியாது.

ஏழைகள் என்றவுடனே, கனவான்களின் கருணைக்குப் பாத்திரங்களான ‘ஜந்து’க்களாக அவர்களுடைய குணாதிசயங்களைத் தீட்டிவிட வேண்டும் என்ற போலி நோக்கத்தை ஜெயகாந்தனனின் கதைகளில் காணமுடியாது. அவருடைய ஏழை மக்கள் விருப்பும் வெறுப்பும் வேதனையும் ஆத்திரமும் வெட்கமும் தன் மதிப்பும் உள்ள மக்கள் அவர்கள்.

அழகான பசுவான அந்த லட்சுமியின் கதி, மனித குலத்தின் இழிவுக்கு முத்தாய்ப்பு வைத்துவிடுகிறது. ஜெயகாந்தனின் அத்தனை பாத்திரங்களும் உயிர்ச்சித்திரங்கள். நீங்களும் நானும் என்றென்றும் பார்த்துக் கொண்டிருக்கிறவர்களைத்தான், தமது பேனா முனையால் அழுத்தமாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஜெயகாந்தனின் நடை அடித்துப்பேசும் நடை. ஆனால் அதிலே ஓர் இனிமை இருக்கிறது. சிலரால் உபயோகிக்க முடியாத சொற்களை உபயோகித்திருக்கிறார். அதே போன்ற சில நிலைகளையும் அவர் வர்ணித்திருக்கிறார்.

‘மனிதராசி’யின் உள்ளத்தைக் கலக்கி, உணர்ச்சியைப் பொங்கச் செய்து, புதுவிழிப்பும் புது நோக்கும் தரக்கூடிய கதைகள் இவை.

அலகு - 4

# நாவல்

## 6. வேரில் பழுத்த பலா– சு.சமுத்திரம்

வேரில் பழுத்த பலா நாவலின் ஆசிரியர் சு.சமுத்திரம். ஓர் அலுவலகத்தில் நேர்மையாக நடப்பவன் சரணவன். சரவணனின் செயல்களினால் அவனுக்கு ஏற்படுகின்ற துன்பங்கள், அவனது துன்பத்தில் அவனுக்கு உதவும் அன்னம், சமுதாயத்தில் நடக்கும் சீர்கேடுகள் போன்றவற்றை இந்நாவல் சித்திரிக்கிறது.

**கதைச்சுருக்கம்**

சரவணன் தனது அலுவலகத்திற்குச் செல்வதற்காக தயாராகி வாசலுக்கு வருகிறான். அவன் அழகான தோற்றம் உடையவன். அலுவலகத்திற்குத் தன்னுடன் ஒரு பெட்டியை எடுத்துக்கொள்கிறான். மகன் செல்வதைக் கண்டதாய் ஏதோ அவனிடம் சொல்வதற்காக வருகிறாள். சொல்ல வந்தவள் சற்று பின்வாங்கி நிற்கிறாள். அதனை அறிந்த சரவணன் தாயிடம் என்னம்மா உனக்கு? ஏதோ சொல்வதற்கு வந்தாயே, சொல் எனக்கு நேரமாகிறது. சீக்கிரம் சொல் என்கிறான். உன்னோட தங்கை வசந்தாவுக்கு ஏதாவது வேலை வாங்கிக்கொடு என்று கூறினாள் அம்மா. நான் நேற்று வாங்கிக்கொடுத்த செய்தித்தாளில் என்ன செய்தி என்று சொல் பார்க்கலாம் என்கிறான். அதற்கு “அது வந்து கமலஹாசன் இந்திப்படத்தில் ஸாரி இன்சாட்பி என்று கூறுகிறாள். சரவணனுக்குக் கோபம் வருகிறது. தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் விளம்பரம் பார்க்கவில்லை. என்ன படம் வெளியாகிறது என்று பார்த்தால் எப்படி வேலை கிடைக்கும். அரசு வேலைக்குப் பரீட்சை எழுதித்தான் பாஸ் பண்ண வேண்டும். அப்படிதான் இப்போ வேலை கிடைக்கிறது. யார்கிட்டயும் சிபாரிசு செய்து வேலை வாங்கமுடியாது. அப்படி செய்தாலும் தற்காலிமாகத்தான் வேலை கிடைக்கும் இருந்தாலும், அவள் என்னுடைய தங்கை நல்ல வேலை கிடைக்கக்கூடாது என்றா நினைப்பேன். போனவாரம் நேர்முகத்தேர்வில் கேட்ட கேள்விகளுக்கு பதில் தெரியாமல் கடன்காரி மாதிரி விழித்தாள். அப்படி விழித்தால் எப்படி வேலை தருவான்? என்று ஒவ்வொன்றாகப் பொரிந்து தள்ளினான் சரவணன்.

அலுவலகத்திற்குச் செல்ல தயாரான சரவணன் அண்ணியைப் பார்த்தான். அவள் அவனைப் பார்த்து ஊரில் இருந்து வந்த உடன் உங்கள் அம்மா மாறிவிட்டார்கள். இந்த வீட்டில் நான் வேலைக்காரியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்று தன்னுடைய நிலையை அண்ணி கூற, சரவணன் மீண்டும் சீறினான். அவனுடைய தாயைப் பார்த்து நம்முடைய குடும்பம் சிதைவுறாமல் தடுத்து காத்துக்கொண்டும்வரும் அவர்களைப் போய் இப்படி செய்கிறீர்களே என்று கோபத்தோடு பார்த்துவிட்டு வெளியேறுகிறான்.

அவன் வண்டியை எடுத்துக்கொண்டு வேகமாக திருகினாள். அவனது மனதிற்குள் நிறைய எண்ணங்கள் அலைபுரண்டு ஓடின. தனது அண்ணனின்

நேர்மையான செயல்கள், அதற்கு உதவியாக இருந்த அண்ணியின் செயல்பாடுகள், என் அனைத்து நிகழ்வுகளையும் எண்ணிக்கொண்டே வண்டியை ஓட்டினான். மனதின் பலவிதமன நினைவுகளை எண்ணிக்கொண்டே சாலையின் ஒரு முனைக்கு வந்து இன்னொரு சாலைக்கு வலப்புறமாய்த் திரும்பினாள். அதனைப் பார்த்த சாலை போக்குவரத்துக் காவலர் அவனை விசில் அடித்து அழைத்தார். அவன் தன் வண்டியை உருட்டியபடியே வந்தான். ‘யெல்லோ லைனை’எதற்கு சார் கிராஸ் பண்ணினீங்க என்று கேட்ட பிறகுதான் அவன் அந்த ‘யெல்லோ லைனை’ப் பார்த்தான். அந்த நேரம் ஒரு கார் வந்தது. அதனை மறித்தான். ஆனால் அந்த காரின் ஓட்டுநர் திட்டியதால் சல்யூட் அடித்துவிட்டு நடந்தான். அடுத்து ஒரு வழிப்பாதையில் வந்த இரண்டு சைக்கிள்காரர்களைப் பார்த்துக்கூப்பிட்டான். அவர்கள் பருவப்பெண்கள் போன்று நாணம் அடைந்து அவர் அருகே வந்தார்கள். அந்த கான்ஸ்டபிள் தனது டைரியை எடுத்து காகிதங்களைப் புரட்டி பென்சிலால் எழுத ஆரம்பித்தார். அதற்குள் அவர்கள் இருவரும் தன்னுடைய பையில் இருந்து இரண்டு காகிதங்களை யாருக்கும் தெரியாமல் நீட்டினார்கள். எந்த காகிதம் ஜெயிக்கும் என்று சரவணன் பார்த்துக்கொண்டே இருந்தான். அசோக சக்கரத்தில் பொறித்த மூன்று சிங்கங்கள் தான் ஜெயித்தது. சரவணன் என்மீது என்ன தப்பு சார். நான் இலஞ்சம் தரமாட்டேன் கோர்ட்டுக்கு போனாலும் போவேன். மெமோ கொடுக்கணுமானாலும் கொடுங்க. ஆனால் இலஞ்சம் மட்டும் தரமாட்டேன் என்கிறான். மிகவும் கோளாறுகள் நிறைந்த இந்த சமூக அமைப்பில் ஏழைகள் தங்களோட தன்மானத்தை விலையாகக் கொடுத்தால் தான் சுதந்திரமாக நடமாட முடியும் என்று நினைத்தபடி ஸ்கூட்டரை உதைத்தான். வேகமாக அலுவலகத்திற்கு வந்தான்.

குண்டூசி, காகிதம், இரப்பர், பால்பாயிண்ட் பேனா, பென்சில், ஸ்டேப்லர், பைல்கள் உட்பட பலவகையான ஸ்டேஷனரிப் பொருட்களைக் கொட்டேஷனுடன் மார்க்கெட்டில் வாங்கி பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பு. அலுவலக வேலையில் யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்று தெரியாத மேலதிகாரி எனக்குத்தான் மெமோ கொடுப்பார் என்று சலித்துக்கொண்டாள் அன்னம். மேலும்,அதனால் தன்னுடைய வேலை எவ்வளவாய் பாதிக்கப்படுகிறது என்பதும் யாருக்கும் தெரியவில்லை என்று வருந்துகிறாள். இந்த ஆபிஸில் நான் ஒருத்தி தான் பின்னால் சென்று திட்டாதவள். மற்றவர்கள் எல்லாரும் புறம்பேசுவார்கள். அவர்களுக்கு இன்கிரிமென்ட் எனக்கு மெமோ என்று கூறினாள் அன்னம். சரவணன் அன்னத்திடம் ரிஜிஸ்டரை எடுத்துவரச் சொன்னான். அன்னம் எடுத்துவந்து கொடுத்த ரிஜிஸ்டரை புரட்டிப் புரட்டி முந்தினநாள் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கிறதா என்று பார்த்தான். நம்பர், முகவரி அனைத்தையும் சரிபார்த்தான். எல்லாம் சரியாகத்தான் இருந்தன. ஏதோ சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள் சௌளநாமார்ட் கம்பெனிக்காரன் தந்த பொருள் எல்லாம் குவாலிட்டியா இல்லை. குவாண்டிட்டி மோசம் குண்டூசி முனை

மழுங்கிட்டு பேப்பரில் இங்க் ஊறுகிறது. ரப்பர் எழுத்துக்குப் பதில் எழுதின காகித எழுத்தைதான் அழிக்கிறது. பென்சில் சீவினால் ஒடிகிறது. வாங்குன டேக்ல ஒரு பக்கத்து முனை உதிரியாய் நிற்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டி நான்கு முறைகடிதம் போட்டாயிற்று.

அதையெல்லாம் ஏன் ரிஜிஸ்டர் போஸ்டில் அனுப்பவில்லை? ஒங்க லெட்டர் கிடைக்கவில்லை என்று அவர்கள் சொன்னால் பதில்சொல்ல வேண்டியது நீங்களா? அல்லது நானா? என்று அன்னத்தைப் பார்த்து சரவணன் கேட்டான். அன்னம் அரண்டு,மிரண்டு போய்விட்டாள். இருந்தாலும் உண்மை சொல்லித்தான் ஆக வேண்டும் என்று எண்ணி சார், ஹெட்கிளார்க் அம்மா தான் ரிஜிஸ்டர்ல வேண்டாம், சாதாரணமான போஸ்டில் அனுப்புமாறு சொன்னார்கள் என்று கூறினாள்.

சார் நான் ஒன்றும் களிமண் போன்றவள் அல்ல. நான் கிரேஜுவேட்டு சார் என்கிறாள். நிர்வாக அதிகாரி சௌரிராஜனிடம் சரவணன் அன்னத்தோடு பெர்சனல் பைல் கேட்டு வாங்கினான். அவன் கைகள் பைல்களைப் புரட்டின. அவன் கொடுத்த 'மெமோ', அவள் பெற்றுக்கொண்டேன் என்று எழுதி கையெழுத்து இட்ட வாசகத்தோடு கெட்டியாக இருந்தது. அன்னத்துக்குக் கொடுத்த மெமோவை பைலில்போடவேண்டாம். கிழித்துவிடுங்கள் என்று கூறினேன். இன்றும் வைத்திருக்கிறீர்களோ என்று கேட்டான். சௌரி சார் நாம் கையெழுத்துப் போட்டதை நாமே கிழிக்கக்கூடாது என்று கூறிவிட்டார். இந்த "ஹெட்க்ளார்க் மேடத்துக்கு போனவார்ம மெமோ கொடுத்ததுக்கு அவர்கள் குட்வொர்க்கர்னு சொல்லிட்டிங்க, டிஸ்கரேஜ் பண்ணப்படாதுன்னு சொன்னிங்க, கிழிச்சிப்போடுங்கன்னு சொன்னேன் நல்லாத்தான் கிழிச்சிங்க, பட் அன்னமுன்னு வந்தால்" என்று சொன்ன உடன் சௌரிராஜன் திண்டாடிப் போனார்.

சந்தானம் பட்டாபோட்டு வேலைக்கு வருகிறார். ஆனால் அன்னம் கோட்டாவில் வந்தவள். உங்களுக்கு ஹர்சன பெண் என்றாள். அவளுக்கு ஒன்றும் தெரியாது என்ற எண்ணம் உடைய சட்டவிரோத சிந்தனை, சமூக விரோத சிந்தனை என்கிறாள்.

எல்லாம் சரிதான் என்று கூறிவிட்டு, நான் சந்தானத்தையும், அன்னத்தையும் காப்பாற்றுவேன் என்கிறான் சரவணன். அன்னத்தின் அபிஷியல் நிலையையும் காப்பாற்ற வேண்டும். அன்மை 'இன்டலிஜெண்ட் கோல்' படித்த ஹரிசனங்களோட திறமை வெட்டியெடுக்கப்படாத தங்கம் மாதிரி. நாம் தங்கத்தை வெட்டியெடுக்கணும். ஏதோ ஒரு பித்தளை இருக்கிறது என்று புதைக்கக்கூடாது என்றும் கூறுகிறான்.

நேர்மையாய் இருந்த சரவணனுக்குப் பிரச்சனைகள் ஆரம்பமாயின. வீட்டிற்கு வந்து அதையே நினைத்துச் சோர்ந்து போயினான். அவனுடைய சோக நிலையிலும் அவனுடைய அண்ணி அவனுக்கு ஆறுதல் கூறினாள். பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு வேண்டிய ஆலோசனைகளை எதிர்கொள்வதற்கு வேண்டிய ஆலோசனைகளை எல்லாம் கூறி, மேலும் வீட்டில் உள்ள பிரச்சனைகளையும் மெதுவாய் சரிசெய்தாள்.

வசந்தா தன் அருகில் உள்ள வீட்டுப்பையனை காதலித்ததை அறிந்த சரவணன் தன்னுடைய குடும்பம் தலைகுனிந்து விடக்கூடாது என்று அவளை அடித்து, திருந்துவதற்குரிய ஏதுவான செயல்களையும், கருத்துக்களையும் கூறினாள். அண்ணியும், வசந்தாவிற்கு ஏற்ற அறிவுரைகளைக் கூறினாள்.

அலுவலகத்திற்கு வந்த சரவணன் அன்னத்தை அழைத்து ராஜினாமா கடிதத்தை எழுதச்சொன்னான். அன்னத்தின் கண்கள் கலங்கின. தயவுசெய்து எழுதுங்க என்று சரவணன் அடம்பிடித்தான். அன்னம் சார் நீங்க எந்த தப்பும் செய்யல. நீங்க எதுக்கு வேலையை விட்டுப் போகவேண்டும் என்று அவைனத் திடப்படுத்தினாள். அவன் அன்னத்தின் மீதுள்ள அன்பில் உறைந்து போனான். வேலையை விட்டுவிட்டால் தங்கையைக் கரையேத்த முடியாது மீண்டும் அண்ணிதான் வயல்வேலைக்குப் போகவேண்டும். இருந்தாலும் பரவாயில்ல எழுதுங்கள் என்கிறான். அன்னத்தின் கண்களில் ஒரு ஒளி. அவனை நேருக்கு நேராய்ப் பார்த்தாள். ஒரு வேளை காண்டிராக்டரை உள்ளே சஸ்பெண்டாகி போராட்டம் முடியுறது வரைக்கும் பாதிச் சம்பளந்தானே வருமுன்னு யோசிக்கிறீங்களா சார்? சரவணன் தலையாட்டினான். சார் நீங்க நேர்மையானவங்க எங்கே போனாலும் வம்புதான் வரும். நீங்க கவலைப்படாதீங்க. நான் என்னுடைய சம்பள ரூபாயில் இருந்து தாரேன் சார் என்று அன்னம் கூறினாள். ஒரு நிமிடம் அவன் செய்வதறியா திகைத்து நின்றான். உங்க தாயுள்ளத்துக்கு எப்படிநன்றி சொல்லறதுன்னு எனக்குத் தெரியவில்லை. சரவணன் அன்னத்தை ஆடாது அசையாது பார்த்தான். இவளுக்கு எவ்வளவு பெரிய மனது எனக்காக எப்படியெல்லாம் துடிக்கிறாள். அலுவலக மரங்களின் உச்சாணிக் கிளைகளில் அணில் கடித்த பழங்களையும், பிஞ்சில் பழுத்த பழங்களையும் பிடுங்காமல் பார்த்த எனக்கு இவ்வளவு நாளாய் எனக்காக மனம் உருகுகிற வேரில் பழுத்த பலா தெரியாமல் போய்விட்டதே என்று அன்னத்தின் செயல்களை நினைத்துப்பார்க்கிறான்.

**கதைக்கரு**

சரவணன் என்பவன் அலுவலகத்தில் பணிபுரிகிறான். அவனது நேர்மையினை நிலைக்குலைக்கச் செய்யும் அளவில் பிரச்சனைகள் தோன்றுகின்றன. அந்த பிரச்சனைகளிலும் அவனுக்குத் துணையாக நின்று உதவிசெய்தவள் அன்னம். லஞ்சம், ஊழல், பொன் என மரத்தின் உச்சியில் பழுத்த பழத்தினைப் போன்று இருந்தாலும் வேரில் பழுத்தது மிகவும் சுவையானதாக இருக்கும். ஆனால் வேரில் பழுத்த பலாவாகிய அன்னம் ஆரம்பத்தில் அவனது கண்ணில் படாமல் போய்விட்டாள்.

**பாத்திரப்படைப்பு**

சரவணன், அன்னம் இவ்விருவரையும் முதன்மைப் பாத்திரமாகச் சித்தரிக்கிறார். துணைமைப் பாத்திரமாக சரவணன் அண்ணி தங்கம்மாவைச் சித்தரிக்கிறார்.

**சரவணனின் பண்புநலன்கள்**

சரவணன் பார்ப்பதற்கு எளிமையான தோற்றம் உடையவன். அண்ணியின் கட்டளைக்குக் கீழ்படிபவன்,"இந்தா பாருப்பா சரவணா... ஆபிஸருங்களுக்கு சம்பளம் சிகரெட்டுக்கு கிம்பளம். வீட்டுக்குன்னு ஆகிப் போயிட்டதாப் பேசுறாங்க. நீ இன்னார் தம்பி நியாயம் தவறமாட்டார்னு பேர் வாங்கனும்" தனது அண்ணனைப் போன்று நேர்மையானவன். லஞ்சம் கொடுக்கவும் மாட்டான். வாங்கவும் மாட்டான். மனிதநேயத்துடன் இருப்பவன். தனது வேலைகளைச் சரியாக செய்து முடிக்கும் திறமை வாய்ந்தவன். எதனையும் யோசித்து செயல்படுபவன்.

**அன்னம்**

தனக்குக் கொடுத்த வேலையைத் திறம்படி செய்பவள். தான் படித்திருக்கிறேன் என்கிற ஆணவம் அவளிடம் இல்லை. பிறர்க்கு உதவி செய்யும் மனப்பாங்கு.

"என்னோட கல்யாணத்துக்காக பத்தாயிரம் ரூபாய் சேர்த்து வச்சிருக்கேன். தொள்ளாயிரம் ரூபாய் சம்பளத்துல முந்நூறு ரூபாய் எனக்குப் போதும் மாதாமாதம் அறுநூறு ரூபாய் தந்துடுறேன்... கல்யாணப் பணத்தையும் தாறேன் ஒங்களோடு தன்மானப் போராட்டத்தை விட எனக்குக் கல்யாணம் முக்கியமில்லை" எந்த சூழ்நிலையிலும் நேர்மையாக நடந்துக்கொள்ளுதல்.

**அண்ணி தங்கம்மா**

அண்ணி தங்கம்மாவை துணைமைப் பாத்திரமாக சித்தரிக்கிறார். பெயருக்கு ஏற்றாற்போன்று தங்கமாக செயல்படுபவள். குடும்பத்தில் கணவனை இழந்தாலும் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுபவள். தனது மாமியார் தன்னிடம் சண்டை போட்டாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளும் மனப்பாங்கு,"இந்தப்பா வீட்டுக்குள்ள வந்து கொஞ்சநேரம் இருந்துட்டு தண்ணி குடிச்சிட்டுப்போ... நாமதான் கறுப்புச்சேலை கட்டுறோமே... ஆபீசுக்கு போற நேரத்துல... ஒண்ணு உள்ள மொடங்கிக் கிடக்கணும்... இல்லன்னா வெளில தள்ளி நிக்கணு முன்னு சொல்லியா கொடுக்க முடியும்? நீ வா... நான் கூட எப்போவாவது நீ புறப்படும்போது நேருக்கு நேர் நிற்கேனா? தானாத் தெரியுறதைப் பார்த்துத் தெளியணும்...?

சரவணனுக்கும், வசந்தாவிற்கும் ஏற்ற அறிவுரைகளைக் கூறும் சிறந்த ஆசானாய் செயல்படுபவள்.

**வேரில் பழுத்த பலா நாவல் காட்டும் சமுதாய சித்தரிப்பு**

**வேலையில்லா திண்டாட்டம்**

சமுதாயத்தில் படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைப்பதில்லை. இந்நாவலிலும் வசந்தா என்பவள் பி.காம் படித்திருக்கிறாள். ஆனால் அதற்கு ஏற்ற வேலை இல்லை. வேலைக்குச் செல்ல வேண்டுமானால் வேலைக்கென்று தேர்வு வைத்து அதில் பாஸ் பண்ணால் மட்டுமே வேலை என்கிற நிலை உருவாகியுள்ளது.

**குடும்பம்**

சமுதாயத்தின் அடிப்படையாக விளங்குவது குடும்பம் ஆகும். சரவணன் குடும்பத்தில் அவனது அண்ணன் மிகவும் திறன் வாய்ந்தவர். நேர்மையானவர். ஒருநாள் நொங்கு சாப்பிடுவதற்காக பனைமரத்தில் ஏறினார். எதிர்பாராத விதமாக கீழே விழுந்து இறந்துவிட்டார். ஆனால் அவனுடைய அண்ணனுக்கு திருமணமாகியும் எட்டு வருட காலமாக பிள்ளை இல்லை. அதனால் வரும் துன்பங்கள், அவலங்கள், பேசும் வார்த்தைகள் எல்லாம் மனமுடையச் செய்கின்றன. மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையே ஏற்படும் பிரச்சனைகள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு ஒரு நல்ல மருமகளாகத் திகழ்கின்றாள் தங்கம்மா.

**லஞ்சம்**

இன்றைய சமுதாயத்தில் எதற்கு எடுத்தாலும் லஞ்சம்தான். இந்நாவலிலும் போக்குவரத்து காவலர் ஒருவர் இருசைக்கிள்காரர்களைப் பிடித்துத் தவறுதலாக வந்ததற்கு பை.்.ன் பண்ண காகிதநோட்டை எடுத்து எழுதப்போனார். ஆனால் அதற்குள் அவர்கள் இருவரும் அசோக சக்கரத்தில் மூன்று சிங்கங்கள் கொண்ட இரண்டு ரூபாய் நோட்டுக்களை நீட்டினார்க்ள. இன்றும் லஞ்சம் என்பது நாட்டில் தலைவிரித்தாடுகிறது.

**மொழிநடை**

**வருணனை**

சரவணனைப் பற்றி வருணிக்கும் போது சுருட்டை முடிக்காரன், சொந்த நிறக்காரன் அதாவது மாநிறம். நிறமா என்றுதான் நினைக்கத் தோன்றும். ஆனால் அதில் மின்னிய மினுக்கம் சிவப்பையும் சிதறடிக்கும்.

**அண்ணி தங்கம்மா**

அண்ணியின் வயது நாற்பத்திரண்டு இருக்கும். அண்ணியின் கழுத்தில் ஆரம் போன்ற வட்டம். வெள்ளைக்கரை போட்ட கறுப்புப் புடவை. அண்ணியின் சிவந்த உடம்பு செம்மைப்படுத்திச் செழுமைப்படுத்தியது.

**அன்னம்**

பவுடர் தேவையில்லாத முகம். அழகு என்பது சிவப்பில் மட்டும் அல்ல என்பதை எடுத்துக்காட்டும் கறுப்பு. சிரிக்கும்போது மட்டுமே சில பெண்களுக்கு கண்கள் எழிலாய் இயங்கும். அவளுக்கோ பேசும்போதுகூட பொங்கும் விழிகள் உடையால் மட்டுமல்ல. உடம்பாலும் தெரியாத வயிறு. எவருடனும் அதிகமாகப் பேசாத வாய். யார் சொல்வதையும் சிரத்தையோடு கேட்கும் காதுகள். பம்பரமாய் இயங்கும் கரங்கள் என்று அன்னத்தை வருணித்துள்ளார்.

**உவமைகள்**

இந்நாவலில் ஆசிரியர் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

* கைக்குழந்தையை மார்பில் அணைத்ததுபோல் ஒரு ரிஜிஸ்டரை மார்போடு சேர்த்து அணைத்தபடி வந்தாள்.

* அன்னத்தின் கண்கள் கலங்கின. அப்புறம் அவற்றில் இருந்து நீர் சொட்டுச் சொட்டாகி வெள்ளைத் திரிபோல் கன்னங்களில் பாய்ந்தன.

**பழமொழி**

இந்நாவலில் ஆசிரியர் சில பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

* அந்த அலுவலகம் இஞ்சி தின்னாத குரங்கு போல் இயல்பாக இருந்தன.
* அணையப் போற விளக்கு கொழுந்துவிட்டு எரிகிறது மாதிரி குதிக்கான்.
* கெடுவான் கேடு நினைப்பான்.
* வீட்டுக்கு வீடு வாசல்படி

வேரில் பழுத்த பலா என்னும் நாவலின் மூலம் சமுதாயத்தில் நிகழும் லஞ்சம், ஊழல், நேர்மையற்ற செயல், மூடப் பழக்கவழக்கங்கள், அலுவலகங்களில் நடைபெறும் பிரச்சனைகள், குடும்பங்களில் காணப்படும் பிரச்சனைகள் என ஒட்டுமொத்த சமுதாய கருத்துக்களை இந்நாவலின் மூலம் அறிந்துக்கொள்ளமுடிகிறது.

## அலகு-5

## நாடகம்

# 7. தண்ணீர் தண்ணீர் - கோமல சுவாமிநாதன்

### காட்சி 1

**பாத்திரங்கள்:- (வெள்ளைச்சாமி, கிராமவாசி)**

வெள்ளைச்சாமி என்ற நாடோடி நடந்து வருகிறான். ஒரு கிராம வாசியிடம் அருகில் ஏதாவது ஊர் இருக்கிறதா? என்று கேட்க கிராமவாசி அத்திப்பட்டி என்ற ஊர் மூன்று மைல் தூரத்தில் உள்ளது என்று கூறி வழியும் கூறுகிறான் பத்துநாள் நடந்து,மரத்தடியில் தங்கி வந்த அவன் ஏதாவது ஊறில் தங்கலாம் என்று செல்லுகிறான்.

### காட்சி 2

**பாத்திரங்கள்:- (வெள்ளைச்சாமி,அடைக்கப்பன் குருசாமி கோவாலு முதலிய நாலைந்து கிராம வாசிகள்)**

வெள்ளைச்சாமி தன் உணவுப் பொட்டலத்தைப் பிரித்துச் சாப்பிடுகிறான். அடைக்கப்பன் அவனை யார் என்று விசாரிக்கிறான். தான் ஒரு நாடோடி இன்று இரவு இந்த ஊரில் தங்கிவிட்டுச் செல்வேன் என்கிறான். உணவு உண்ணும் போது விக்கல் எடுக்கிறது. தண்ணீர் யாரும் தரமால், இந்த ஊரைப்பற்றி தெரியாமல் இங்கு வந்து தண்ணீர் கேட்கலாமா? என்கின்றனர். செவந்தி என்ற பெண் தண்ணீர் கொடுக்கிறாள். தான் தேனுத்துக்குப் பதினாலுமைல் தூரம் நடந்து தண்ணீர் கொண்டு வந்ததைத் தெரிவிக்கிறாள். வெள்ளைச்சாமிக்கு அந்த ஊரில் தண்ணீர் இல்லாத நிலை புரிகிறது. தண்ணீர் இல்லாத ஐந்து வருடமாக அத்திப்பட்டி மக்கள் வாடுகின்றனர். முன்னொரு காலத்தில் விவசாயம் பண்ணிய கிராமம், மழையில்லாததால் பூமி கட்டந்தரையாகி, ஊர் மக்கள் யாவரும் வேறு ஊர்களில் வேலை செய்து உயிர் வாழ்கின்றனர் என்ற ஊர் வரலாரோடு, பதினைந்து மைல் தூரத்தில் கோவில்பட்டி உள்ளது அங்கு போனால் வேலை கிடைக்கும் என்பதையும் தெரிந்து கொள்கிறான் வெள்ளைச்சாமி அடைக்கப்பன் வீட்டுத் திண்ணையில் தூங்குகிறான்.

### காட்சி 3

**பாத்திரங்கள்:- (பள்ளி ஆசிரியர் வைத்தியலிங்கம் அடைக்கப்பன், கந்தையன், செவந்தி)**

பேப்பர் வாசிக்கும் வைத்தியலிங்கம் ஆசிரியரிடம் பேப்பரில் என்ன செய்தி என அடைக்கப்பன், கந்தையன் கேட்கினறனர். 1. ஆப்கானிஸ்தானத்தில் ரஸ்ய படை இருகிறதை அமெரிக்கா எதிர்கிறது. 2. நடிகை சுகன்யா வெள்ளிக்கிழமைகளில் சிவப்புப் புடவை கட்டிக்கிட்டு போகும் போன்ற செய்திகளோ வட இந்திய நதிகளைத் தென் இந்திய நதிகளோடு இணைக்கும் கார்லண்ட் கால்வாய் திட்டமும் பேப்பரில் வந்துள்ளதாகக் கூறுகிறான். எல்லாரும் மகிழ்ச்சியடைய, வைத்தியலிங்கம்

அத்திப்பட்டிக்கும் தண்ணீர் வரப்போவதில்லை என்று கூறுகிறார். அனைவரும் வாத்தியார் புருடா விட்டிருக்கிறாரு என்று சொல்லி கலைக்கின்றனர். ஆடைக்கப்பன் வீட்டுத் திண்ணையில் தூங்கிய வெள்ளைச்சாமியை எழுப்பி விடுகிறார். வாத்தியார் வெள்ளைச்சாமியை விசாரிக்க, அவன் தான் 1947 ஆண்டு பிறந்தால், வெள்ளைக்காரன் இந்த மண்ணைவிட்டுப் போன ஞாபகாத்தமாக வெள்ளைச்சாமி என்ற பெயர் தனக்கு வந்தாகக் கூறுகிறான். சுதந்தரத்திற்குப்பின் பிறந்ததைக் கூறுகிறான். வைத்தியலிங்கம் தான் அத்திப்பட்டிக்கு, தான் வந்த வரலாற்றைக் கூறுகிறான். திருநெல்வேலி கிட்ட ஒரு பள்ளியில் ஆசிரியராக இருந்ததாகவும், ஒரு எம்.எல்.ஏ மகன் ஒன்றிலிருந்து பத்து வரை மட்டும் எண்ணத்தெரியும், வாங்குகிற மார்க்கும் அதற்குள் தான். எனவே மூன்றாம் கிளாசில் பெயில் பண்ணியதால், என்னைக் கல்வி அதிகாரியிடம் சொல்லித் தண்ணியில்லாத காட்டிற்கு மாற்றி விட்டனர் இந்த ஊர்ல ஓர் ஆசிரியர் பள்ளி நண்டு பிடிச்ச நேரம் போக மத்தியான நேரத்தில் பசங்க வந்து சோத்த தின்னுட்டு போவாங்க என்கிறார் வெள்ளைச்சாமி அந்த ஊர்ல தங்க விரும்புகிறான் வைத்தியலிங்கம் இந்த ஊரில தண்ணீர் இல்லை, வேலை இல்லை கருவமரம் விறகுகளை வெட்டி விற்கலாம் என்றால், ஒரு கிளை வெட்டுறதுக்குள்ள உடம்பு முழுக்க ரத்தம் கொட்டும் என்று ஊரின் நிலையைக் கூறுகிறார். நோய் நொடின்னா மருந்து கொடுக்கிற பூசாரி அறிமுகமாகிறார். அந்த ஊர் மாரியம்மன் மாசத்துக்கு ஒரு நேரம் தான் குளிப்பதாக் கூறுகிறார் வைத்தியலிங்கம். வெள்ளைச்சாமி நான் இந்த ஊர்ல செய்ய நினைக்கிற வேலை, அதாவது உங்க ஊர் மாரியம்மன் தினம் குளிக்கனும், நீங்கள் எல்லாரும் தாகம் தீர தண்ணீர் குடிக்கனும் என்கிறார். இந்த தொகுதி எம். எல். ஏ. முதல் எல்லாரும் செய்ய முடியாததை நீ எப்படி செய்வாய் எனக் கேட்க, மனிதனைப் பற்றிய உயர்வான எண்ணங்களைக் கூறுகிறார். மலை தரைமட்ட மாகியது, புதர் மண்டிய நிலம் சாகுப்படி நிலமாகியது எல்லாம் மனிதனால் முடியும் என்கிறாள் செவந்தி வந்து கஞ்சி கொடுக்கிறாள் இருவரும் சாப்பிடுகின்றனர். அப்பா கந்தையன் வந்து கஞ்சி கேட்க இருவருக்கும் கஞ்சியைக் கொடுத்து விட்டதாகக் கூறுகிறாள்.

**காட்சி 4**

**பாத்திரங்கள் - (வெள்ளைச்சாமி, அடைக்கன், குருசாமி, கந்தையன், செவந்தி, வைத்தியலிங்கம்)**

வைத்தியலிங்கம் வெள்ளைச்சாமி இந்த ஊர்ல இருக்க விரும்புவதைக் கூற பூசாரி மறுக்கிறார். அடைக்கப்பன் சம்மதிக்கிறார். வெள்ளைச்சாமிக்கு வண்டி, மாடு வாங்கிக் கொடுத்தா தேனுத்தில் இருந்து தண்ணீர் எடுத்து வந்து ஊர் மக்களுக்கு கொடுப்பதாக ஆசிரியர் வைத்தியலிங்கம் கூறுகிறார். ஊரைச் சுத்தி உள்ள உடை மரத்தை வெட்டி, அம் மரத்தில் வண்டி செய்யலாம். தச்சு வேலை வெள்ளைச்சாமி, குப்பனாசாரி உதவியுடன் அதை செய்ய முன் வருகிறான். வண்டிக்கு மாடு, முன்நூறு

ரூபாய் ஆகும். பட்டை, திருகாணி, டவுணில் வாங்க டவுண் போகனும் என தீர்மானம் பண்ணுகின்றனர். பணத்திற்கு என்ன செய்வது என்ற யோசனையால் ஆழ்ந்தனர். மாடசாமி என்பவரின் மகன் கால்களை விந்தி விந்தி நடந்து வருகிறான். அதற்கு காரணம், இரண்டு மைலுக்கப்பால உள்ள ஒரு கிணத்தில் தண்ணீர் குடித்ததால் இந்த நிலைக்கு ஆயிட்டான். கோவில்பட்டிக்கு கூப்பிட்டுப் போனேன். இது ப்ளோரோசில் வியாதி. அந்த தண்ணீர்ல ப்ளோரைட்னு விஷம் கலந்திருப்பதால், அதைக் குடிப்பவருக்கு கை, கால் விளங்காமல் போய்விடும் என்றனர் எனவே ஊரில எல்லாரும் வீட்டுக்கு இரண்டு ரூபாய் (ஒரு நாள் பட்டினி கிடந்து) கொடுத்தால் மாடு வாங்கலாம் என யோசனை கூற, அதுவும் கொடுக்க இயலாத வறுமை நிலை அங்குக் காணப்படுகிறது. முதலில் செவந்தி இரண்டு ரூபாய் கொடுக்கிறாள், பின்னர் வாத்தியார், அப்படியே ஒவ்வொருவரிடமும் வாங்க தீர்மானிக்கின்றனர்.

**காட்சி 5**

கோடரி சப்தம், ரம்பம் அறுக்கிற சப்தம் மரம் தடாரன சாயும் சப்தம். மரம் வெட்டுகின்றனர்.

**காட்சி 6**

**பாத்திரங்கள்:- கந்தையன், குப்பனாசாரி**

கந்தையன் ஆசாரியிடம் கேட்கிறான் இரண்டு நாளைக்குள் வண்டி வேலை முடிந்து விடும் போல் இருக்கிறதே என்கிறார். அது வண்டி இல்லை கட்டபொம்ப ராசா பல்லக்கு என்கிறார் ஆசாரி.

**காட்சி 7**

**பாத்திரங்கள் ( அடைக்கப்பன், குருசாமி, கந்தையன்)**

பக்கத்து ஊர் மாட்டுத்தாவணியில் காளைக் கன்று சரிபார்த்து வாங்கி வந்து விட்டதாக அடைக்கப்பன் கூற, செவந்தி தட்டில் வெற்றிலை பாக்கு, பழம், சூடம் கொண்டு வருகிறாள். மஞ்சள் பூசிய தோங்காயை உடைத்தான் வண்டி மாட்டை வெள்ளோட்டம் விடப் போகிறார்கள் தாரை, தப்பட்டை ஒலியோடு விசில் அடித்து ஆடிப்பாடி வருகிறார்கள்.

**காட்சி 8**

**பாத்திரங்கள் (கந்தையன், செவந்தி, குருசாமி)**

வெள்ளைச்சாமியால் எல்லாரும் தேனுத்து தண்ணீர் குடிக்கின்றனர். கந்தையன் பேப்பரில் வெள்ளைச்சாமி படத்தைப் போட்டிருப்பதாகக் கூறுகிறாள். செவந்தி படத்தைப் பார்த்தவுடன் கோவில்பட்டியிலிருந்து பேப்பர் வாங்கி வந்து விடுகிறாள்.

ஆனால் செய்தியை வாசிப்பதற்காக குருசாமியை அழைத்து வருகின்றனர். ‘‘வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த காளமேகம் என்பவர் தன் மனைவியுடன் தமது அறையில் கொலையுண்டு கிடந்து தெரிந்ததே முன் விரோதம் காரணமாக இந்த இரண்டு கொலைகளையும் செய்ததாக போலிஸ் வெள்ளத்துரையை ஜவ்வாது மலையில் கைது செய்து, வேலூர் கோர்ட்டுக்கு ஜுப்பில் கொண்டு வரும்போது வெள்ளைத்துரை தப்பியோடிவிட்டான். இவனைப்பிடித்துத் தருபவர்கள் அல்லது இருக்குமிடத்தை போலிசுக்கு உளவு கொடுப்பவர்களுக்கு 5000 ரூபாய் பரிசு அளிக்கப்படும் என போலிஸ் அதிகாரி அறிவித்தார்’’ என்று அந்த செய்தியில் குறிப்பிட்டிருந்தது எல்லாரும் ஆச்சரியத்தோடு செய்தியைக் கேட்டு வாத்தியாரிடம் செய்தி சொல்லச் செல்கின்றனர்.

## காட்சி 9

**பாத்திரங்கள்:- (வைத்தியலிங்கம், வெள்ளைச்சாமி, அடைக்கப்பன், பூசாரி, கந்தையன்)**

பேப்பரில் வந்த செய்தி உண்மையானது என்றும் அது குறித்து வைத்தியலிங்கம் ஆசிரியரிடம் ஏற்கனவே சொல்லிவிட்டதையும் கூறி விட்டு உங்கள் விருப்பம் என்னைக் காட்டிக் கொடுத்து 5000 ரூபாய் பணம் பெற்றுக் கொள்ளலாம் எனவே காட்டிக் கொடுப்பதா? வேண்டாமா? என்பதை நீங்கள் முடிவு பண்ணிக்கொள்ளுங்கள் என்கிறான். பூசாரி காட்டிக் கொடுத்து விட்டுப் பணம் பெற விரும்புகிறான் அடைக்கப்பன் அவனை அதட்டுகிறான். வெள்ளைச்சாமி தன் கதையைக் கூறுகிறான். காளமேகம் பெரிய பணக்காரரு எல்லாரும் அவரிடம் கடன் வாங்குகிறார்கள். நிறைய வட்டி கொடுக்க வேண்டும். வேள்ளைச்சாமியின் நிறைய வட்டி கொடுக்க வேண்டும். வெள்ளைச்சாமியின் அப்பா அவரிடம் கடன் வாங்கியதால் நிலம் எல்லாவற்றையும் இழந்து, கூலியில்லாமல் வேலை செய்தான். தீடிரென்று அவர் இறக்க வெள்ளைச்சாமியும் அவர் மனைவியும் அவரிடம் வேலை செய்கின்றனர். ஒரு நாள் அவன் மனைவியையும் காளமேகம் எடுத்துக் கொண்டான். அன்றைக்கு இராத்திரி வெள்ளைச்சாமி அவன் வீட்டிற்குள் புகுந்து, கட்டிலில் இருந்த காளமேகத்தையும், அவன் மனைவியையும் வெட்டுகிறான். ஜவ்வாது மலையில் ஒளிந்த அவனை போலிஸ் பிடித்து வேலூரில் ரிமாண்டுல வைக்கிறதுக்காக ஜீப்பில் கொண்டு வரும் போது தப்பி வந்ததாகக் கூறுகிறான். மேலும் நீங்கள் காட்டிக் கொடுத்தால் அதோடு என் வாழ்க்கை முடிந்து விடும். இல்லையெனில் உங்களுக்காக செருப்பாக உழைப்பேன் என்கிறான் வைத்தியலிங்கம், தண்ணீர் கொண்டு வந்து விட்டான். இனி மேலும் நமக்காக உழைப்பான் என்று கூறுகிறார். பூசாரிக்கு வெள்ளைச்சாமியைக் காட்டிக் கொடுத்து பணம் வாங்க ஆசை. அதோடு கோவிலுக்கும் பலிபீடமும் கட்டிவிடலாம் எனகிறாள். இறுதியாக எல்லாரும் சேர்ந்து வெள்ளைச்சாமியைக் காட்டிக் கொடுப்பது இல்லை என

தீர்மானம் எடுத்தனர். அதோடு யாரும் காசுக்கு ஆசைப்பட்டுக் காட்டிக் கொடுத்து விடக் கூடாது என்பதற்காக சூடத்தட்டில் எல்லாரும் சத்தியம் பண்ணுகிறார்கள்.

## காட்சி 10

**பாத்திரங்கள்:- (வைத்தியலிங்கம் வீடு, வைத்தியலிங்கம், வெள்ளைச்சாமி, குருசாமி, இரண்டு வாலிபர்கள்)**

முன்னூறு வீட்டிலும் சத்தியம் வாங்கி விட்டதாகக் கூறுகின்றனர். வெள்ளைச்சாமி ஊர் மக்கள் தன் மீது வைத்த அன்பிற்காக மகிழ்ச்சி அடைகிறான். அடைக்கப்பன், வண்டிப்பேட்டை நாயக்கர் தங்கள் ஊருக்கு வருவதாகக் கூறுகிறான். இந்த வட்டாரத்தில் பெரியபுள்ளி, கலெக்டர், எம்.எல்.ஏ., மந்திரி எல்லாம் அவர் கைக்குள் என்கிறான் நாயக்கர் வந்து எலெக்சன் வருகிறது, இந்தத் தொகுதிக்கு சித்தையா நாயக்கர் நிக்குறாரு அவருக்கு எல்லாரும் ஓட்டு போட வேண்டும் என்கிறார் எதிர்த்து கிருஷ்ணசாமி ரெட்டியாரு நிக்கிறார் அடைக்கப்பன் சாதியைப் புகுத்த வேண்டாம் என்கிறார்.

பல சாதிக்காரன் ஒன்றாக இருக்கிறோம் என்கிறார். நம் சாதிக்காரன் ஒருவன் சட்டசபை சென்றால் நம் சாதிக்காரனுக்கு கவர்மெண்டு வேலைக் கிடைக்கும் என்று தன் கொள்கையை நியாயப் படுத்துகிறான். கோவாலு என்பவன் மட்டும் தைரியமாக தண்ணீர் கொடுக்க முடியவில்லை, ஓட்டுகேட்க மட்டும் வந்து விடுகிறார்கள் என்று நியாயத்தை தைரியமாகக் கேட்கிறான். வாத்தியாரும் சற்று நிதானமாக கேட்கிறார் இதற்கு முன்னால் குருசாமி நாயக்கருக்கு, ஓட்டு நீங்கள் கேட்டுப் போட்டோம் இன்னும் தண்ணீர் வரவில்லையே என்கிறார். கிராமவாசிகள் நகர மக்களுக்கும் இடையே காணப்படும் ஏற்றத்தாழ்வின் நீதியைக் கேட்கிறான் நாயக்கர், வாத்தியார் தான் அம்மக்களைத் தூண்டிவிடுவதாகக் கூறுவதோடு நீ ரெட்டியார் எனவேதான் நாயக்கமாருக்கு எதிரா நாயக்கரைத் தூண்டிவிடுகிறாய் என்று கூறுகிறார். மக்கள் தெளிவாக இன்று எலக்ஷனுக்கு ஓட்டு கேட்கவரப்ப தான் நாங்க என்ன சாதி என்று தெரிகிறது அதுவரை யாரும் கண்டு கொள்ளவதில்லை என்பதைக் கூறுகின்றனர் அரசியல்வாதிகளைப் புரிந்து வைத்திருப்பதை எல்லா நிலையிலும் வெளிப்படுத்துகின்றனர்.

## காட்சி 11

ரேடியோவில் குரல் கேட்டல்.

தேர்தல் செய்தி – வாசிப்பது – வெங்கட்ராமன் :- கிருஷ்ணசாமி ரெட்டியர் தேர்ந்தெடுக்கப்பட்டார் எதிர்த்து போட்டியிட்ட சித்தைய நாயக்கரைவிட 150 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார் – அத்திபட்டி மக்கள் அதிகம் தேர்தலைப் புறக்கணித்தனர்.

## காட்சி 12

**பாத்திரங்கள் : ஓட்டப்பிடாரம் வெங்கடேசன் (ஓ.வி) வெள்ளைச்சாமி**

ஒட்டபிடாரம் வெங்கடேசன், நிருபர் அத்திபட்டியில் ஓட்டுப் போடாததால் அது விஷயமாகத் தெரிந்து போக வருகிறார், வெள்ளைச்சாமி வழி காட்டியாக தன் வண்டியில் அழைத்துச் செல்கிறார்.

## காட்சி 13

**பாத்திரங்கள் : ஓ.வி, வெள்ளைச்சாமி, வாத்தியார்**

ஓ.வி. இக்கிராமம் எலெக்‘னில் ஓட்டுப் போடாத காரணத்தை அறிந்து கொள்ள வந்ததாக வைத்தியலிங்கத்திடம் கூறுகிறார். பத்திரிகையைக் கிண்டல் செய்து சுதந்திரத்திற்குப் பிறகு பத்திரிகைகள் தரம் தாழ்ந்து விட்டதைக் கூறுகின்றனர். ஒரு ஏகாதிபத்தியத்தையே எதிர்ததுப் போராடி வெற்றி பெறுகிற அளவுக்கு அன்று ஊக்கம் கொடுத்தப் பத்திரிக்கை இன்று சுகன்யா வெள்ளிக்கிழமை செவப்பு நிற புடவை கட்டுகிறாள் என்ற செய்தி போடும் அளவிற்கு வந்து விட்டதைக் கூறுகின்றனர்.

பின்னர் ஓட்டுப் போடாத காரணத்தை வைத்தியலிங்கம் கூறுகிறார். 5 வருடமாக குடிக்கத் தண்ணீா இல்லை 14 மைல் தூரம் சென்றுதாங்க தண்ணீர் கொண்டு வர வேண்டிய அவலநிலை. இவரு தண்ணீர் வண்டியில் கொண்டு வந்து மதிய உணவு போட மணி மூன்று ஆகிறது அரிக்கன் லைட்டை வைத்து பள்ளிக்கூடம் நடத்தி வருகிறேன். நீங்க மெட்ராஸ் காரங்க கார்ப்ரேசன் குழாயில் தண்ணீர் வரவில்லையென்றால் பக்கம் பக்கமாக எழுதுகிறீர்கள். ஓ.வி. அரசாங்கத்திற்கு எழுதவில்லையா எனக் கேட்க வைத்தியலிங்கம் மந்திரிகிட்ட மகசர் கொடுத்தோம், அதை அவர் பி.ஏ.கிட்ட கொடுத்தார். அவர், கலக்டெரிடம், கலக்டெர் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம், ரெவினயூ இன்ஸ்பெக்டர் - கிராம சேகவர் இப்படியே அனுப்பு யாவரும் வாஸ்தவம் தான் இந்த ஊரில் தண்ணீர் இல்லை என்று ஒப்புக்கொண்டனர். இதற்கு ஐந்து வருடம் பாதி ஜனங்கள் ஊரவிட்டு விட்டு போய்விட்டனர். கொஞ்ச பேர் கண்ட தண்ணியையும் குடித்து வியாதியால் செத்துவிட்டனர். ஆகவே எங்களால் முடிந்த புறக்கணிப்பை செய்தோம் என்கிறார்.

ஓ.வி. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறீர்களா எனக் கேட்க அரகாங்கத்தின் மீது நம்பிக்கயில்லாத தன்மையைக் கூறுகிறார் வன்முறைக்குத்தான் இப்போது மதிப்பு, சாத்வீக போராட்டத்தில் நம்பிக்கையில்லை என்கிறார். வெள்ளைச்சாமி, பிரபல காந்தியவாதி வி.கே.ஆர்.வி. ராவ் சொன்னதை பத்திரிக்கையில் படித்துவிட்டுச் சொல்கிறேன் பொருளாதார மாற்றம் வேண்டும், ஆயுதப் புரட்சி வரும் என்கிறார்.

ஓ.வி. வெள்ளைச்சாமியைத் தெரிந்து கொண்டு என் அப்பா ஒரு காந்திய வாதி ஆனால் நான்கு தீவிர கம்யூனிஸ்டுகளை என வீட்டில் ஒளித்து வைத்திருந்தார் நான் காட்டிக் கொடுக்க மாட்டேன். பத்திரிக்கையில் போட்டு தண்ணீர் வர ஏற்பாடு செய்வதாக கூறிவிட்டுச் செல்கிறார்.

### காட்சி 14

**பாத்திரங்கள்:- (ஓ.வி. – வண்டிப் பேட்டை நாயக்கர்)**

ஓ.வி. உங்க தொகுதியில் சித்தைய நாயக்கருடைய தோல்விக்கு காரணம் என்று, வண்டிப் போட்டை நாயக்கரிடம் கேட்க அத்திப்பட்டி மக்கள் ஓட்டுப்போடாததுதான் என்று கூறுகிறார். ஜாதி அபிமானம் இல்லை கூண்டோடு அழியப் போகிறானுங்க என்றும் கூறுகிறார். தண்ணீர் இல்லாத காரணத்தைக் கேட்க, அதற்கும் ஓட்டுப் போடாததுக்கும் சம்பந்தம் இல்லை. கங்கையில் இருந்து கால்வாய் வெட்டி வரும்வரை பெறுத்து இருக்க வேண்டியது தானே இப்ப வருகிற தண்ணீரும் வரவிடாமல் பண்ணீவிடுவேன் என்று கோபமாக பேசுகிறார்.

### காட்சி 15

**பாத்திரங்கள்:- (பத்திரிக்கை அதிபர் பாராங்குசம், ஓ.வி)**

ஓ.வி. பாராங்குசத்திடம் தான் அத்திப்பட்டி போய் வந்ததையும் அத்திப்பட்டி மக்களின் தண்ணீரில்லாத நிலை, ப்ளோரைடு கலந்த தண்ணீர் குடித்த காரணத்தால் கை கால் விளங்காமல் போன நிலை, வறுமை நிலை போன்ற காரியங்களைக் கூறி அதன் காரணமாக ஓட்டுப் போடாத நிலை போன்றவற்றைத் தான் சேகரித்துவந்திருப்பதைக் கூறுகிறான். அதை சட்டை செய்யாமல் நடிகை குந்தளகுமாரிக்கு பர்த்டே. அவள் வீட்டிற்குச் சென்று படம் எடுத்து வந்து சென்டர் ஸ்பர்டுல போட வேண்டும் என்கிறார். மேலும் அத்திப்பட்டி மாதிரி 4லட்சம் கிராமங்கள் உள்ளது அதை எல்லாம் எழுத முடியாது. கவர்மென்டை இந்த மாதிரி எதிர்த்து எழுதினா, விளம்பரம் கிடைக்காது என்று கூறி ஜனங்களுக்கு சுவாரசியமான வி'யத்தைப் போட்டுட்டு காசு பண்ணப் பாருய்யா என்று கூறுகிறா. அதற்குத் தயாராக இல்லாத ஓ.வி. க்கு அந்த காம்பவுண்டுக்குள் அனுமதி மறுக்கப்பட்டது.

### காட்சி 16

**பாத்திரங்கள்:- (வைத்தியலிங்கம் வீடு வெள்ளைச்சாமி பேப்பர் படிக்கிறார், செவந்தி வரல)**

செவந்திக்கு, சம்பந்தம் பேச சேத்தூர்காரங்க வருகிறார். மாப்பிள்ளை போலீசுல வேலை பார்க்கிறார். எனவே நீங்கள் அவர்கள் கண்ணில்படாமல் சென்றுவிடுங்கள்.

உங்கள் படம் எல்லா போலீஸ் ஸ்டேசனிலும் மாட்டி உள்ளதால் நீங்கள் கண்ணில பட வேண்டாம் என எச்சரித்து விட்டுச் செல்கிறார்.

**காட்சி 17**

**பாத்திரங்கள்:- (போலீஸ் மாப்பிள்ளை அழகிரி – அடைக்கப்பன்)**

அடைக்கப்பன் செவந்தியின் குணநலன்களைப் பாராட்டி விட்டு அழகிரியின் வேலையைப்பற்றி விசாரித்து தெரிந்து கொள்கிறாள். நிறைய கேசுகளைப் பிடித்தா பதவி உயர்வு கிடைக்கும். சவ்வாது மலையில் தப்பித்த கொலைகாரனைப் பிடித்தால் சிறந்த பதவி உயர்வு கிடைக்கும் என்ற தன் ஆசையை கூறுகிறார் போலிஸ் கான்ஸ்டபிள் அழகிரி. கந்தையன் தன் வருங்கால மருமகனைப் பற்றி அடைக்கப்பன் கூறும் நல்லவற்றைக் கேட்கிறான். வாக்குக் கொடுத்தபடி எப்படி திருமணம் நடத்தப் போகிறேன் என்று மலைப்பாக இருப்பதாகக் கூறுகிறான். பெரியவர் தையில் நல்ல நாள் பார்த்து சிவகிரியில் கல்யாணம் முடித்துவிடலாம் என கூற கந்தையன் மகிழ்ச்சி அடைகிறான்.

**காட்சி 18**

**பாத்திரங்கள்:- (மேளசப்தம் - கல்யாண வைபவம்)**

அத்திப்பட்டி குமாரநாயக்கர் பேத்தியும், கந்தையா நாயக்கர் மகளுமான செவந்திக்கு, சிவகிரி சோலை நாயக்கர் பேரனும் ஈனேறு முத்து நாயக்கர் மகனுமான அழகரிசாமி நாயக்கர் திருமங்கல்யம் கட்டுகிறார். யாவரும் மொய் பணம் கொடுக்கின்றனர்.

**காட்சி 19**

**பாத்திரங்கள்:- (வைத்தியலிங்கம், அடைக்கப்பன், கந்தையன், குருசாமி, வெள்ளைச்சாமி, கோவாலு)**

வெகு நேரமாக வெள்ளைச்சாமி தண்ணீர் வண்டியுடன் வராததததை எண்ணி பல விதமான யோசனையுடன் அனைவரும் இருக்க, குருசாமியும் கோவாலும் வெள்ளைச் சாமியை அழைத்து வருகின்றனர். வெள்ளைச்சாமி உடலில் இரத்தக் கறையுடனும் தலையில் கட்டுடனும் வருகிறான். தன்னை நான்கு முரட்டு மனிதர்கள், அத்திபட்டிக்காரர்களுக்கு நீ தண்ணீர் எடுக்க கூடாது. என்று கூறி தலையில் கம்பால் ஓங்கி அடித்து வண்டி மாட்டையும் மலையில் உருட்டி தள்ளி விட்டனர். வண்டி நொருங்கி போய்விட்டது, மாடும் செத்தும் போய்விட்டது என்று கூறுகிறான். உடனே கோவாலு இது வண்டி பேட்டை நாயக்கனுடைய செயல் தான் என்று கூறி பழிவாங்கத் துடிக்கிறான். எல்லாரும் அவனை சமாதானப்படுத்தி அடுத்து செய்ய வேண்டியதைத் தீர்மானம் பண்ணுகின்றன்.

## காட்சி 20

**பாத்திரங்கள்:- (அழகிரி வீடு, அழகிரி, செவந்தி)**

ஆடிக்கு செவந்தி மட்டும் அத்திப்பட்டிக்குப் போய் வருவதாகச் சொல்கிறான். அத்திப்பட்டி மழை பெய்து, செழித்தப்பின் அழகிரியும் சேர்ந்து வரலாம் என்கிறான். அப்பா, ஊர்க்காரங்க ஏதும் கூறமாட்டார்கள் நான் மட்டும் போய் வருகிறேன் என்கிறாள். அழகிரி அப்பாவிடமும் அவனையே கூற சொல்கிறாள்.

## காட்சி 21

**பாத்திரங்கள்:- (வைத்தியலிங்கம், வெள்ளைச்சாமி, அடைக்கப்பன், கந்தையன்)**

திருநல்லிக்கு மந்திரி வருகிறார். ஏதாவது மகசர் கொடுக்கலமா எனக் கேட்க, உள்ளூர் எம். எல். ஏ. விடம் கூட சொல்ல முடியவில்லை என யோசிக்கின்றனர். கோவாலு காரை மறிப்போம், அல்லது கலக்டர் வாசலில் வளைத்து நின்று சத்தம் போடுவோம் என்கிறான். வெள்ளைச்சாமி மழைக்கு தெற்குப்புறம் விழுகிற தேனூத்து தண்ணீரை வடக்குப் பக்கமாகத் திருப்பிவிடலாம். தண்ணீா வடக்குப்பக்கம் வராமல் தடுத்து நிற்கும் மலைப்பாறை உடைத்து விட்டால் தண்ணீர் நுற்றைம்பது அடி அருவியாக விழும் அங்கிருந்து ஏழுமைல் வாய்க்கால் வெட்டினால் அத்திப்பட்டிக்கு வந்து விடும். ஊருக்குத் தெற்கு பக்கம் இருக்கும் வறண்டு கிடக்கும் கம்மாயைத் தூர் எடுத்து அதில் தண்ணீரை சேமிக்கலாம் என்கிறான். பூசாரி போன்றோர் முடியாத காரியம் என்கின்றனர் வெள்ளாண்மை நிலத்திறகுள் வாய்க்கால் வராமல் புறம்போக்கு நிலத்தின் வழியாகக் கொண்டு வரலாம். எல்லாரும் இதை சவாலாக எடுத்துச் செய்கின்றான்.

## காட்சி 23

**பாத்திரங்கள்:- (கந்தையன், செவந்தி)**

செவந்தி தனியாக கந்தையன் வீட்டிற்கு வந்திருக்கிறாள். மருமகன் வரவில்லையா என்று விசாரிக்கிறான் வெள்ளைச்சாமியை ஊருக்குள் மறைத்து வைத்திருக்கிறோம் அவர் வந்தால் தெரிந்து விடும் எனவே தான் செவந்தி மட்டும் தனியாக வந்ததாகக் கூறுகிறாள். தேனுத்துத் தண்ணீர் கொண்டு வர நடக்கும் முயற்சி அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

## காட்சி 24

**பாத்திரங்கள்:- (வைத்தியலிங்கம் வீடு, ஓ.வி. வெளியிலிருந்து வருதல்)**

ஓ.வி. தான் அத்திப்பட்டிக் கிராமத்தைப் பற்றிய செய்தியைப் பத்திக்கையில் போட முடியாததற்கு வருத்தம் தெரிவித்தான். தான் வேலையை அதனால் விட்டுவிடடதையும். இந்த அத்திப்பட்டியினைப் பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம்

வாங்கப் போவதைப் பற்றியும் கூறுகிறார். வைத்தியலிங்கம் தன் வீட்டிலேயே தங்குவதற்கு அனுமதி அளிக்கிறார். தேனுத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர வாய்க்கால் வெட்டப்படுவதையும் கூறுகிறார்.

### காட்சி 25

**பாத்திரங்கள்:- (கந்தையன் வீடு, கான்ஸ்டபிள் அழகிரி வருதல்)**

திடீரென அழகிரி செவந்தி வீட்டிற்கு வருகிறார். அந்த நேரம் காய்ச்சலால் வெள்ளைச்சாமி சோர்வடைந்து வருகிறான். செவந்தி அவனைத் தன் கணவன் அழகிரி கண்ணில் படாமல் இருப்பதற்காக சீக்கிரம் வீட்டிற்குள் அனுப்புகிறாள். நொச்சி இலை அரைத்து வந்து அடைக்கப்பன் வெள்ளைச்சாமியை அழைக்க அவன் அழகிரி கண்ணில் பட்டுவிடுகிறான். ஆழகிரி வெள்ளைச்சாமியை அடையாளம் கண்டு கைது செய்ய விரும்புகிறான். செவந்தி உட்பட அத்தனை பேரும் அவன் தேனூத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்ததையும் இப்போது வாய்க்கால் தோண்டும் நல்ல செயல்களை செய்வதோடு ஊர்மக்கள் அனைவரும் சூடம் ஏந்தி சத்தியம் அடித்து அவனைக் காட்டிக் கொடுப்பதில்லை என சபதம் ஏற்றிருப்பதையும் கூறுகிறாள். வெள்ளைச்சாமி, அழகிரியிடம் வேலை முக்கால் வாசி முடிந்துவிட்டது நாளைக்குப் பாறையை உடைத்து தண்ணீர் வந்ததும் தண்ணீர் குடித்து விட்டு உன்னிடம் சரண் அடைந்து விடுகிறேன் என்கிறான் ஊர் பெரியவர்களும் அழகிரிக்கு உறுதி செய்து கொடுக்க அவன் செல்கிறான்.

### காட்சி 26

**பாத்திரங்கள்:- (வண்டிப் பேட்டை நாயக்கர், ஓ.வி.)**

ஓ.வி. வண்டிப்பேட்டை நாயக்கரிடம் வாய்க்கால் வெட்டி தண்ணீர் வரப்போகும் செய்தியைக் கூறுகிறார். அரசியல் கட்சி, அதிகாரவர்க்கம், இயற்கை யாவரும் ஒதுக்கிய அத்திப்பட்டி மக்கள் தாங்களாக, தங்கள் உழைப்பால் அவர்களுடைய தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள். இந்த விபரத்தை முழுவதும் தெரியப்படுத்தப் போகிறேன் என்கிறார் ஓ.வி.

### காட்சி 27

**பாத்திரங்கள்:- (ஊர் மக்கள், வைத்தியலிங்கம்)**

இன்று கல்லை உடைக்க வேண்டும். தண்ணீர் வந்து விடும். அதற்கு முன் மஞ்சள் தண்ணீரை கால்வாயில் ஊற்ற வேண்டும் என்பது கந்தையன் கூற்று. வைத்தியலிங்கம் வெள்ளைச்சாமியின் மன உறுதியைப் பாராட்டி, அவனுடைய உழைப்பால் தண்ணீர் இன்று ஊருக்குள் வரப்போவதை எண்ணி அவனுக்கு ஒரு ஜரிகை அங்கவஸ்திரத்தைச் சார்த்துகிறார் பள்ளி கூடத்தைப் பார்வையிட யாராவது

இன்ஸ்பெக்டர், டி.இ.ஓ வருவார்கள் என வைத்திருந்ததாகவும், இந்த தண்ணீர் இல்லாத காட்டிற்கு யாரும் வரவில்லை என்கிறார் தாரை தப்பட்டை ஒலி கேட்கிறது, கோவாலு, குருசாமி கை கோர்த்து ஆடுகிறார்கள்.

அந்த நேரத்தில், கவர்மெண்ட் நிலத்தில் அனுமதி இல்லாமல் வாய்க்கால் வெட்டிய, பாறை உடைத்து எல்லாம் தவறு அதற்காக உங்களை லாக்கப்புல தள்ளிப் போகிறேன் என்று பி.டபிள்யூ.டி என்ஜினியர் ஒருவர் வருகிறார் பி.டபிள்யூ.டி ஆட்கள் கால்வாயை மூடப் போகிறார்கள் இது கவர்மெண்டு உத்தரவு என்கிறார். எல்லாரும் கலக்கம் அடைந்து இருக்கிறார்கள். இனி என்ன செய்வது தேனூத்தில் போலிஸ் படையே நிற்பதாகவும் செய்தி அறிந்து வேதனைப்படுகின்றனர். இறுதியில் யாவரும் ஒரே உறுதியுடன் போலிஸ் சுட்டுத் தள்ளினாலும் பரவாயில்லை பாறையை உடைப்போம் என்ற எண்ணத்துடன் புறப்பட்டுச் செல்கின்றனர்.

அந்த நேரம் அழகிரி வந்து வெள்ளைச்சாமியை கைது செய்யப்போவதாகக் கூறுகிறான். தண்ணீர் வருவது சாத்தியம் அல்ல. வாய்க்கால் வெட்டப்பட்டதற்கு என்று கலக்டெர் தடை உத்தரவு போட்டு விட்டார். எனவே என் கடமையை செய்ய வேண்டும் என்கிறான் செவந்தியும் வந்து, அழகிரிக்கு எதிராக பேசுகிறான். ஊர் மாப்பிள்ளை என்பதால் ஒன்றும் செய்யமாட்டாங்க என்கிற தைரியத்திலே பேச வேண்டாம் என்கிறாள். இருவருக்கும் தகராறு முற்றி இறுதியில் தாலியைக் கழற்றி அழகிரி கையில் கொடுக்கிறாள். இப்ப உறவு அத்து போய்விட்டது. இனி உன் நெஞ்சில் உரம் இருந்தால் வெள்ளைச்சாமி அண்ணனைப் புடிச்சிக் கிட்டுப் போ பார்க்கலாம் என்கிறாள். கூட்டம் அழரிரியை சுத்தி விலக்குகிறது. சிலர் அரிவாள் கம்புடன் வருகிறாள். ஆழகிரி விசிலை எடுத்துப் பலமாக ஊதுகிறான். வெள்ளைச்சாமிஓடுகிறான். அழகிரி வெள்ளைச்சாமியைப் பிடிக்கப்போக வழி மறைக்கிறது கூட்டம்.

## காட்சி 28

(கள்ளிக்காடு)

பல மைல் ஓடி வந்த களைப்பு மூச்சு வாங்க, நாக்கு வறண்டது, கள்ளுக் காடடினுடே ஓடி முடியாமல் விழுகிறான் தண்ணி, தண்ணி, எனக் கதறி, மூச்சி இளைக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அடங்குகிறது.

## காட்சி 29

**பாத்திரங்கள்:- வைத்தியலிங்கள், அடைக்கப்பன், செவந்தி, ஓ.வி.**

ஓ.வி. பத்திரிக்கைக்கு ரிப்போர்ட் எழுதுகிறான். வெள்ளைச்சாமி நாக்கு வறண்டு கள்ளிக் காட்டில் மாண்டு போனான். அவன் சடலத்தைப் பார்க்கக் கூட அத்திப்பட்டி மக்களுக்கு அனுமதி இல்லை குப்பனாசாமி, பூசாரி போன்றவர்கள் ஊரைவிட்டு வெளியேறி விட்டனர்.

சென்னை முதலிய நகரங்களில் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு யாரேனும் உங்களிடம் பிச்சைக் கேட்டால் அது அத்திப்பட்டி விவசாயப் பெருங்குடி மக்களைத் தான் இருக்கும் கோவாலு ஊரில் இல்லை. அவன் எங்கே போனானோ தெரியாது கொடி பிடித்து முன்னே போவான் அல்லது அதிகார வர்க்கத்துக்குச் சிறை கம்பிகளுக்குப் பின்னால் அவன் அவதிப்படலாம் தீவிரவாதி என்று தூக்கிலடப்பட்டிருக்கலாம். குருசாமிக்கும் ப்ளோரைட் தண்ணீா குடித்ததால் முடக்குவாதம் வாத்தியார் வைத்தியலிங்கம் தண்ணீர் எடுத்து வந்து குழந்தைகளுக்குச் சோறு போடுகிறார் இரவில் பள்ளி நடத்துகிறார். ஆடைக்கப்பன் என்றைக்கு விடியுமோ என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். வாழாக்குடியாகி விட்ட செவந்தி தன் அப்பனுடன் கூலி வேலை செய்கிறாள்.

இத்தனை பேர் மனதிலும் உள்ள கேள்வி எங்களுக்கு விடிவு காலம் வராதா? நாங்கள் வாழத் தகுதியற்றவர்களா? எங்கள் நிலை உயராதா?

## தண்ணீர் தண்ணீர் நாடகம் - திறனாய்வு

வெள்ளைச்சாமி என்னும் பாதசாரி அத்திப்பட்டி என்னும் ஊருக்கு வருகிறான். ஊரில் தண்ணீர் இல்லாத நிலையை அறிகிறான். பதினான்கு மைல் தேனூற்றிற்கு சென்று தண்ணீர் எடுத்து வந்து தண்ணீர் எடுத்து வைத்திருந்து செவந்தி அவனுக்கு உணவு உண்பதற்குத் தண்ணீர் கொடுக்கிறாள்.

வெள்ளைச்சாமி தான் ஒரு நாடோடி என்றும் அந்த ஊரிலியே தான் தங்கியிருக்கவும் அனுமதி கேட்கிறான். மேலும் தனக்கு ஒரளவு தச்சு வேலை தெரிவதால், அங்குள்ள உடைமரத்தை வெட்டி வண்டி செய்து விடலாம் மேலும் ஊரினர் அனைவரும் சேர்ந்து ஒரு ஜோடு மாடு வாங்கினால் தேனூற்றில் இருந்து தண்ணீர் தினமும் எடுத்து வந்து விடலாம் என்று கூறுகிறான். அனைவரும் சம்மதித்து வண்டி செய்து, தண்ணீர் வண்டியின் மூலம் கொண்டு வரப்படுகிறது அனைவரிடமும் நல்ல பெயரைப் பெற்றுக் கொள்சிறான்.

பேப்பரில் வெள்ளைச்சாமி படம் வருகிறது அதனை வாசிக்கத் தெரிந்த ஒருவரிடம் கூறி வாசித்தப் பார்த்தப் பொழுது வெள்ளைத்துரை என்பது அவன் பெயர் என்றும் இரண்டு கொலைகள் செய்து ஜவ்வாது மலையில் ஒளிந்து இருந்த அவனை போலிஸ் பிடித்த போது தப்பி வந்து கொலையாளி என்பது தெரிகிறது. அவனுடைய தலைக்கு 5000 ரூபாய் போலீஸ் சன்மானம் அளிக்க விருப்பதும் தெரியவருகிறது.

ஊரார் அனைவரும் வெள்ளைச்சாமியை போலீஸில் கூட்டிக் கொடுப்பதில்லை என்று சூடத்தைப் பொருத்தி சத்தியம் செய்கின்றனர்.

தேர்தல் வருகிறது வண்டிப் பேட்டை நாயக்கர் அந்த அத்திப்பட்டி ஊருக்கு வந்து சித்தையா நாயக்கருக்க ஓட்டுப் போடச் சொல்கிறார். ஆனால் ஊர் மக்கள் மொத்தமாக தங்கள் ஊருக்கு யாரும் தண்ணீர் வருவதற்கு முயற்சி எடுக்காததால் எலெக்ஷனைப் புறக்கணிக்கின்றனர். சித்தையா நாயக்கரை எதிர்த்து நின்ற

கிருஷ்ணசாமி ரெட்டியார் வெற்றிபெறுகிறார் 150 ஓட்டு மட்டுமே வித்தியாசம் எனவே வண்டிப் பேட்டை நாயக்கருக்கு கோபம் தன்னுடைய ஆட்களை வைத்து, தேனூற்றில் தண்ணீர் எடுத்து வரும் வெள்ளைச்சாமியை அடித்துக் காயப்படுத்தியதோடு வண்டியையும் மலையிலிருந்து உருட்டி தள்ளியதால் வண்டி உடைத்து மாடும் இறந்து விடுகிறது.

மீண்டும் தண்ணீர் பிரச்சனை வராமல் இருக்க தேனூற்றிலிருந்து தண்ணீரை கால்வாய் மூலம் கொண்டு வந்து விடலாம் என்றும் வெள்ளைச்சாமியின் ஆலோசனையின் படி ஊரில் உள்ள வாலிபர்கள் அனைவரும் கால்வாய் வெட்டி முடிக்கின்றனர். அடுத்தநாள், மலையை உடைதது முடித்த உடன் தண்ணீா கால் வாய் வழியே வெளி வந்து விடும் என்ற நிலையில் பி.டபிள்யூ.டி. ஆபிஸர் அரசிடம் அனுமதி வாங்காமல் கால்வாய் வெட்டியது தவறு என்று அதனை மூடிவிடுகிறார்கள்.

அதோடு செவந்தியின் போலீஸ் கணவன் வெள்ளைச்சாமியை அடையாளம் கண்டு கைது செய்ய விழையும் போது, வெள்ளைச்சாமி, கால்வாய் தண்ணீரைக் குடித்த உடன் சரண் அடைவாதகக் கூறினாள். ஆனால் நிலை வேறு விதமாக மாறி அரசு கால்வாயை அடைத்தது மட்டுமில்லாமல் போலீஸ் மலையை உடைக்க விடாமல் தடுப்பதற்காக நின்றனர். எனவே வெள்ளைச்சாமியை கைது செய்ய அழகிரி (செவந்தியின் கணவன் வருகிறான்). வாக்குவாதம் ஏற்படுகிறது. செவந்தியும் அழகிரியும் பிரிகின்றனர். வெள்ளைச்சாமி ஓடி கள்ளிக்காட்டில் நாவரண்டு தண்ணீர் இல்லாமல் இறந்து விடுகிறான்.

ஊருக்குள் தண்ணீர் கேட்டு வந்த வெள்ளைச்சாமி, தண்ணீர் கிடைக்கப்பாடுபட்டு, தண்ணீர் கிடைக்காமல் இறக்கிறான்.

சமுதாயத்தின் பல்வேறு நிலைகள் இங்கு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

அத்திப்பட்டியின் தண்ணீர் இல்லாத நிலையோடு, அவ்வூரின் வறுமை நிலையும் இந்த கதை முழுவதும் கூறப்பட்டுள்ளது.

**நிலப்பிரப்புகளின் அநியாய வட்டியும், அராஜகமும்**

வட ஆற்காடு ஜில்லாவில் ஆலங்காயம் காளமேகம் என்ற நிலப்பிரபுவிடம் அடிமை கூலி வெள்ளைச்சாமி குடும்பம்.

பெரும்பணக்காராண அவர் பெரிய நிலப்பிரபு. அவருகிட்ட தான் வட்டிக்கு கடன் வாங்குவார்கள். நூறு ரூபா கடன் வாங்கினால் அடுத்த வருடம் இருநூறு ரூபா திருப்பிக் கொடுக்க வேண்டும். இரண்டு வருடம் ஆனால் முந்நூறு ரூபாய் - என்ற அநியாய வட்டியால் வெள்ளைச்சாமியின் அப்பாவின் நிலம் எல்லாம் அவரிடம் சென்று விடுகிறது. வெள்ளைச்சாமியை படிக்க வைப்பதற்காக மேலும் மேலும் கடன் வாங்கி, வெள்ளைச்சாமி பத்தாம் வகுப்பு படிப்பதற்குள் அப்பா இறந்து விடுகிறார். வெள்ளைச்சாமி கூலியாள் ஆகிறான். கடனைத் தீர்க்க வேலை செய்கிறான். 24 மணி நேரமும் இடுப்பொடிகிற வேலை அவன் மனைவியும் வேலை செய்கிறாள். ஒரு நாள்

வெள்ளைச்சாமியிடம் காளமேகம் ‘உன் கடன் பாக்கிக்காக உன் பொண்டாட்டிய எடுத்துக்கிட்டேன்’ என்கிறார். அன்னைக்கு ராத்திரி காளமேகம் வீட்டிற்குள் புகுந்து கட்டிலில் காளமேகமும் வெள்ளைச்சாமியின் மனைவியும் இருப்பதைப் பார்த்து அரிவாளைச் சுத்துகிறான். இரண்டு பேரும் இறந்து விடுகிறார்கள். வெள்ளைச்சாமி கொலையாள் ஆகிறான்.

**கடமை தவறாத வைத்தியலிங்கம்**

ஓர் ஆசிரியர், பள்ளியில் பிள்ளைகளுக்கு தேனூத்திலிருந்து தண்ணீர் எடுத்து வந்து மதிய உணவு ஆக்கிப் போட்டு இரவு அரிக்கன் லைட் வெளிச்சத்தில் பாடம் எடுப்பவர். பேப்பர் வாசித்து யாவருக்கும் செய்தி சொல்பவர் தண்ணீர் கிடைப்பதற்காக பல இடங்களிலும் மனு எழுதியவர். நேர்மை குணம் கொண்டவர். இப்படிப்பட்ட சிறந்த குணமுடையவர்களும் சமுதாயத்தில் உள்ளதால் நாடு பிழைத்திருக்கிறது எனலாம்.

**அரசியல்வாதிகள்**

வண்டிப் பேட்டை நாயக்கர் என்பவர் சித்தையா நாயக்கருக்காக ஓட்டு கேட்க வருகிறார். நாயக்கர் சாதியைக் கூறி ஓட்டுக் கேட்கிறார். அத்திப்பட்டியில் தண்ணீர் கிடைப்பதற்கு யாரும் உதவி செய்யாததால் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகக் கூறுகின்றனர். அவ்வாறே புறக்கணித்தால் கிருஷ்ணசாமி ரெட்டியர் வெற்றி பெறுகிறார்.

ஆரசியல் வாதிகள் தேர்தல் நேரத்தில் மட்டும் தங்கள் சுயநோக்கத்துக்காக, சாதியை ஒரு பொருளாகக் கூறி வருவதை இங்கு காண்கிறோம் மற்ற நேரம் மக்களின் தேவையை, அடிப்படைத் தேவைக்குக் கூட உதவி செய்யாத நிலையைக் காட்டுகிறார்.

**பத்திரிக்கை நிலை**

ஓட்டப்பிடாரம் வெங்கடேசன் (ஓ.வி.) என்பவர் அத்திப்பட்டிக்கு வந்து அங்கு தேர்தலைப் புறக்கணித்ததற்கான காரணத்தை தெளிவாக கேட்டு அதைத் தான் நிருபராக வேலை பார்க்கும் பத்திரிக்கையில் போட விரும்பிகிறார். ஆனால் பத்திரிக்கை அதிபர் பாராங்குசம், இந்த மாதிரி எழுதினா பத்திரிக்கைக்கு கவர்மெண்டுலருந்து வர்ற விளம்பரம் கொடுக்க மாட்டான் நம்ம பத்திரிக்கைக்கு விளம்பரம் வேணுங்குறதுக்காக இன்பர்மேஷன் டிபார்மென்டுல நான் பட்ட பாடு எனக்குத் தெரியும். என்று சுயநலவாதியாக இருக்கும் பத்திரிக்கை அதிபரைக் காட்டுகிறார். குந்தல குமாரி நடிகைக்கு இன்று பிறந்த நாள் போய் படம் எடுத்து வந்து போட்டு காசு பண்ண பாரு என்று சொன்ன உடன் அந்த நிருபர், வேலை விட்டு சென்று விடுகிறார். சுயநிலமில்லாத, நியாயவாதியான, செய்தியால் மக்களுக்கு நன்மை கிடைக்க வைக்கும். நிருபருக்கு மதிப்பில்லாத தன்மையைக் இங்கு காண்கிறோம்.

**அரசியல்வாதி, அரசு அலுவலர்கள்**

அரசியல்வாதியும் அரசு அலுவலர்களும் இப்படித்தான் உள்ளனர் தண்ணீர் இல்லாத நிலையைக் கண்டு கொள்வதில்லை.

தன் கட்சிக்கு ஓட்டுப் போடாததால் தண்ணீர் எடுத்த வண்டியை உடைத்து விட்டதோடு மாடு கொல்லப்படுகிறது. அதற்கு முன்னர் தண்ணீர் வருவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை.

அரசு அலுவலகமும் தண்ணீர் இல்லாத பொழுது கண்டு கொள்ளவில்லை. அவர்களாக கால்வாய் தோண்டி தண்ணீர் கொண்டு வர முயற்சி செய்தாலும் தடுக்கப்பட்டுவிட்டது.

இன்றைய சமுதாயத்தின் அவல நிலைகளை எடுத்துக்காட்டும் நாடகம் கோவாலூ செவந்தியின் மூலம் புரட்சிக் கருத்துக்கள் கூறப்படுகிறது. சிறந்த ஒரு நாடகம்.

**Prepared by**

**Dr. J. JEBAMALAR WINCES MANIMALA**

Associate Professor of Tamil

Sarah Tucker College, Tirunelveli – 627 007.